# Ranga Rakes



**பேரன்புடைய தமிழோவியம் வாசகர்களே !!**
உங்களை எல்லாம் இந்த இணையதளத்தின் மூலம் சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். ஜோதிடம் ஒரு சாரார் மட்டுமன்றி எல்லோரும் கற்க வேண்டும் என்ற எண்ணத்தில் இப்பாடங்களை எழுதுகிறோம். குறைந்தளவு கல்வி அறிவு உள்ளவர்களும், வடமொழி தெரியாதவர்களும் கூட ஜோதிடம் கற்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இதை எழுதுகிறோம். இந்தப்பாடங்களை மிக எளிய தமிழில் கதை சொல்வதுபோல் எழுதப் போகின்றோம்.

**ஜோதிடம் என்றால் என்ன ?** ஜோதிடம் என்பது வானமண்டலத்திலுள்ள நட்சத்திரங்கள் கூறும் செய்திகள் என்று பொருள். அவைகள் வருங்காலத்தைப் பற்றிக் கூறுகின்றன. நமக்குத் தேவையான செய்திகளையெல்லாம் கூறுகின்றன. அவைகள் கூறும் செய்திகளை தெரிந்துகொள்ள நமக்கு நட்சத்திரங்களின் மொழி தெரிய வேண்டும். அந்த நட்சத்திர மொழி தான் ஜோதிடம்.

சரி ! நட்சத்திரங்கள் எப்படிக் கூறுகின்றன, அவை 9 கிரகங்கள் மூலமாகக் கூறுகின்றன. அந்த 9 கிரகங்கள்.

1. சூரியன்
2. சந்திரன்
3. செவ்வாய்
4. புதன்
5. குரு
6. சுக்கிரன்
7. சனி
8. ராகு
9. கேது

இந்த 9 கிரகங்களையும் பார்க்கமுடியுமா ? முடியாது. ஏழு கிரகங்களைத்தான் பார்க்க முடியும். ராகு கேதுக்களைப் பார்க்க முடியாது. அவைகள் நிழல் கிரகங்கள் என்று பெயர். முதல் ஏழு கிரகங்களில் சூரியன், சந்திரன், சுக்கிரன் ஆகியவைகளை நாம் நமது கண்களால் 'டெலஸ்கோப்' உதவியுடன்தான் பார்க்க இயலும்.

அடுத்த கேள்வி, இந்த கிரகங்களுக்கும், மனித உயிர்களுக்கும் என்ன தொடர்பு ? தொடர்பு நிறைய இருக்கிறது. சூரிய ஒளி இல்லை என்றால் மனித உயிர்கள், தாவரங்கள் எதுவும் வாழ முடியாது. சூரிய நமஸ்காரம் ஏன் செய்கிறோம் ? சூரிய ஒளி நம் கண்களில் பட்டால் அது நமது கண்களுக்கு நல்லது என்பதால் தானே ! ஆக சூரிய ஒளி மனித வாழ்க்கைக்கு மிகவும் தேவை என்பது விளங்குகின்றது அல்லவா ?

அதே போன்று மனநிலை சரியில்லாதவர்களைப் பாருங்கள்! அமாவாசை, பௌர்ணமி காலங்களில் அவர்கள் மனநிலை மிகுந்த பாதிப்புக்குள்ளாவதைப் பார்க்கலாம், அவர்களின் ஆர்ப்பாட்டங்களும் அதிகமாகின்றன. இதே போன்று மற்ற கிரகங்களும் மனித வாழ்க்கையோடு உறவு கொண்டு பல மாற்றங்களைத் தோற்றுவிக்கின்றன.

இப்போது நவகிரகங்கள் என அழைக்கப்படும் 9 கிரகங்களும் மனித வாழ்க்கையோடு தொடர்பு கொண்டுள்ளன எனத் தெரிந்துகொண்டீர்கள் அல்லவா?

சரி ! மொத்தம் எத்தனை நட்சத்திரங்கள்? ஆகாயத்திலே சூரியனைச் சுற்றி பல லட்சக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன். சூரியனை மையமாக வைத்து நீளவட்ட வடிவமான பாதையில் பல லட்சக்கணக்கான் நட்சத்திரங்கள் உள்ளன. இந்த நீளவட்டமான பாதைதான் ராசி மண்டலம் என அழைக்கப்படுகிறது. இந்த நட்சத்திரக் கூட்டங்களை நம் முன்னோர் 27 பாகங்காளகப் பிரித்து உள்ளனர். இந்த 27 பாகங்களுக்கும் பெயர்கள் உண்டு. அந்தப் பெயரால்தான் அந்த நட்சத்திரக் கூட்டம் அழைக்கப்படுகின்றது.

1. அஸ்வினி
2. பரணி
3. கார்த்திகை
4. ரோகினி
5. மிருகசீரிஷம்
6. திருவாதரை
7. புனர்ப்பூசம்
8. பூசம்
9. ஆயில்யம்
10. மகம்
11. பூரம்
12. உத்திரம்
13. ஹஸ்தம்
14. சித்திரை
15. ஸ்வாதி
16. விசாகம்
17. அனுஷம்
18. கேட்டை
19. மூலம்
20. பூராடம்
21. உத்திராடம்
22. திருவோணம்
23. அவிட்டம்
24. சதயம்
25. பூரட்டாதி
26. உத்திரட்டாதி
27. ரேவதி

நாம் என்ன தெரிந்து கொண்டோம் ? ஆகாயமண்டலத்தில் நீள வட்ட வடிவமான பாதையில் 27 நட்சத்திரக்கூட்டங்கள் இருக்கின்றன. நாம் இனிமேல் 27 நட்சத்திரங்கள் இருக்கின்றன எனக் கூறுவோம். இந்த 27 நட்சத்திரங்களின் மேல் இந்த 9 கிரகங்களும் வலம் வருகின்றன. அவைகள் எல்லாம் ஒரே வேகத்தில் வருவதில்லை. ஒவ்வொரு கிரகமும் வேகத்தில் மாறுவிடுகின்றன, சந்திரனுக்கு இந்த ஆகாய மண்டலத்தைச்சுற்றி வர ஒரு மாதம் ஆகிறது. சூரியனுக்கு ஒரு வருடம், செவ்வாய்க்கு ஒன்றரை ஆண்டுகள், ராகு கேதுவிற்கு 18 ஆண்டுகள், சனிக்கு 30 ஆண்டுகள் ஆகின்றன.

இந்த ஒன்பது கிரகங்களில் சந்திரன்தான் மிக வேகமாகச் சுற்றுகிறார். சனி மெதுவாகத்தான் சுற்றுகிறார். அதனால்தான் அவர் பெயர் "மந்தன்" எனக்கூறப்படுவதுண்டு. சனிக்கு ஒருகால் கிடையாது. அவர் நொண்டி ஆகவேதான் அவர் மெதுவாக வலம் வருகிறார். சனி நொண்டியானதற்கு ஒரு கதை உண்டு.

இராவணன் தன்மகன் இந்திரஜித் பிறக்கும் முன்பு அவன் சாகாவரம் பெற வேண்டும் என விருப்பினான். அவன் தான் நவக்கிரங்களையும் வென்று தன் இஷ்டப்படி செயல்பட வைத்தவனாயிற்றே. ஆகவே எல்லா கிரகங்களையும் தன் மகன் பிறக்கும் சமயத்தில் அவன் ஜாதகத்தில் 11ம் வீட்டில் அடைத்து வைத்துவிடுகிறான். ஒருவர் ஜாதகத்தில் 11ம் வீடு என்பது வெற்றியைக் குறிக்கும். அதில் எல்லா கிரகங்களும் இருக்குமேயாகில் அவருக்குத் தோல்வியே கிடையாது. இதை மனதில் கொண்டு இராவணன் இந்திரஜித்தின் ஜாதகத்தில் 11ம் வீட்டில் அத்தனை கிரகங்களும் இருக்குமாறு செய்து விட்டான்.

தேவர்கள் இதைக் கண்டு மனம் பதைத்தனர். ஒரு அசுரன் இவ்வாறு பிறந்தால் அவனை மரணமே நெருங்காதே! அப்புறம் உலகத்தில் அநீதிதான் இருக்கும், என்ன செய்வது என்றறியாது கலங்கினர். அப்போது நாரதர் சனிபகவானிடம் சென்று, "உன்னால்தான் ஒருவருக்கு நாசத்தைக் கொடுக்க முடியும், ஆகவே மற்றவர்களை நீதான் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டும் கொண்டார்.

சனி பகவானும் அவர் வேண்டுகோளுக்குகிணங்கி, இந்திரஜித் பிறக்கும் சமயத்தில் தன் இடது காலை 12ம் வீட்டில் வைத்துவிட்டார். ஒருவர் ஜாதகத்தில் 12ம் வீடு என்பது நாசத்தைக் கொடுக்கு இடமாகும். இந்தக் கட்டத்தில் இடது காலை சனி பகவான் வைத்து விட்டதால், இந்திரஜித் ஜாதகத்தில் சனி பகவான் 12ம் இடத்தில் காணப்பட்டார், மற்ற கிரகங்கள் எல்லம் 11ம் இடத்தில் இருந்தன.

இராவணன் குழந்தை பிறந்ததும் ஜாதகத்தைக் கணித்துப்பார்த்தான், சனி 12ம் இடத்தில் காணப்பட்டார். தன் எண்ணம் நிறைவேறாத காரணத்தால் கடும் சினம் கொண்டான். உடனே 12ம் இடத்தில் காலை வைத்த சனி பகவானின் இடது காலை வெட்டுமாறு கட்டளையிட்டான். இது தான் சனிபகவான் முடமான கதை. ஆகவேதான் அவர் நொண்டி நொண்டி மெதுவாக 30 ஆண்டுகளில் வான் மண்டலத்தை ஒரு முறை சுற்றி வருகிறார்.

இதுவரை நீங்கள் 27 நட்சத்திரங்கள் யாவை, நவக்கிரகங்கள் யாவை, அவை வான் மண்டலத்தை ஒரு முறை சுற்றி வரும் காலம் பற்றி தெரிந்துகொண்டீர்கள்.

நாம் முதலில் ஜாதகத்தை எப்படிக் கணிப்பது என சொல்லிக் கொடுக்க இருக்கிறோம். அதற்குப்பின் எப்படி பலன் சொல்வது என்பது விளக்குவோம். ஜாதகக் கணிதம் செய்ய

ஓரளவிற்குக் கணிதம் தெரிய வேண்டும். கணிதம் என்றால் எதோ கல்லூரியிலே பயிலுகிற கணிதமோ என அஞ்ச வேண்டாம். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என்ற அடிப்படைக் கணிதம் தெரிந்தால் போதும்.

நாம் முன்பு கூறியது போல் மிகக் குறைந்த கல்வியறிவு உள்ளவர்களுக்கும் புரிய வேண்டும் என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு மிக எளிய முறையில் எழுதி இருக்கிறோம். அத்தோடு நமது புராணங்களில் வருகின்ற உபகதைகளையும் சேர்த்துக் கொண்டால் புரிந்து கொள்வது மிக எளிதாக இருக்கும்.

நாம் தற்போது காலத்தை எப்படிக் கணக்கிடுகின்றோம் ? இன்று 1/23/2002, நாம் ஜனவரி மாதம் 23ம் நாள், 2002 ஆண்டு எனக் கூறுகின்றோம். இது நமக்கு ஆங்கிலேயர் கற்றுக் கொடுத்த முறை. நமது பண்டைய முறை அப்படி அல்ல. நாம் கணிதம் செய்ய வேண்டியது எல்லாம் நமது பண்டைய முறைபடித்தான். நமது கலாச்சாரப்படி மொத்தம் 4 யுகங்கள் உண்டு.

1. கிருதயுகம். 2. திரேதாயுகம் 3. துவாபரயுகம் 4. கலியுகம்.

இந்த நான்கு யுகங்களைக் கொண்டது ஒரு சதுர்யுகம். ஒரு சதுர்யுகம் என்பது 43,20,000 ஆண்டுகள் கொண்டதாகும். நாம் இப்பொது 3 யுகங்கள் முடிந்து கலியுகத்தில் இருக்கின்றோம். கலியுகத்தில் தற்போது 5094 ஆண்டுகள் முடிந்துவிட்டன.

ஒரு ஆண்டு என்பது 365 1/4 நாட்கள் கொண்டவை என்பது எல்லோருக்கும் தெரியும். அதாவது சூரியன் இந்த வான மண்டலத்தை ஒருமுறை சுற்றி வரும் காலம் ஆகும். சூரியன் ஒருமுறை வானமண்டலத்தைச் சுற்றிவிட்டால் ஓர் ஆண்டு முடிந்து விடுகிறது. இந்த வருகின்ற ஏப்ரல் 14ம் தேதி தமிழ்ப் புத்தாண்டு பிறக்கிறது எனக் கூறுகின்றோம். அதாவது சூரிய பகவான் வானமண்டலத்தை சுற்றி முடித்து அடுத்த சுற்று அன்று ஆரம்பம் செய்கின்றார். வானவெளி மண்டலத்தின் ஆரம்ப இடம் எது ? இது இருந்தால்தானே அங்கிருந்து ஆரம்பம் செய்ய முடியும். அது தெரிந்து கொள்ள நாம் வானமண்டலத்தின் படத்தைப் போடுவோம். வானமண்டலம் நீள வட்ட வடிவமான பாதையாக் இருக்கிறது என மேலே கூறியுள்ளோம். நாம் நீளவட்டம்மாகப் போடாமல் சதுரமாகவே போடுவோம். அதுதான் எளிது. வானமண்டலத்தைச் சதுரமாகப் போட்டு அதை 12 பகுதிகளாக அதுவும் சம பகுதியாக போடுவோம். அது கீழே காட்டியுள்ளபடி இருக்கும்.



நாம் மேலே வானமண்டலத்தின் படத்தைப் போட்டு 12 பகுதியாகப் போட்டு இருக்கிறோம். இந்த வானமண்டலத்தின் ஆரம்ப இடம் ஒன்று என்று இலக்கம்மிட்ட கட்டம்தான். அதன் ஆரம்பப் பகுதியை 2 கோடுகள் போட்டுக் காட்டியுள்ளோம். இந்த இடத்திலிருந்துதான் சூரியன் சுற்ற ஆரம்பிக்கின்றது. இந்த ஏப்ர 14ம் தேதி ஆரம்பித்தால் அடுத்த ஆண்டு ஏப்ரல் 13ம் தேதி முடிய சுற்றும். இந்தம்காலம் தான் ஒராண்டாகும். இந்த ஆண்டுக்கும் பெயர் வைத்து இருக்கிறோம். வருகின்ற ஆண்டின் பெயர் "விஷு" ஆண்டாகும். இது தமிழ் ஆண்டு. இதே போன்று ஒவ்வொரு ஆண்டிற்கும் பெயர் உண்டு. 60 ஆண்டுகள் முடிந்த பின்பு திரும்ப முதலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

1. பிரபவ 2. விபவ 3. சுக்கில 4. பிரமோதூத 5. பிரஜோத்பத்தி
6. ஆங்கீரஸ 7. ஸ்ரீமுக 8. பவ 9. யுவ 10. தாது 11. ஈஸ்வர 12. வெகுதான்ய
13. பிரமாதி 14. விக்கிரம 15. விஷு 16. சித்ரபானு 17.சுபாணு
18. தாரண 19. பார்த்திப 20. விய 21. சர்வகித்து 22.சர்வதாரி
23. விரோதி 24. விக்ருதி 25. கர 26. நந்தன 27. விஜய 28. ஜய
29. மன்மத் 30. துர்முகி 31. ஹேவிளம்பி 32. விளம்பி 33. விகாரி
34. சார்வரி 35. பிலவ 36. சுபகிருது 37. சோபகிருது 38. குரோதி
39. விசுவாசு 40. பராபவ 41. பிலவங்க 42. கீலக 43. சௌமிய
44. சாதரண 45. விரோதிகிருது 46. பரிதாபி 47. பிரமாதீச
48. ஆனந்த 49. ராஷஸ 50. நள 51. பிங்கள 52. காளயுக்தி
53. சித்தாத்திரி 54. ரௌத்திரி. 55. துன்பதி 56. துந்துபி
57. ருத்ரோகாரி 58. ரக்தாஷி 59. குரோதன 60. அக்ஷய

இப்பொது தமிழ் ஆண்டு என்றால் என்ன என்று தெரிந்துகொண்டீர்கள். சூரியன் வானமண்டலத்தைச் சுற்ற எடுத்துக் கொள்ளும் காலமே ஓர் ஆண்டாகும். வானமண்டலத்தின் ஆரம்ப இடம் எது எனவும் தெரிந்து கோண்டீர்கள்.

இனி அடுத்து மாதம் என்றால் என்ன, நட்சத்திரம் என்றால் என்ன ? திதி என்றால் என்ன என்பவைகளை வரும் இதழ்களில் பார்ப்போம்.

## நீங்களும் ஜோதிடர் ஆகலாம் பாடம் - 2

என்னுடைய ஜன்ம நட்சத்திரம் மூலம். ஒருவருக்கு ரேவதியாக இருக்கலாம், இன்னும் ஒருவருக்கு கார்த்திகையாக இருக்கலாம். இப்படியாக ஒவ்வொரு நட்சத்திரம் 27 நட்சத்திரங்களில் ஒன்று ஜன்ம நட்சத்திரமாக இருக்கும். நம் ஜன்ம நட்சத்திரத்தை எவ்வாறு தெரிந்து கொள்வது? பஞ்சாங்கத்தைப் பார்த்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டும்.

பஞ்சாங்கம் என்றால் என்ன ? பஞ்சாங்கம் என்றால் ஐந்து அங்கங்களைக் கொண்டது.
அவையாவன : 1.திதி 2.வாரம் 3.நட்சத்திரம் 4.யோகம் 5.கரணம்.
இந்த ஐந்தையும் நாம் பஞ்சாங்கதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

முதலில் நட்சத்திரத்தைப் பற்றித் தெரிந்து கொள்வோம். அதற்குப் பிறகு நாம் திதி, வாரம், யோகம், கரணம் ஆகியவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

நாம் எல்லா கிரகங்களும் வான மண்டலத்தைச் சுற்றி வருகின்றன என்று கூறி இருந்தோம். வான மண்டலத்தில் 27 நட்சத்திரங்களும் பரவி இருக்கின்றன. அவைகளின் மேல் தான் 9 கிரகங்களும் வலம் வருகின்றன. சென்ற பாடத்தில் வான மண்டலத்தை 12 பகுதியாகப் போட்டு காட்டி இருந்தோம். அந்தப் 12 பகுதியையும் நாம் ராசி என்றோ அல்லது வீடு என்றோ இனிக் கூறுவோம்.

ராசியில் 1ம் எண் போடப்பட்ட வீடு அல்லது ராசியின் பெயர் மேஷம்.

1 - மேஷம்
2 - ரிஷபம்
3 - மிதுனம்
4 - கடகம்
5 - சிம்மம்
6 - கன்னி
7 - துலாம்
8 - விருச்சிகம்
9 - தனுசு
10 - மகரம்
11 - கும்பம்
12 - மீனம்.



இப்போது 12 ராசிகளின் பெயர்களைத் தெரிந்து கொண்டீர்கள். இப்போது 12 ராசியிலும் நாம் 27 நட்சத்திரத்தையும் அடைக்கப்போகிறோம்.

ஒரு நட்சத்திரத்தை 4 பங்காக ஆக்குங்கள். ஒவ்வொரு பங்கிற்கும் பாதம் என்று பெயர். ஆக 4 பாதங்கள் கொண்டது ஒரு நட்சத்திரம். இப்போது ஒரு நட்சத்திரத்திற்கு 4 பாதங்கள் என்று தெரிந்து கொண்டீர்கள். அப்படியானால் 27 ம் நட்சத்திரத்திற்கு 27 x 4 = 108 பாதங்கள். நாம் இப்போது மேலே கூறிய 12 ராசிகளில் வரிசைக் கிரமமாக அடைக்கப் போகிறோம். ஒரு ராசிக்கு 9 வீதம் 12 ராசிக்கும் 108 பாதங்களை அடைக்கப் போகிறோம். முதல் ராசி அல்லது வீடான மேக்ஷத்திற்கு அஸ்வினி 4 பாதங்கள், பரணி 4 பாதங்கள்,கார்த்திகை 1ம் பாதம். ஆக மொத்தம் 9 பாதங்கள். அதைப் போல் ஒவ்வொரு ராசிக்கு எந்தெந்த நட்சத்திரங்கள் அடங்கி இருக்கின்றன எனப் பார்ப்போம்.

| **ராசியின் பெயர்** | **நட்சத்திரங்கள்** |
|---|---|
| மேக்ஷம் | அஸ்வனி 4 பாதங்கள், பரணி 4 பாதங்கள்,கார்த்திகை 1ம் பாதம். |
| ரிஷபம் | கார்த்திகை 2,3,4, பாதங்கள், ரோகிணி 4 பாதங்கள் மிருகசீரிஷம் 1,2 பாதங்கள். |
| மிதுனம் | மிருகசீரிஷம் 3,4 பாதங்கள்,திருவாதிரை,புனர்பூசம் 1,2,3 பாதங்கள். |
| கடகம் | புனர்ப்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம் |
| சிம்மம் | மகம்,பூரம்,உத்திரம் 1ம் பாதம் |
| கன்னி | உத்திரம் 2,3,4 பாதங்கள், ஹஸ்தம், சித்திரை 1,2 பாதங்கள் |
| துலாம் | சித்திரை 2,3 பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3, பாதங்கள் |
| விருச்சிகம் | விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை |
| தனுசு | மூலம், பூராடம், உத்திராட்டம் 1-ம் பாதம் |
| மகரம் | உத்திராடம் 2,3,4 பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 பாதங்கள் |
| கும்பம் | அவிட்டம் 3,4 பாதங்கள், சதயம், பூரட்டதி 1,2,3 பாதங்கள் |
| மீனம் | பூரட்டாதி 4-ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி |

ஆக ஒவ்வொரு ராசிக்கும் 9 பாதங்கள் வீதம் 27 நட்சத்திரங்களையும் 12 ராசியில் அடக்கி விட்டோம். எந்தெந்த நட்சத்திரங்கள் எந்தெந்த ராசியில் வருகின்றன என்பதை நீங்கள் மனப்பாடமாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இது மிக அவசியம். அடிப்படையும் கூட.

இந்த 12 ராசிகளிலும் 9 கிரகங்களும் வலம் வருகிறது. இப்போது வைகாசி மாதம். சூரியன் ரிஷபத்தில் வலம் வருவார். ரிஷபத்தில் இருக்கும் போது கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி அல்லது மிருகசீரிஷம் 1,2 பாதங்கள் இவற்றில் ஏதாவது ஒரு நட்சத்திரத்தின் மேல் வலம் வருவார். நாம் சூரியன் ஒரு ராசியில் 30 நாட்களில் கடப்பார் என்று கூறி இருந்தோம். அப்படியானால் ஒரு நட்சத்திர பாதத்தை கடக்க 3 1/3 நாட்கள் ஆகும். இதை இன்னும் விளக்கமாக எழுதுகிறோம். வைகாசி 1-ம் தேதி கார்த்திகை 2-ம் பாதத்தில் (ரிஷபத்தில் ) சூரியன் இருக்கிறார். 2-ம் பாதத்தைக் கடக்க அவருக்கு 3 1/3 நாட்கள் ஆகும். அதற்குப்பின் கார்த்திகை 3-ம் பாதத்தைக் கடக்க இன்னும் ஒரு 3 1/3 நாட்கள் ஆகும். ஆக

கார்த்திகை 3 பாதங்களையும் கடக்க அவருக்குத் தேவையானது 10 நாட்கள் ஆகும். 11-ம் நாள் அவர் ரோகிணி முதல் பாதத்தில் சஞ்சாரம் செய்வார். இவ்வாறாக அவர் ஒவ்வொரு நட்சத்திரத்தின் மேலும் சஞ்சாரம் செய்து 30 நாட்களில் ஒரு ராசியைக் கடக்கிறார். எந்தெந்தத் தேதியில் எந்தெந்த நட்சத்திரத்தில் எந்தெந்த ராசியில் சஞ்சாரம் செய்கிறார் என்ற விபரம் எல்லாம் பஞ்சாங்கத்தில் கொடுக்கப் பட்டு இருக்கிறது. சூரியனைப் போன்றே எல்லாக்கிரகங்களும் ஏதாவது ஒரு ராசியில், அந்த ராசியில் உள்ள நட்சத்திரத்தின் மேல் சஞ்சாரம் செய்யும். இப்போது எல்லா கிரகங்களும் ஏதாவது ஒரு ராசியில், ஒரு நட்சத்திரத்தின் மேல் சஞ்சாரம் செய்யும் எனத் தெரிந்து கொண்டீர்கள்.

இந்த 9 கிரஹங்களில் சந்திரனுக்கு அதிக முக்கியத்துவம் ஜோதிட உலகம் அளிக்கிறது. ஒரு குறிப்பிட்ட தினத்தன்று எந்த நட்சத்திரத்தின் மேல் சந்திரன் சஞ்சாரம் செய்கிறாரோ அதுவே அன்றைய நட்சத்திரம் ஆகும். உதாரணமாக வைகாசி மாதம் 1-ம் தேதியை எடுத்துக் கொள்வோம்.அன்றைக்கு அவிட்டம் நட்சத்திரத்தின் மேல் சந்திரன் சஞ்சாரம் செய்கிறார். அதுவே அன்றைய நட்சத்திரம் ஆகும். அன்றைக்கு ஒரு குழந்தை பிறந்தால் அக்குழந்தையின் ஜென்ம நட்சத்திரம் அவிட்டம் ஆகும். என் நட்சத்திரம் மூலம் என்று எழுதி இருந்தேன். அதாவது நான் ஜெனித்த அன்று மூல நட்சத்திரத்தின் மேல் சந்திரன் சஞ்சாரம் செய்து கொண்டு இருந்தார். ஆகவே என் ஜென்ம நட்சத்திரம் மூலம் ஆகும். மூலம் எந்த ராசியில் இருக்கிற்து ?. தனுர் ராசியில் இருக்கிறது. ஆகவே என் ஜென்ம ராசி தனுர் ராசி ஆகும்.

இதே போன்று ஒவ்வொரு நாளும் எந்த நட்சத்திரத்தின் மேல் சந்திரன் செல்கிறாரோ அதுவே அன்றைய நட்சத்திரம் ஆகும். அந்த நட்சத்திரம் எந்த ராசியில் இருக்கிறதோ அதுவே ஜென்ம ராசி ஆகும். இப்போது ஒரு சிக்கல் வருகிறது. மே 1-ம் தேதி அவிட்டம் நட்சத்திரம் என்று கூறி இருந்தோம். அவிட்ட நட்சத்திரம் மகரத்திலும், கும்பத்திலும் இருக்கிறது. அப்படியானால் என்ன ராசி ? மகரமா அல்லது கும்பமா ? பதில் மிக எளிது.

அவிட்டம் முதல் பாதம், அல்லது இரண்டாம் பாதத்தில் சஞ்சாரம் செய்தால் மகர ராசி ஆகும். 3-ம் பாதம் அல்லது 4-ம் பாதத்தில் சஞ்சாரம் செய்தால் கும்ப ராசி ஆகும். சந்திரன் எந்தப் பாதத்தில் சஞ்சாரம் செய்கிறார் என்பதைக் கண்டு பிடிக்கும் முறையை நாம் பின்னால் எழுதுகிறோம். இப்போதைக்கு இவ்வளவு தெரிந்து கொள்ளுங்கள். போதும். ஒவ்வொரு நாளும் சந்திரன் எந்த நட்சத்திரத்தில் எந்த ராசியில் சஞ்சாரம் எவ்வளவு செய்வார் என்ற விபரம் எல்லாம் பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டு இருக்கும். அதைப்பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். சந்திரன் மட்டும் அல்ல; எல்லாக்கிரஹங்களும் எந்த ராசியில் எந்த நட்சத்திரத்தில் சஞ்சாரம் செய்கின்றன என்ற விபரம் எல்லாம் பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டு இருக்கும். பஞ்சாங்கத்தை எப்படிப் பார்ப்பது என்று விளக்கும்போது உங்களுக்கு அதைச் சொல்லித் தருகிறோம்.

சரி! எந்தப் பஞ்சாங்கத்தைப் பார்ப்பது? கடையிலே சென்றால் பலவிதமான பஞ்சாங்கங்கள் காணப்படுகின்றன. எதை வாங்குவது ? இது முக்கியமான கேள்வி. இதற்கு மிக விளக்கமாக பதில் எழுத வேண்டும்.

**திருகணிதமா அல்லது வாக்கியமா ?**

கி.மு. 1200 முதல் கி.மு.400 முடிய காலத்திற்குச் செல்வோம். அக்காலம் தான் "சித்தாந்த ஜோதிஷ காலம்" என அழைக்கப்படுகிறது. அக்காலத்தில் 18 விதமான சித்தாந்தங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. இந்த 18 வகையான சித்தாந்தங்களை ஒட்டி பஞ்சாங்கங்கள்

கணிக்கப் பட்டன. கிரகங்களின் வேகம், ராசிகளில் தங்கும் காலம் இவற்றை எல்லாம் கணிப்பதற்கு ஒரு முறையைக் கண்டு பிடித்தனர். இது "வாக்கிய முறை" எனப்பட்டது. இதுதான் முதன் முதலாக வந்த பஞ்சாங்கக் கணித முறை. இன்றும் இந்த முறையில் பஞ்சாங்கங்கள் வெளி வருகின்றன. இந்தப் பஞ்சாங்கங்கள் "வாக்கியப் பஞ்சங்கம்" எனப்பட்டது.

வாக்கியப் பஞ்சாங்கங்கக் கணித முறையில் சில பிழைகளைக் கண்டனர் அதற்குப் பிறகு வந்த பெரியவர்கள். அவைகளை திருத்திப் புதிய முறையைக் கண்டனர். அதற்குப் பெயர் "திருகணித முறை" எனப்படும். இந்த திருகணித முறையை ஒட்டிப் பஞ்சாங்கங்கள் கணிக்கப் படுகின்றன. இந்தப் பஞ்சாங்கங்களுக்குப் பெயர் "திருகணிதம்" பஞ்சாங்கம் எனப் படும். அப்படியானால் நாம் எந்தப் பஞ்சாங்கத்தைப் பயன் படுத்த வேண்டும்? இரண்டு வகையான பஞ்சாங்கங்கள் நம்மிடம் இருக்கின்றதே!

இந்த 20-ம் நூற்றாண்டில் கிரகங்களைப் பார்ப்பதற்கு "டெலஸ் கோப்புகள்" வந்து விட்டன. கிரகங்களின் வேகம், பாதையைக் கண்டறியும் அளவிற்குக் கணிதம் வளர்ந்து விட்டது. தற்போதுள்ள கணித முறையும், திருகணித முறையும் எந்த வித மாறுதல் இல்லாமல் ஒரே மாதிரியாக இருக்கிறது. ஆக திருகணித முறை தான் சரியான முறை என முடிவுக்கு வந்துள்ளனர் இக்காலத்தில். ஆகவே திருகணித முறை தான் சிறந்தது என்பதைச் சொல்லவும் வேண்டுமோ. ஆனாலும் சிலர் வாக்கிய முறைதான் பழமை வாய்ந்தது என்று பழமையைக் கொண்டாடுகிறார்கள். நாம் அவர்களை அவர்கள் போக்கிலேயே விட்டு விடுவோம்.

காளிதாஸனுடைய "உத்திர காலாம்ருதமும்" திருகணித முறைதான் சரியான முறை எனக் கூறுகிறது. மந்த்ரேஸ்வருடைய "பல தீபிகையும்" இதே கருத்தைத்தான் வலியுறுத்துகிறது. (உத்திர காலம்ருதம், பலதீபிகை எல்லாம் ஜோதிட நூல்கள்.)

சரி! திரு கணிதப் பஞ்சாங்கங்கள் எவை?

1.ஸ்ரீ காஞ்சி ஸ்ரீ ஆச்சாரியாள் மடத்துப் பஞ்சாங்கம்.
2.ஸ்ரீ காஞ்சி ஆச்சாரியாள் பாரத் கணிதப் பஞ்சாங்கம்
3.ஆனந்த போதினி திருகணிதப் பஞ்சாங்கம்

இவைகள் எல்லாம் திருகணிதப் பஞ்சாங்கம். இவைகள் மூலம் ஜாதகம் கணித்தால் ஜாதகம் சரியாக வரும். தவறு வர வாய்ப்பில்லை. ஆகவே நீங்களும் திருகணிதம் தான் உபயோகிக்க வேண்டும் என்று கூறுவோம்.

இப்போது கடிகாரங்கள் இருக்கின்றன. அவை என்ன மணி, எத்தனை நிமிஷங்கள் எத்தனை வினாடிகள் என்று காட்டுகின்றன. இது நமக்கு வெள்ளைக்காரர்கள் சொல்லிக் கொடுத்தமுறை. ஆனால் நமது பண்டைய முறை அப்படி அல்ல. அவர்கள் கணக்கு எல்லாம் நாழிகை, வினாழிகையில் வரும். அந்தக் கணக்கை நாம் கீழே கொடுத்துள்ளோம்.

| | |
|---|---|
| 60 வினாழிகை | 1 நாழிகை |
| 60 நாழிகை | 1 நாள் |
| 2 1/2 நாழிகை | 1 மணி |
| 2 1/2 வினாழிகை | 1 நிமிஷம் |

இந்தக் கணக்கு மனப்பாடமாகத் தெரிந்து இருக்க வேண்டும். இது இல்லாமல் நாம் எந்தக் கணக்கும் போட முடியாது.

அடுத்தது நாள் என்றால் என்ன? இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இரவு 12.01க்கு மறுநாள் பிறந்து விடுகிறது. இது நமக்கு ஆங்கிலேயர் சொல்லிக்கொடுத்த முறை. இரவு 12.01மணியில் இருந்து மறுநாள் இரவு 12.00 மணி முடிய ஒரு நாள். நமது பண்டைய முறை அப்படி அல்ல. இன்று சூரியோதயம் முதல் மறு நாள் சூரியோதயம் முடிய ஒரு நாள். உதாரணமாக இன்றைக்கு காலை 6.40க்கு சூரியோதயம் எனக் கொள்ளுங்கள். நாளைக் காலை 6.39க்கு சூரியோதயம் எனவும் கொள்ளுங்கள். இந்த இடைப்பட்ட காலம் தான் ஒரு நாள் என்ப்படும். அதாவது ஒரு சூரிய உதயம் முதல் மறுசூரிய உதயம் உள்ள காலமே ஒரு நாள் எனப்படும்.

சூரிய உதயம் எத்தனை மணிக்கு ஆகிறது என்பதை எப்படிக் கண்டு பிடிப்பது? யாரைக் கேட்டால் தெரியும்? யாரையும் கேட்க்க வேண்டாம். பஞ்சாங்கத்தைப் பார்த்தால் தெரியும். சூரியன் எத்தனை மணிக்கு உதயம் ஆகிறது? எத்தனை மணிக்கு அஸ்தமனம் ஆகிறது ? என்பது போன்ற விஷயங்கள் எல்லாம் பஞ்சாங்கத்தில் கொடுத்து இருக்கிறார்கள். வரும் இதழ்களில் பஞ்சாங்கம் எப்படிப் பார்ப்பது? என்று சொல்லிக்கொடுக்கிறோம். நாம் திருகணிதப் பஞ்சாங்கத்தைத்தான் உபயோகித்துப் பாடம் சொல்லிக் கொடுக்கப் போகின்றோம். இருப்பினும் நாம் வாசகர்களின் உபயோகத்திற்காக வாக்கியப் பஞ்சாங்கத்தையும் உபயோகிக்கிறோம்.

பஞ்ச அங்கங்களைக் கொண்டது பங்சாங்கம் என்று முன்பே எழுதி இருந்தோம். அந்த ஐந்து அங்கங்கள்: 1. திதி 2.வாரம் 3.நக்ஷக்ஷத்திரம் 4.யோகம் 5.கரணம். முதலில் திதிஐப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

**திதி என்றால் என்ன ?**

திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரம் தான். அம்மாவாசை அன்று சூரியனும் சந்திரனும் சேர்ந்து இருப்பார்கள். அதற்குப்பின் சந்திரன் தினமும் சூரியனில் இருந்து விலகிச் சென்று கொண்டிருப்பார். தினமும் சுமார் 12டிகிரி வரைநகர்ந்து செல்வார். பௌர்ணமி அன்று சூரியனில் இருந்து 180 டிகிரி தூரத்தில் இருப்பார். அதாவது சூரியனில் இருந்து 7-வது ராசியில் இருப்பார். சூரியன் இருந்த வீட்டையும் சேர்த்து எண்ணினால் சந்திரன் நின்ற வீடு 7-வது வீடாக இருக்கும். அம்மாவாசையில் இருந்து பௌர்ணமி முடிய 15 நாட்கள். அதேபோல் பௌர்ணமியில் இருந்து அம்மாவாசைக்கு 15 நாட்கள். மொத்தம் 30-நாட்கள். சந்திரன் ஒரு சுற்றுச் சுற்றி விட்டு 30 நாட்களில் திரும்பவும் சூரியனுடன் சேர்ந்து கொள்வார். அம்மாவாசைக்கு மறுநாள் அன்று சந்திரன் 12 டிகிரி விலகி இருப்பார் என்று சொன்னோம் அல்லவா. அன்றைக்குப் பெயர் பிரதமை. மறு நாள் இன்னும் ஒரு 12டிகிரி விலகியிருப்பார் அல்லவா ? அன்றைக்குப் பெயர் துதியை. மூன்றாம் நாள் திருதியை. 4-ம் நாள் சதுர்த்தி. 5-ம் நாள் பஞ்சமி. 6-ம் நாள் சஷ்டி. 7-ம் நாள் சப்தமி. 8-ம் நாள் அஷ்டமி. 9-ம் நாள் நவமி. 10-ம் நாள்தசமி. 11-ம் நாள் ஏகாதசி. 12-ம் நாள் துவாதசி. 13-ம் நாள்திரயோதசி. 14-ம் நாள் சதுர்தசி. 15-ம் நாள் பௌர்ணமி. சந்திரன் அம்மாவாசையில் இருந்து சிறிது, சிறிதாக வளர்வதால் இவைகள் எல்லாம் வளர் பிறைத் திதிகள் ஆகும். இந்தப் 15 நாட்களை சுக்கில பக்ஷக்ஷம் என்பார்கள்.

அதே போல் பௌர்ணமியில் இருந்து சந்திரன் தினமும் சிறிது, சிறிதாகத் தேய்கிறார் அல்லவா? முதல் நாள் பெயர் பிரதமை. 2-ம் நாள் துதியை, 3-ம் நாள் திருதியை, பின்பு சதுர்த்தி,பஞ்சமி,சஷ்டி, .........அம்மாவாசை முடிய வரும். இந்தக் காலத்தில் சந்திரன் தேய்வதால் இதை கிருஷ்ணபக்ஷக்ஷம் என்பார்கள். தமிழில்கூறினால் தேய்பிறைத் திதிகள் எனக் கூறுவார்கள். இவைகள் எல்லாம் நாள் பார்க்க உதவும். பொதுவாக அஷ்டமி, நவமித்திதிகளில் நல்ல காரியங்கள் எதுவும் செய்வது இல்லை. நாம் இப்போது ஒரு சிறிய கதை கூறப் போகிறோம்.

அஷ்டமித்திதியும், நவமித்திதியும் நம் நாட்களில் எல்லோரும் நல்ல காரியங்கள் செய்வதில்லையே என்று வருத்தப் பட்டனவாம். அவைகள் மஹாவிஷ்ணுவிடம் சென்று வருத்தப்பட்டன. உடனே பகவான் அவைகளிடம் "நீங்கள் வருத்தப்படாதீர்கள். நான் உங்கள் திதிகளில் அவதாரம் செய்கின்றேன்" எனக் கூறினார். ராமாவதாரத்திலும், கிருஷ்ணாவதாரத்திலும் அவர் முறையே நவமியிலும், அஷ்டமியிலும் அவதாரம் செய்தார். நாமும் ஸ்ரீராமநவமி என்றும், கோகுலாஷ்டமி என்றும் கொண்டாடுகிறோம். இப்போது திதிகளைத் தெரிந்து கொண்டீர்கள். அடுத்தது வாரம்.

வாரத்தைப் பற்றி நாம் அதிகம் கூற வேண்டியது இல்லை. திங்கள், செவ்வாய், புதன் என்கிற கிழமைகள்தான் வாரம் என்பது. இன்றைக்கு என்ன கிழமை என்கிற விபரமும் பஞ்சாங்கத்தில் கொடுத்து இருப்பார்கள். பஞ்சாங்கத்தைப் பார்க்காமலேயே எல்லோருக்கும் என்ன கிழமை என்று தெரியும்.

நக்ஷ்க்ஷத்திரம்

நக்ஷ்க்ஷத்திரத்தைப் பற்றி நாம் ஏற்கனவே எழுதி இருக்கிறோம். 27நக்ஷ்க்ஷத்திரங்களும் இப்போது மனப்பாடமாக எல்லோருக்கும் தெரிந்து இருக்கும் என்று நினைக்கிறோம். இதை மனப்பாடம் செய்வது மிக முக்கியம். இது மனப்பாடமாகத் தெரியாமல் ஜோதிடம் யாரும் பார்க்க முடியாது. ஆக 27-நக்ஷ்க்ஷத்திரத்தையும் அவைகள் இருக்கும் ராசிகளையும் எப்போதும் மனதில் வைத்திருத்தல் அவசியம். அடுத்தது கரணம் ஆகும்.

கரணம்

கரணம் என்பது திதியில் பாதியாகம். அதாவது 6-டிகிரி கொண்டது ஒரு கரணம் ஆகும். கரணங்கள் மொத்தம் 11-ஆகும். அவையாவன,

1.பவ 2.பாலவ 3.கௌலவ 4.தைதூலை 5.கரசை 6.வணிசை 7.பத்தரை 8.சகுனி 9.சதுஷ்பாதம் 10. நாகவம் 11.கிம்ஸ்துக்னம். இன்றைக்கு என்ன திதி என்று பஞ்சாங்கத்தில் கொடுத்து இருப்பார்கள். அதை எப்படிக் கணக்கிடுவது, அதன் உபயோகம் என்ன என்பது பற்றியும் நாம் சமயம் வரும் போது எழுதுகிறோம். அடுத்தது யோகம்.

யோகம்

இதில் இரண்டு வகைப்படும். முதலாவது சூரியனும், சந்திரனும் சம்மந்தப்பட்டது. அதாவது வானமண்டலதில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து சூரியனுக்கும், சந்திரனுக்கும் உள்ள மொத்த தூரம் ஆகும். இன்னும் சற்று விளக்கமாகக் கூறப்போனால் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து சூரியனின் தூரத்தையும், சந்திரனின் தூரத்தையும் கூட்டினால் வருவதே இந்த யோகம் ஆகும். இந்த யோகங்கள் மொத்தம் 27-ஆகும். இதனை நாம யோகம் என்பார்கள். அவையாவன:

1.விஷ்கம்பம் 2.ப்ரீதி 3.ஆயுஷ்மான் 4.சௌபாக்யம் 5.சோபனம் 6.அதிகண்டம் 7.சுகர்மம் 8.திருதி 9.சூலம் 10.கண்டம் 11.விருதி 12.துருவம் 13.வியாகாதம் 14.ஹர்ஷணம் 15.வஜ்ரம் 16.சித்தி 17.வியதிபாதம் 18.வரீயான் 19.பரீகம் 20.சிவம் 21.சித்தம் 22.சாத்தீயம் 23.சுபம் 24.சுப்ரம் 25.பிராம்யம் 26.ஐந்திரம் 27.வைதிருதி.

மற்றொறு யோகம் தினமும், சந்திரனும் சம்மந்தப்பட்டது நக்ஷ்க்ஷத்திராத்தையும், யோகத்தையும் வைத்தே யோகம் கண்க்கிடப்படுகிறது. இன்னன்னகிழமைகளில் இன்னென்ன நக்ஷ்க்ஷத்திரம் வந்தால் இன்ன யோகம் என வகுத்து அதன்படி கணக்கிடப்படுகிறது. உதாரணமாக திங்கள் கிழமை அன்று அஸ்வனி, பரணி, திருவாதிரை, பூசம், ஆயில்யம் பூரம், உத்திரம், ஹஸ்தம், அனுஷம், கேட்டை, மூலம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய 15 நக்ஷ்க்ஷத்திரங்கள் வருமேயாகில் அன்று சித்தயோகம் வரும். ரோகிணி மிருகசீரிஷம்,புனர்பூசம், ஸ்வாதி, திருவோணம் ஆகிய 5 நக்ஷ்க்ஷத்திரங்கள் வந்தால் அமிர்த யோகம் வரும். மீதியுள்ள நக்ஷ்க்ஷத்திரங்களான கார்த்திகை, சித்திரை, மகம், விசாகம், பூராடம், உத்திராடம், பூரட்டாட்தி ஆகிய 7 நக்ஷ்க்ஷத்திரகள் வந்தால் மரணயோகம் ஆகும். சித்தயோகத்திலும், அமிர்தயோகத்திலும் நல்ல காரியங்கள் எல்லாம்

செய்யலாம். மரண யோகத்தில் எல்லா நற்காரியங்களும் விலக்கப்படவேண்டும்.
பஞ்ச அங்கங்களான திதி,வாரம்,நக்ஷக்ஷத்திரம், யோகம், கரணம் ஆகியவைகளைத்
தெரிந்து கொண்டீர்கள். இனிமேல் பஞ்சாங்கம் எப்படிப் பார்ப்பது என்று பார்ப்போம்.

நாம் முதலில் திருகணிதப் பஞ்சாங்கத்தை எடுத்துக் கொள்வோம். ஸ்ரீ காஞ்சி
ஸ்ரீ ஆச்சார்யாள் மடத்துப் பஞ்சாங்கத்தை எடுத்துக் கொள்வோம். பிறகு வாக்கியப்
பஞ்சாங்கத்தையும் பார்ப்போம். முதலில் மடத்துப் பஞ்சாங்கத்தைப் பார்ப்போம்.

இந்த ஆண்டு ஆடி1-ம் தேதிக்கு (16-07-2002) பஞ்சாங்கத்தைப் பார்ப்போம். முதல்
கட்டத்தில் அமிர்தாதி யோகம் எனப் போட்டு அதில் "சி" எனப் போட்டு
இருக்கிறாகள். "சி"- ஏன்றால் சித்தயோகம் எனப் பொருள். அடுத்த கட்டத்தில்
நேத்ரம்-1, ஜீவன் -1/2 எனப் போட்டு இருக்கிறார்கள். அவைகளைத் தற்போது
விட்டு விடுங்கள். இங்கிலீஷ் என்ற கட்டத்தின் கீழ் '16' எனப் போட்டு
இருக்கிறார்கள். தமிழ் என்ற கட்டத்தின் கீழ் போட்டிருப்பது 1-ம் தேதி. அதாவது
அன்றைக்குத் தமிழ்த் தேதி 1-ம் தேதி. அடுத்து திதி என்ற தலைப்பின் கீழ்
"தச-17.23" எனப் போட்டு இருக்கிறார்கள். அதாவது தசமித்திதி சூரிய
உதயத்தில் இருந்து 17 நாழிகை 23 வினாழிகை வரை இருக்கிறது எனப் பொருள்.
அன்றைக்கு எத்தனை மணிக்கு சூரிய உதயம்? பஞ்சாங்கத்தின் அடுத்த பக்கத்திற்கு
வாருங்கள். அதாவது பக்கம்-17. அன்றைய தேதிக்கு நேராக "சூரிய உதயம் காலை"
என்ற கட்டத்திற்கு நேராக 5.56 எனப் போட்டு இருக்கிறார்கள். அதாவது அன்றைய
சூரிய உதயம் காலை 5 மணி 56 நிமிஷங்கள். இந்த 5.56ல் இருந்து 17 நாழிகை
23 வினாழிகை வரை தசமித்திதி இருக்கிறது. பக்கத்தில் ஆங்கில மணியையும்
12-54 எனக் கொடுத்து இருக்கிறார்கள். அதாவது பகல் 12 மணி 54 நிமிஷம் முடிய
தசமி திதி இருக்கிறது. 12 மணி 54 நிமிஷத்திற்குப் பிறகு என்னதிதி ?
ஏகாதசித் திதி.

அடுத்த கட்டதில் "நக்ஷ" எனக் குறிப்பிட்டு "பர-02.30" எனக்குறிப்பிட்டு
இருக்கிறார்கள். அதாவது பரணி நக்ஷக்ஷத்திரம் சூரிய உதயத்திலிருந்து 2 நாழிகை
30 விநாழிகை வரை இருக்கிறது எனப்பொருள். அடுத்த கட்டத்தில் 6 மணி 56
நிமிஷங்கள்வரை இருப்பதாகப் போட்டு இருக்கிறார்கள் மணிக்கணக்கில். சரி!
7.00 மணிக்கு என்ன நக்ஷக்ஷத்திரம் ? சொல்லுங்கள் பார்ப்போம். அடுத்த நக்ஷக்ஷத்திரம்
தான். அதாவது கார்த்திகை.

திரும்பப் பஞ்சாங்கத்திற்கு வாருங்கள். பக்கம் 12-ஐப் பாருங்கள். சூல-17-44
எனப்போட்டு இருக்கிறார்கள். அதாவது 17 நாழிகை 44 வினாழிகை எனப் போட்டு
இருக்கிறார்கள். அது முடிய சூலம் யோகம் ஆகும்.

இப்போது பஞ்சாங்கத்தின் ஐந்து அங்கங்களான திதி,வார, நக்ஷக்ஷத்திரம், யோகம்,
கரணம் ஆகியவைகளைத் தெரிந்து கொண்டீர்கள். கடக ரவி 19-59(IST)
1-56 P.M. எனப்போட்டு இருக்கிறார்கள். அதாவது பகல் 1-மணி 56-க்கு சூரியன்
கடக ராசிக்குப் பிரவேசம் செய்கிறார் எனப் பொருள். இது வரை திருகணிதப்
பஞ்சாங்கத்தைப் பார்த்தோம். இனி வாக்கியப் பஞ்சாங்கத்தைப் பார்ப்போம்.

இதில் ஆடி மாதம் பிறப்பதே செவ்வாய்க்கிழமை ஜூலை 17-ம் தேதி தான். திதி
ஏகாதசி திதி ஆகும். இது சூரிய உதயத்திலிருந்து 6-நாழிகை 44-விநாழிகை
வரை இருக்கிறது. அதற்குப்பின் வரும் திதி துவாதசி திதியாகும். நக்ஷக்ஷத்திரம்
ரோகிணி. அது 54 நாழிகை 42 வினாழிகை வரை இருக்கும். யோகம் கண்டம்
8.00 நாழிகை வரை இருக்கும். சூரியன் திங்கள் இரவு 34 வினாழிகைக்குத்தான்
கடகத்தில் பிரவேசம் செய்கிறார். ஆனால் திருகணிதப்படி பகல் 1-மணி 56

நிமிஷத்திற்கே ப்ரவேசம் செய்து விட்டார். இப்போது பஞ்சாங்கம் பார்க்கத்தெரிந்து கொண்டு விட்டீர்கள்.

ஒவ்வொரு வீட்டிற்கும் அதிபதி உண்டு. அதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? அதைக் கீழே பட்டியல் போட்டுக்காட்டி இருக்கிறோம். தெரிந்து கொள்ளுங்கள்.

| ராசிகள் | அதிபதி |
|---|---|
| மேஷம் | செவ்வாய். |
| ரிஷபம் | சுக்கிரன். |
| மிதுனம் | புதன் |
| கடகம் | சந்திரன் |
| சிம்மம் | சூரியன் |
| கன்னி | புதன் |
| துலாம் | சுக்கிரன் |
| விருச்சிகம் | செவ்வாய் |
| தனுசு | குரு |
| மகரம் | சனி |
| கும்பம் | சனி |
| மீனம் | குரு |

| | | | |
|---|---|---|---|
| (குரு) மீனம் | (செவ்வாய்) மேஷம் | (சுக்கிரன்) ரிஷபம் | (புதன்) மிதுனம் |
| (சனி) கும்பம் | ராசி | | (சந்திரன்) கடகம் |
| (சனி) மகரம் | | | (சூரியன்) சிம்மம் |
| (குரு) தனுசு | (செவ்வாய்) விருச்சிகம் | (சுக்கிரன்) துலாம் | (புதன்) கன்னி |

(...) : அதிபதிகள்

இதை நாம் கீழே நாம் கட்டம் போட்டுக் காட்டியுள்ளோம். பார்த்துக் கொள்ளவும்.

மேலே உள்ள அட்டவணையைப் பார்த்தீர்களேயானால் சூரியன், சந்திரன் தவிர மற்ற கிரகஹங்களுக்கு இரண்டு, இரண்டு வீடுகள் சொந்தமாக இருக்கும். சூரியனுக்கும், சந்திரனுக்கும் மட்டும் ஒவ்வொரு வீடுகள் இருக்கும். இதற்கு நாம் ஒரு கதை

சொல்லப் போகிறோம்.

கும்பத்திலிருந்து கடகம் வரையிலான 6-வீடுகள் சந்திரனுக்குச் சொந்தமாக இருந்ததாம். அதேபோன்று சிம்மத்தில் இருந்து மகரம் வரை சூரியனுக்குச் சொந்தமாக இருந்ததாம். மற்ற கிரஹங்களுக்கு வீடுகளே இல்லையாம். புதன் சந்திரனிடம் போய் "நீதான் 6 வீடுகள் வைத்து இருக்கிறாயே. எனக்கு ஒரு வீடு கொடேன்" என்று கேட்டாராம். சந்திரனும் போனால் போகிறது என்று கடகத்திற்குப் பக்கத்தில் உள்ள வீடான மிதுனத்தைக் கொடுத்தாராம். புதன் சும்மா இருக்கவில்லை. உடனே சூரியனிடம் சென்று "எனக்கு ஒரு வீடு கொடேன்" என்று கேட்டார். சூரியனும் "சரி சிம்மத்திற்குப் பக்கத்தில் இருக்கும் வீடான கன்னியை எடுத்துக் கொள்" என்று கூறினார். புதனுக்கு இரண்டு வீடுகள் இவ்விதமாகக் கிடைத்தன. சுக்கிரன் இதைப் பார்த்துச் சும்மா இருப்பாரா? தானும் சந்திரனிடம் சென்றார். தனக்கு ஒரு வீடு தருமாறு கேட்டார். சந்திரனும் போனால் போகிறது என்று மிதுனத்திற்குப் பக்கத்தில் உள்ள ரிஷபத்தைக் கொடுத்தார். சுக்கிரன் ரிஷபம் வீட்டை வாங்கிக் கொண்டு நேராக சூரியனிடம் சென்றார். புதனுக்குக் கொடுத்தது போல் தனக்கும் ஒரு வீடு தருமாறு கேட்டார். சூரியனும் போனால் போகிறது என கன்னிக்குப் பக்கத்தில் இருக்கும் துலாம் வீட்டைக் கொடுத்தார். இப்போது சுக்கிரனுக்கு ரிஷபமும், துலாமும் இரண்டு வீடுகள் சொந்தமாயின. இதையெல்லாம் செவ்வாய் பார்த்துக் கொண்டே இருந்தார். தானும் சந்திரனிடம் இருந்து ரிஷபத்திற்குப் பக்கத்து வீடான மேஷத்தை சந்திரனிடமிருந்து பெற்றுக் கொண்டார். அதே போன்று சூரியனிடமிருந்து துலாத்திற்குப் பக்கத்து வீடான விருச்சிகத்தைப் பெற்றுக் கொண்டார்.

குரு மட்டும் என்ன இளிச்சவாயறா? தனக்கும் ஒரு வீடு தருமாறு சந்திரனிடம் கேட்டார். சந்திரன் மேஷத்திற்குப் பக்கத்து வீடான மீனத்தை எடுத்துக் கொள்ளுமாறு கூறினார். சூரியனிடமிருந்து இவ்வாறே விருச்சிகத்திற்குப் பக்கத்து வேடான தனுசைப் பெற்றுக் கொண்டார். சனி என்ன எல்லாருக்கும் இளைத்தவறா என்ன? தானும் சந்திரனிடமிருந்து மீனத்திற்குப் பக்கத்து வீடான கும்பத்தைப் இரந்து பெற்றுக் கொண்டார். சூரியிடமிருந்து தனுசுவிற்குப் பக்கத்து வீடான மகரத்தையும் மற்றவர்களைப் போல் பெற்றுக் கொண்டார். இப்போது சந்திரனிடமும், சூரியனிடமும் முறையே கடகத்தையும், சிம்மத்தையும் தவிர வேறு வீடுகளே இல்லையாம்.

ராகு, கேதுக்கள் எல்லா வீடுகளும் போன பின்பு கடைசியாகச் சந்திரனிடமும், சூரிய நிடமும் போய் வீடுகள் கேட்டன. அதற்கு சூரியனும், சந்திரனும் "எங்களுக்கே ஆளுக்கு ஒரு வீடுதான் இருக்கிறது. சிம்மத்தையும், கடகத்தையும் தவிர எங்களுக்கே வேறு வீடுகள் கிடையாது. ஆகவே நாங்கள் உங்களுக்கு வீடு கொடுக்க இயலாமல் இருக்கிறோம். இருப்பினும் நீங்கள் எந்த வீட்டில் இருக்கிறீர்களோ அதுவே உங்களுக்குச் சொந்த வீடாகும்" என வாக்களித்தனர். அதன்படி ராகு,கேதுக்கள் எந்த வீட்டில் இருக்கிறார்களோ அந்த வீட்டின் அதிபதி கொடுக்கக் கூடிய பலன்களை இவர்கள் கொடுப்பார்கள்.

இதுதான் கிரஹங்களுக்கு வீடுகள் கிடைத்த கதை. பாடம் சுவாரஸ்யமாக இருப்பதற்காக இந்தக் கதையைக் கூறினோம். ஒவ்வொரு வீட்டுக்கும் யார் அதிபதி என்பது மனப்பாடமாகத் தெரிய வேண்டும். மறுபடியும் அடுத்த பாடத்தில் சந்திப்போம்.

சென்ற பாடத்தில் கிரகங்களின் சொந்த வீடுகளைத் தெரிந்து கொண்டீர்கள். சரி! கிரகங்களுக்குச் சொந்த வீடு இருந்து என்ன பயன் ? அது ஜோதிடத்திற்கு எந்த விதத்தில் உதவுகிறது ? இப்போது அதைத் தெரிந்து கொள்வோம். ஒரு கிரகம் சொந்த வீட்டில் இருந்தால் அது அதிக பலம் உள்ளதாகக் கருதப் படுகிறது. அதிக பலம் உள்ள கிரகம் தன் சொந்த தசா, புக்திக் காலங்களில் நல்லதையே செய்யும். உதாரணத்திற்குக் கீழே உள்ள ராசிக் கட்டத்தைப் பாருங்கள்.




இதில் சந்திரன் கடகத்தில் இருக்கிறார். கடகம் அவருக்கு சொந்த வீடு. சொந்த வீட்டில் இருப்பதால் அவருக்கு பலம் அதிகரிக்கிறது. ஆகவே அவர் தன் தசா, புக்திக் காலங்களில் நல்லதையே செய்வார். சந்திர தசையோ, அல்லது சந்திர புக்தியோ அவருக்கு நல்லதையே செய்யும். அதே போன்று மூலத்திரிகோண வீட்டில் இருந்தாலும் அவர் நல்லதையே செய்வார். கிரகங்களின், உச்ச, மூலத் திரிகோண, மற்றும் நீச்ச வீடுகளைப் பற்றி நாம் கீழே எழுதி இருக்கிறோம். சொந்த, உச்ச,மூலத் திரிகோண வீடுகளில் இருக்கும் கிரகங்கள் நல்லதையே

செய்யும் என்பது ஜோதிட விதி. நீச்ச வீடுகளில் இருக்கும் கிரகங்கள் நல்லதைச் செய்யாது என்பதுவும் ஜோதிட விதி. இதைத் தவிர சந்திரன் மனது, தாயார்- ஆகியவைகளுக்கு காரகம் வகிப்பவர். சந்திரனை வைத்துத்தான் நாம் ஒருவரின் மனநிலையையோ, அல்லது தாயாரையோ கூற வேண்டும். மேற் கண்ட உதாரண ஜாதகத்தில் சந்திரன் சொந்த வீட்டில் இருப்பதால் நல்ல மனநிலையுடன் இருப்பார் எனக்கொள்ளலாம். தாயாரும் நல்ல விதமாக இருப்பார் எனக்கொள்ளலாம். சந்திரனுடன் ராகு இருக்கிறார் எனக்கொள்ளுங்கள். அந்த ஜாதகர்மிகுந்த சுயநல வாத ியாக இருப்பார். சனி இருந்தால் அவர் எதையும் மறைக்கக் கூடியவறாக இருப்பார். வெளிப் படையாக எதையும் கூற மாட்டார். (HE WILL BE A SECRETIVE PERSON). கீழே உச்ச, நீச்ச, மூலத்திர ிகோண வீட்டைப் பற்றிப் பார்ப்போம்.

.

| கிரகங்கள் | உச்ச வீடு | மூலத்திரிகோண வீடு | நீச்ச வீடு. |
|---|---|---|---|
| | | | |
| சூரியன் | மேஷம் | சிம்மம் | துலாம் |
| சந்திரன் | ரிஷபம் | ரிஷபம் | விருச்சிகம் |
| செவ்வாய் | மகரம் | மேஷம் | கடகம் |
| புதன் | கன்னி | கன்னி | மீனம் |
| குரு | கடகம் | தனுசு | மகரம் |
| சுக்கிரன் | மீனம் | துலாம் | கன்னி |
| சனி | துலாம் | கும்பம் | மேஷம் |

ஒரு கிரகம் எந்த வீட்டில் உச்சம் பெறுகிறதோ அதற்கு 7-ம் வீட்டில் அவர் நீச்சம் பெ றுகிறார். உதாரணமாக சூரியன் மேஷத்தில் உச்சம் பெறுகிறார். மேஷத்தில் இருந்து 7-ம் வீடான (மேஷத்தையும் சேர்த்து எண்ண வேண்டும்), துலாத்தில் அவர் நீச்சம் பெறுகிறார்.

சந்திரன் ரிஷபத்தில் உச்சம் பெறுகிறார். ரிஷபத்தில் கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோ கிணி 4- பாதங்கள், மிருகசீரிஷம் 1,2, பாதங்கள் இருக்கின்றன. சந்திரன் ரோகிணியில் இருக்கும்போது மிகுந்த பலத்துடன் இருப்பதாகக் கூறப் படுகிறது. இதற்கு ஒரு சிறிய கதை உண்டு.

அஸ்வனி முதல் ரேவதி முடிய உள்ள 27 நக்ஷக்ஷத்த
ிரங்களும் தட்ச பிரஜாபதிக்கும் அக்னிக்கும் பிறந்த
பெண்களாம். தட்சன் இந்தப் பெண்களையெல்லாம் சந்த
ிரனுக்கு மணம் முடித்துக் கொடுத்தான்.சந்திரன் இந்த 27
மனைவியரில் ரோகிணியிடம் மட்டுமே அதிக அன்பு
செலுத்தி வந்தான். மற்ற 26 பேரையும் அவன் ந
ினைக்கவே இல்லை. இதனால் விரக்தியுற்ற 26 பேரும்
தந்தையிடம் சென்று முறையிட்டனர். தட்சன் மிக வருந்த
ி மருமகன் சந்திரனிடம் "எல்லோரிடமும் சமமாக
அன்பாய் இருக்குமாறு" கூறினான். ஆனால் சந்திரனோ
அவர் பேச்சைக் கேட்க்காமல் பழையபடி ரோகிணியிடம்
மட்டும் அன்பு காட்டினான். இதனால் கோபமுற்ற தட்சன்
சந்திரனின் கலைகள் நாளா வண்ணமும் குன்றட்டும் என
சாபமிட்டார். சந்திரனின் ஒளி ஒவ்வொரு நாளும்
குறையத் தொடங்கியது. இதனால் வருத்தமுற்ற சந்திரன்
சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்தான். தனக்கு ம
ீண்டும் பழைய ஒளி கிடைக்க வேண்டும் என வேண்
டிக்கொண்டான். சிவனும் மனமிறங்கி "குன்றத்தொடங்கிய
ஒளி மீண்டும் சிறிது சிறிதாக வளர" வரம் கொடுத்தார்.
அதனால் தான் சந்திரன் 15 நாட்கள் தேய்ந்து பின் 15
நாட்களில் வளர்கிறார். இது தான் தேய் பிறை, வளர் ப
ிறை தோன்றிய புராணக்கதை. சரி! நாம் இனி வ
ிஞ்ஞானத்திற்கு வருவோம்.

சந்திரன் தன்னைத்தானே சுற்றிக் கொண்டு பூமியையும்
சுற்றுகிறது என்று எல்லோருக்கும் தெரியும். பௌர்ணம
ியன்று சூரியனின் ஒளி சந்திரன் மேல் பட்டு ப
ிரகாசமாய்க் காட்சி அளிக்கிறார். முழு நிலவாய்க் காட்சி
அளிக்கிறார். சந்திரன் தன்னைத்தானே ஒரு முறை சுற்ற
ிக் கொள்ள 27 பூமியின் நாட்கள் ஆகின்றன. அதாவது
சந்திரன் ஒரு முறை சுற்றிக் கொள்வதற்குள் பூமி 27
முறை சுற்றி விடுகிறது. சந்திரன் மெதுவாகச் சுற்றுவதால்
தினமும் சிறிதுசிறிதாய்க் குறைகிறார். நமது கண்களுக்கு
சிறிது, சிறிதாகக் குறைந்து காணப் படுகிறார். இதுதான் ப
ிறைகள் தோன்றக் காரணம். அம்மாவாசையன்று சந்திரன்
பாதிச் சுற்றுத்தான் சுற்றி இருப்பார். அப்போது அவர்
கண்ணுக்குத் தெரிவது இல்லை. மீதிச் சுற்றைச் சுற்ற
ஆரம்பிக்கும் போது சிறிது, சிறிதாக வளர ஆரம்பிக்க
ிறார். அதைத் தான் நாம் வளர் பிறை என்கிறோம். ஒரு
சுற்று முடிந்தவுடன் அவர் முழுநிலவாய்க் காட்சி அளிக்க
ிறார். அதைத்தான் நாம் பௌர்ணமி என்கிறோம். நாம்
எப்போதும் நிலவின் ஒரு பக்கத்தையே பார்க்கிறோம்.

மறு பக்கத்தைப் பார்க்கவே முடியாதா? முடியும். அம்மாவாசையன்று அது மறு பக்கத்தைக் காட்டுகிறது. நமக்குத்தான் அது இருட்டாக இருப்பதால் மறுபக்கம் தெரிவதில்லை. நாம் எப்போதும் ஒரு பக்கத்தையே பார்க்கிறோம். சரி! இனிமேல் நாம் பாடத்திற்கு வருவோம்.

பஞ்சாங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.முதலில் ஆச்சார ியாள் மடத்துப்பஞ்சாங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். ஆடி மாதம் 1-ம் தேதிக்குப் பஞ்சாங்கம் எப்படிப் பார்ப்பது எனக் கற்றுக் கொடுத்தோம். ஆடி 30-ம் தேத ிக்கு எப்படி ஜாதகம் கணிப்பது எனப் பார்ப்போம். பஞ்சாங்கத்தில் ஆடி மாதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதிலே ஜாதகக்கட்டம் போட்டிருக்கிறார்கள். பாருங்கள். அது ஆடி 1-ம் தேதியின் கிரகநிலை. அன்று ஒரு குழந்தை பிறந்தால் அது தான் அன்றைய கிரக நிலை. அதாவது கீழே காட்டியுள்ள படி அன்றைய கிரக நிலை இருக்கிறது.

| | |
|---|---|
| ரிஷபத்தில் | சனி, சுக்கிரன் |
| மிதுனத்தில் | ராகு,குரு,புதன் |
| கடகத்தில் | சூரியன் |
| விருச்சிகத்தில் | செவ்வாய் |
| தனுசில் | கேது |

ஆனால் நாம் எடுத்துக் கொண்டது ஆடி-30-ம் தேதி. இந்த 30-நாட்களில் கிரகங்கள் இடம் பெயர்ந்து இருக்கும் அல்லவா? நாம் அதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? கட்டத்தின் நடுவில் 'பெயர்ச்சி' எனப் போட்டு இருக்கிறார்கள் பாருங்கள்.

12 - மிதுனம் சுக்கிரன்
13 - கடகம் புதன்
28 - சிம்மம் புதன்

அதாவது ஆடி மாதம் 12-ம் தேதி சுக்கிரனானவர் ரி ஷபத்தில் இருந்து மிதுனத்திற்குப் பெயர்கிறார். 13-ம் தேதி புதன் மிதுனத்தில் இருந்து கடகத்திற்கும் 28-ம் தேதி புதன் திரும்பவும் கடகத்தில் இருந்து சிம்மத்திற்கும் பெயர்கிறார். இவைகள் தான் இந்த மாதத்தில் பெயர்ச்ச ிகள். இந்தப் பெயர்ச்சிகளையெல்லாம் எடுத்துக் கொண்டு ஆடி 30-க்கு ஜாதகம் கணிக்கலாம், வாருங்கள்.

முதலில் ஜாதகக் கட்டத்தைப் போடுங்கள். 12-கட்டங்களையும் போட்டு விட்டீர்கள் அல்லவா? சுக்கிரனை மிதுனத்தில் போடுங்கள். புதனை சிம்மத்தில் போடுங்கள். மற்ற கிரகங்களை பஞ்சாங்கத்தில் கொடுத்துள்ள படி போடுங்கள்.ஜாதகம் கீழ்க்கண்டவாறு இருக்கும்.




எல்லாக் கிரகங்களையும் போட்டு விட்டீர்களா? ஒன்பது கிரகங்கள் இருக்கின்றனவா?
இல்லையே! எட்டு கிரகங்கள் தானே இருக்கின்றன. சந்திரனைக் காணோம். நாம்
சந்திரனைப் போடவில்லை. அதை எப்படிப் போடுவது என்று நாம் பிறகு சொல்லிக்
கொடுக்கிறோம்.

அதற்குமுன் வாக்கியரீதியாக ஆடி -30-க்கு ஜாதகம் கணிக்கலாம். வாருங்கள்.
பாம்புப் பஞ்சாங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதிலும் ஆடி மாதத்திற்கு ஜாதகக்
கட்டம் போட்டு இருக்கிறார்கள் பாருங்கள். 5-ம்தேதி புதன் கடகத்திற்கு வந்துவிட்டு
22-ம் தேதி சிம்மத்திற்குப் பிரவேசம் செய்கிறார். 11-ம் தேதி சுக்கிரன்
மிதுனத்திற்கு வருகிறார். செவ்வாய் 22-ம் தேதியே

தனுசிற்குப் பெயர்ந்து
விட்டார். மேற்கண்ட பெயர்ச்சிகளைக் கணக்கில்
கொண்டு நாம் ஜாதகம் கணித்தால்
ஜாதகம் கீழ்க்கண்டவாறு இருக்கும்.




இப்போது திருகணிதரீதியாகவும், வாக்கியரீதியாகவும்
ஜாதகம் கணிக்கக்
கற்றுக்கொண்டீர்கள். ஜாதகம் ஒரே மாதிரியாக இருக்க
ிறதா ? இல்லை.
வித்தியாசங்கள் இருக்கின்றன. வாக்கியப் பஞ்சாங்கத்தில்
செவ்வாய் தனுசில்
இருக்கிறார், திருகணிதத்தில் விருச்சிகத்தில் இருக்கிறார்.
இதுதான் இப்போதைய
வித்தியாசம். மற்ற வித்தியாசங்கள் முழுவதும் போட்ட ப
ின்புதான் தெரியும்.

அடுத்த பாடத்தில் சந்திரனை எப்படிப் போடுவது, ஜனன
கால இருப்பு திசை
எப்படிக்கண்டு பிடிப்பது போன்ற விஷயங்களைப்
பார்ப்போம்.
மறுபடியும் அடுத்த பாடத்தில் சந்திப்போம்.

சென்ற பாடத்தில் ஆடி மாதம்-30-ம் தேதிக்கு கிரக நிலையைப் போட்டோம். சந்திரனைத் தவிர மீதி எல்லாக் கிரகங்களையும் போட்டு விட்டோம். இப்போது நாம் சந்திரனைப் போடப் போகிறோம். நாம் ஆடி 30-ம் தேதிக்கு என்று கிரகங்களைப் போட்டோமே தவிர எந்த நேரத்திற்கு என்று போடவில்லை. இப்போது மாலை 5.00 மணிக்கு க ிரகங்களைப் போடுவோம். பஞ்சாங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

ஆடி 30-ம் தேதி அன்று "நக்ஷ" என்ற கட்டத்திற்கு எதிராக "ரோ 23-11" எனப் போட்டு இருக்கிறார்கள். அதாவது சூரிய உதயத்திலிருந்து 23 நாழிகை 11 வினாழிகை ரோகி ணி நக்ஷக்ஷத்திரம் இருக்கிறது. அதாவது பகல் 03-18 முடிய ரோகிணி நக்ஷக்ஷத்திரம் இருக்கிறது. ஆங்கில மணியைப் பக்கத்திலுள்ள கட்டத்தில் கொடுத்து இருக்க ிறார்கள். சந்திரன் 23நாழிகை 11 வினாழிகை முடிய மிருக சீரிஷம் நக்ஷக்ஷத்திரத்தில் சஞ்சாரம் செய்கிறார் எனப் பொருள். அதாவது பகல் 03-மணி 18 நிமிஷங்கள் வரை சந்திரன் ரோகிணியில் இருக்கிறார். அதற்குப்பின் அவர் எங்கு செல்வார்? அடுத்த நக்ஷக்ஷத்திரத்த ிற்குத்தான். அடுத்த நக்ஷக்ஷத்திரம் என்ன? மிருகசீரிஷம் தான். மறுநாள் பகல்20-நாழிகை 45 விநாழிகை முடிய (அதாவது பகல் 03மனி 18நிம ிஷங்கள் வரை) சந்திரன் மிருகசீரிஷத்தில் இருப்பார். ஆடி 31-ம் தேத ியைப் பார்த்தால் இது தெரிய வரும்.

நாம் எடுத்துக் கொண்ட நேரமான மாலை 5.00மணிக்கு சந்திரன் ம ிருகசீரிஷத்தில் இருக்கிறார் அல்லவா. இப்போது ஒரு சிறு குழப்பம். ம ிருகசீரிஷம் 1,2 பாதங்கள் ரிஷபத்திலும், 3,4 பாதங்கள் மிதுனத்திலும் இருக்கிறது அல்லவா? சந்திரனை ரிஷபத்தில் போடுவதா அல்லது ம ிதுனத்தில் போடுவதா? இப்போது சந்திரன் எந்தப்பாதத்தில் இருக்கிறது என்பதைக் கண்டு பிடிப்போம். கண்டுபிடித்தால் நமக்குச் சந்திரனை எங்கு போடுவது என்பது விளங்கும்.

ஒரு நாளைக்கு மொதம் 60 நாழிகை எனக் கூறி இருந்தோம். சந்திரன் அன்று 23நாழி கை 11 வினாழிகை ரோகிணியில் சஞ்சாரம் செய்து வ ிட்டார் இல்லையா? மீதிப் பொழுதை மிருகசீரிஷத்தில் அவர் சஞ்சாரம் செய்கிறார்.

ஆடி 30-ம் தேதிக்கு மொத்த நாழிகை 60.00 நாழிகை
ரோகிணியில் சஞ்சாரம் செய்தது 23.11 நாழிகை

மிருகசீரிஷத்தில் சஞ்சாரம் செய்தது 36.49 நாழிகை

சந்திரன் மிருகசீரிஷத்தில் 30-ம் தேதி மட்டும் சஞ்சாரம் செய்யவ ில்லை. 31-ம் தேதியும் 20நாழிகை 45வினாழிகை சஞ்சாரம் செய்து இருக்கிறார். பஞ்சாங்கத்தைப் பார்த்தால் இதுதெரிய வரும். மிருகசீரி ஷத்தில் மொத்தம் எத்தனை நாழிகை சஞ்சாரம் செய்து இருக்கிறார்? இரண்டையும் கூட்டுங்கள். 36.49 + 20.45 =57.34 நாழிகை.இந்த மொத்த நாழிகைக்குப் பெயர் ஆத்தியந்த பரம நாழிகை எனப் பெயர். இப்போது ஆத்தியந்த பரமநாழிகை என்றால் என்ன? எனத் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா? சந்திரன் ஒரு நக்ஷக்ஷத்திரத்தைக் கடக்க எடுத்துக் கொள்ளும் நேரமே ஆத்தியந்த பரம நாழிகைஎனப் படும்.

நாம் எடுத்துக்கொண்ட நேரம் மாலை 5.00 மணி. அன்றைய சூரிய உதயத்தைக் கண்டு பிடுயுங்கள். அதை எப்படிக் கண்டு பிடிப்பது? பஞ்சாங்கத்தின் கீழ்ப் பகுதியைப் பாருங் கள். ஆடி 30-க்கு, அதாவது ஆகஸ்டு 14-ம் தேதிக்கு "சூரிய உதய காலை" என்ற கட்டத்தின் கீழ் போட்டுள்ளார்கள் பாருங்கள். காலை 6.02 எனப் போட்டுள்ளார்கள். காலை 6.02 முதல் மாலை 5.00மணி முடிய அதாவது 10 மணி 58 நிமிஷத்தை நாழிகை ஆக்குங்கள். 27-நாழிகை 25 வினாழிகை வரும். அதாவது குழந்தை பிறந்து சூரியோ தயத்திலிருந்து 27நாழிகை 25 வ ினாழிகை ஆகிருக்கிறது. சூரியோதயத்திலிருந்து 23நாழிகை 13 வ ினாழிகை முடிய ரோகிணி இருக்கிறது. மீதி (27.25-23.13= 04.12) நாழிகை மிருகசீரிஷத்தில் சென்று இருக்கிறது.

மிருகசீரிஷத்தின் ஆத்தியந்த பரமநாழிகை =57.34
அதாவது மிருகசீரிஷத்தின் 4- பாதங்களுக்கு =57.34
ஒரு பாதத்திற்கு =57.34 / 4 =14.24 நாழிகை

சந்திரன் 14.24நாழிகை வரையில் முதல் பாதத்தில் இருக்கிறார். நம்முடைய மானசீகக் குழந்தைக்கு மிருகசீரிஷத்தில் 4 நாழிகை 12 வ ினாழிகை சென்று இருக்கிறது. ஆகவே சந்திரன் முதல் பாதத்தில் தான் இருக்கிறார். ஆக சந்திரனை ரிஷபத்தில் போடுங்கள். என்ன 9 க ிரகங்களையும் போட்டு விட்டீர்களா? இப்போது திருகணித ரீதியாக ஜாதகத் தைப் போட்டோம். வாக்கியப் பஞ்சாங்கத்தை வைத்துப் போடுவோமா?

நாம் கையாண்ட திருகணிதப் பஞ்சாங்கம் காஞ்சீபுரத்தை வைத்துக் கண ிக்கப் படுகிறது. வாக்கியப் பஞ்சாங்கம் தஞ்சாவூரை வைத்துக் கணிக்கப் படுகிறது. அதில் சூரியோதயம் காலை 6.06 எனப் போட்டு இருக்க ிறார்கள். அதாவது தஞ்சாவூரில் சூரியோதயம் காலை 6.06. நாம்

ிறார்கள். அதாவது தஞ்சாவூரில் சூரியோதயம் காலை 6.06. நாம் எடுத்துக் கொண்ட மானசீகக் குழந்தை சென்னையில் பிறந்தது எனக் கொள்வோம். திருகணிதத்தில் காஞ்சீபுரத்தில் சூரியோதயம் காலை 06.02 எனப் போட்டுள்ளதால் நாம் அந்த சூரியோதயத்தையே எடுத்துக் கொள்வோம். வாக்கி யப் பஞ்சாங்கத்தில் காலை 12நாழிகை 40 வினாழிகை வரை தான் மிருகசீரிஷம் எனப் போட்டு இருக்கிறார்கள். அதற்குப்பின் திருவாதிரை நக்ஷ்க்ஷத்திரம் தான் வருகிறது. திருவாதரையில் எந்தப் பாதம் வருகிறது எனப் பாருங்கள். திருவாதரையின் ஆத்தியந்த பரம நாழிகையைக் கண்டு பிடியுங்கள். பின்பு குழந்தை எந்தப் பாதத்தில் பிறந்து இருக்கிறது எனக் கண்டு பிடியுங்கள். திருவாதரை 2-ம் பாதத்தில் பிறந்து இருக்கிறது. சந்திரனை மிதுனத்தில் போடுங்கள். இரண்டு பஞ்சாங்கத்திலும் ஜாதகம் கணித்தபின் எப்படி இருக்கிறது எனப்பாருங்கள்.




திருகணிதபடி




வாக்கியப்படி

வித்தியாசம் தெரிகிறது அல்லவா? நக்ஷக்ஷத்திரமே மாறி இருக்கிறது அல்லவா? அதற்குத்தான் நாம் திருகணிதத்தையே எல்லோரும் கையாள வேண்டும் எனக் கூறி வருகிறோம்.

கிரகங்கள் பார்க்கின்றன என ஜோதிடத்தில் கூறுகிறார்கள் அல்லவா? பார்வை என்றால் என்ன? அதை இப்போது பார்ப்போம். எல்லாக் கிரகங்களும் தான் இருக்கும் வீட்டில் இருந்து 7-ம் வீட்டைப் பார்க்கும். உதாரணமாக சந்திரன் ரிஷபத்தில் இருக்கிறார். அவர் 7-ம் பார்வையாக விருச்சிகத்தைப் பார்ப்பார். ரிஷபத்திலிருந்து எண்ணுங்கள். ரிஷபம் 1,மிதுனம் 2, கடகம் 3,சிம்மம் 4, கன்னி 5, துலாம் 6, விருச்சிகம் 7. ஒருகிரகம் எந்த வீட்டில் இருக்கிறதோ அந்த வீட்டையும் சேர்த்து எண்ண வேண்டும். சூரியன், சந்திரன், புதன், சுக்கிரன்,ராகு, கேது ஆகிய கிரகங்கள் தான் இருக்கும் வீட்டி லிருந்து 7-ம் வீட்டைப் பார்ப்பார்கள்.ஆனால் குரு,சனி,செவ்வாய் ஆகியகிரகங்களுக்கு 7-ம் பார்வையைத் தவிர வேறு சில பார்வைகளும் உண்டு.

செவ்வாய்:- அவர் தான் இருக்க்கும் இடத்திலிருந்து 4,7,8-ம் வீடுகளைப் பார்ப்பார். நம் ஜாதகத்தில் விருச்சிகத்தில் இருக்கிறார். அவர் 4-ம் பார்வையாக கும்பத்தையும், 7-ம் பார்வையாக ரிஷபத்தையும், 8-ம் பார்வையாக மிதுனத்தையும் பார்ப்பார். அவர் ரிஷபத் தைப் பார்க்கும் போது அதில் உள்ள சந்திரன், சனி ஆகிய கிரகங்களையும் பார்ப்பார். அதே போல் மிதுனத்தைப் பார்க்கும் போது அதில் உள்ள குரு, ராகு,சுக்கிரன் ஆகிய கிரகங்களையும் பார்ப்பார். பார்வையினால் என்ன பலன் என்பதைப் பின்னால் பார்ப்போம்.

குரு:- அவர் தான் இருக்கும் வீட்டிலிருந்து 5-ம் வீடு, 7-ம் வீடு, 9-ம் வீடு ஆகியவற்றைப் பார்ப்பார். குரு மேற்கண்ட ஜாதகத்தில் மிதுனத்த ில் இருக்கிறார். அவர் 5-ம் பார்வை யாக துலாத்தையும், 7-ம் பார்வையாக தனுசையும், 9-ம் பார்வையக கும்பத்தையும் பார்ப் பார். அந்த வீடுகளையல்லாது அந்த வீட்டில் உள்ள கிரகங்களையும் பார்ப்பார்.

சனி:- அவர் தான் இருக்கும் வீட்டிலிருந்து 3-ம் வீடான கடகத்தையும், 7-ம் வீடான விருச்சிகத்தையும் 10-ம் வீடான கும்பத்தையும் பார்ப்பார். அந்த வீட்டிலுள்ள கிரகங்களையும் பார்க்கிறார்.

மற்ற கிரகங்களுக்கெல்லாம் 7-ம் பார்வை ஒன்று தான். பார்வை என்பது இரண்டு கிரகங்களுக்கோ அல்லது ஒரு கிரகத்துக்கும், ஒரு வ ீட்டிற்கும் உள்ள தூரம் தான். இந்த தூரத்தைத்தான் நாம் பார்வை என்க ிறோம்.

ஜாதகத்தில் நாம் ஒன்பது கிரகங்களைப் போட்டு விட்ட்டோம். இனி லக்கினமும், ஜனனகால இருப்பு தெசையையும் கணித்தோமேயானால் ஜாதகம் முழுமை ஆகிவிடும். இப்போது லக்கினம் என்றால் என்ன எனப் பார்ப்போம்?

சூரியன் முன்பு பூமி சுற்றுகிறது என உங்களுக்குத்தெரியும். பூமியின் ஏதோ ஒரு பக்கம் சூரியன் முன் எப்போதும் உதயம் ஆகும் என உங்களுக்குத்தெரிந்து இருக்கும். ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு பூமியின் எந்தப் பாகம் உதயம் ஆகிறதோ அதுவே அந்த நேரத்திற்கு லக்னம் எனப்படும். என்ன புரிகிறதுவும் போல் இருக்கிறது; அதே சமயம் புர ியாதது போலும் இருக்கிறது. இல்லையா. இன்னும் வ ிளக்கமாகச்சொல்லுகின்றோம். பூமியை மேலிருந்து கீழாகப் 12 பகுத ியாகப் பிரித்துக் கொள்ளுங்கள். 12-பகுதிக்கும் மேஷத்திலிருந்து, மீனம் முடிய 12 ராசிகளின் பெயர்களைக் கொடுங்கள். அதாவது பூமியைப் 12 ராசிகளாகப் பிரித்து விட்ட்டோம்.

சூரியன் சித்திரை மாதத்தில் மேஷத்தில் உதயமாவர். வைகாசி மாதத்த ில் ரிஷபத்தில் உதயமாவர். கீழே சூரியன் எந்தஎெந்த மாதத்தில் எந்த ராசியில் உதயம் ஆவார் எனப்பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறோம்.

.

| மாதம் | சூரியன் உதயமாகும் ராசி |
|---|---|
| | |
| சித்திரை | மேஷம் |
| வைகாசி | ரிஷபம் |
| ஆனி | மிதுனம் |
| | |

| | |
|---|---|
| ஆடி | கடகம் |
| ஆவணி | சிம்மம் |
| புரட்டாசி | கன்னி |
| ஐப்பசி | துலாம் |
| கார்த்திகை | விருச்சிகம் |
| மார்கழி | தனுசு |
| தை | மகரம் |
| மாசி | கும்பம் |
| பங்குனி | மீனம் |

இவ்வாறாக சூரியன் ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு ராசியில் உதயம் ஆகிறார். சூரியன் சித்தரையில் மேஷத்தில் உதயமாவதால் அதற்கு மேஷமாதம் என்று பெயர். வைகாசியில் ரிஷபத்தில் உதயமாவதால் அதற்கு ரிஷப மாதம், என்று பெயர். இவ்வாறே ம ிதுனமாதம், கடக மாதம், சிம்ம மாதம், கன்னியா மாதம், துலா மாதம், விருச்சிக மாதம், தனுர் மாதம், மகர மாதம், கும்ப மாதம், மீன மாதம் என்று ஒவ்வொரு மதமும் அழைக்கப்படும்.

அடுத்த பாடத்தில் லக்னம் எப்படிக் கணிப்பது எனப் பார்ப்போம்.

<u>நீங்களும் ஜோதிடர் ஆகலாம்</u> பாடம் - 6

இப்போது மணி என்னவென்று கேட்டால் உடனே கைய ில் உள்ள கடிகாரத்தைப் பார்ப்பீர்கள். எந்த ஊராக இருந்தாலும் (இந்தியாவிற்குள்) ஒரே நேரம் தான். இதற்கு இந்தியன் ஸ்டாண்டர்ட் நேரம் எனப் பெயர். ஆனால் உண்மையில் அப்படி இல்லை. ஊருக்கு ஊர் நேரம் வித்தியாசப் படுகிறது. ஏனென்றால் ஒவ்வொரு ஊரின் longtitude, latitude வித்தியாசப் படுகிறது.

இந்தியன் ஸ்டாண்டர்ட் நேரம் என்பது ஆந்திராவிலுள்ள கோல்கொண்டாவின் ரேகாம்சம் 82 1/2 டிகிரிக்கு உள்ள நேரமாகும். இந்த நேரத்தையே இந்தியா முழுவதற்கும் நாம் வைத்துள்ளோம். ஆனால் Longtitude, Latitude க்குத் தகுந்தவாறு நேரம் ஊருக்கு ஊர் மாறுபடுகிறது. ஊருக்கு ஊர் மாறுபடும் இந்த நேரத்திற்கு சுதேச மணி அல்லது local meantime என்று பெயர். சரி! இந்த சுதேச மணியைக் கண்டு பிடிப்பது எவ்வாறு ? அதற்கு முதலில் ஒவ்வொரு ஊரின் longtitude தெரிய வேண்டும். இதற்குப் புத்தகங்கள் இருக்கின்றன. அவைகள் ஒவ்வொரு ஊரின் Longtitude, Latitude ஆகியவற்றை அளிக்கின்றன. அந்த விபரம் எல்லாம் நாம் பின்னால் எழுதுகிறோம்.

இப்போது தஞ்சாவூரின் சுதேச மணியை நாம் கண்டுப ிடிப்போம். தஞ்சாவூரின் ரேகாம்சம்கள் என்ன ?

Longtitude 79 Degrees 10 Minutes

Latitude 10 Degrees 47 Minutes.

இப்போது தஞ்சாவூரின் சுதேச மணியைக் கண்டு ப ிடிப்போம்.

இந்தியாவின் Longtitude 82. 30

தஞ்சாவூரின் Longtitude 79. 10

வித்தியாசம் 3. 20

இந்த வித்தியாசமான 3.20 ஐ 4-ல் பெருக்கவும். 13.20

நாம் ஏன் 4-ஆல் பெருக்கினோம் என்றால் பூமி ஒரு DEGREE நகர்வதற்கு 4 நிமிடங்கள் ஆகின்றன. அப்படியானால் 3 டிகிரி 20 நிமிஷம் நகர்வதற்கு எவ்வளவு நேரம் ஆகும் எனப் பார்த்தோம். விடை 13 நிமிஷம் 20 வினாடி ஆகும். இந்த 13டிகிரி 20நிமிஷத்தை இந்தியன் ஸ்டாண்டர்ட் டைம்-ல் யிருந்து கழிக்க வேண்டும். ஏன்? அதாவது இந்தியன் ஸ்டாண்டர்ட் ரேகாம்சத்திற்குக் குறைவாக இருக்கும் ஊர்களுக்கெல்லாம் நாம் கழிக்க வேண்டும். கூடுதலாக இருக்கும்ஊர்களுக்கெல்லாம் நாம் கூட்ட வேண்டும். அதாவது ஒரு ஊரின் ரேகாம்சம் இந்தியன் ஸ்டாண்டர்ட் ரேகாம்சத்தைக் காட்டிலும் குறைவாக இருந்தால் அந்த ஊர் இந்தியன் ஸ்டாண்டர்டு ரேகாம்சத்திற்கு மேற்கே இருக்கிறது எனப் பொருள். கூடுதலாக இருந்தால் அந்த ஊர் கிழக்கே இருக்கிறது எனப் பொருள்.

தஞ்சாவூரின் ரேகாம்சம் குறைவாக இருப்பதால்நாம் கழிக்க வேண்டும். நமது கணக்கு இத்தோடு முடியவில்லை. ரேகாம்சத் திருத்தம் என்று ஒன்று உண்டு. அதையும் கணக்கில்எடுத்துக்கொள்ள வேண்டும். ரேகாம்ச திருத்தம் எப்படிச் செய்யவேண்டும்?

தஞ்சாவூரின் ரேகாம்சத்தை 2-ல் பெருக்குங்கள்.

வந்த விடையை 3-ல் வகுங்கள். = 79.10 x 2 =158.20/3 = 52-46

இந்த 52-ஐ மட்டும் வினாடியாக எடுத்துக் கொண்டு 13 நிமிஷம் 20 வினாடியுடன் கூட்ட நமக்குக் கிடைப்பது 14 நமிஷம் 12 வினாடிகள். இதுதான் இந்தியன் ஸ்டாண்டர்ட் நேரத்திற்கும் சுதேச நேரத்திற்கும் உள்ள வித்தியாசம். உதாரணமாக இந்தியன் ஸ்டாண்டர்ட் மணி இரவு 9.00 எனக் கொள்வோம். தஞ்சாவூரின் சுதேச மணி 8மணி 45 நிமிஷங்கள் 48 வினாடியாகும். சுதேச மணி தெரியாமல் நாம் லக்கினம் கணிக்க இயலாது. அதற்காகத்தான் நாம் சுதேசமணியைப் பற்றி விரிவாக எழுதினோம். நாம் தமிழ் நாட்டிலுள்ள முக்கியமான ஊர்களுக்கெல்லாம் Longtitude, Latitude, நேர வித்தியாசங்களைப் பட்டியல் போட்டுக் காட்டி இருக்கிறோம். இது ஜாதகம் கணிக்க உதவும்.

| | | | |
|---|---|---|---|
| | | | நேர |

| ஊர்களின் பெயர். | Longtitude | Latitude | வித்தியாசம் |
|---|---|---|---|
| | | | |
| | Deg. Min. | Deg. Min. | நி செ. |
| 1. அம்பா சமுத்திரம் | 77-29 | 08-43 | -20.55 |
| 2. ஆனை மலை | 76-40 | 10-24 | -24.11 |
| 3. அறந்தாங்கி | 79-02 | 10-10 | -14.44 |
| 4. ஆற்காடு | 79-24 | 12-56 | -13.16 |
| 5. அரக்கோணம் | 79-43 | 13-05 | -12.01 |
| 6. ஆரணி | 79-19 | 12-40 | -13.36 |
| 7. அருப்புக்கோட்டை | 78-08 | 09-31 | -18.20 |
| 8. போடி நாயக்கனுர் | 77-24 | 10-01 | -21.15 |
| 9. சிதம்பரம் | 79-44 | 11-24 | -11.57 |
| 10. கூனுர் | 76-50 | 11-20 | -23.31 |
| 11. கடலூர் | 79-49 | 11-43 | -11.37 |
| 12. திண்டுக்கல் | 78-00 | 10.22 | -18.52 |
| 13. ஈரோடு | 77.46 | 11.20 | -19.47 |
| 14. குடியாத்தம் | 78.55 | 12.57 | -15.12 |
| 15. ஹோசூர் | 77-52 | 12.44 | -19.24 |
| | | | - |

| | | | |
|---|---|---|---|
| 16. காஞ்சிபுரம் | 79.45 | 12.50 | 11.53 |
| 17. காரைக்கால் | 79.52 | 10.55 | -11.25 |
| 18. கோயம்புதூர் | 77.00 | 11.00 | -22.51 |
| 19. கரூர் | 79.07 | 10.58 | -18.24 |
| 20. காயல்பட்டினம் | 78.08 | 08.34 | -18.12 |
| 21.கீழக்கரை | 78.50 | 09.14 | -15.32 |
| 22.கோடைக்கானல் | 77.32 | 10.13 | 20.43 |
| 23.கிருஷ்ணகிரி | 78.16 | 12.32 | -17.48 |
| 24.கும்பகோணம் | 79.25 | 10.58 | -13.13 |
| 25.சென்னை | 80.17 | 13.04 | -09.45 |
| 26.மதுரை | 78.10 | 09.58 | -18.12 |
| 27.மதுராந்தகம் | 79.56 | 12.30 | -11.09 |
| 28.மன்னார்குடி | 79.29 | 10.40 | -12.57 |
| 29.மேட்டுப்பாளையம் | 79.59 | 11.18 | -22.75 |
| 30.மேட்டூர் டேம் | 77.50 | 11.52 | 19.31 |
| 31.நாமக்கல் | 78.13 | 11.13 | -18.00 |
| 32.நாங்குனேரி | 77.44 | 08.09 | -19.55 |
| 33.நீலகிரி | 76.47 | 11.24 | -23.43 |
| 34.உதகமண்டலம் | 76.00 | 11.24 | -26.50 |

| | | | |
|---|---|---|---|
| 35.பாளையங்கோட்டை | 77.46 | 08.43 | -19.55 |
| 36.பழனி | 77.33 | 10.27 | -20.39 |
| 37.பண்ருட்டி | 78.35 | 11.47 | -12.33 |
| 38.பட்டுக் கோட்டை | 79.22 | 10.26 | -13.28 |
| 39.பெரியகுளம் | 77.35 | 10.07 | -20.31 |
| 40.ராஜபாளயம் | 77.36 | 09.26 | -20.27 |
| 41.ராமனாதபுரம் | 78.52 | 09.22 | -15.24 |
| 42.ராமேஸ்வரம் | 79.22 | 09.17 | -13.24 |
| 43.சேலம் | 78.12 | 11.39 | -18.04 |
| 44.சங்கரன் கோவில் | 77.35 | 09.10 | -20.31 |
| 45.சாத்தூர் | 77.58 | 09.21 | -19.00 |
| 46.சத்தியமங்கலம் | 77.17 | 11.30 | -21.43 |
| 47.செங்கோட்டை | 77.18 | 08.59 | -21.39 |
| 48.சிவகங்கை | 78.32 | 09.51 | -16.44 |
| 49.திருநெல்வேலி | 77.44 | 08.44 | -19.55 |
| 50.திருச்சி | 78.46 | 10.50 | -15.48 |
| 51.தொண்டி | 79.04 | 09.45 | -14.36 |
| 52.உடுமலைப்பேட்டை | 77.17 | 10.36 | -21.43 |

| | | | |
|---|---|---|---|
| 53.வேலூர் | 79.11 | 12.55 | -14.08 |
| 54.விருதாசலம் | 79.24 | 11.32 | -13.17 |
| 55.ஏற்காடு | 78.31 | 11.48 | -18.00 |

தமிழ் நாட்டிலுள்ள முக்கிய நகரங்களுக்குண்டான longtitude, மற்றும் latitude, இந்திய நேரத்திற்கும், சுதேச நேரத்திற்கும் உண்டான வித்தியாசத்தையும் மேலே கொடுத்துள்ளோம். ஊங்கள் ஊர் சிறிய ஊறாக இருப்பின் பக்கத்திலுள்ள பெரிய நகரத்தின் longtitude, latitude-ஐ எடுத்துக் கொள்ளுங்கள்.

நாம் பூமியை 12 பாகமாக மேலிருந்து கீழாகப் பிரித்து இருக்கிறோம். அவைகள் மேஷம் முதல் மீனம் முடிய 12 ராசிகளாகும். இந்தப் 12 ராசிகளும் தினமும் ஒருமுறை சூரியன் எதிராகச் சுற்றி வரும். அதாவது 12 ராசிகளும் தினமும் ஒருமுறை சூரியன் எதிராகச் சுற்றி வரும். அதாவது 12-ராசிகளும் சூரியன் முன் உதயமாகும். நமக்குக் குறிப்பிட்ட நேரத்திற்கு எந்த ராசி சூரியன் முன் உதயமாகிறதோ அதுவே லக்கினம் ஆகும்.

லக்கினம் கணிக்க நமக்குத்தேவையானது latitude. இந்த latitude -ஐ வைத்து ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு சூர ியோதயம் கண்டுபிடிக்க முடியும். நாம் பூமியை 12 ராச ிகளாகப் பிரித்து இருக்கிறோம் அல்லவா? ஒவ்வொரு ராசியும் சம அளவாக இருக்கிறதாக என்றால் இல்லை என்று தான் நாம் சொல்ல வேண்டும். latitude-க்குத் தக்கவாறு ராசிகளின் அளவும் மாறுகிறது.

நாம் கீழே 8 degree முதல் 13 degree வரை ஒவ்வொரு ராசியின் அளவு என்னவென்று பட்டியல் போட்டுக் காட்டியுள்ளோம். தமிழ் நாட்டில் உள்ள ஊர் களெல்லாம் இந்த அளவுக்குள்தான் இருக்கின்றன. க ீழேகொடுத்து இருக்கும் அளவுகள் எல்லாம் நாழிகை, வ ினாழிகையில் தான் இருக்கின்றன.

| | LATITUDE | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ராசி | 8 DEG | 9 DEG | 10 DEG | 11 DEG | 12 DEG | 13 DEG |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | நா.வி | நா.வி | நா.வி | நா.வி | நா.வி | நா.வி |
| மேஷம் | 4.37 | 4.36 | 4.34 | 4.32 | 4.30 | 4.28 |
| ரிஷபம் | 5.08 | 5.07 | 5.06 | 5.05 | 5.04 | 5.03 |
| மிதுனம் | 5.27 | 5.27 | 5.28 | 5.28 | 5.28 | 5.29 |
| கடகம் | 5.16 | 5.17 | 5.18 | 5.20 | 5.21 | 5.22 |
| சிம்மம் | 4.58 | 5.00 | 5.02 | 5.04 | 5.06 | 5.08 |
| கன்னி | 4.54 | 4.56 | 4.58 | 5.00 | 5.02 | 5.04 |
| துலாம் | 5.08 | 5.10 | 5.12 | 5.13 | 5.16 | 5.17 |
| விருச்சிகம் | 5.26 | 5.27 | 5.28 | 5.29 | 5.30 | 5.30 |
| தனுசு | 5.21 | 5.20 | 5.20 | 5.20 | 5.19 | 5.19 |
| மகரம் | 4.52 | 4.51 | 4.49 | 4.48 | 4.46 | 4.45 |
| கும்பம் | 4.26 | 4.23 | 4.22 | 4.20 | 4.18 | 4.16 |
| மீனம் | 4.21 | 4.19 | 4.17 | 4.14 | 4.12 | 4.04 |

மேற்கண்ட விபரங்களெல்லாம் பஞ்சாங்கங்களில் கொடுக்கப் பட்டு இருக்கின்றன. இருப்பினும் வாசகர்களின் சௌகரியத்திற்காக மேலே கொடுத்து இருக்கிறோம்.

மற்றவைகளை அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

## நீங்களும் ஜோதிடர் ஆகலாம் பாடம் - 7

அடுத்ததாக நாம் தெரிந்து கொள்ளவேண்டியது ஒவ்வொரு ஊரின் சூரிய உதயம். இது தெரிந்தால் சூரிய உதயத்திலிருந்து நமக்குத்தேவையான நேரத்திற்கு லக்னம் கணிக்க முடியும். சூரிய உதயம் தெரிய நமக்கு வேண்டியது அந்த ஊரின் latitude. ஒவ்வொரு latitude-க்கும் எப்போது சூரிய உதயம் ஆகும் என்பதைக் கீழே குறிப்பிட்டு உள்ளோம். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தேதிக்கும் எப்போது சூரிய உதயம் ஆகும் என்பதைக் கீழே கொடுத்துள்ளோம். கீழே கொடுத்துள்ளது சுதேச மணியாகும்.

| மாதம், தேதி | 7 & 8 Deg | 9 & 10 Deg. | 11 & 12 Deg. | 13 & 14 Deg |
|---|---|---|---|---|
| - | A.M. | A.M. | A.M. | A.M. |
| Apr 6 - 10 | 5.58 | 5.56 | 5.55 | 5.54 |
| Apr 11 - 18 | 5.55 | 5.53 | 5.51 | 5.49 |
| Apr 19 - 26 | 5.51 | 5.49 | 5.47 | 5.45 |
| Apr 27 - May 4 | 5.49 | 5.45 | 5.44 | 5.42 |
| May 5 - 12 | 5.47 | 5.46 | 5.42 | 5.39 |
| May 13 - 20 | 5.46 | 5.43 | 5.40 | 5.36 |
| May 21 - 28 | 5.46 | 5.43 | 5.40 | 5.36 |
| May 29 - Jun 5 | 5.47 | 5.43 | 5.40 | 5.36 |

| | | | | |
|---|---|---|---|---|
| Jun 6 - 13 | 5.48 | 5.44 | 5.40 | 5.37 |
| Jun 14 - 21 | 5.49 | 5.46 | 5.42 | 5.39 |
| Jun 22 - 29 | 5.51 | 5.47 | 5.44 | 5.40 |
| Jun 30 - Jul 7 | 5.53 | 5.49 | 5.46 | 5.42 |
| Jul 8 - 15 | 5.54 | 5.55 | 5.48 | 5.45 |
| Jul 16 - 23 | 5.56 | 5.53 | 5.50 | 5.47 |
| Jul 24 - 31 | 5.57 | 5.54 | 5.51 | 5.48 |
| Aug 1 - 8 | 5.57 | 5.55 | 5.52 | 5.50 |
| Aug 9 - 16 | 5.57 | 5.55 | 5.53 | 5.51 |
| Aug 17 - 24 | 5.57 | 5.55 | 5.54 | 5.52 |
| Aug 25 - Sep 1 | 5.56 | 5.51 | 5.54 | 5.52 |
| Sep 2 - 9 | 5.55 | 5.54 | 5.53 | 5.52 |
| Sep 10 - 17 | 5.53 | 5.53 | 5.53 | 5.52 |
| Sep 18 - 25 | 5.52 | 5.53 | 5.53 | 5.53 |
| Sep 26 - Oct 3 | 5.51 | 5.52 | 5.52 | 5.53 |
| Oct 4 - 11 | 5.50 | 5.51 | 5.52 | 5.53 |
| Oct 12 - 19 | 5.50 | 5.51 | 5.53 | 5.54 |
| Oct 20 - 27 | 5.50 | 5.52 | 5.54 | 5.56 |

| | | | | |
|---|---|---|---|---|
| Oct 28 - Nov 4 | 5.50 | 5.53 | 5.56 | 5.58 |
| Nov 5 - 12 | 5.53 | 5.56 | 5.58 | 6.01 |
| Nov 13 - 20 | 5.56 | 5.59 | 6.01 | 6.04 |
| Nov 21 - 28 | 5.59 | 6.02 | 6.05 | 6.08 |
| Nov 29 - Dec 6 | 6.01 | 6.06 | 6.09 | 6.13 |
| Dec 7 - 14 | 6.06 | 6.10 | 6.14 | 6.17 |
| Dec 15 - 22 | 6.10 | 6.14 | 6.18 | 6.21 |
| Dec 23 - 30 | 6.14 | 6.18 | 6.21 | 6.25 |
| Dec 31 - Jan 7 | 6.17 | 6.21 | 6.24 | 6.28 |
| Jan 8 - 15 | 6.20 | 6.23 | 6.27 | 6.30 |
| Jan 16 - 23 | 6.22 | 6.25 | 6.28 | 6.31 |
| Jan 24 - 31 | 6.22 | 6.25 | 6.27 | 6.30 |
| Feb 1 - 8 | 6.22 | 6.24 | 6.26 | 6.29 |
| Feb 9 - 16 | 6.20 | 6.22 | 6.24 | 6.26 |
| Feb 17 - 24 | 6.18 | 6.19 | 6.21 | 6.22 |
| Feb 25 - Mar 4 | 6.15 | 6.16 | 6.17 | 6.18 |
| Mar 5 - 12 | 6.12 | 6.12 | 6.13 | 6.13 |
| Mar 13 - 20 | 6.08 | 6.08 | 6.08 | 6.08 |

| | | | | |
|---|---|---|---|---|
| Mar 21 - 28 | 6.04 | 6.04 | 6.03 | 6.03 |
| Mar 29 - Apr 5 | 6.04 | 6.04 | 6.04 | 6.04 |

நாம் கொடுத்துள்ள எல்லா விபரங்களும் பஞ்சாங்கங்களில் கொடுக்கப் பட்டு இருக்கும். இருப்பினும் வாசகர்களின் வசதிக்காக நாம் திரும்பவும் கொடுத்துள்ளோம்.

இப்போது நமக்கு,

1. எல்லா ஊர்களின் சூரியோதயம் கண்டுபிடிக்கத்தெரியும்.

2. ஒவ்வொரு ஊருக்கும் ஒரு ராசியை சூரியன் கடக்க எடுத்துக் கொள்ளும் நேரம் தெரியும்.

3. ஒவ்வொரு ஊருக்கும் சுதேச மணி கண்டு பிடிக்கத்தெரியும்.

இந்த மூன்றும் தெரிந்தால் எந்த ஊருக்கும் சுலபமாக லக்னம் கண்டு பிடிக்கலாம். நாம் ஏற்கனவே ஒரு ஜாதகம் கணித்து வைத்துஇருக்கிறோம். அதற்கு இப்போது லக்னம் கணிப்போம்.

ஆடி மாதம் 30-ம் தேதி மாலை 5.00 மணிக்கு ஜாதகம் கணித்தோம். ஆனால் எந்த ஊருக்கு என்று கணிக்கவில்லை. இப்போது சென்னையில் அந்த நேரத்தில் ஒரு குழந்தை பிறந்தது எனக் கொள்வோம். அதற்கு இப்போது லக்னம் கணிப்போம்.

முதலில் அன்று சென்னையில் சூரிய உதயத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். ஆடி மாதம் 30-ம் தேதிக்கு சரியான ஆங்கிலத்தேதி ஆகஸ்ட் 14. சென்னையின் latitude 13 டிகிரி 04-மினிட்ஸ். இதை 13 டிகிரி என முழுமை ஆக்கிக் கொள்ளுங்கள். இதற்கு என்ன சூரியோதயம் எனப் பாருங்கள். மேலே உள்ள அட்டவணையைப் பாருங்கள். காலை 5மணி 51 நிமிஷம் ஆகும்.

| | |
|---|---|
| குழந்தை பிறந்த நேரம் (மாலை 5.00 மணி அல்லது) | 17.00.00 |

| | |
|---|---|
| அன்று சூரியோதயம் | 05.51.00 |
| சூரியோதயத்திலிருந்து குழந்தை பிறந்த நேரம் முடியஆன நேரம் | 11.09.00 |
| இந்தியன் ஸ்டாண்டர்ட் நேரத்த ிற்கும்,சென்னையின் சுதேச நேரத் த ிற்கும் உண்டான வித்தியாசம் | (-)0.09.45 |
| | 10.58.15 |

இதை நாழிகை ஆக்குங்கள். கிடைப்பது 27 நாழ ிகை 25 விநாழிகை வரும். அதாவது சூரியஉதயத்த ிலிருந்து குழந்தை பிறந்த நேரம் வரை 27 நாழிகை 25 வினாழிகை ஆகி இருக்கிறது. இந்த 27நாழிகை 25 விநாழிகை எந்த லக்கினத்தில் வருகிறது எனப் பார்க்க வேண்டும்.

நாம் பார்க்கும் மாதம் ஆடி மாதம். அப்போது சூர ியன் கடகத்தில் உதிப்பார். 30-ம் தேதிக்கு கடகத்த ின் கடைசியில்தான் உதயமாவார். திருகணிதப் பஞ்சாங்கத்தில் ஆடி 30-க்கு எதிராக உதய லக்ன முடிவு என்ற கட்டத்தைப் பாருங்கள். அங்கே 0.33 எனப் போட்டு இருக்கிறார்கள். அதாவது அன்று கடகத்தில் 0.33விநாழிகை பாக்கி. இப்போது கணக்குப் போடலாம் வாருங்கள்.

| | நா. வி. |
|---|---|
| அன்று கடகம் இருப்பு | 0. 33 |
| சிம்மம் | 5. 08 |
| கன்னி | 5. 04 |
| துலாம் | 5. 17 |
| விருச்சிகம் | 5. 30 |
| தனுசு | 5. 19 |
| | -------------- |
| | 26.51 |
| | -------------- |
| மகரம் | 4.45 |
| | -------------- |
| | 31.36 |
| | -------------- |

26 நாழிகை 51 வினாழிகை முதல் 31 நாழிகை 36 வினாழிகை முடிய மகர லக்னம் வருகிறது. நமக்குக் குழந்தை பிறந்த நேரம் 27நாழிகை 25 வ ினாழிகை. ஆகவே மகர லக்னம் தான் குழந்தை ப ிறந்த லக்னம். ஆகவே மகரத்தில் "ல" என்று போடுங்கள். "ல" என்பது லக்னத்தைக் குறிக்கும். இப்போது ஜாதகம் எப்படி இருக்கிறது என்று பாருங்கள்.




வாக்கியப் பஞ்சாங்கத்தின்படி ஆடி 30-ம் தேதிக்கு கடகம் 0.21 நாழிகை தான் இருக்கிறது. அவர்கள் 0.21 நாழிகையை எடுத்துக்கொண்டு கணக்குப் போட வேண்டும்.

இப்போது லக்னம் போடக் கற்றுக் கொண்டு வ ிட்டீர்கள். இதற்குப் பின் நவாம்சம், ஜனன கால இருப்புதிசை, போட்டால் ஜாதகக் கண ிதம் முடிந்து விடும்.

நாம் தமிழ் நாட்டிலுள்ள ஊர்களுக்குத்தான் Longtitude, Latitude கொடுத்துள்ளோம். இந்தியாவிலுள்ள மற்ற நகரங்களுக்குத் தேவை என்றால் "latitude, longtitudes and local meantimes for 3000 places

for 5000 places
in India" என்ற புத்தகத்தைப் பார்த்துக்
கொள்ளவும். அதே போல் ஜாதக
கணிதம் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டுமாயின் -
First Reader (Casting
of Horoscopes- by. K.S. Drishnamoorthy-
என்ற புத்தகத்தைப்
படிக்கவும்.

மற்றவை அடுத்த பாடத்தில்.

சென்ற பாடத்தில் ராசிச் சக்கரம் போடக் கற்றுக் கொண்டீர்கள். அடுத்ததாக நாம் நவாம்சம் போடத் தெரிந்து கொள்ள வேண்டும். நவாம்சம் இல்லாமல் நாம் பலன் சொல்ல முடியாது. அதாவது துல்லியம்மாகப் பலன் சொல்ல முடியாது. நவாம்சம் மட்டும் அல்ல; வேறு சில சக்கரங்களும் போட வேண்டும். அவைகள் எல்லாம் போட்டால் தான் நாம் துல்லியமகப் பலன் சொல்ல முடியும். அவைகள் எல்லாம் என்ன சக்கரங்கள் ?

1. நவாம்சம்
2. பாவம்
3. திரேக்காணம்
4. ஓரை
5. திரிசாம்சம்
6. சப்தாம்சம்
7. சஷ்டியாம்சம்.

இவைகளையெல்லாம் போட்டால் நாம் இன்னும் துல்லியமாகப் பலன் சொல்லலாம்.

ஆனால் எல்லோரும் எல்லாச் சக்கரங்களையும் போடுவதில்லை. நவாம்சம் மட்டும் தான் போடுகின்றனர். நாமும் இப்போதைக்கு நவாம்சம் மட்டும் போடக் கற்றுக் கொடுப்போம். முதலில் நவாம்சம் என்றால் என்ன? என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நவாம்சம் என்பது ஒன்பது அம்சம் என்று பெயர். அதாவது ராசியிலுள்ள ஒவ்வொரு வீட்டையும் ஒன்பதாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டையும் எப்படி ஒன்பதாகப் பிரிப்பது?

மிகவும் எளிது. ஒரு ராசிக்கு அல்லது வீட்டிற்கு ஒன்பது நக்ஷக்ஷத்திரப் பாதம் அல்லவா ? ஒவ்வொரு நக்ஷக்ஷத்திரப் பாதமும் ஒவ்வொரு பாகம் ஆகும். பார்த்தீர்களா! எப்படி மிக எளிதாகப் பிரித்து விட்டோம்.

நாம் முன்பு கணித்த ஜாதகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். லக்கினம் முதல் ஒன்பது கிரகங்களை நாம் ராசியில் போட்டிருந்தோம். இந்த ஒன்பது கிரகங்களும், மற்றும் லக்கினமும் எதாவது ஒரு நக்ஷக்ஷத்திரத்தின் மேல் தான் சஞ்சாரம் செய்துகொண்டு இருக்க வேண்டும் அல்லவா? இதை எப்படிக் கண்டுபிடிப்பது? இந்த விஷயங்களையெல்லாம் பஞ்சாங்கத்தில் கொடுத்து இருப்பார்கள். திருகணிதப் பஞ்சாங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கிரக நிலைகளை 17-ம் பக்கத்தில் கொடுத்து இருக்கிறார்கள். முதலில் சூரியனைப் பாருங்கள். ஆடி 29-ம் தேதி 12 நாழிகை 28 வினாழிகைக்கு ஆயில்யம் 4-ம் பாதத்தில் இருக்கிறார். ஆடி 32-ம் தேதி 40 நாழிகை 35 வினாழிகைக்கு அவர் மகம் 1-ம் பாதத்திற்குச் செல்கிறார். இந்த இடைப்பட்ட காலத்தில் அவர் ஆயில்யம் 4-ம் பாதத்தில்தான் இருக்கிறார். நமக்கு வேண்டியது ஆடி 30-ம் தேதி மாலை 5-00 மணி. அதாவது உதயாதி நாழிகை 27 வினழிகை 25க்கு அவர் ஆயில்யம் 4-ம் பாதத்தில் சஞ்சாரம் செய்கிறார். சூரியனின் நட்சத்திரப் பாதத்தைக் கண்டுபிடித்து விட்டீர்கள்.

சந்திரனின் நட்சத்திரப் பாதத்தை 5-ம் பாடத்திலேயே கண்டு பிடித்து விட்டோம். அதாவது மிருகசீரிஷம் 1-ம் பாதத்தில் இருக்கிறார். இது திருகணிதப்படி. வாக்கியப்படி திருவதிரை 2-ம் பாதம் எனக் கண்டுபிடித்தோம்.

அடுத்தது செவ்வாய். அவர் ஆடி 23-ம் தேதி 16 நாழிகை 01 வினாழிகையில் இருந்து கேட்டை 3-ம் பாதத்தில் சஞ்சாரம் செய்து கொண்டு இருக்கிறார். ஆக செவ்வாயின் நட்சத்திரப் பாதம் கேட்டை ஆகும்.

அடுத்தது புதன் ஆகும். அவர் ஆடி 29-ம் தேதி 43 நாழிகை 47 வினாழிகையில் இருந்து 31-ம் தேதி 28 நாழிகை 42 வினாழிகை முடிய மகம் 2-ம் பாதத்தில் சஞ்சாரம் செய்கிறார். ஆக புதனின் நட்சத்திரப் பாதம் மகம் இரண்டு.

அடுத்தது குரு. அவர் ஆடி 15-ம் தேதி முதல் அதாவது 55நாழிகை 22 வினாழிகையில் இருந்து 32-ம் தேதி 37 நாழிகை 17 வினாழிகை முடிய திருவாதிரை 2-ம் பாதத்தில் சஞ்சாரம் செய்கிறார். ஆக குருவின் நட்சத்திரப் பாதம் திருவாதிரை இரண்டு.

அடுத்தது சுக்கிரன். அவர் ஆடி 29-ம் தேதி 28 நாழிகை 28 வினாழிகையில் இருந்து ஆடி 32-ம் தேதி 19 நாழிகை 18 வினாழிகை முடிய புனர்ப்பூசம் 1-ம் பாதத்தில் இருக்கிறார். ஆக சுக்கிரனின் நட்சத்திரப் பாதம் புனர்ப்பூசம் 1-ம் பாதம்.

அடுத்து வருபவர் சனி. அவர் ஆடி 2-ம் தேதியிலிருந்து அதாவது 23 நாழிகை 18 வினாழிகையில் இருந்து ரோகிணி 3-ம் பாதத்தில் இருக்கிறார். அப்படியானால் சனியின் நட்சத்திரப் பாதம் ரோகிணி 3.

கடைசியாக வருபவர்கள் ராகு, கேது. ஆடி 27-ம் தேதி 58 நாழிகை 9 வினாழிகையிலிருந்து திருவாதரை 1-ம் பாதத்தில் சஞ்சாரம் செய்கிறார். அதே போன்று கேது அதே தேதியிலிருந்து மூலம் 3-ம் பாதத்தில் சஞ்சாரம் செய்கிறார்.

இப்போது நவாகிரகங்களின் நட்சத்திரப் பாதத்தைத் தெரிந்து கொண்டீர்கள். நாம் இப்போது லக்னம் எந்த நட்சத்திரப் பாதத்தில் வருகிறது எனக்கண்டு பிடிக்க வேண்டும். இது பஞ்சாங்கத்தில் கிடைக்காது. நாம் லக்னம் எப்படிக் கண்டு பிடித்தோம் என்பதைப் பாருங்கள். அதாவது போன பாடத்தைப் பாருங்கள்.

நாம் லக்கினம் மகரம் எனப் போட்டிருந்தோம். அதாவது உதயாதி நாழிகை 26-51-ல் இருந்து 31-36 முடிய மகர லக்கினம். இந்த இடைப்பட்ட காலமான 4 நாழிகை 45 வினாழிகையில் மகர லக்கினம் வருகிறது. இந்த 4 நாழிகை 45 வினாழிகை ஒன்பது நட்சத்திரப் பாதங்களைக் கொண்டது அல்லவா? அப்படியானால் ஒரு நட்சத்திரப்பாதத்திற்கு எவ்வளவு நேரம் ஆகும்?

நாலு நாழிகை 45 வினாழிகையைநாழிகை ஆக்குங்கள். 285 வினாழிகை வரும். இதை ஒன்பதால் வகுங்கள். 285 / 9 = 32 நாழிகை சுமாராக. அப்படியனால் 9 பாதங்களும் எவ்வளவு நேரத்தில், எப்படி கடக்கப் படுகின்றன வென்று கீழே பாருங்கள்.

மகரத்தில் உத்திராடம் 2,3,4, பாதங்கள், திருவோணம் 1,2,3,4, பாதங்கள், அவிட்டம் 1,2 பாதங்கள். மொத்தம் 9 பாதங்கள். இந்த 9 பாதங்களும் கீழ்க்கண்டவாறு கடக்கப் படுகின்றன.

மகர லக்கினம் (சென்ற பாடத்தைப் பாருங்கள்) ஆரம்பம் : 26.51 நாழிகை

| | |
|---|---|
| உத்திராடம் 2-ம் பாதத்தைக் கடக்க ஆகும் நேரம் | 0.32 நாழிகை |
| உத்திராடம் 3-ம் பாதத்தை கடக்க ஆகும் நேரம் | 0.32 நாழிகை |
| உத்திராடம் 4-ம் பாதத்தை கடக்க ஆகும் நேரம் | 0.32 நாழிகை |
| திருவோணம் 1-ம் பாதத்தைக் கடக்க ஆகும் நேரம் | 0.32 நாழிகை |
| திருவோணம் 2-ம் பாதத்தைக் கடக்க ஆகும் நேரம் | 0.32 நாழிகை |
| திருவோணம் 3-ம் பாதத்தை கடக்க ஆகும் நேரம் | 0.32 நாழிகை |
| திருவோணம் 4-ம் பாதத்தைக் கடக்க ஆகும் நேரம் | 0.32 நாழிகை |
| அவிட்டம் 1-ம் பாதத்தை கடக்க ஆகும் நேரம் | 0.32 நாழிகை |
| அவிட்டம் 2-ம் பாதத்தைக் கடக்க ஆகும் நேரம் | 0.32 நாழிகை |
| | 31.40 |

அன்று குழந்தை பிறந்த நேரம் 27 நாழிகை 25 வினாழிகை. அது உத்திராடம் 3-ம் பாதத்தில் வருகிறது. ஆகவே லக்கினத்தின் நட்சத்திரப்பாதம் உத்திரடம் 3-ம் பாதமாகும். இப்போது லக்கினம் மற்றும் 9 கிரகங்களின் நட்சத்திரப் பாதம் கண்டுபிடிக்கும் முறையைத் தெரிந்து கொண்டீர்கள். நட்சத்திரப் பாதத்தைக் கீழ்க் கண்டவாறு அட்டவணைப் படுத்துங்கள்.
அது நவாம்சம் போட உபயோகமாக இருக்கும்.

| கிரகங்கள் | நட்சத்திரம் | பாதம். |
|---|---|---|
| லக்கினம் | உத்திராடம் | 3-ம் பாதம் |
| சூரியன் | ஆயில்யம் | 4-ம் பாதம் |
| சந்திரன் | மிருக சீரிஷம் | 1-ம் பாதம் |
| செவ்வாய் | கேட்டை | 3-ம் பாதம் |
| புதன் | மகம் | 2-ம் பாதம் |
| குரு | திருவாதரை | 2-ம் பாதம் |
| சுக்கிரன் | புனர்ப்பூசம் | 1-ம் பாதம் |
| சனி | ரோகிணி | 3-ம் பாதம் |
| ராகு | திருவாதிரை | 1-ம் பாதம் |
| கேது | மூலம் | 3-ம் பாதம் |

## நவாம்சம் போடும் முறை

முதலில் 27-நக்ஷக்ஷத்திரங்களையும் கீழ்க்கண்டவாறு 3- பகுதியாக எழுதிக் கொள்ளுங்கள். இந்த மாதிரியாகப் பிரித்து எழுதுவது மிக முக்கியம்.

| 1 | 2 | 3 |
|---|---|---|
| அஸ்வினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்திரம் | உத்திராடம் |
| ரோகிணி | ஹஸ்தம் | திருவோணம் |
| மிருகசீரிஷம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | ஸ்வாதி | சதயம் |
| புனர்ப்பூசம் | விசாகம் | பூரட்டாதி |

பூசம் அனுஷம் உத்திரட்டாதி

ஆயில்யம் கேட்டை ரேவதி

27-நக்ஷக்ஷத்திரங்களையும் 3 பகுதிகளாகப் பிரித்து எழுதி இருக்கிறோம். முதல் 9-நக்ஷக்ஷத்திரங்களான அஸ்வனி முதல் ஆயில்யம் வரை முதல் 4 ராசிகளில் அடக்கம். அடுத்த 9 நக்ஷக்ஷத்திரங்களான மகம் முதல் கேட்டை வரை சிம்மம் முதல் விருச்சிகம் உள்ள 4 ராசிகளில் அடக்கம். கடைசி 9 நக்ஷக்ஷத்திரங்களான மூலம் முதல் ரேவதி முடிய தனுசு முதல் மேஷம் முடிய அடக்கம்.

எந்த ஒரு கிரகமாவது அஸ்வனி, மகம், மூலம் ஆகிய நக்ஷக்ஷத்திரங்களில் இருந்தால்

1-ம் பாதத்தில் இருந்தால் நவாம்சத்தில் மேஷத்தில் போடுங்கள்.
2-ம் பாதத்தில் இருந்தால் ரிஷபத்தில் போடுங்கள்.
3-ம் பாதத்தில் இருந்தால் மிதுனத்தில் போடுங்கள்.
4-ம் பாதத்தில் இருந்தால் கடகத்தில் போடுங்கள்.

எந்த கிரகமாவது பரணி, பூரம், பூராடத்தில் ஆகிய நக்ஷக்ஷத்திரங்களில் இருந்தால்

1-ம் பாதத்தில் இருந்தால் சிம்மத்தில் போடுங்கள்.
2-ம் பாதத்தில் இருந்தால் கன்னியில் போடுங்கள்.
3-ம் பாதத்தில் இருந்தால் துலாமில் போடுங்கள்.
4-ம் பாதத்தில் இருந்தால் விருச்சிகத்தில் போடுங்கள்.

எந்த கிரகமாவது கார்த்திகை, உத்திரம், உத்திராடமில் ஆகிய நக்ஷக்ஷத்திரங்களில் இருந்தால்

1-ம் பாதத்திலிருந்தால் தனுசில் போடுங்கள்.
2-ம் பாதத்திலிருந்தால் மகரத்தில் போடுங்கள்.
3-ம் பாதத்தில் இருந்தால் கும்பத்தில் போடுங்கள்.
4-ம் பாதத்திலிருந்தால் மீனத்தில் போடுங்கள்.

எந்த கிரகமாவது ரோகிணி, ஹஸ்தம், திருவோணத்தில் ஆகிய நக்ஷக்ஷத்திரங்களில் இருந்தால்

1-ம் பாதத்திலிருந்தால் மேஷத்தில் போடுங்கள்.
2-ம் பாதத்திலிருந்தால் ரிஷபத்தில் போடுங்கள்.
3-ம் பாதத்திலிருந்தால் மிதுனத்தில் போடுங்கள்.
4-ம் பாதத்திலிருந்தால் கடகத்தில் போடுங்கள்.

எந்த கிரகமாவது மிருகசீரிஷம்,சித்தரை, அவிட்டம் ஆகிய நக்ஷக்ஷத்திரங்களில் இருந்தால்

1-ம் பாதத்தில் இருந்தால் சிம்மத்தில் போடுங்கள்.
2-ம் பாதத்தில் இருந்தால் கன்னியில் போடுங்கள்.
3-ம் பாதத்திலிருந்தால் துலாமில் போடுங்கள்.
4-ம் பாதத்திலிருந்தால் விருச்சிகத்தில் போடுங்கள்.

RangaRakes tamilnavarasam.com

எநத கிரகமாவது திருவாதரை,ஸ்வாதி,சதயம ஆகிய நக்ஷக்ஷத்திரங்களில் இருந்தால்

1-ம் பாதத்தில் இருந்தால் தனுசில் போடுங்கள்.
2-ம் பாதத்திலிருந்தல் மகரத்தில் போடுங்கள்.
3-ம் பாதத்திலிருந்தால் கும்பத்தில் போடுங்கள்.
4-ம் பாதத்தில் இருந்தால் மீனத்தில் போடுங்கள்.

எந்த கிரகமாவது புனர்ப்பூசம், விசாகம், பூரட்டாதி ஆகிய நக்ஷக்ஷத்திரங்களில் இருந்தால்

1-ம் பாதத்தில் இருந்தால் மேஷத்தில் போடுங்கள்.
2-ம் பாதத்திலிருந்தால் ரிஷபத்தில் போடுங்கள்.
3-ம் பாதத்திலிருந்தால் மிதுனத்தில் போடுங்கள்.
4-ம் பாதத்தில் இருந்தால் கடகத்தில் போடுங்கள்.

எந்த கிரகமாவது பூசம், அனுஷம்,உத்திரட்டாதி ஆகிய நக்ஷக்ஷத்திரங்களில் இருந்தால்

1-ம் பாதத்தில் இருந்தால் சிம்மத்தில் போடுங்கள்.
2-ம் பாதத்தில் இருந்தால் கன்னியில் போடுங்கள்.
3-ம் பாதத்தில் இருந்தால் துலாமில் போடுங்கள்.
4-ம் பாதத்தில் இருந்தால் விருச்சிகத்தில் போடுங்கள்.

எந்த கிரகமாவது ஆயில்யம், கேட்டை, ரேவதி ஆகிய நக்ஷக்ஷத்திரங்களில் இருந்தால்

1-ம் பாதத்தில் இருந்தால் தனுசில் போடுங்கள்.
2-ம் பாதத்தில் இருந்தால் மகரத்தில் போடுங்கள்.
3-ம் பாதத்தில் இருந்தால் கும்பத்தில் போடுங்கள்.
4-ம் பாதத்தில் இருந்தால் மீனத்தில் போடுங்கள்.

என்ன நவாம்சம் எப்படி போடுவது என்று தெரிந்து கொண்டீர்களா ?

மேலே சொன்ன விஷயத்தைக் கொண்டு நவாம்சம் கணித்தால் அது கீழ்க்கண்டவாறு இருக்கும்.




இப்போது நவாம்சம் போடக் கற்றுக் கொண்டீர்கள். இன்னும் ஜனன கால இருப்பு திசை போடவேண்டும். போட்டுவிடால் ஜாதகக் கணிதம் முடிந்து விட்டது. அப்புறம் பலன் தான் சொல்லவேண்டும்.

நாம் திருக் கணிதப்படி ஜாதகம் கணித்து விட்டோம். சிலர் வாக்கியப் பஞ்சாங்கத்தின் படி எப்படி நவாம்சம் போடுவது எனக் கேட்க்கலாம். பஞ்சாங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். 9-ம் பக்கத்தைப் பாருங்கள். நமக்கு வேண்டியது ஆடி 30-ம் தேதிக்கு உதயாதி நாழிகை 27-25க்கு கிரக நிலைகள். சூரியனின் சாரம் என்ற தலைப்பின் கீழ் பாருங்கள்.

சூரியன் ஆடி 28-ம் தேதி 34-03க்கே ஆயில்யம் 4-ம் பாதத்திற்கு வந்து ஆவணி 1-ம் தேதி 03-00 நாழிகை முடிய அங்கே இருக்கிறார். அம்ச லக்கினம் மீனம் என்று பஞ்சாங்கத்திலேயே குறிப்பிட்டுள்ளார்கள். ஆக சூரியனை அம்சத்தில் மீனத்தில் போடுங்கள்.

அடுத்தது செவ்வாய். ஆடி 22 முதல் ஆவணி 1-ம் தேதி முடிய மூலம் 1-ல் இருக்கிறார். நவாம்சம் மேஷம் எனப் போட்டு இருக்கிறார்கள். மேஷத்தில் செவ்வாயைப் போடுங்கள். இவ்வாறே ஒவ்வொரு கிரகத்திற்கும் பார்த்துக் கொள்ளுங்கள்.

மறுபடியும் அடுத்த பாடத்தில் சந்திப்போம்.

<< பாடம் - 7 பாடம் - 9 >>

நமது இந்து மதம் மறு பிறவியை வலியுறுத்துகிறது. உடலுக்குத்தான் அழிவே தவிர ஆன்மாவிற்கு இல்லை. உடலில் இருந்து உயிர்போன பின்பு உடல் அழிக்கப் படுகி றது.ஆனால் ஆன்மாவோ வேறு வடிவம் எடுக்கிறது. இது தான் நமது இந்து மத தர்மம். இந்தப் பிறவியில் நாம் வாழ்வதோ தாழ்வதோ போனபிறப்பில் செய்த பாவ புண்ணியங் களைப் பொருத்தே அமைகிறது. நல்லது செய்தவர் இந்த ஜென்மத்தில் நல்லதை அனுபவிப்பார். பாவங்கள் செய்தவர் அதற்கு ஏற்றார் போல் கஷ்டங்களை அனுபவிப்பார். இதுதான் ஊழ்வினை என்பது. இதைப் பற்றி சிலப்பதிகாரம் விளக்கமாகவே கூறுகிறது.

1. கோவலனுக்கு ஏன் அத்தகைய மரண தண்டனை அளிக்கப் பட்டது? அவன் என்ன பாவம் செய்தான் ?

2. கற்பிற் சிறந்த கண்ணகிக்கு இந்த விதவைக் கோலம் தேவை தானா ? கணவனே கதியென்றிருந்த அவளுக்கு இந்த நிலை வேண்டுமா ?

3. மதுரை நகருக்கு இந்தக் கோலம் ஏன் ? அது தீப் பற்றி எறிவானேன் ?

இதற்கெல்லாம் சிலப்பதிகாரம் அளிக்கும் விடை "ஊழ்வினை".

கோவலன் இப்பிறவியில் நல்லவனாய் வாழ்ந்தான். சென்ற பிறவியில் ஓர் வணிகனின் மேல் பொய்க்குற்றம் சாட்டி அவன் கொலையாவதற்குக் காரணமாய் இருந்தான். கண்ணகி இப்பிறவியில் பத்தினிப் பெண்தான். ஆனால் சென்ற பிறவியில் பத்தினிப் பெண்கள் நூற்க வேண்டிய சில நோம்பினை அவள் நூற்கவில்லை. அதனால் இப்பிற வியில் அவள் கைம்மை அடைய வேண்டியதாயிற்று. மதுரைக்கு எறிந்து சாம்பல் ஆக வேண்டும் என்ற சாபம் இருந்தது. இக்காரணங்களால்தான் கோவலன் கொலை செய்யப்பட்டான்; கண்ணகி விதவை ஆனாள்; மதுரை தீப்பிடித்து எறிந்தது. போன ஜென்மத்துத் தவறுகள், பாவங்களுக்கு இந்த ஜென்மத்தில் தண்டனை.

அதே போன்று போனஜென்மத்தில் செய்த நற்காரியங்களுக்கு இப்பிறவியில் நல்ல பிறப்பு; நற்பயன்கள். போன ஜென்மத்தில் நல்லது செய்தோமா இல்லயா என்பதை ஜாதகத்தைப் பார்த்துச் சொல்லிவிடலாம். 5-ம் வீட்டையும், 9-ம் வீட்டையும் வைத்துக் கூறிவிடலாம். மேற்கூறிய வீடுகளில் நல்ல கிரகங்கள் இருக்குமேயாகில் ஒருவர் போனஜென்மத்தில் நல்லவை செய்து இருக்கிறார் எனக் கொள்ளலாம்.பாவ கிரகங்கள் இருந்தால் அவர் பாவம் செய்தவர் எனக் கொள்ளலாம்.

இவைகளை எதற்கு எழுதுகிறோம் என்றால் ஜாதகத்தில் ஜெனன கால இருப்பு தெசை கணிக்க வேண்டும். ஜெனன காலத்தில் என்ன தெசை, என்ன புக்தி எவ்வளவு இருக் கிறது எனக் கணக்கிட வேண்டும்.அதைப் போட்டு விட்டால் ஜாதகம் பூர்த்தியாகிவிடும். ஒரு ஆத்மா போன பிறவியில் செவ்வாய் தெசையில் மரணம் ஆகி இருந்தால் மறுபிறவி எடுக்கும் போது அதே செவ்வாய் தெசையில் தான் பிறக்கும். அதாவது போன ஜென்மத் தில் விட்டுச் சென்ற தெசையில் இந்த ஜென்மத்தில் பிரயாணத்தைத் துவக்குகின்றது.

நாம் நமது ஜாதகத்தில் ஜனன கால இருப்பு தெசையைக் கணிப்போம். ஜனன கால இருப்பு தெசை கணிக்க சந்திரனின் நிலை தான் முக்கியம். சந்திரன் எங்கு இருக்கிறார்

RangaRakes tamilnavarasam.com

எனப் பாருங்கள். நமது ஜாதகத்தில் மிருகசீரிஷத்தில் இருக்கிறார். எந்தந்த நட்சத்திரத்தில் இருந்தால் என்ன தசை ஆரம்பம் ஆகும் என்பதைப் பட்டியல் போட்டுக் காட்டியிருக்கிறோம்.

| ஜனன காலத்தில் சந்திரன் இருக்கும் நக்ஷக்ஷத்திரம் | ஆரம்பகால தசை |
|---|---|
| 1. அஸ்வனி, மகம்,மூலம் | கேது தசை |
| 2. பரணி, பூரம், பூராடம் | சுக்கிர தசை |
| 3. கார்த்திகை, உத்திரம், உத்திராடம் | சூரிய தசை |
| 4. ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் | சந்திர தசை |
| 5. மிருகசீரிஷம்,சித்திரை,அவிட்டம் | செவ்வாய் தசை |
| 6.திருவாதரை,ஸ்வாதி,சதயம் | ராகு தசை |
| 7.புனர்ப்பூசம்,விசாகம்,பூரட்டாதி | குரு தசை |
| 8.பூசம்,அனுஷம்,உத்திரட்டாதி | சனி தசை |
| 9.ஆயில்யம், கேட்டை,ரேவதி | புதன் தசை |

நமது ஜாதகத்தில் சந்திரன் இருக்கும் நக்ஷக்ஷத்திரம் மிருகசீரிஷம் ஆகும். ஆகவே இருப்பு தசை செவ்வாய் ஆகும். சந்திரன் ஆயில்யத்திலிருந்தால் என்ன தெசை ஆரம் பமாகும்? சொல்லுங்கள் பார்ப்போம்? புதன் தெசை ஆரம்பமாகும்.

சரி! ஒவ்வொரு தசையும் எவ்வளவு வருஷம் நடை பெறும். கீழே கொடுத்துள்ளோம் பாருங்கள்.

சூரிய தசை : 6 வருஷங்கள்

சந்திர தசை : 10 வருஷங்கள்

செவ்வாய் தசை : 7 வருஷங்கள்

ராகு தசை : 18 வருஷங்கள்

குரு தசை : 16 வருஷங்கள்

சனி தசை : 19 வருஷங்கள்

புதன் தசை : 17 வருஷங்கள்

கேது தசை : 7 வருஷங்கள்

சுக்கிர தசை : 20 வருஷங்கள்

மொத்தம் : 120 வருஷங்கள்

மனிதனுடைய ஆயுளின் அளவு மொத்தம் 120 வருஷங்கள் என ஜோதிடம் கூறுகிறது. மேலே ஒவ்வொரு கிரகத்திற்கும் எவ்வளவு வருஷம் எனக் கூறி இருக்கிறோம். மிகவும் சக்தி வாய்ந்த கிரகமான சூரியனுக்கு ஏன் ஆறு வருஷங்கள், சுக்கிரனுக்கு ஏன் 20

RangaRakes tamilnavarasam.com

சக்தி வாய்ந்த கிரகமான சூரியனுக்கு ஏன் ஆறு வருஷங்கள், சுக்கிரனுக்கு ஏன் 20 வருஷங்கள், எதன் அடிப்படையில் வருஷங்கள் பகிர்ந்து அளிக்கப் பட்டன என்று காரணம் எதுவும் கிரந்தங்களில் காணப்படவில்லை. ஆகவே நாமும் காரணங்கள் எதுவும் கேட்க்காமல் மேற்கூறிய வருஷங்களை அப்படியே கையாளுவோம்.

ஜனன கால இருப்பு தெசை கண்டுபிடிக்க சந்திரனின் நக்ஷக்ஷத்திரப்பாதம் தெரிந்து இருக்க வேண்டுமென்று கூறியிருந்தோம். இப்போது நீங்கள் 5-ம் பாடத்திற்குச் செல்ல வேண்டும். சந்திரனின் மிருகசீரிஷத்தில் ஆத்தியந்த பரமநாழிகை 57நாழிகை 34 வினாழிகை என்று கூறி இருந்தோம். அதில் சந்திரன் 4 நாழிகை14 வினாழிகை சென்று விட்டதெனவும் எழுதி இருந்தோம். அந்தப் பாடம் ஞாபகம் இல்லாதவர்கள் திரும்பவும் ஒருமுறை படிக்கவும்.

| | |
|---|---|
| சந்திரனின் ஆத்தியந்த பரம நாழிகை | 57-34 |
| மிருக சீரிஷத்தில் சந்திரன் சென்ற தூரம் | 4-14 |
| மிருக சீரிஷத்தில் சந்திரன் இன்னும் கடக்க வேண்டிய தூரம் | 53-20 |

ஜனன கால இருப்புதிசை என்பது ஒரு நக்ஷக்ஷத்திரத்தில் சந்திரன் எவ்வளவு தூரம் கடக்க வேண்டுமோ அதுவே இருப்பு தெசை என்பதாகும். புரிகிறதா? புரிவது போலவும் இருக்கிறது அதே சமயம் புரியாதது போலவும் இருக்கிறது. இல்லையா?

சரி! நாம் இப்போது இருப்பு தெசையைக் கண்டு பிடிப்போம். அப்போது எல்லாம் விளங்கி விடும்.

மிருக சீரிஷம் நக்ஷக்ஷத்திரத்திற்கு ஆரம்ப தெசை செவ்வாய் என்றும் அது 7 வருஷம் என்றும் எழுதி இருந்தோம் அல்லவா.

அதாவது மொத்தம் ஆத்தியந்த பரம நாழிகைக்கு வருஷங்கள் .. 7 ஆகும். அதில் சந்திரன் 4 நாழிகை 14 வினாழிகை கடந்து விட்டது. கடக்க வேண்டியது 53 நழிகை 20 வினாழிகை ஆகும். மீதமுள்ள 53 நழிகை 20 வினாழிகைக்கு எவ்வளவு வருஷங்கள் எனக் கண்டு பிடியுங்கள். நாம் கீழே கண்டு பிடித்துள்ளோம் பாருங்கள்.

57 நாழிகை 34 வினழிகையை நாழிகை ஆக்குங்கள். அது 3424 வினாழிகை வரும். கடக்கவேண்டிய தூரமான 53 நாழிகை 20 வினாழிகையை வினாழிகை ஆக்குங்கள். அது 3200 வினாழிகை வரும்.

(3200 / 3424 ) x 7 = 6 ஆண்டுகள் 06 மாதம் 15 நாட்கள் வரும்.

என்ன புரிந்ததா? திரும்பத்திரும்பப் படியுங்கள். புரியும்.

சென்ற பாடம் வரை ஜாதகம் எப்படிக் கணிப்பது என்று கற்றுக் கொண்டீர்கள். இனி பலன் எப்படிச் சொல்வது என்று கற்றுக் கொடுக்கப் போகிறோம். 12 வீடுகளையும் 9 கிரகங்களையும் வைத்துச் சொல்லிக் கொடுக்கப் போகிறோம். கவனமாகப் படியுங்கள்.

ஜாதகத்தில் "ல" என்று போடப்பட்ட வீடுதான் முதல் வீடு எனப் படும். அதாவது அதுதான் லக்கினம் எனப்படும். நமது உதாரண ஜாதகத்தில் மகரம் தான் முதல் வீடு ஆகும். அடுத்த வீடு 2-ம் வீடு ஆகும். அதாவது கும்பம் தான் 2-ம் வீடு ஆகும். இப்படியே எண்ணிக் கொண்டு வந்தால் தனுசு தான் 12-ம் வீடு ஆகும். அதாவது எந்த ஜாதகத்தை எடுத்தாலும் லக்கினத்தை முதல் வீடாகக் கொண்டு எண்ண வேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கும் சில காரகத்துவம் உண்டு. அவைகளை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அப்போதுதான் நீங்கள் பலன் சொல்ல முடியும்.

<u>முதல் வீடு</u> : இதை வைத்து ஜாதகருடைய நிறம், உருவம், உயரம், குணாதிசயங்கள் முதலியவற்றை அறியலாம். ஜாதகர் ஒல்லியானவரா, இல்லை பருமனானவரா, கோபம் உள்ளவரா, இல்லை சாந்தமானவரா என்றும் அறியலாம். அவர் உடல் நலத்தைப் பற்றியும் அறியலாம். அவர் வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்குப் போவாரா இல்லை தாழ்ந்த நிலைக்குப் போவாரா, என்பது பற்றியும் அறியலாம். உடல் பாகத்தில் தலையைக் குறிப்பது முதல் வீடு தான். ஒருவர் சொந்த ஊரில் வாழ்வாரா அல்லது அந்நிய தேசத்தில் வாழ்வாரா என்பது பற்றியும் முதல் வீட்டை வைத்துத்தான் சொல்ல வேண்டும். முதல் வீட்டில் யார், யார் இருக்கிறார்கள், முதல் வீட்டின் அதிபதி எங்கு இருக்கிறார் அதாவது லக்கினாதிபதி எங்கு இருக்கிறார், முதல் வீட்டை எந்தெந்த கிரகங்கள் பார்க்கின்றன என்பதை வைத்தும் பலன் சொல்ல வேண்டும்.

<u>இரண்டாவது வீடு</u> : இது குடும்பத்தைக் குறிக்கிறது. பணவரவு, செலவு போன்ற பொருளாதாரத்தையும் இது குறிக்கிறது. அதைத்தவிர நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், Securities போன்ற சொத்துக்களையும் கூறலாம். ஆடை, அணிகலன்களையும் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். வங்கியில் உள்ள பண நிலைமை, Promisery Notes, போன்றவற்றையும் இந்த வீட்டை வைத்துத்தான் கூறவேண்டும். இரண்டாம் வீட்டை வாக்குஸ்தானம் என்றும் அழைப்பார்கள். ஒருவர் கனிவாகப் பேசுவாறா, அல்லது கடினமாகப் பேசுவாறா, நன்றாகப் பேசுவாறா அல்லது திக்கி திக்கிப் பேசுவாறாஎன்றும் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். கண்பார்வையையும் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். ஒருவர் கண்ணாடி அணிபவரா அல்லது இல்லையா என்பதையும் இந்த வீட்டை வைத்து கூறலாம். பொதுவாக எந்த வீடாக இருந்தாலும் அந்த வீட்டில் நல்ல கிரகங்கள் இருந்தால் அந்த வீட்டைக் குறிப்பன நல்லதையே செய்யும். தீய கிரகங்கள் இருந்தால் அந்த வீட்டைக் குறிக்கும் காரகத்துவங்கள் கெட்டு விடும். உதாரணமாக 2-ம் வீட்டை எடுத்துக் கொள்ளுங்கள். 2-ம் வீடு குடும்பத்தைக் குறிக்கிறது. அதில் சனி இருக்கிறது எனக் கொள்வோம். சனி ஒரு பாவ கிரகம் அல்லவா! சனி எதையும் குறைவாகவும், தாமதமாகவும் கொடுப்பார். குடும்பம் சிறியதாக இருக்கும். பணவரவு குறைவாக இருக்கும். குடும்பத்தில் நிம்மதியும் குறைவாகவும் இருக்கும். என்ன- புரிகிறதா?

மூன்றாம் வீடு : இந்த வீட்டைக் கொண்டு ஒருவரின் இளைய சகோதரம், ஒருவரின் தைரியம், அண்டை வீட்டிலுள்ளவர்கள், குறுகிய பயணம், ஆகியவற்றையும் கூறலாம். கடிதப் போக்கு வரத்துக்கள், தகவல் பரிவர்த்தனைகள், வீடு மாறுதல் ஆகியவற்றையும் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். இந்த வீட்டில் கேது இருப்பாரேயாகில் அவர் கலகங்களை விளைவிப்பவை என்றும் கூறலாம். இன்னும் நகைச்சுவையாகக் கூறப்போனால் அவரைக் "கலியுக நாரதர்" எனவும் கூறலாம். உடல் பாகங்களில் காதுகள், தொண்டை, கைகள், நரம்பு மண்டலம், ஆகியவற்றை இந்த 3-ம் வீடு குறிக்கிறது. இந்த வீட்டை தைரிய ஸ்தானம் என்றும் கூறுவார்கள். இந்த வீட்டில் செவ்வாய் இருந்தால் அவர் மிக்க தைரியசாலியாக இருப்பார். ஏனெனில் செவ்வாயானவர் வீரமிக்க கிரகம். ஒருவருக்கு வீரத்தைக் கொடுப்பவர் செவ்வாய் தான். அங்கே சனி இருந்தால் அவர் அவசரப் படாமல் நிதானத்துடன் செயல் படுவர். யோஜனை செய்து தான் முடிவு எடுப்பார். அவசரப் பட மாட்டார்.

நான்காம் வீடு : இது தாயாரைக் குறிக்கும் வீடு. கல்லூரிவரையிலான படிப்பு, வீடு, வாசல் போன்ற ஸ்திர சொத்துக்கள், பூமிக்குள் இருக்கும் புதையல், கால்நடைகள்,பசுக்கள், விளைநிலங்கள், அதிலிருந்து கிடைக்கும் தான்யங்கள் ஆகியவற்றைக் குறிப்பதும் இந்த நாலாவது வீடுதான். ஒருவருக்கு 4-ம் வீட்டில் செவ்வாய் இருக்கிறார் என்க் கொள்ளுங்கள். அவர் நிச்சயமாக வீடு கட்டுவர். ஏனெனில் செவ்வாய் பூமிகாரகன். பூமிகார கனான செவ்வாய் 4-ம் வீட்டுடன் சம்பந்தப் பட்டதால் அவர் நிச்சயம் வீடு கட்டுவர். இதே செவ்வாய் 9-ம் வீட்டு அதிபதி எனக் கொள்வோம். இவருக்கு தகப்பனாரின் வீடு கிடைக்கும். ஏன்? 9-ம் வீடு தகப்பனாரைக் குறிக்கிறது. செவ்வாய் பூமிகாரகனாகி, 9-ம் வீட்டையும் குறித்து , ஸ்திரசொத்துக்களைக் குறிக்கும் வீடான 4-ம் வீட்டில் இருக்கிறார். ஆக இவருக்கு தகப்பனாரின் வீடு கிடைக்கும் எனக் கூறலாம். என்ன புரிகிறதா?

5-ம் வீடு : இதை புத்திர ஸ்தானம் என்று அழைப்பார்கள். இதைப் பூர்வ புண்ணிய ஸ்தானம் என்றும் அழைக்கல்லாம். அதாவது போன ஜென்மத்தில் ஒருவர் நல்லது செய்தவரா இல்லையா என்று இந்த வீட்டைக் கொண்டு முடிவு செய்யலாம். ஒருவருக்குக் குழந்தைகள் உண்டா அல்லது இல்லயா என்றும் முடிவு செய்யலாம். ஒருவருக்குக் கலைத்துறையில் நாட்டம் இருக்கிறதா அல்லது இல்லயா என்பது பற்றியும் இந்த வீட்டைக்கொண்டு முடிவு செய்யலாம். அதே போன்று, சினிமா, டிராமா, லாட்டரி, குதிரைப்பந்தயம், ஆகியவற்றையும் இந்த வீடுதான் குறிக்கும். ஒருவர் காதலித்துத் திருமணம் செய்வாரா இல்லையா என்பது பற்றியும் இந்த வீட்டைக் கொண்டு முடிவு செய்யலாம். ஆன்மீக வாழ்க்கையையும் இந்த வீட்டைக் கொண்டு தீர்மானம் செய்யலாம். வேதங்கள், மந்திரங்கள் ஆகியவற்றையும் இந்த வீட்டைக் கொண்டு தீர்மானம் செய்யலாம்.

6-ம் வீடு : கடன்,வியாதி, உண்ணும் உணவு , வேலை செய்யும் இடம், ஒருவருடைய வேலைக்காரர்கள் ஆகிய வற்றையும் இந்த வீட்டைக் கொண்டு சொல்லலாம். கவலைகள், துக்கங்கள் தாய் மாமன் ஆகியவற்றைக் குறிப்பது இந்த வீடு தான். உதாரணமாக ஒருவருக்குக் கன்னியா லக்கினம் எனக் கொள்ளுங்கள். லக்கினாதிபதி புதன் 6-ம் வீடான கும்பத்தில் இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். புதன் 1-ம் வீட்டிற்கு அதிபத்யாகி 6-ம் வீட்டில் இருக்கிறார். அவர் உடல் நிலையில் நிச்சயமாகக் கோளாறு இருக்கும். ஏனெனில் புதன் 1-ம் வீட்டையும் 6-ம் வீட்டையும் குறிக்கிறார். ஆக இவர் உடலில் ஏதோகோளாரு இருக்கிறது எனக் கொள்ள வேண்டும். சரி! 2-ம் வீட்டின் அதிபதி சுக்கிரன் 6-ம் வீட்டில் இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். 6-ம் வீடு Employment என்று சொல்லுகின்ற வேலையைக் குறிக்கிறது. 2-ம் வீடு தனத்தைக் குறிக்கிறது. ஆகவே இவர் வேலைக்குச் சென்று பணம் சம்பாதிப்பர் எனக் கொள்ளலாம். இவ்வாறாக 6-ம் வீட்டிலுள்ள கிரகம் மற்ற எந்த வீட்டுடன் சம்பந்தம் கொண்டுள்ளதோ அதை வைத்துப்

RangaRakes
tamilnavarasam.com

வீட்டிலுள்ள கிரகம் மற்ற எந்த வீட்டுடன் சம்மந்தம் கொண்டுள்ளதோ அதை வைத்துப் பலன் சொல்ல வேண்டும்.

<u>7-ம் வீடு</u> : திருமணத்தைக் குறிக்கும் வீடு இதுதான். வியாபாரத்தைக் குறிக்கும் வீடும் இது தான். ஒருவர் மரணத்தைக் குறிக்கும் வீடும் இது தான். பிரயாணத்தைக் குறிக்கும் வீடும் இது தான். ஒருவர் ஜாதகத்தில் 7-ம் வீட்டில் சனி இருக்கிறது எனக் கொள்ளுங்கள். சனிதான் எதையும் தாமதப் படுத்துபவர் ஆயிற்றே! ஆக இவருக்குத் திருமணம் தாமதம் ஆகும் எனக் கூறலாம். உதாரணமாக கடக லக்கினக்காரர் ஒருவருக்கு 7-ம் இடமான மகரத்தில் சனி இருக்கிறது எனக் கொள்வோம். சனியானவர் 7-ம் வீட்டிற்கும், 8-ம் வீட்டிற்கும் அதிபதி. 7-ல் இருக்கிறார். அவர் திருமணத்தைத் தாமதப் படுத்துவதோடு சில சங்கடங்களையும் திருமணத்திற்குப் பிறகு கொடுப்பார். ஏனெனில் சனி 8-ம் வீட்டிற்கும் அதிபதியல்லவா! சரி! சனிக்குப் பதிலாக 6-ம் வீடு, 9-ம் வீட்டிற்கு அதிபதியாகிய குரு இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். திருமண வாழ்வு எப்படி இருக்கும்? 6-ம் வீடு என்பது 7-ம் வீட்டிற்குப் 12-ம் வீடு அல்லவா! திருமண வாழ்வு சுகப்படாது. பிரச்சனைகள் நிறைந்ததாக இருக்கும்.

<u>8-ம் வீடு</u> : ஒருவரின் ஆயுளைக் குறிக்கும் வீடு இது தான். பிதுரார்ஜித சொத்துக்கள், உயில்கள், இன்ஷூரன்ஸ், கிராட்டுவிட்டி, போனஸ் ஆகியவைகளைக் குறிக்கும் வீடு இதுதான். ஒருவர் மரணம் இயற்கையானதா அல்லது துர்மரணமா என்பதையும் இந்த வீட்டைக் கொண்டு அறியலாம். துன்பம், துக்கம், தோல்வி, தண்டனை, தடைகள், ஜெயில் தண்டனை, இவைகளையும் அறியும் வீடு இதுதான். இந்த வீட்டை "துஸ்தானம்" எனக் கூறுவர்கள். 8-ம் வீட்டில் சனி இருந்தால் ஒருவருக்கு தீர்க்காயுசு எனக் கொள்ளலாம். குரு இருந்தாலும் தீர்க்காயுசு எனக் கொள்ளலாம். பொதுவாக 8-ம் வீட்டில் உள்ள கிரகங்களோ, அல்லது 8-ம் வீட்டிற்கு அதிபதியோ தங்கள் தசா, புக்திகளில் நல்லதைச் செய்யாதென்பது பலரின் அபிப்பிராயம்.

<u>9-ம் வீடு</u> : தகப்பனர், போன ஜென்மத்தில் ஒருவர் செய்த பூர்வ ஜென்ம புண்ணியங்கள், பாபங்கள், நீண்ட பயணம், தெய்வ தரிசனம் செய்தல், உயர்கல்வி, முன்பின் தெரியாதவர்கள்,ஆகியவற்றைக் குறிப்பது இந்த வீடு தான். உதாரணமாக 9-ம் வீட்டில் ஒருவருக்கு சனி, செவ்வாய் போன்ற பாப கிரகங்கள் இருக்கிறது எனக் கொள்ளுவோம். நிச்சயமாக அவருக்குத் தகப்பனார் அனுசரணையாக இருக்க மாட்டார். 9-ம் வீட்டைத் தவிர சூரியனின் நிலையையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் சூரியன் பிதுர்காரகனல்லவா? 9-ம் வீட்டில் பாப கிரகங்கள் இருக்குமேயாகில் அந்த வீட்டின் காரகத்துவங்கள் எல்லாம் கெட்டு விடும்.

<u>10-ம் வீடு</u> : ஒருவரின் ஜீவனம், கௌரவம், சபைகளில் முக்கியத்துவம் ஆகியவற்றை 10-ம் வீட்டைக் கொண்டுதான் சொல்ல வேண்டும். தொழிலில் முன்னேற்றம், பதவி உயர்வு ஆகியவற்றையும் இதைக் கொண்டேதான் சொல்ல வேண்டும். ஒருவருக்கு அரசியல் நல்லபடியாக இருக்குமா அல்லது இருக்காதா என்றும் இந்த வீட்டைக் கொண்டுதான் சொல்ல வேண்டும். இதைக் கர்மஸ்தானம் என்றும் கூறுவார்கள். தாயார், தகப்பனாருக்குச் செய்யும் கர்மங்களையும் இந்த வீட்டைக் கொண்டுதான் சொல்ல வேண்டும். ஒருவரின் எஜமானர், அரசாங்கம் இவைகளையும் இந்த வீடுதான் குறிக்கிறது.

<u>11-வது வீடு</u> : இதை லாபஸ்தானம் என்று கூறுவார்கள். நமக்கு வரக்கூடிய லாபங்களையும், சுகங்களையும் அளிக்கக் கூடியது இந்த வீடுதான். மூத்த சகோதரத்தைப் பற்றியும் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். நண்பர்களையும் இந்த வீட்டை வைத்துக்கொண் கூற வேண்டும். நல்ல கிரகங்கள் இந்த வீட்டில் இருந்தால் நல்ல

RangaRakes tamilnavarasam.com

வைத்துத்தான் கூற வேண்டும். நல்ல கிரகங்கள் இந்த வீட்டில் இருந்தால் நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள். பொதுவாக வாழ்க்கையில் என்ன மிச்சம் என்பதை இந்த வீட்டை வைத்துத்தான் கூற வேண்டும். 11-ம் வீட்டிற்குடைய கிரகம் 5-ம் வீட்டில் இருந்தால் புத்திரத்தால் லாபம் எனக் கொள்ளலாம். அதே 11-ம் வீட்டிற்குடைய கிரகம் 10-ல் இருந்தால் நல்ல ஜீவனம் எனக் கொள்ளலாம். அதே போல் 11-க்குடைய கிரகம் எந்த வீட்டில் இருந்தாலும் அந்த வீட்டிற்கு நல்லது எனக் கொள்ள வேண்டும்.

12-வது வீடு: இதை மோட்ச ஸ்தானம் என்று சொல்லுவார்கள். இதை விரய ஸ்தானம் என்றும் சொல்லுவார்கள். நமக்கு வரக்கூடிய செலவுகள், நஷ்டங்கள் எல்லாவற்றையும் இந்த வீட்டை வைத்தே சொல்லவேண்டும். துன்பம், பாவங்கள், வறுமை, துரதிஷ்டம், ஆகியவையும் இந்த வீட்டை வைத்தே சொல்ல வேண்டும். மறைமுக எதிரிகளையும் இந்த வீட்டை வைத்தே சொல்ல வேண்டும். ஒருவருக்கு ஜெயில் வாசம், உள்ளதா அல்லது இல்லையா என்பதையும் இந்த வீட்டை வைத்துத்தான் கூறவேண்டும். கடனைத் திருப்பிக் கொடுத்தலையும், முதலீடு செய்வதையும் இந்த வீட்டை வைத்துத்தான் கூற வேண்டும்.

நாம் மேலே 12 வீடுகளின் முக்கியமான காரகத்துவங்களை மட்டும் பார்த்தோம். இது ஜோதிடத்தில் ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்குப் பயன் படும். இந்த ஆரம்ப கட்டத்தைக் கடந்தவர்கள் "பிருஹத் ஜாதகம்", "பலதீபிகை", "உத்திரகாலாம்ருதம்" ஆகிய நூல்களைப் படிக்க வேண்டும். அப்போதுதான் ஜோதிட அறிவு விருத்தியாகும். மற்றவை அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

சென்ற பாடத்தில் 9 கிரகங்களின் காரகத்துவத்தைப் பார்த்தோம். அத்துடன் 12 ராசிகளும் எதைக் குறிக்கிறது என்பதையும் பார்த்தோம். நாம் இந்தப் பாடத்திலிருந்து பலன் சொல்வதைப் பார்ப்போம். முதல் வீடான லக்கினத்தைப் பார்ப்போம். முதல் வீட்டின் பலனை அதன் அதிபதியை வைத்தும், அதில் இருக்கும் கிரகங்களை வைத்தும், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்களை வைத்தும் பலன் கூற வேண்டும். இந்த ஜாதகம் No. 1 -ஐப் பாருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| (செவ்வாய்) | (சனி) | | |
| (ராகு) | நவாம்சம் | | |
| (சுக்கிரன்) (சூரியன்) | | | (கேது) |
| ல / (புதன்) | | (குரு) | (சந்திரன்) |

இந்த ஜாதகத்தில் லக்கினாதிபதியான குரு 11-ம் வீட்டில் இருக்கிறார். 11-ம் வீடு என்பது லாபஸ்தானம். லக்கினாதிபதி 11-ம் வீட்டில் இருப்பது அவர் வாழ்வில் பெறப்போகும் உயர்வைக் காட்டுகிறது. நடுத்தரக் குடும்பத்தில் பிறந்த இவர் வெளிநாட்டில் வாழ்கிறார். வாழ்க்கையில் பல வெற்றிகளைக் காண்கிறார். லக்கினத்தில் புதன் இருக்கிறார். புதன் ஒருவருக்கு அறிவு கூர்மையைக் கொடுக்கும் கிரகமல்லவா ? புதன் இருப்பதால் அவர் Phd வரைப் படித்து இருக்கிறார். லக்கினத்திலுள்ள புதன் இவருக்கு நல்ல அறிவைக் கொடுத்து இருக்கிறார். இந்த 2-ம் எண் உள்ள ஜாதகத்தைப் பாருங்கள். லக்கினாதிபதி 3-ம் வீட்டில் இருக்கிறார். 3-ம் வீடு உபஜெயஸ்தானம் என்றழைக்கப் படும். 3-ம் வீட்டில் குரு இருந்தால் சகோதர,சகோதரிகளுடன் ஒற்றுமையாய் வாழ்வர். லக்கினத்தில் செவ்வாய் இருந்தால் தலையில் காயம் ஏற்பட்டு அதனால் வடு உண்டாகும். லக்கினம் என்பது தலையைக் குறிக்கிறது அல்லவா? அதேபோல் செவ்வாய் ரணம், காயங்களை எல்லாம் கொடுப்பவர் அல்லவா? அதேபோல் இவருக்கும் தலையில் காயம் பட்டு வடு உண்டாகி இருக்கிறது.




நாம் பல ஜாதகங்களை அதாவது லக்கினத்தில் செவ்வாய் உள்ள ஜாதகங்களைப் பார்த்தோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை கூறுகின்றனர். ஒருவர் Motor Cycle-ல் சென்று கொண்டு இருந்தார். அவருக்கு முன்னால் சென்ற லாரி மண்ணுடன் சென்று கொண்டிருந்தது. அப்போது அடித்த காற்றில் மணல் பறந்து வந்து கண்ணில் விழுந்ததாம். அவர் நிலை தடுமாறி கீழேவிழுந்து தலையில் காயம் ஏற்பட்டதாம். அடுத்தவர் ஒரு பெண்மணி. அவர் மாடியில் புத்தகம் படித்துக் கொண்டு இருந்தார். அவரின் குழந்தை படியில் இறங்கச் சென்றது. குழந்தையைப் பிடிக்கச்சென்ற இவர் நிலை தடுமாறி கீழே விழுந்து விட்டார். தலையில் காயம். வடு ஏற்பட்டு இருக்கிறார். அடுத்தவர் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டு இருக்கிறார். Fan கழன்று தலையில் விழ பெரிய அளவில் காயம் பட்டு இருக்கிறது. ஆக செவ்வாய் லக்கினத்தில் இருப்பாரேயாகில் ஒருவருக்கு தலையில் அடிபட்டுக் காயம் ஏற்படும். இதைத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்களும் இதே போல் ஜாதகங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு ஜாதகத்தில் லக்கினாதிபதி 12 வீடுகளிலும் இருந்தால் என்ன பலன் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். லக்கினாதிபதி லக்கினத்தில் இருந்தால் அவர் ஆட்சியில் இருக்கிறார் எனப் பொருள். அதாவது அது அவருக்குச் சொந்த வீடு அல்லவா? நீண்ட ஆயுளை உடையவராயும், கீர்த்தி பெற்றவறாகவும், நல்ல ஜீவனம் உடையவராகவும் இருப்பர். நல்ல கௌரவத்துடன் இருப்பர். 2-ம் வீட்டில் இருந்தால் நல்ல வாக்கு வன்மை உடையவராகவும் இருப்பர். 2-ம் இடம் வாக்குஸ்தானம் அல்லவா ? சுய சம்பாத்தியம் உள்ளவர். குடும்ப விருத்தியுடன் சௌக்கியமாக வாழ்க்கை நடத்துபவராக இருப்பவர். 3-ம் வீட்டில் இருந்தால் சகோதர, சகோதரிகளுடன் கூடி வாழ்பவனாகவும், நல்ல தைரியசாலியாகவும் இருப்பர். 3-ம் வீடு இளைய சகோதரத்தையும், தைரியத்தையும் குறிக்கிறது அல்லவா? அடிக்கடி பிரயாணம் மேற்கொள்ளுவதில் விருப்பம் உள்ளவராக இருப்பர். 3-ம் வீடு சிறிய பயணத்தையும் குறிக்கிறது. 4-ம் வீட்டில் இருந்தால் தாயிடம் மிக்க அன்பு உள்ளவராகவும், குடும்பத்தில் ஈடுபடு உள்ளவராகவும், பந்துக்களின் ஆதரவைப் பெற்றவராகவும் இருப்பான். கல்வியில் சிறந்து விளங்குபவராகவும், தாய் வழி மாமன்கள் ஆதரவைப் பெற்றவராகவும், சொத்துக்கள் இருப்பவராகவும் இருப்பர்.

5-ம் வீட்டில் லக்கினாதிபதி இருந்தால் புத்திர சந்தானங்களைப் பெற்றவராகவும் அவர்களால் சாந்தோஷத்தையும், ஆதரவையும் பெற்றவராகவும் இருப்பார். தெய்வீக வழிபாடுகள் நிறைந்தவராகவும், மகான்களின் சத்சங்கத்துடனும நல்ல சிந்தனை உடையவராகவும் இருப்பார்.

6-ம் வீட்டில் ல்க்கினாதிபதி இருந்தால் ஜாதகன் வியாதி உடையவனாக இருப்பார். அவருக்கு விரோதிகள், சத்துருக்கள், அவதூறு பேசுபவர்கள் அதிகமாக இருப்பார்கள். கடனுபாதைகள் நிறைந்தவரும், மனம் அமைதியற்றவனாகவும் இருப்பான். 6-ம் வீடு மறைவு ஸ்தானம் என்றும் துஸ்தானம் என்றும் அழைக்கப் படும். இந்த வீட்டில் லக்கினதிபதி இருப்பது நல்லது அல்ல. 7-ம் வீட்டில் லக்கினாதிபதி இருந்தால் ஸ்திரீ லோலனாகவும், ஆசைகள் உடையனவராகவும் இருப்பார். பொறுப்பை ஏற்காமல் வெளியில் சுற்றுபவனாகவும் இருப்பார். சிலருக்கு மனைவி மூலமாய் சொத்துக்கள் சேரும். நாம் கீழே ஜாதகம் No.3-ஐக் கொடுத்துள்ளோம்.




இவர் எந்த வேலையையும் பொறுப்புடன் செய்தது இல்லை. ஸ்திரி லோலனாக இருந்து இருக்கின்றார். எப்போதும் வெளியில் சுற்றுபவராக இருந்தார். இவருக்கு லக்னாதிபதி 7-ல்; நாம் மேலே கூறியவையெல்லாம் இவருக்குப் பொருந்தி இருக்கிறது. லக்கினாதிபதி 8-ல் இருந்தால் ஆயுள் நிறைந்தவராக இருப்பார். ஆனால் சிரமத்துடன் குடுப்பத்தை நடத்துவராக இருப்பார். வறுமையுடனும் குடும்பத்தை நடத்துபவராக இருப்பார். சிலர் உடலில் தேவையான ஊட்டமைன்றி இருப்பர். 8-ம் இடம் மறைவு ஸ்தானம் என்று கூறுவார்கள். பொதுவாக 8-ல் லக்கினாதிபதி இருப்பது விரும்பத்தக்கது அல்ல; 9-ம் இடத்தில் லக்கினாதிபதி இருந்தால் தகப்பனாரின் அன்பையும், ஆதரவையும் ஆசிர்வாதத்தையும் பெற்றவராக இருப்பார். அதேபோல் பித்துருக்களின் அன்பைப் பெற்றவருமாய் இருப்பார். சத்தியத்துடன் நேர்வழியில் நடப்பவராகவும், தருமத்தைச் செய்பவராகவும், தெய்வவழிபாடும் நிறைந்தவராகவும் இருப்பார். லக்கினத்திற்குப் 10-வது வீட்டில் லக்கினாதிபதி இருந்தால் குடும்பப் பொறுப்பை அறிந்து நடப்பவராகவும், ஜீவன் பலம் உடையவராகவும் தெய்வபக்தி உள்ளவராகவும், புண்ணிய காரியத்தில் பற்றுள்ளவராகவும் நற்பெயறும் கீர்த்தியும் உள்ளவராகவும் இருப்பார். அரசாங்கத்தில் நற்பெயரும், செல்வாக்கும் அதிகாரமும் உயர்பதவிகளும் உள்ளவர். பந்துக்களிடமும் உற்றார் உறவினரிடம் பெயர் பெற்றவராகவும் இருப்பார். 10-ம் இடத்தில் லக்கினாதிபதி இருப்பது மிக நல்லது. 11-ம் வீட்டில் இருந்தால் லாபமான தொழிலைச் செய்பவராகவும் நீண்ட ஆயுளை உடையவராகவும் இருப்பார். இவருக்கு மூத்த சகோதரர்களின் ஆதரவு நிறைந்து இருக்கும். வாழ்க்கையில் இவர் ஓர் நல்ல நிலைக்கு வருவார். 12-ம் வீட்டில் இருந்தால் எவ்வளவு வருமானம் வந்தாலும் செலவுகளும் அதிகம் இருக்கும். சிலர் அடிக்கடி இட மாற்றம் செய்வர். அலைச்சல் அதிகமாக இருக்கும். சோம்பேரி எனவும் திறமையற்றவர் எனவும் மற்றவர்களால் அழைக்கப்படுவர். சமயத்தில் அ[illegible] சிந்தனைகளும் வந்து சேரும்.

RangaRakes

லக்கினாதிபதி 12 வீடுகளில் இருந்தால் என்ன பலன் என்பதைத் தெரிந்து கொண்டீர்கள். லக்கினாதிபதி எந்த வீட்டில் இருந்தாலும் அந்த வீட்டின் காரகத்துவம் நன்றாக இருக்கிறது. லக்கினாதிபதி 6, 8, 12-ம் வீட்டைத்தவிர மற்ற வீடுகளில் இருந்தால் சுபப் பலனைத் தருகிறார்.

கிரகங்கள் நமது உடலில் சிலவற்றை குறிக்கின்றனர். அவற்றையும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| சூரியன் | ஆத்மாவிற்கு |
| சந்திரன் | மனதிற்கு |
| செவ்வாய் | உடல் வலிமைக்கு |
| புதன் | பேச்சுக்கு |
| வியாழன் | மகிழ்ச்சிக்கு |
| சுக்கிரன் | உணர்ச்சிகளுக்கு |
| சனி | வறுமைக்கு |

ஏழு கிரகங்களும் மேற்கூறியவற்றிற்குக் காரகம் வகிக்கின்றன. இவைகள் எல்லாம் பலன் சொல்லப் பயன் படும். ஒரு கிரகம் வலுத்து இருந்தால் அந்த காரகத்துவம் நன்றாக இருக்கிறது எனப் பொருள். உதாரணமாக குரு வலுத்து இருந்தால் அவன் நல்ல குணங்களைப் பெற்றவனாகவும், பணவசதியுள்ளவனாகவும், குழந்தைப் பேரு உள்ளவனாகவும் இருப்பான் எனக் கொள்ளலாம். அதேபோல் புதன் வலுத்திருந்தால் அவன் கெட்டிக்காரனாகவும், பேச்சுவன்மை உள்ளவனாகவும் இருப்பான். ஆனால் சனி வலுத்து இருந்தால் துன்பங்கள் குறைந்து இருக்கும். சனி வலுவிழந்தால் துன்பங்கள் அதிகரிக்கும்.

நீங்கள் ஜோதிடப்புத்தகங்களை எல்லாம் படிக்க ஆரம்பிக்கலாம். படித்தால் தான் ஜோதிட அறிவை வளர்த்துக் கொள்ள முடியும். ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக் கென்று பல புத்தகங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம் படியுங்கள். இனிமேல் உங்களுக்குப் புரியும்.

மறுபடி அடுத்த பாடத்தில் சந்திப்போம்.

RangaRakes tamilnavarasam.com

நீங்கள் ஜோதிட சம்மந்தமான புத்தகங்கள் படிக்க வேண்டும்ளன எழுதி இருந்தோம். ஆரம்ப நிலையில் உள்ளவர்களுக்கென்று பல புத்தகங்கள் இருக்கின்றன. இதைத் தவிர "ப்ருஹத் ஜாதகம்", "பல தீபிகை" "உத்தர காலாம்ருதம்" போன்ற நூல்கள் பல இருக்கின்றன. இவைகளைப் படிக்க ஆரம்பிக்கலாம். இவைகள் தான் ஜோதிடத்திற்கு அடிப்படை. படிக்கப் படிக்கத்தான் ஜோதிட அறிவு வளரும். முயற்சி செய்யுங்கள்.

மேஷம் முதல் மீனம் வரை உள்ள ராசிகளுக்குப் பல குணங்கள் உண்டு. அவற்றின் குணங்களைத் தெரிந்து கொள்ளுங்கள். அவை பலன் சொல்லப் பயன் படும்.

ஆண், பெண் ராசிகள் : மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகியவை ஆண் ராசிகள் எனப் படும். ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகியவை பெண்ராசிகள் எனப்படும். ஆண்ராசிகளை லக்கினமாகக் கொண்டவர்கள் ஆணின் குணாதிசங்கள் அதிகம் உள்ளவர்கள் எனக் கொள்ளலாம். உதாரணமாக மேஷ லக்கினத்தில் ஒரு பெண் பிறந்து இருப்பாரேயாகில் அவருக்கு ஆண்களின் குணாதிசியங்கள் அதிகம் இருக்கும் எனக் கொள்ளலாம். சிறிது முன் கோபமும் முரட்டுத்தன்மை உடையவராக இருப்பார் எனக் கொள்ளலாம். அதேபோல் ஒரு பெண்ரசியில் ஒரு ஆண் பிறந்து இருப்பரேயாகில் அவருக்குப் பெண்களின் குணாதிசயங்கள் இருக்கும் எனக் கொள்ளலாம். சிறிது பயந்த சுபாவம் உள்ளவராகவும் கூச்ச சுபாவம் உள்ளவராகவும் இருப்பார் எனக் கொள்ளலாம். ஆண்ராசியில் உள்ள கிரகங்கள் தங்கள் தசாபுக்தி காலங்களில் ஆண் சந்ததியையும், பெண்ராசியில் உள்ள கிரகங்கள் தங்கள் தசா, புக்தி காலங்களில் பெண்சந்ததியையும் கொடுக்கும். பிறக்கப் போகும் குழந்தை ஆணா, பெண்ணாவென்று அறிய இந்த ராசிகள் பயன் படும். ஒருவர் ஜாதகத்தில் 5-ம் வீடு ஆண்ராசியாகி, 5-க்குடையவர் ஆண்கிரகமாக இருந்து அவரும் ஆண் ராசியில் இருப்பாரேயாகில் அவருக்கு ஆண் சந்ததிகள் அதிகம் இருக்கும் என்று கூறலாம். 5-ம் வீடு பெண்ராசியாகி, 5-க்குடையவர் பெண் கிரகமாகி அவர் பெண் ராசியில் இருப்பாரேயகில் அவருக்கு பெண் குழந்தைகள் அதிகம் இருக்கும் எனக் கொள்ளலாம். ராசிகளை ஆன், பெண் எனப் பிரிப்பதின் அவசியம் தெரிகிறது அல்லவா?

வடக்கு, தெற்கு ராசி

மேஷம் முதல் கன்னிவரை வடக்கு ராசி எனவும், துலாத்திலிருந்து மீனம் வரை தெற்கு ராசிகள் எனவும் அழைக்கப் படும்.

நெருப்பு ராசி (Fiery Signs)

மேஷம், சிம்மம், தனுசு ஆகியவை நெருப்பு ராசி எனப் படும். இந்த மூன்று ராசிகளை லக்கினமாகப் பெற்றவர்கள் மிக்க தைரியசாலிகளாகவும், தன்னிச்சையாக முடிவு எடுப்பவர்களாகவும் தன்நம்பிக்கை உள்ளவர்களாகவும் இருப்பார்கள். மற்றவர்களுக்குத் தலைமை தாங்குபவர்களாகவும் இருப்பார்கள். இந்த நெருப்பு ராசியில் உள்ள கிரகங்களும் மேற்கூறிய தன்மைகளைப் பெற்று இருக்கும். நெருப்பு ராசியை ஜீவனமாகப் பெற்றவர்கள் நெருப்பு சம்மந்தப் பட்ட தொழிலில்

RangaRakes tamilnavarasam.com

இருக்கவும் சாத்தியக் கூறுகள் உண்டு.

## நிலராசி (Earthy Signs)

ரிஷபம்,கன்னி, மகரம் ஆகிய மூன்றும் இந்த ராசியைச் சேர்ந்தவை. இந்த ராசியை லக்கினமாகப் பெற்றவர்கள் மிகவும் நிதானமாகச் செயல் படக் கூடியவர்கள். எதையும் யதார்த்தமாகவும், எச்சரிக்கையுடனும் எடுத்துக் கொண்டு செயல்படக் கூடியவர்கள். சிக்கனமாகச் செலவழிக்கும் மனது இவர்களுக்கு உண்டு. இந்த ராசிக்காரர்களுக்கு நரம்பு மண்டலத்துடன் நெருங்கிய சம்மந்தம் உண்டு. சிறிய விஷயத்துக்கெல்லாம் கவலை கொள்ளும் சுபாவம் கொண்டவர்கள். இவர்களுக்கு வாயுத்தொந்தரவு உண்டு. ஜீவனஸ்தானமான 10-ம் இடம் நில ராசியாக வந்தால் நிலம், கட்டிடம் சம்மந்தமான வேலைகள், விவசாயம் ஆகியவை மிகுந்த பலன் தரும்.

## காற்று ராசி (Airy sign)

நல்ல குணங்கள் நிறைந்தவர்கள். மிகவும் கெட்டிக்காரர்கள். கற்பனை மிகுந்தவர் கள். எதையும் நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தவர்கள். கற்பனை மிகுந்தவர்கள். இந்த ராசி மூளை சம்மந்தப் பட்டதால் மூளை சம்மந்தப் பட்ட தொழிலுக்கு ஏற்றவர்கள். அக்கவுண்டண்ட்ஸ், வக்கீல்கள், ஆசிரியர் போன்ற தொழிலுக்கு ஏற்றவர்கள். மிதுனம், துலாம், கும்பம் ஆகிய மூன்று ராசியும் காற்று ராசிகளாகும்.

## ஜலராசிகள்(Watery Signs)

கடகம், விருச்சிகம். மீனம் ஆகிய மூன்றும் ஜல ராசிகளாகும். இந்த ராசிக்காரர்கள் மிகுந்த கூச்ச சுபாவம் மிகுந்தவர்கள். இதை Fruitful Signs என்றும் சொல்லுவார்கள். ஜலராசி 10-வது வீடாக வந்தால் தண்ணீர் சம்மந்தப்பட்ட தொழிலில் இருப்பார்கள். குளிர் பானங்கள், துணிமணி சம்மந்தப் பட்ட தொழில் கப்பல் சம்மந்தப் பட்ட தொழில் ஆகிய வற்றில் இருப்பார்கள். இந்த ராசிக்கரர்கள் கற்பனை வளம்மிக்கவர்கள்.

இதைத் தவிர ராசிகளில் சரராசிகள், ஸ்திர ராசிகள், உபய ராசிகள் எனவும் பிரித்து அவற்றிற்குறிய குணாதிசியங்களைக் கூறி இருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நீங்கள் அவசியம் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். இதைத் தவிர நன்மை பயக்கும் ராசிகள், மலட்டுத் தன்மையுள்ள ராசிகள், நன்மை பயக்காத ராசிகள், ஊமை ராசிகள், முரட்டு ராசிகள், மனித ராசிகள், சப்த ராசிகள், நான்குகால் ராசிகள், இரட்டை ராசிகள், குட்டை ராசிகள் நீள ராசிகள் என பல வகைப்பட்ட ராசிகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் பலன் சொல்லும்போது மிக உதவியாக இருக்கும். இந்த ராசிகளைப் பற்றியெல்லாம் அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

சென்னையில் ஒரு பெரிய பணக்காரருக்கு, ஒரு ஆண் குழந்தை பிறக்கிறது. அதே சென்னையில் ஒரு கூலித் தொழிலாளிக்கு அதே நேரத்தில் ஒரு ஆண்குழந்தை பிறக்கிறது. நேரத்தில் எந்த வித மாற்றமும் இல்லை. ஆக ஜாதகத்தில் எந்த வித மாற்றமும் இருக்காது. இருவர் ஜாதகமும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. அப்படியானால் இருவரின் வாழ்க்கையும் ஒரே மாதிரித்தான் இருக்குமா ? இல்லை பணக்காரக் குழந்தை நல்ல சூழ்நிலையில் வளரப் போகிறது. ஏழைக் குழந்தை ஏழ்மைச் சூழ்நிலையில் வளரப் போகிறது. இதற்கு ஜோதிடம் தரும் விளக்கம் என்ன? இதற்கு நாம் ஒரு சிறிய விளக்கம் கொடுப்போம். இந்தக் குழந்தைகள் வளர்ந்து பெரிதாகின்றன எனக் கொள்வோம். பணக்காரக் குழந்தை ஒரு தொழிற்சாலைக்கு அதிபதி ஆகிறான். ஏழைக் குழந்தை சிறு தொழிலில் ஒரு இறும்புப் பட்டரை வைத்துள்ளான் எனவும் கொள்வோம். நல்ல திசையில் பணக்காரனுக்கு பல லட்சம் ரூபாய் லாபம் கிடைத்து இருக்கலாம். அதே ஏழைக்கு அந்த நல்ல திசையில் சில நூறு ரூபாய் லாபமாகக் கிடைத்து இருக்கலாம். இருவருக்கும் பணத்தை ஒப்பிட்டுப் பார்க்கும்போது மலைக்கும், மடுவுக்கும் உள்ள வித்தியாசம் தெரிகிறது. ஆனால் இருவரின் சந்தாஷத்தையும் அளவிட்டால் ஒரே அளவாகத்தான் இருக்கும். பல லட்சங்கள் அடைந்த பணக்காரனின் சந்தோஷத்தை அந்த ஏழை சில நூறு ரூபாய்களில் அடைந்து விடுகிறான். அதாவது இருவர் அடையும் சந்தோஷமும் ஒன்று தான். இவ்வாறு ஒவ்வொன்றையும் கவனித்துப் பார்த்தால் மனத்தளவில் ஒரே மாதிரியான சந்தோஷமும் துக்கமும் அடைவார்கள். இவ்வாறாக அவர்கள் வழ்க்கையில் ஒற்றுமை இருக்கும். பணத்தை வைத்து அளவிட முடியாது. நாம் யாருக்கு மகனாகப்பிறக்கிறோம் என்பது நம் கையில் இல்லை; நாம் எந்த ஊரில், எந்த நாட்டில் பிறக்கிறோம் என்பது நமது கையில் இல்லை. ஆகவே நாம் பிறக்கின்றபோதுள்ள பொருளாதார நிலையை வைத்துக் கொண்டு வரப்போகின்ற உயர்வு, தாழ்வுகளைக் கூற வேண்டும். நிற்க.
இனி நாம் நம் படத்திற்கு வருவோம்.

ராசிகளின் குணங்களுக்குத் தக்கவாறு அவைகள் பிரிக்கப் பட்டு இருக்கின்றன. ஏற்கனவே சென்ற பாடத்தில் சில குணாதிசயங்களைப் பார்த்தோம். இப்போது மீதமுள்ளவற்றைப் பார்ப்போம். முதலில் சர ராசிகளைப் பார்ப்போம்

சர ராசி : மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய நான்கு ராசிகளும் சரராசிகளெனப்படும். இந்த ராசிக்காரர்கள் அடிக்கடி மாற்றத்தை விருப்புவார்கள். மிகவும் சுறுசுறுப்பு மிக்கவர்கள். எந்தக் கஷ்டத்தையும் சமாளித்து முன்னுக்கு வருபவர்கள். சுயேச்சையாக இருக்க விரும்பிபவர்கள். மற்றவர்களுக்குக் கீழ் இருக்க விருப்பப்பட மாட்டார்கள்.

சரராசி 2-ம் வீடாக இருந்தால் என்ன பலன் என்று பார்ப்போம். ஒரே சீராகப் பணவரவு இருக்காது. ஒரு சமயம் அதிகமாக இருக்கும். ஒரு சமயம் குறைவாக இருக்கும். வியாபாரம் செய்யத் தகுந்தவர்கள் இவர்கள். வியாபாரத்தில்தானே வரவு ஒரே மாதிரியாக இருக்காது.

3-ம் வீடு சர ராசியாக இருந்தால் அவர்கள் வெளியூர்ப் பயணத்தை விருப்புவர். மூன்றாம் வீடு வெளியூர்ப் பயணத்தைக் குறிக்கிறது அல்லவா? இந்த ராசிக்காரர்கள்

தான் நினைத்ததை முடிக்கும் சாமார்த்தியம் கொண்டவர்கள்.

ஸ்திர ராசி : மிகுந்த நிதானத்துடனும், தன்நம்பிக்கையுடனும் செயல்படுபவர்கள். நிரந்தரமான வரவு இவர்களுக்கு உண்டு. ஸ்திர ராசி 6-ம் வீடாக இருந்து ஒருவருக்கு வியாதி வருமேயானால் பரம்பரையான வியாதி வருவதற்கு வழியுண்டு. குணம் ஆகாத வியாதிகள் ஆஸ்த்மா, சர்க்கரை போன்றவியாதிகள் வரக்கூடும். 3-ம் இடம் ஸ்திர ராசியாக இருப்பின் வெளியூர் செல்வதை விரும்ப மாட்டார். ஸ்திர ராசியிலுள்ள தசா,புக்தி காலங்களில் ஒருவருக்கு வேலையில் நிரந்தரம் ஆகும். மிகவும் நிதானமாகச் செயல் படும் தன்மை கொண்டவர்கள் இவர்கள்.

உபய ராசி : உறுதியான எண்ணத்துடன் இருக்க முடியாதவர்கள். எண்ணத்தை அடிக்கடி மாற்றக் கூடியவர்கள். சண்டை, வாக்குவாதம் ஆகியவற்றை வெறுப்பவர்கள். கஷ்டமான வேலையைக் கண்டு மலைப்பவர்கள். நரம்பு சம்மந்தமான வியாதிகள் இவர்களைத் தாக்கும். இவர்கள் உறுதியான எண்ணங்கள் இல்லாததால் அடிக்கடி தங்கள் எண்ணங்களை மாற்றிக் கொண்டே இருப்பர்கள். இவர்கள் ஏஜென்சித் தொழிலுக்கு ஏற்றவர்கள்.

நம்மை பயக்கும் ராசிகள்(Fruitful Signs) : எல்லா ஜல ராசிகளும் இந்த வகையைச் சேர்ந்தன. ரிஷபம், துலாம், தனுசு, மகரம் ஆகியவை பாதி நம்மை (Semi Fruitful Signs) பயக்கும் ராசிகள் என்று கூறுவார்கள். ஒருவருக்குக் குழந்தை இல்லை எனக்கொள்ளுங்கள். இவர் ஜாதகத்தில் 5-ம் வீடு Fruitful Sign ஆகி 5-க்குடையவன் மற்றொரு Fruitful Sign-ல் இருப்பாரேயாகில் அவருக்குக் குழந்தை பாக்கியம் உண்டு எனக் கொள்ளலாம். இந்த Fruitful Sign ஆனது அதில் உள்ள கிரகங்களையும் நன்மைபயக்கும் கிரகங்கள் ஆக்குகின்றன. அதே போன்று கணவர் மனைவியர் ஏதோ சந்தர்பத்தின் காரணமாகப் பிரிந்து இருக்கின்றனர் எனக் கொள்ளுங்கள். அவர்கள் எப்போது சேருவார்கள் என்ற கேள்வி எழும். அப்போது இந்த ராசியில் உள்ள கிரகங்கள் பலன் சொல்லப் பயன் படும். நீங்கள் ஆரூடத்திப் பற்றிக் கேள்விப் பட்டு இருப்பீர்கள். அதாவது ஜாதகம் இல்லாதவர்களுக்கு அவர்கள் பிரச்சனைகளைத் தீர்க்கப் பயன் படும் ஜாதகம். அதாவது அவர்கள் கேள்வி கேட்க்கும் நேரத்தை வைத்து ஜாதகம் கணித்துப் பலன் சொல்லுவார்கள். ஒருவர் நம்மிடம் வந்து "நான் தேர்வில் வெற்றி பெருவேனா?"- என்று கேட்கிறார் எனக் கொள்வோம். அவரிடம் ஜாதகம் இல்லை. நாம் அந்த நேரத்திற்கு ஜாதகம் கணித்துப் பார்க்கிறோம். தேர்வு, படிப்பு ஆகியவைகளை 4-ம் வீடு குறிக்கிறது. 4-ம் வீட்டில் சுபகிரகங்கள் இருந்து 4-ம் வீட்டிற்குடையவர் 11-ம் வீட்டில் அதுவும் 11-ம் வீடு Fruitful Sign ஆகவும் இருந்து விட்டால் நாம் எளிதாகச் சொல்லலாம். நீங்கள் தேர்வில் வெற்றி பெறுவீர்கள் என்று அடித்துச் சொல்லலாம். இவ்வாறு பலவழிகளில் இந்த Fruitful Signs - உதவி புரிகிறது.கடகம், விருச்சிகம், தனுசு ஆகியவைகல் Fruitful signs எனப்படும்.

வறண்ட ரசிகள் (Barren Signs) : Fruitful Signs - களுக்கு எதிர் மறையான ராசிகள் இந்த வறண்ட ராசிகள் அல்லது Barren Signs. மேஷம், மிதுனம், சிம்மம், கன்னி ஆகியவை வறண்ட ராசிகள் எனப்படும். இந்த ராசியிலுள்ள கிரகங்கள் நன்மையான பலன்களைக் கொடுக்காது.

ஊமை ராசிகள் (Mute Signs) : எல்லா ஜல ராசிகளும், அதாவது கடகம், விருச்சிகம், மீனம் ஆகியவை Mute Signs அல்லது ஊமை ராசிகள் எனப்படும். இதை சற்று விளக்கமாக எழுதுகின்றோம். ஒருவருக்கு ஜாதகத்தில் 2-ம் வீடு பேச்சு, நாக்கு வன்மையைக் குறிக்கிறது. 2-ம் வீடு ஊமை ராசியாக வந்து அதில் புதன் இருந்து சனியால் பார்க்கப் பட்டால் அவர் திக்கித், திக்கிப் பேசுவார். செவ்வாய் பார்த்தால் மிக வேகமாகப் பேசுவார். குழந்தைகள் நன்றகப் பேசுவார்களா அல்லது பேசமாட்டார்களா என்று 2-ம் வீட்டையும், இந்த ஊமை ராசிகளையும் வைத்துக் கொண்டு

RangaRakes tamilnavarasam.com

பேசமாட்டார்களா என்று 2-ம் வீட்டையும், இந்த ஊமை ராசிகளையும் வைத்துக் கொண்டு சொல்லிவிடலாம். அதற்குத்தான் இந்த ராசிகள் பயன் படுகின்றன.

<u>முரட்டு ராசிகள்</u> : மேஷமும், விருச்சிகமும் முரட்டு ராசிகள் எனப்படும். இவற்றிற்கு அதிபதி செவ்வாய் அல்லவா? செவ்வாய் ஒரு முரட்டு கிரகம் அல்லவா ? அதனால் அந்த ராசிகளுக்கு முரட்டு ராசிகள் எனப்படும்.

<u>நான்கு கால் ராசிகள்</u> : மேஷம், ரிஷபம், சிம்மம், மகரம் ஆகியவை நான்குகால் ராசிகள் எனப்படும். செம்மரிக் கடா (மேஷம்), காளை (ரிஷபம்), சிங்கம் (சிம்மம்), ஆடு (மகரம்), ஆகியவை 4-காலுள்ள உயிரினங்கள் அல்லவா? அதனால் தான் இவைகள் நாலுகால் ராசிகள் என்றழைக்கப் படுகின்றன. சரி! இந்த ராசிகள் பலன் சொல்ல எப்படிப் பயன் படுகின்றன? எனக்கு மிகவும் வேண்டியவர்" நான் கார் வாங்க ஆசைப் படுகிறேன்? என்னால் வாங்க முடியுமா?" என்று கேட்டார். அவர் ஜாதகத்தை பார்த்தோம். அவருக்கு அப்போது சனிதசை, சூரிய புக்தி நடந்து கொண்டிருந்தது. நம்முடைய கணக்குப்படி அந்த தசா புக்தியில் அவருக்கு வாகன யோகம் வந்து இருந்தது. அவர் கார் வாங்குவாரா அல்லது மோட்டார் சைக்கிள் வாங்குவாரா என்று எப்படிச் சொல்வது? புக்தி நாதன் சூரியன் அவருக்கு மகரத்தில் இருந்தார். மகரம் நாலுகால் ராசியல்லவா? ஆகவே சூரியன் நாலுகால் ராசியின் பலனைக் கொடுப்பார் என்று நீங்கள் கார் வாங்குவீர்கள் என்று கூறினோம். இப்போது புரிகிறதா ? நாலுகால் ராசியின் உபயோகத்தை. அவரும் நாம் கூறியபடி அப்போது கார் வாங்கினார்.

<u>இரட்டை ராசிகள் (Dual Signs)</u> : மிதுனம், தனுசு, மீனம் ஆகியவை இரட்டை ராசிகள் எனப்படும். இந்த ராசிகளின் உபயோகம் என்ன? ஒருவருக்கு இரண்டு மனைவிகளா? குழந்தை இரட்டையாகப் பிறக்குமா? இரட்டை வருமானம் ஒருவருக்கு வருமா? என்ற கேள்விகளுக்கெல்லாம் இந்த ராசியை வைத்துக் கொண்டு பதில் சொல்லலாம். புதனுக்கு இரட்டைக் கிரகம் என்ற பெயர் உண்டு. அவர் ஒருவரின் ஜீவனஸ்தானமான 10-ம் வீட்டைப் பார்த்தாலோ அல்லது அதில் இருந்தாலோ அவருக்கு இரட்டை வருமானம் வரும் எனக் கூறலாம். இரட்டை வருமானம் எப்படிக் கிடைக்கும்? ஒருவர் ஓர் அலுவலகத்தில் பணிபுரியலாம். மாலை நேரத்தில் வேறொரு இடத்தில் Part-time வேலை செய்யலாம். இது இரட்டை வருமானம் அல்லவா? சிலர் வேலை பார்த்துக் கொண்டே Insurance Agent ஆக இருப்பார்கள். இதுவும் இரட்டை வருமானம் தான். சிலர் அரசாங்கத்தில் வேலை செய்வார்கள். சம்பளம் கிடைக்கும். அதைத்தவிர மேஜைக்கு அடியிலும் வாங்குவார்கள். இதுவும் இரட்டை வருமானம்தான். இந்த மாதிரி மேஜைக்கு அடியில் வாங்குபவர்களுக்கு 10-ம் வீட்டில் புதனுடன் சனியும் சேர்ந்து இருக்கும். அல்லது சனியின் பார்வையாவது இருக்கும். சனியின் தொடர்பு இருந்தால்தான் இந்த மாதிரி மேஜைக்கு அடியில் பணம் வாங்க முடியும். சனி எதையும் ரகசியமாகச் செய்யக்கூடியவர் அல்லவா? 1983-ல் நாம் குடியிருந்த வீட்டின் பக்கத்தில் இருந்த ஒருவர் தன் ஜாதகத்தை எடுத்துக் கொண்டு வந்தார். அவர் தான் வீடு கட்ட முயற்சி செய்வதாயும் தன் ஜாதகப்படி வீடு கட்டமுடியுமா எனக் கேட்டார். அவர் ஜாதகத்தில் அவர் கன்னி லக்கினம். 4-ம் வீட்டில் புதன். செவ்வாய் 4-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டு இருந்தார். மற்ற கிரகங்கள் ஞாபகத்தில் இல்லை. நாம் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு உங்களுக்கு வீடு கட்ட யோகம் வந்துவிட்டது. "நன்றாகக் கட்டுங்கள்" என்று கூறினோம். அவர் "கடன் வாங்கித்தான் கட்ட வேண்டும். கட்ட முடியுமா?" என்று திரும்பவும் கேட்டார். நாம் "உங்கள் ஜாதகப் படி இரண்டு வீட்டிற்கு யோகம் இருக்கிறது. ஏன் தயங்குகிறீர்கள்?" எனக் கூறினோம். அவர் உடனே "ஒரு வீட்டிற்கே வழி இல்லை; இரண்டு வீடு கட்டுவேன் என்கிறீர்களே" என்று கூறிவிட்டுப் போய்விட்டார். சிலமாதங்களில் நாம் வீடு ஒன்று கட்டிக் கொண்டு அங்கிருந்து வந்து விட்டோம். பல ஆண்டுகள் உருண்டோடின. அங்குப் பழைய

RangaRakes
tamilnavarasam.com

கொண்டு அங்கிருந்து வந்து விட்டோம். பல ஆண்டுகள் உருண்டோடின. அந்தப் பழைய நண்பர் திரும்பவும் என்னைத் தேடிக் கொண்டு வந்தார். "நீங்கள் முன்பு கூறியபடி நான் இப்போது 2-வது வீட்டிற்குப் பணம் கொடுத்து விட்டேன். ஆனால் FLAT இன்னும் கைக்குவரவில்லை; எப்போது கிடைக்கும் என்று உங்களைக் கேட்க்கத்தான் வந்தேன்" என்று கூறினார். நாம் அவர்களுக்கு எப்போது கிடைக்கும் என்று கூறி அனுப்பினோம்." நாம் எப்படி அவருக்கு இரண்டு வீடு கிடைக்கும் என்று கூறினோம்?" என்று உங்களுக்குக் கூறுகிறோம். அவர் ஜாதகத்தில் 4-ம் வீடு இரட்டை ராசி. அதாவது தனுசு. அந்த வீட்டில் இரட்டைக் கிரகமான புதனும் இருக்கிறார். பூமிகாரகனான செவ்வாயும் 4-ம் வீட்டுடன் தொடர்பு கொண்டுள்ளது. ஆகவே நாம் அவருக்கு இரண்டு வீடுகள் உண்டு என்றுகூறினோம். அது பலித்து விட்டது. ஆக இரட்டை ராசிகளின் உபயோகம் தெரிகிறதல்லவா?

ஜாதகத்தில் முதல் வீட்டிற்கு லக்கினம் என்று பெயரென்று உங்களுக்குத் தெரியும். முதல்வீடு, நாலாம் வீடு, ஏழாம் வீடு, பத்தாம் வீடு ஆகியவை கேந்திரஸ்தானங்கள் என்றழைக்கப்படும். அதேபோல் ஒன்று, ஐந்து, ஒன்பதாம் வீடுகள் திரிகோண ஸ்தானங்கள் என்றழைக்கப்படும். இந்த கேந்திரஸ்தானங்களும், திரிகோணஸ்தானங்களும் மிக நல்ல வீடுகளாக அழைக்கப் படுகின்றன. இங்கே நல்ல கிரகங்கள் தங்கி இருப்பார்களேயானால் அவைகள் நல்லவைகளையே செய்யும். கெட்ட கிரகங்கள் தங்கி இருந்தால் அவைகள் அந்த வீட்டைக் கெடுத்து விடுகின்றன. அதாவது அந்த வீட்டின் காரகத்துவம் கெட்டு விடும். உதாரணமாக ஒருவருக்கு 5-ம் வீட்டில் சனி இருக்கிறார் எனக்கொள்ளுங்கள். 5-ம் வீடு திரிகோணஸ்தானம் ஆகும். அந்த வீடு புத்திர பாக்கியத்தைக் குறிக்கிறது. அங்கு பாபக் கிரகமான சனி இருப்பதனால் அவருக்குப் புத்திர பாக்கியம் இல்லாமல் போகும். குழந்தையே இல்லாமலும் போகலாம். "5-ல் சனி தத்துப் பிள்ளை யோகம்" என்று கூறுவார்கள். அங்கு சுபக்கிரகமான சுக்கிரன் இருந்தால் அவருக்குப் புத்திர பாக்கியம் இருக்கிறது எனக் கூறலாம். எந்த வீடாக இருந்தாலும் அங்கு சுபக்கிரகங்கள் அந்த வீட்டின் காரகத்துவத்தை மேம்படுத்துகின்றன. ஆனால் கெட்ட கிரகங்களோ அந்த வீட்டின்காரகத்துவத்தைக் கெடுத்து விடுகின்றன. ஒருவருக்கு ஜாதகத்தில் கேந்தரஸ்தானாதிபதியும், திரிகோணஸ்தானாதிபதியும் சேர்ந்து இருப்பார்களேயானால் அவர்கள் ராஜ யோகத்தைக் கொடுப்பர்கள். உதாரணமாக கன்னியாலக்கினத்தை எடுத்துக்கொள்ளுங்கள். சுக்கிரனானவர் 9-ம் வீட்டிற்கு அதிபதி. அதாவது திரிகோணஸ்தானாதிபதி. புதன் 10-ம் வீட்டிற்கு அதிபதி. அதாவது கேந்திராதிபதி. இருவரும் சேர்ந்து ஒருவீட்டில் இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். 4-ம் வீட்டில் இருக்கிறார் எனக்கொள்ளுங்கள். இந்த சேர்க்கையானது இவருக்கு ராஜயோகத்தைக் கொடுக்கும். படிப்பு, வீடு, வாசல், யோகம் எல்லாம் இருக்கும். எந்த வீட்டில் ராஜயோக கிரகசேர்க்கை இருக்கிறதோ அந்த வீட்டின் காரகத்துவம் நன்றாக இருக்கும். 9-ம் வீடு, 10-ம் வீட்டின் அதிபதிகள் சேர்ந்தால் அது தர்ம, கர்மாதிபதியோகம் என அழைக்கப் படும். தர்மஸ்தானம் என்பது 9-ம் வீடு, கர்மஸ்தானம் என்பது 10-ம் வீடு. இருவீடுகளின்அதிபர் சேர்க்கை தர்ம, கர்மாதிபதி யோகம் என்றழைக்கப்படும்.

கடகலக்கினத்தை எடுத்துக் கொள்ளுங்கள். செவ்வாயானவர், 5-ம் வீட்டிற்கும், 10ம் வீட்டிற்கும் அதிபதி. அதாவது கோண, கேந்திர வீடுகளுக்கு அதிபதி. 5-ம் வீடு திரிகோணஸ்தானம், 10-ம் வீடு கேந்திரஸ்தானம் அல்லவா! ஆகவே செவ்வாயானவர் கடக லக்கினத்திற்கு யோககாரகன் என்றழைக்கப் படுகிறார். அதேபோல் செவ்வாயானவர் சிம்மலக்கினத்திற்கும் 4-ம் மற்றும் 9-ம் வீடுகளுக்கு அதிபதியாகிறார். கேந்திர, கோண வீடுகளுக்கு அதிபதியாவதால் அவர் சிம்ம லக்கினத்துக்கும் யோக காரகனாகிறார். அதே போல் மகர, கும்ப லக்கினங்களுக்கு சுக்கிரனானவர், கேந்தரஸ்தானத்திற்கும், திரிகோணஸ்தானத்திற்கும் அதிபதியாவதால் அவர் இந்த இரண்டு லக்கினங்களுக்கும் யோககாரகனாகிறார். ரிஷப லக்கினத்திற்கு சனியானவர் 9-ம் வீட்டிற்கும், 10ம் வீட்டிற்கும் அதிபதியாவதால் அவர் யோககாரகனாகிறார். துலாலக்கினத்திற்கும் சனியானவர் 4-ம் வீட்டிற்கும், 5-ம் வீட்டிற்கும் அதிபதியாவதால் அவர் யோககாரகனாகிறார். இந்த யோக காரகர்கள் எந்த வீட்டில் இருந்தாலும் அந்த வீட்டின் காரகத்துவம் நன்றாக இருக்கும். அதேபோன்று

RangaRakes　tamilnavarasam.com

2,6,8,11-ம் வீடுகள் பணபரம் என்றும், 3,12 வீடுகள் ஆபோக்லிபம் என்றழைக்கப்படும். இந்த வீடுகளைப் பற்றிப் பின்னால் பார்ப்போம். சரி! இப்போது நாம் விட்ட இடத்திலிருந்து முதலாம் வீட்டிற்கு வருவோம்.

லக்கினம், மூன்றாம் வீடு, எட்டாம் வீடு ஆகியவை ஒருவரின் ஆயுளைக் குறிக்கிறது. ஒருவரின் ஆயுளைக் கணிக்க இந்த மூன்று வீடுகளையும் ஆராய வேண்டும். ஒருவரின் ஆயுள்
30 வயதுக்குள் இருந்தால் அது அற்பாயுள் எனப்படும். 30முதல் 60 வயது முடிய நடுத்தர ஆயுள் எனப்படும். 60 வயதுக்குமேல் அது தீர்க்காயுள் எனப்படும். சரி! ஒருவரின் ஆயுளை எப்படித் தீர்மானிப்பது? இது மிகவும் கடினமான வேலை. ஜோதிடத்திலேயே மிகவும் கடினமானது இதுதான். கீழ்வரும் கிரக நிலைகள் தீர்க்க ஆயுளைக் காட்டுகின்றன.

1. லக்கினதிபதி தன் சொந்த வீட்டிலோ, அல்லது உச்ச வீட்டிலோ இருத்தல்.
2. 8-ம் வீட்டில் சனியோ அல்லது குருவோ இருத்தல்.
3. லக்கினமும், சந்திரனும் நல்லவர்கள் சேர்க்கை பெற்றிருத்தல்.
4. லக்கினாதிபதியும், சந்திரனும் கேந்திரவீடுகளிலோ அல்லது திரிகோண வீடுகளிலோ இருத்தல்.
5. லக்கினாதிபதி 8-ம் வீட்டில் இருத்தல்
6. எட்டாம் வீட்டிற்கதிபதி 8-ம் வீட்டிலோ அல்லது லக்கினத்திலோ இருத்தல் அல்லது ல்க்கினத்தையோ அல்லது 8-ம் வீட்டையோ பார்த்தல்
7. சந்திரனும், லக்கினாதிபதியும் சேர்ந்து இருந்தாலோ அல்லது குருவும் சேர்ந்து இருத்தல்.
8. குரு, சனியையோ அல்லது 8-ம் வீட்டையோ பார்த்தல்.

இதைப் போல் பல கிரக சேர்க்கைகளை நமது கிரந்தங்கள் கூறிருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவற்றை மட்டும் நாம் கூறியுள்ளோம். நமது வாசகர்கள் பலதீபிகை, பிருஹத் ஜாதகம் போன்ற நூல்களைப் பார்த்தால் ஆயுளைப் பற்றி விரிவாகக் கூறி இருப்பது தெரிய வரும்.

கீழே கூறியுள்ளவைகள் அற்ப ஆயுளைக் காட்டுகின்றன.

1. 8-ம் வீட்டில் சனியைத்தவிர பாபகிரகங்கள் இருந்தாலும், 6, 12 வீடுகளில் செவ்வாயும், சனியும் இருந்தாலும் அற்ப ஆயுள்தான்.
2. லக்கினத்தில் சந்திரனோடு பாபிகள் சேர்ந்து இருத்தல்
3. லக்கினத்தில் செவ்வாய் இருந்து சுபர் பார்வை இல்லாது இருந்தாலும், 6, 8-ம் வீடுகளில் சனியிருந்து சுபர் பார்வை இல்லாதிருப்பதும்,
4. பொதுவாக லக்கினம், மூன்றாம் வீடு, 8-ம் வீடு ஆகியவற்றில் பாவிகள் இருந்து சுபர் பார்வை இல்லாவிட்டாலும் அற்ப ஆயுள்தான்.

நாம் பொதுவாக ஆயுள் தீர்க்காயுளா அல்லது அற்ப ஆயுளா என்பதைப் பற்றி மேலே கூறியிருந்தோம். சரி! ஒருவருக்கு எப்போது மரணம் ஏற்படும்? யார் மரணத்தைக் கொடுப்பார்கள். மரணத்தைக் கொடுக்கும் கிரகத்திற்கு மாரகன் எனப் பெயர். பொதுவாக எந்த வீட்டிற்கும் 12-ம் வீட்டதிபர் அந்த வீட்டிற்கு நன்மையைச் செய்யாது. நான்காம் வீடு தாயாரைக் குறிக்கிறது. நான்காம் வீட்டிற்குப் 12-ம் வீடு 3வது வீடு அல்லவா! 3-ம் வீட்டிலுள்ள கிரகங்களும், 3-ம் வீட்டின் அதிபதியும் தாயாருக்கு நன்மையைச் செய்யாது. கெடுதல்தான் செய்யும். 7-ம் வீடு திருமணத் தைக் குறிக்கிறது. 7-ம் வீட்டிற்குப் 12-ம் வீடு 6-ம் வீடு. 6-ம் வீட்டின் அதிபதியும் அதில் உள்ள கிரகங்களும் கணவன், மனவியரிடையே கருத்து வேற்றுமையும் ,சில சமயம் விவாஹரத்தையும் கொடுத்துவிடும். எந்த வீட்டிற்கும் அதற்கு [illegible] வீடு எதிர்மறையான பலன்களைக் கொடுக்கும்.

RangaRakes tamilnavarasam.com

அதற்கு முந்தைய வீடு எதிர்மறையான பலன்களைக் கொடுக்கும்.

ஆயுளைக் குறிப்பது 1, 3, 8-வது வீடுகள் அல்லவா! இவற்றிற்கு முந்தையவீடு அல்லது 12-வது 12,2,7 வது வீடுகள் ஆகும். இவைகள் ஒருவரைக் கொல்லும் வல்லமை படைத்தவை. ஆகவே இவர்களை மாரகர்கள் என்றழைக்கலாம். 7-வது வீடு திருமணத்தைக் கொடுக்கும் என்று முன்பு கூறியிருந்தோம். இப்போது அதே 7-ம் வீடு மாரகத்தைக் கொடுக்கும் என்று எழுதுகின்றோம். கல்யாணவயதின் போது திருமணத்தைக் கொடுத்த 7-ம் வீட்டின் அதிபர் ஒருவருக்கு ஆயுளை முடிக்கும்போது அவர் மரணத்தையும் கொடுப்பார். ஒருவரின் ஜாதகத்தில் 2,7,12 க்கதிபர்கள், அதில் உள்ள கிரகங்கள் மாரகத்தைக் கொடுப்பார்கள் என்றும் எழுதி இருந்தோம். இவர்களைத்தவிர வேறு யாராவது மாரகத்தைக் கொடுப்பார்களா? இருக்கிறார்கள். அவர்களைக் கீழே பார்ப்போம்.

ராசிகளில் மேஷம், கடகம், துலாம் ,மகரம்- ஆகியவை சரராசிகள் எனப்படும். இந்த சரராசிகளுக்கு 11-ம் வீடு பாதகத்தைக் கொடுக்கும். 11-ம் வீட்டு அதிபதியும், அதில் உள்ள கிரகங்களும் மரணத்தைக் கொடுக்கும். மேஷத்திற்குப் 11-ம் வீடு கும்பம்: அதன் அதிபதி சனி; ஆகவே மேஷத்திற்கு சனி பாதகாதிபதியாகிறார். இதேபோன்று கடகத்திற்கு சுக்கிரன், துலாத்திற்கு சூரியன், மகரத்திற்கு செவ்வாய் ஆகியோர் பாதகாதிபதியாகிறார்கள். பாதகாதிபதி என்றால் ஆயுள் முடியும் போது மட்டும் மரணத்தைக் கொடுப்பார்கள். மற்ற காலங்களில் அவர்கள் வேறெந்தக் கெடுதலையும் செய்ய மாட்டார்கள். உதாரணத்திற்குத் துலா ராசியை எடுத்துக் கொள்ளுங்கள். இதன் அதிபதி சூரியன். இவர் 10 வீட்டில் இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். 10-ம் வீடு ஜீவனஸ்தானம் அல்லவா! லாபாதிபதியான சூரியன் 10-ம் வீட்டில் இருந்தால் நல்ல வேலை கிட்டும். சிலருக்கு அரசங்க உத்தி யோகம் கிட்டும். சூரியன் அரசாங்கத்திற்குக் காரகம் வகிப்பவர். உத்தியோகத்தில் பதவி உயர்வுகள் எல்லாம் பெற்று நல்ல விதமாக வாழ்க்கை நடத்துவர். சூரியன் லாபாதிபதியாகி ஜீவனத்தில் அனர்ந்து அனைத்து நன்மைகளையும் செய்வார். சரி! அவருக்கு ஆயுள் 65 முடிய எனக்கொள்ளுங்கள். அப்போது சூரியதசையோ, அல்லது சூரியபுக்தியோ வருமாகில் அவர் அப்போது மாரகத்தைக் கொடுப்பார். அப்போது அவர் லாபாதிபதியாகச் செயல் படமாட்டார். பாதகாதிபதியாகச் செயல் படுவார். உத்தியோகத்தில் அவ்வளவு நன்மைகளைச் செய்த சூரியன் மாரகம் என்று வரும் போது மரணத்தைக் கொடுக்கவும் தயங்குவதில்லை. தன் கடமையைத் தவறாமல் செய்வார்.

ஸ்திர ராசிகளான ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகியோருக்கு 9-ம் வீட்டிற் கதிபதிகளான முறையே சனி, செவ்வாய், சந்திரன், சுக்கிரன் ஆகியோர் பாதகாதிபதி ஆகின்றனர்.இவர்கள் ஆயுள் முடியும் போது தங்கள் தசா, புக்திக் காலங்களில் மரணத்தைக் கொடுப்பார்கள். ரிஷபத்திற்கு சனியோககாரகன் எனப் பெயர். அவர் தன் தசாபுக்தி காலங்களில் நன்மையைத்தான் செய்வார். இருப்பினும் ஆயுள்முடியும் போது அவர் தன் கடமையைச் செய்யாமலிருப்பதில்லை. அவர் மரணத்தைக் கொடுப்பார். ஆயுள் இருக்கும்போது நல்லவைகளையும், ஆயுள் முடியம்போது மாரகத்தையும் கொடுப்பார்.

உபய ராசிகளான மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகியவற்றிற்கு 7-ம் வீட்டின் அதிபதி பாதகாதிபதியாகிறார். மிதுனத்திற்கு 7-ம் வீட்டின் அதிபதி குரு, கன்னிக்கு 7-ம் வீடான மீனத்திற்கதிபதி குரு பாதகாதிபதியாகிறார். தனுசுவிற்கும், மீனத்திற்கும் புதன் 7-ம் வீட்டிற்கதிபதியாகி அவர் பாதகாதிபதியாகிறார். இளமையில் திருமணத்தைக் கொடுத்த குருவும், புதனும் ஆயுள் முடியும்போது ஆயுளை முடித்துவைக்கவும் செய்வார்கள். இப்போது மாரகாதிபதிகள். பாதகாதிபதிகள் யார் யார் எனத் தெரிந்து கொண்டீர்கள்.

RangaRakes
tamilnavarasam.com

மாரகாதிபதிபதிகள், பாதகாதிபதிகள் யார் யார் எனத் தெரிந்து கொண்டீர்கள்.
கீழே சில உதாரணஜாதகத்தைக் கொடுத்து இருக்கிறோம். அவர்களுக்கு எப்போது மாரகம் சம்பவித்தது எனக் கொடுத்துள்ளோம்.




ஜாதகம் No.1 ஐப் பாருங்கள். இவர் 53 ஆண்டுகள்தான் வாழ்ந்து இருந்தார். சனிதசை, ராகு புக்தியில் காலமானார். சனி இவருக்கு யோககாரகன். அப்படி இருந்தும் இவர் அவர் தசையில் ராகு புக்தியில் காலமானார். சனி மாரகஸ்தானமான 7-ம் வீட்டில் இருக்கிறார். புக்தினாதனான ராகு சனியால் பார்க்கப்படுகிறார். ஆக சனிதசை, ராகுபுக்தியில் இவருக்கு மாரகம் சம்பவித்தது.




அடுத்த ஜாதகம் No. 2-ஐப் பாருங்கள். இவர் வாழ்ந்தது 31 ஆண்டுகள்தான். குருதசை, செவ்வாய் புக்தியில் காலமானார். குரு எப்படி மரணத்தைக் கொடுத்தார்? இந்த லக்கினத்திற்கு 11-க்குடையவன் சுக்கிரன் மாரகாதிபதி அல்லவா? அவருடைய நக்ஷக்ஷத்திரமான பரணியில், குரு இந்த ஜாதகத்தில் அமர்ந்து இருக்கிறார். ஆக மாரகாதிபதி சுக்கிரன் கொடுக்கக்கூடிய மரணத்தை குரு கொடுத்துவிட்டார்.
அதுசரி! புக்திநாதன் செவ்வாய் எப்படி மரணத்தைக் கொடுத்தார்? செவ்வாயானவர் ஸ்வாதி நக்ஷக்ஷத்திரத்தில் இருக்கிறார். ராகு 8-ல் இருந்தாலும் அவர் சனியின் வீட்டில் இருப்பதால் சனி கொடுக்கக்கூடிய பலன்களைஅவர் கொடுப்பார். ஏனெனில்

RangaRakes tamilnavarasam.com

வீட்டில் இருப்பதால் சனி கொடுக்கக்கூடிய பலன்களைஅவர் கொடுப்பார். ஏனெனில் அவருக்கு சொந்த வீடு எதுவும் கிடையாது. அவர் எந்த வீட்டில் இருக்கிறாரோ அந்த வீட்டுப்பலனைக் கொடுப்பார் அல்லவா? சனி 7, 8 வீடுகளுக்கு அதிபதி. ஆக ராகுவானவர் 7-ம் வீட்டுப் பலனையும் கொடுக்கின்றார். 7-ம் வீடு மாரகஸ்தானம் அல்லவா? ஆக சனி கொடுக்க வேண்டிய மாரகத்தை ராகு கொடுக்கின்றார். அவருடைய நக்ஷ்க்ஷத்திரத்தில் செவ்வாய் அமர்ந்ததால் செவ்வாய் இந்த ஜாதகருக்கு மாரகத்தைக் கொடுத்து விட்டார். இந்த உதாரணத்திலிருந்து நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டியது ஒரு கிரகம் எந்த நக்ஷ்க்ஷத்திரச் சாரத்தில் அமர்ந்து இருக்கிறது என்பதையும் பார்த்துத்தான் பலன் சொல்ல வேண்டும். நக்ஷ்க்ஷத்திரச்சாரம் மிகவும் முக்கியம். பலன் சொல்லும்போது ஒரு கிரகம் எந்த நக்ஷ்க்ஷத்திரத்தின் காலில் அல்லது சாரத்தில் அமர்ந்துள்ளது எனப் பார்த்துப் பலன் சொல்ல வேண்டும். இப்போது ஓரளவிற்கு ஆயுள் பாவத்தைப் பற்றித் தெரிந்து கொண்டுள்ளீர்கள். பல ஜாதகங்களைவைத்துக் கொண்டு அவர்கள் எப்போது காலமானார்கள் எனப் பார்த்து பலன் சொல்லப் பழகிக் கொள்ளுங்கள்.

ஒருவருக்கு இப்போது என்ன தசா, புக்தி நடக்கிறது என எப்படிக் கண்டுபிடிப்பது? ஒரு உதாரணம் கொடுக்கின்றோம். நாம் ஜாதகம் போடும் போது ஜெனன காலத்தில் என்ன தெசை இருப்பில் இருக்கிறது எனக் குறிப்பிடுகிறோம் அல்லவா? அதை வைத்துக் கொண்டுதான் போட வேண்டும். ஒருவர் 23-01-1944-ம் தேதி பிறந்து இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். அவர் பிறந்த போது ஜெனன கால இருப்பு தெசை கேது தெசை வருஷம் 0 மாதம் 04 நாள் 04 எனக் கொள்ளுங்கள். இன்றைக்கு அதாவது 21-07-2002 அன்று என்ன தெசை, என்ன புக்தி நடக்கிறது என்பதை எப்படிக் கண்டுபிடிப்பது?

ஒவ்வொரு தசைக்கும் எவ்வளவு வருஷம் என்பதை நாம் ஏற்கனவே சொல்லி இருக்கிறோம். ஒவ்வொரு தசைக்குள்ளும் புக்திகள் எவ்வாறு பிரிக்கப்பட்டு இருக்கின்றன என்று பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டு உள்ளன.

| | |
|---|---|
| சூரியதசை | 6 ஆண்டுகள் |
| சந்திர தசை | 10 ஆண்டுகள் |
| செவ்வாய் தசை | 7 ஆண்டுகள் |
| ராகு தசை | 18 ஆண்டுகள் |
| குருதசை | 16 ஆண்டுகள் |
| சனி தசை | 19 ஆண்டுகள் |
| புதன் தசை | 17 ஆண்டுகள் |
| கேது தசை | 7 ஆண்டுகள் |
| சுக்கிர தசை | 20 ஆண்டுகள் |
| | |
| மொத்தம் | 120 ஆண்டுகள் |

| | |
|---|---|
| பிறந்த வருஷம், மாதம், நாள் | 1944 - 01 - 23 |
| ஜெனன கால இருப்புதசை- கேது | 0 - 04 - 04 |
| | 1944 - 05 - 27 |
| அடுத்த தசை - சுக்கிரன் | 20 - 00 -00 |

| | |
|---|---|
| | 1964 - 05 - 27 |
| அடுத்த தசை - சூரியன் | 6 -00 - 00 |
| | 1970 -05 - 27 |
| அடுத்த தசை - சந்திரன் | 10 -00 - 00 |
| | 1980 - 05- 27 |
| அடுத்த தசை - செவ்வாய் | 7 - 00 - 00 |
| | 1987 - 05 - 27 |

மேற்கண்ட தேதியில் செவ்வாய் தசை முழுவதுமாக முடிந்து விட்டது. தற்போது ராகு தசை நடந்து கொண்டு இருக்கிறது. அது முடியாததால் என்ன புக்தி நடந்து கொண்டிருக்கிறது எனப் பார்க்க வேண்டும். அதைப் பார்ப்போம்.

| | |
|---|---|
| ராகு தசை ஆரம்பம் | 1987 - 05 - 27 |
| ராகு புக்தி | 2 - 08 - 12 |
| | 1990 - 02 - 09 |
| குருபுக்தி | 2 - 04 - 24 |
| | 1992 - 07 - 03 |
| சனி புக்தி | 2 - 10 - 06 |
| | 1995 - 05 - 09 |
| புதன் புக்தி | 2 - 06 - 18 |
| | 1997 - 11 - 27 |
| கேது புக்தி | 1 - 00 - 18 |
| | 1998 - 12 - 15 |
| சுக்கிர புக்தி | 3 - 00 - 00 |
| | 2001 - 12 - 15 |
| சூரிய புக்தி | 0 - 10 - 24 |
| | 2002 - 11 - 09 |

பெரும். அதற்குப் பின் சந்திர புக்தி நடை பெறும்.

ஒருவருக்கு ஜெனன காலத்தில் சனிதசை ஆரம்பம் எனக் கொள்ளுங்கள். சனிக்குப்பின் புதன், கேது, சுக்கிரன் என்று தசைகள் நடைபெறும். இப்போது ஒருவருக்குத் தற்கால தசா புக்திகள் கண்டுபிடிக்கத் தெரிந்து கொண்டீர்கள் அல்லவா!

## நீங்களும் ஜோதிடர் ஆகலாம்   பாடம் - 15

சென்ற பாடத்தில் ஆயுள் எப்படிக் கணிப்பது என்று ஓரளவிற்குத் தெரிந்து கொண்டீர்கள். நாம் எப்படிப் பார்ப்பது என ஓரளவிற்குத்தான் சொல்லிக் கொடுத்தோம். நீங்கள் பல ஜாதகங்களைப் பார்த்து அவர்கள் எப்போது மரணமடைந்தார்கள் என்று பார்த்து அப்போது என்ன தசா, புக்தி என்று பார்க்க வேண்டும். ஆயிரம்பேரைக் கொன்ற வன் அரை வைத்தியன் என்பார்கள். அதே போல் நாமும் பல ஜாதகங்களைப் பார்த்துப் பழகினால்தான் பலன்களைக் கூறமுடியும். நாம் ஏற்கனவே எழுதி இருக்கிறோம், ஒரு வீட்டைப் பற்றிக் கூறவேண்டுமானால் அந்த வீட்டிலே சுப கிரகங்கள் இருக்கின்றார்களா அல்லது பாப கிரகங்கள் இருக்கின்றார்களா, அந்த வீட்டின் அதிபர் எங்கு இருக்கிறார், அந்த வீட்டை யார் பார்க்கிறார்கள், அந்த வீட்டின் அதிபர் யாருடன் சேர்ந்திருக்கிறார் என்று பார்த்துத்தான் பலன் சொல்ல முடியும். ஜாதகம் கணிப்பது எளிது. வெறும் கணக்குத்தான். ஆனால் பலன் சொல்லுவது இருக்கிறதே அது அவ்வளவு எளிது இல்லை. எளிதாக இருந்தால் எல்லோரும் ஜோதிடராக முடியும். நாம் இன்னும் முதல் வீடான லக்கினத்தை இன்னும் முடிக்க வில்லை.

லக்கினத்தில் நல்ல கிரகங்கள் இருக்கலாம். அவைகள் நல்லத்தையே செய்யும். அதேபோல் லக்கினாதிபதி நல்ல கிரகத்துடன் சேர்ந்து இருக்கலாம். நல்லத்தையே செய்யும். லக்கினாதிபதி ஒருபாப கிரகத்துடன் சேர்ந்து இருந்து, லக்கினத்தில் ராகு இருப்பாரேயாகில் அவருக்கு தாழ்மை உணர்வு இருக்கும். சூரியன்,சனி, செவ்வாய் ஆகியவை வரண்ட கிரகங்களாகும். இவை ஒருவரின் லக்கினத்திலே இருப்பாரேயாகில் அவர் சற்று ஒல்லியான உருவம் கொண்டவராக இருப்பர். ஒருவரின் லக்கினம் சரராசியாக இருந்து, அதன் அதிபர் சர ராசியில் இருந்தால் அவர் அதிகம் வெளியூர்ப்பயணம் செய்து பணம் சம்பாதிப்பார் எனக் கொள்ளலாம். லக்னம் சரராசியாகி, நவாம்ச லக்கினமும் சர ராசியாகி, நவாம்சத்தில் லக்கினாதிபதி சர லக்கினத்தில் இருப்பாரே யாகில் அவரும் வெளியூர்ப் பயணம் மேற்கொண்டு ஜீவனம் செய்வார் எனக் கொள்ளலாம். ஒருவருக்கு லக்கினத்தில் பல பாப கிரகங்கள் இருப்பாரேயாகில் அவர் வாழ்க்கையில் பல துக்ககரமான சம்பவங்களைச் சந்திக்க வேண்டியது இருக்கும். லக்கினத்திற்கு இருபுறமும் ராகுவும், சனியும் அதாவது 12, 2 ஸ்தானங்களில் இருப்பார்களேயாகில் அவர்களுக்கு திருட்டு பயம் இருக்கும். அதேபோல் ராகுவும், செவ்வாயும் அல்லது சனியும் செவ்வாயும் லக்கினத்திற்கு 2, 12 வீடுகளில் இருந்தால் திருட்டு பயம் இருக்கும்.

ஒருவரின் உறுவ அமைப்பைப் பற்றிப் பார்க்கும்போது சூரியன் லக்கினத்தில் இருந்தால் நல்ல உடல் அமைப்பைக் கொடுப்பார். சந்திரன் இருந்தால் உடல் அமைப்பு நல்ல விகிதத்தில் இருக்கும். சிலரைப் பார்த்து இருப்பீர்கள். அவர்களுக்கு கை, அல்லது கால் நீண்டு இருக்கும். அல்லது முகம் மட்டும் நீண்டு இருக்கும். சந்திரன் லக்கினத்தில் இருப்பாரேயாகில் உடல் அமைப்பு சரியாக இருக்கும். செவ்வாய் இருந்தால் நல்ல ஆரோக்கியமான, உறுதியான உஷ்ணப் பாங்கான உடல் அமைப்பைக் கொடுப்பார். புதனும் லக்கினத்தில் இருந்தால் நல்ல உறுவமைப்பைக் கொடுப்பார். குரு இருப்பாரேயாகில் நல்ல மதிப்பை உண்டாக்கும் வகையில் உறுவ அமைப்பைக் கொடுப்பார். சுக்கிரன் இருப்பாரேயாகில்

RangaRakes

கவர்ச்சிகரமான உறுவ அமைப்பைக் கொடுப்பார். ஆனால் அந்த உறுவமைப்பில் பெண்மை கலந்து இருக்கும். சனி இருப்பாரேயாகில் நல்ல கறுமையான கூந்தலைக் கொடுப்பார். குருகிய மார்பு அமைப்புடன் சிறிது சோம்பேரித்தனமாக இருப்பார்.

ஒருவரின் மனதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் சந்திரனின் நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும். சந்திரன்தான் மனதுக்குக் காரகம் வகிப்பவர். சந்திரன் சுபகிரகங்களான புதன், குரு, சுக்கிரனுடன் சேர்ந்து இருக்கலாம். புதனுடன் சேர்ந்து இருந்தால் நியாய உணர்வுடன் இருப்பர். நியாயத்தைப் பேசுபராக இருப்பர். புதன் அடிக்கடி மாறும் குணமுள்ளவரதலால் சந்திரனுடன் சேரும்போது இவர் தன் எண்ணங்களை மாற்றக் கூடியவராக இருப்பர். சனியும் சந்திரனும் சேர்ந்து இருந்தால் எப்போதும் கவலை கொண்டவராக இருப்பார். செவ்வாயும் சந்திரனும் சேர்ந்து இருந்தால் பெண்களாக இருப்பின் மாதவிலக்கு சம்மந்தமான பிரச்சனை இருக்கும். அவர்கள் மன உறுதியுடனும் தைரியத்துடனும் இருப்பர். சந்திரனும், ராகுவும் சேர்ந்து இருந்தால் அதுவும் லக்கினத்தில் இருந்தால் Hysteria என்னும் மன நோய் இருக்கும். சந்திரனும் குருவும் சேர்ந்து இருந்தால் நல்ல எண்ணங்களோடு மன உறுதியுடன் இருப்பர். பொதுவாக சந்திரனும் ராகுவும், சனியுமோ அல்லது செவ்வாயுமோ இருக்குமேயாகில் அவர்கள் நிச்சயமாக ஒரு emotional Character ஆக இருப்பர். பாப கிரகங்கள் சந்திரனுடன் சேராமல் இருப்பது நல்லது. சந்திரனும் சூரியனும் சேர்ந்து இருந்தால் மிகவும் வலுவான மனதைக் கொண்டவராக இருப்பார். அதே சமயம் பிறர் பொருளை அபகரிக்கும் எண்ணம் கொண்டவராகவும் இருப்பார். அம்மாவாசை அன்றுதான் சூரியனும் சந்திரனும் சேர்ந்து இருக்கும். அப்போது பிறந்தவர் பிறர் பொருளை அபகரிக்கும் எண்ணம் கொண்டவராக இருப்பர்.

ஒருவரின் ஜாதகத்தில் ராகுவோ அல்லது கேதுவோ லக்கினத்தில் இருக்குமேயாகில் அவர்களுக்கு நரம்பு சம்மந்தமான தொந்தரவுகளிருக்கும். சூரியன் உடலுக்கும், சந்திரன் மனதிற்கும் காரகம் வகிப்பவர்கள் என்று நாம் கூறி இருக்கிறோம். சூரியனோ அல்லது லக்கினமோ வர்க்கோத்தமத்தில் இருந்தால் முதல் வீடு பலம் பொருந்தியதாகக் கருதப் படும். வர்க்கோத்தமம் என்றால் என்ன? வர்க்கோத்தமம் என்பது ராசியிலும், நவாம்சத்திலும் ஒரு கிரகமோ அல்லது வீடோ ஒரே இடத்தில் இருப்பது. ஒருவருக்கு சூரியன் ராசியில் மேஷத்தில் இருக்கிறார் எனக் கொள்வோம். நவாம்சத்திலும் மேஷத்தில் சூரியன் இருப்பாரேயாகில் அது வர்க்கோத்தமம் எனப்படும். அதாவது சூரியன் ராசியிலும், நவாம்சத்திலும் மேஷத்தில் இருக்கிறார். இது சூரியனுக்கு மட்டுமல்ல எந்த கிரகமாக இருந்தாலும் ராசியிலும், நவாம்சத்திலும் ஒரே வீட்டில் இருந்தால் அது வர்கோத்தமம் எனப்படும். லக்கினம் வர்கோத்தமாக இருந்தால் ஆயுள் தீர்க்கம் என்று கூறலாம். சூரியன் வர்கோத்தமத்தில் இருந்தால் அவர் உடல் வலு உள்ளவராகக் கருதலாம்.

பொதுவாக நல்ல கிரகங்கள் லக்கினத்தில் இருப்பது நல்லது. பாப கிரகங்கள் இருப்பது அவ்வளவு நல்லது இல்லை. நாம் இத்துடன் முதல் லக்கின பாவத்தை முடித்துக் கொள்வோம். இனி 2-ம் பாவத்தைப் பற்றிப் பார்ப்போம்.

இரண்டாம் வீட்டை அதன் அதிபதியைக் கொண்டும், அதில் இருக்கும் கிரகங்களை வைத்தும், அந்த வீட்டைப் பார்க்கும் கிரகங்களை வைத்தும் பலன் கூறவேண்டும். 2-ம் வீட்டை வைத்து எந்தெந்த பலங்களைக் கூறலாம் என்பதைப் பார்ப்போம். 2-ம் வீடு குடும்பத்தைக் குறிக்கிறது. குடும்பத்தில் அமைதி இருக்குமா அல்லது குழப்பம் இருக்குமா என்பதை இந்த வீட்டை வைத்துத்தான் சொல்ல வேண்டும். ஆகவே இதை குடும்பஸ்தானம் என்று நாம் குறிப்பிடுகிறோம். ஒருவருக்குக் குழந்தை பிறக்கிறது எனக் கொள்வோம். அதாவது அந்த வீட்டில் ஒரு நபர் கூடி இருக்கிறார் என்பதுதான் இதற்குப் பொருள். அதனால்தான் குழந்தை பிறப்பை இந்த வீட்டை

RangaRakes
tamilnavarasam.com

என்றுதானே இதற்குப் பொருள். அதனால்தான் குழந்தை பிறப்பை இந்த வீட்டை வைத்துக் கூறுகிறோம். அடுத்ததாக இதை தனஸ்தானம் என்று கூறுவார்கள். அதாவது ஒருவருக்குப் பணவரவு நன்றாக இருக்குமா அல்லது சொற்பமாக இருக்குமா என்பதையும் இந்த வீட்டை வைத்துத்தான் கூறவேண்டும். ஒருவரின் கண்பார்வை நன்றக இருக்குமா அல்லது பார்வையில் கோளாறு இருக்குமா என்பதையும் இந்த வீட்டையும் வைத்துத்தான் கூறவேண்டும். ஒருவரின் வாக்கு வன்மையையும் இதை வைத்துத்தான் கூறவேண்டும். ஒருவர் சிரிக்கச், சிரிக்கப் பேசுவர். ஒருவர் எப்போதுமே ஒருவரையும் மதியாமல் பேசுவர். சிலர் திக்கித்திக்கிப் பேசுவர். ஆக ஒருவரின் நாக்கு வன்மையை இதைவைத்துத்தான் கூறவேண்டும். ஒருவரின் வங்கியில் உள்ள பணம், Liquid Cash என்று சொல்லக் கூடிய கையிருப்புப் பணம், நகைகள், Investments ஆகியவற்றைக் குறிப்பதும் இந்த வீடுதான். ஒருவருக்குக் கல்யாணம் ஆகவில்லையா? ஏன் என்பதையும் நாம் இந்த இரண்டாம் வீட்டை வைத்துத்தான் ஆராய வேண்டும். இதைத்தவிர வேறொன்றும் கிடையாதா? உண்டு. இளைய சகோதரத்தின் மரணம், இளைய சகோதரத்தின் வீண் செலவுகள் ஆகியவற்றையும் கூறலாம். எப்படி? 3-ம் வீடு இளைய சகோதரத்தைக் குறிக்கிறது. 3-ம் வீட்டிற்குப் பன்னிரெண்டாம் வீடு 2-ம் வீடு அல்லவா? ஆக 2-ம் வீடானது இளைய சகோதரத்தின் மரணம், வீண் செலவுகள், ஆகியவற்றையும் இந்த வீடு குறிக்கிறது.

4-ம் வீடு தாயாரைக் குறிக்கிறது. 4ம் வீட்டிற்குப் 11-ம் வீடு 2-ம் வீடு அல்லவா? ஆக தாயாரின் லாபங்களையும் இது குறிக்கிற்து. ஒருவரின் 7-ம் வீடு கணவன் அல்லது மனைவியைக் குறிக்கிறது. 7-ம் வீட்டிற்கு 8-ம் வீடு 2-ம் வீடல்லவா? ஒருவருக்குக் கன்னியா லக்கினம் எனக் கொள்ளுங்கள். இவருக்கு 7-ம் வீடு மீனம். இது இவருடைய மனைவியைக் குறிக்கிறது. 7-ம் வீட்டிற்க்கு 8-ம் வீடு எது? துலாம் அல்லவா? இந்த 8-ம் வீட்டில் குரு இருக்கிறார் எனக்கொள்ளுங்கள். அதாவது ஜாதகரின் தனஸ்தானத்தில் குரு இருக்கிறார். குரு எதையும் குறைவில்லாமல் கொடுப்பவர். ஆக இவருக்குப் பணம் குறைவில்லாமல் இருக்கும் எனக் கொள்ளலாம். இவருக்குக் குழந்தை பாக்கியமும் குறைவில்லாமல் இருக்கும் எனவும் கொள்ளலாம். இவரின் மனைவிக்கு இது 8-ம் இடம் என்றும் கூறினோமல்லவா? 8-ம் இடம் என்ன? ஆயுள் ஸ்தானம். ஆக இந்த 8-ம் இடத்தில் குரு இருப்பதால் இவரின் மனைவிக்கு நீண்ட ஆயுள் இருக்குமெனக் கூறலாம். இவ்வாறாக ஒரு வீட்டை வைத்து ஜாதகர் மட்டுமில்லாது மற்றவரின் பலன்களையும் கூறமுடியும். 2-ம் வீட்டை வைத்து ஒருவரின் மூத்த சகோதரத்தின் வீடு, வாசல் ஆகியவற்றைக் கூறமுடியும். மூத்த சகோதரத்தைக் குறிப்பது 11-ம் வீடு. 11-ம் வீட்டிற்கு 4-ம் வீடு ஜாதகரின் 2-ம் வீடல்லவா? ஆக 2-ம் வீட்டை வைத்து ஜாதகரின் ஸ்திரசொத்துக்கள், கல்வி ஆகையவற்றயும் கூறமுடியும்.

இந்த 2-ம் வீட்டை வரும் பாடங்களில் விரிவாகப் பார்ப்போம்.

சென்ற பாடத்தில் 2-ம் வீட்டை வைத்து என்னென்ன பலன் சொல்லலாம் என்பதைப் பார்த்தோம். இப்போது எப்படிப் பலன் சொல்வது என்று பார்ப்போம். ஒருவரின் பொருளாதாரம் எப்படி இருக்கும் என்று தெரிந்து கொள்ள 2-ம் வீடு, 6-ம் வீடு, 10ம் வீடு 11-ம் வீடு ஆகியவற்றை கவனமாகப் பார்க்க வேண்டும். 2-ம் வீடு ஒருவரின் தனஸ்தானம் என்று ஏற்கனவே கூறியிருக்கிறோம். 6-ம் வீட்டை ஏன் பார்க்க வேண்டும்? 6-ம் வீடு என்பது நாம் ஒருவரின் கீழ் வேலை செய்யும் அடிமைத் தொழிலைக் குறிக்கிறது. சிலர் 6-ம் வீடு என்பது ரோகம், ரணம், கடன் என்று மட்டும் நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அது தவறு. 6-ம் வீடு நாம் செய்யும் அடிமைத் தொழிலையும் குறிக்கிறது. நாம் செய்யும் வேலையின் மூலம் வருவதுதானே நமது வருமானம். ஆக 6-ம் வீட்டையும் பார்த்தால்தானே நம் வருமானம் தெரியும். ஆக 6-ம் வீட்டையும் சேர்த்துக் கொள்ளுங்கள். 10-ம் வீடு என்பது ஜீவன ஸ்தானம் ஆகும். ஜீவனம் என்பது ஒருவருக்கு வியாபாரமாக இருக்கலாம். மற்றொருவருக்கு உத்தியோகமாக இருக்கலாம். ஆக ஜீவனம் என்பது உத்தியோகத்தையோ அல்லது வியாபாரத்தையோ குறிக்கும் பொதுப்படையானவார்த்தை யாகும். ஆக ஒருவரின் பணநிலையைத் தீர்மானம் செய்ய 10-ம் வீட்டையும் கவனத்தில் கொள்ள வேண்டும். 11-ம் வீடு என்பது லாபஸ்தானம் ஆகும். நாம் சம்பாதித்து செலவு செய்தது போக மிச்சம்தான் லாபம் என்பது. இதைக் குறிப்பதுதான் லாபஸ்தானம் ஆகும். ஆக இந்த 4-வீடுகளையும் கவனமாக ஆராய்ந்தால்தான் ஒருவரின் பணநிலையை நாம் கூறமுடியும்.

இயற்கையிலேயே சுப கிரகங்களான குரு, சுக்கிரன், புதன், வளர் பிறைச்சந்திரன் ஆகியவை 2-ம் வீட்டில் இருப்பது நல்லது. பொருளாதாரம் நன்றாக இருக்கும். பணவரவு நன்றாக இருக்கும். சனி, ராகு, கேது போன்ற பாப கிரகங்கள் இருப்பது அவ்வளவு நல்லது இல்லை. பணவசதி குறைவாக இருக்கும். 2-ம் வீட்டின் அதிபதி உச்சமாகவோ அல்லது சொந்த வீட்டிலோ இருப்பது தாராளமான பொருளாதாரத்தைக் குறிக்கும். 2-ம் வீட்டை அதன் அதிபதியோ அல்லது மேற் கூறிய சுப கிரகங்களோ பார்த்தாலும் பொருளாதாரம் நன்றாக இருக்கும். 2-ம் வீட்டில் செவ்வாயோ அல்லது கேதுவோ இருப்பவர்கள் சற்றுக் கடினமான வார்த்தைகளால் பேசுபவர்களாக இருப்பார்கள். அவர்கள் பேச்சு மற்றவர்கள் மனதைப் புண்படுத்தும். 8-ம் வீட்டின் அதிபதி தனஸ்தானமான 2-ம் வீட்டில் இருந்தால் அவர்கள் பண நிலைமை நன்றாக இருக்காது. அதே போன்று 12-ம் வீட்டின் அதிபதியும் 2-ம் வீட்டில் இருந்தால் அவர்கள் பண நிலைமையும் நன்றாக இருக்காது.

இரண்டாம் வீட்டின் அதிபதி எந்தெந்த வீட்டில் இருந்தால் என்னென்ன பலன்கள் என்று பார்ப்போம். லக்கினத்தில் இருந்தால் அவர் சொந்த முயற்சியில் பணம் சம்பாதிப்பார். அவருடன் 9-ம் வீட்டதிபதியோ அல்லது சூரியனோ இருப்பாரேயாகில் அவருக்குப் பிதுராஜித சொத்துக்கள் கிடைக்கும். 2-ம் வீட்டதிபதி சொந்த வீட்டிலேயே இருப்பாரேயாகில் பண நிலை சரளமாக இருக்கும். 3-ம் வீட்டிலிருந்தால் இளைய சகோதரத்திட மிருந்து பண உதவி கிட்டும். 3-ம் இடம் இளைய சகோதரத்தைக் குறிப்பது அல்லவா? 4-ம் இடத்திலிருந்தால் என்ன பலன்? 4-ம் வீடு வாகனங்களைக் குறிக்கிறது அல்லவா? வீடு, வாசல், தாய் வழி சொந்தங்கள் ஆகியவற்றையும் குறிக்கிறது அல்லவா? ஆகவே வாகனங்கள் மூலமாகவும், வீடு, வாசல் வாங்கி, விற்றுத் தொழில் செய்தும்

RangaRakes tamilnavarasam.com

பணம் சம்பாதிப்பர். 5-ம் வீடு என்பது கலைகள், Speculation துறைகள் ஆகியவற்றைக் குறிப்பது ஆகும். இதில் 2-ம் வீட்டிற்குடையவர் இருந்தால் கலைகள் மூலமாகப் பணம் சம்பாதிக்க முடியும். லாட்டரி, ரேஸ், போன்றவற்றிலிருந்தும் பணம் இயலும். அதாவது சிரமமின்றி பணம் சம்பாதிக்க இயலும். 6-ம் இடம் என்பது உத்தியோகத்தைக் குறிக்கிறது. அதில் 2-ம் வீட்டதிபர் இருந்தால் அவர் உத்தியோகம் செய்து பணம் சம்பாதிக்க முடியம் என்று கூறலாம். என்ன! எல்லோருமே உத்தியோகம் செய்துதானே பணம் சம்பாதிக்கிறார்கள் என்று நீங்கள் கூறலாம். ஒருவர் உங்களிடம் ஒருஜாதகத்தைக் காட்டி நான் வியாபாரம் செய்வேனா அல்லது வேலைக்குப் போவேனா? என்று கேட்க்கிறார் எனக் கொள்வோம். 10-ம் இடம் ஜீவன ஸ்தானம் அல்லவா? 10-ம் அதிபதி 6-ம் வீட்டிலோ அல்லது 6-ம் வீட்டின் அதிபதியுடனோ சேர்ந்து இருக்கிறார் எனக் கொள்வோம். நீங்கள் தைரியமாக அவர் வேலைக்குப் போவார் எனச் சொல்லலாம். அதேபோன்று 2-ம் வீட்டு அதிபர் 6-ம் வீட்டில் இருந்தாலும் உங்களுக்கு உத்தியோகத்தின் மூலமாகப் பணவரவு கிடைக்கும் என்றும் கூறலாம். 2-ம் வீட்டு அதிபர் 7-ம் வீட்டில் இருந்தால் அன்னிய நாட்டின் மூலமாகப் பணம் வரும் எனக்கொள்ளலாம்.8-ம் வீட்டில் 2-ம் வீட்டு அதிபர் இருப்பது அவ்வளவு நல்லது அல்ல. பணவிரயம் ஆகும் எனக் கொள்ளலாம். 9-ம் வீடு வெளிநாட்டுப் பயணத்தைக் குறிக்கிறது அல்லவா? அந்நியத் தொடர்புமூலமாப் பணம் கிடைக்கும் எனக் கொள்ளலாம். 11-வது லாபஸ்தானம் அல்லவா? அங்கு 2-ம் வீட்டு அதிபர் இருப்பது மிகவும் நல்ல பலனைக் கொடுக்கும். பணப் பெருக்கு இருக்கும். 12-ம் வீடு விரையஸ்தானம் என்று சொல்லுவார்கள். அந்த வீட்டை முதலீடு செய்யும் வீடு எனவும் கூறலாம். அதாவது ஒருவர் வீடு வாங்குகிறார் எனக் கொள்வோம். அது ஒரு முதலீடுதானே. 12-ம் வீட்டிலுள்ள கிரகத்தின் தசாபுக்திகளிலோ அல்லது 12-ம் வீட்டு அதிபரின் தசா, புக்தி களிலோ ஒருவர் வீடு வாங்க முடியும். ஏனெனில் 12-ம் வீடு முதலீட்டையும் குறிக்கும். 2-ம் அதிபர் 12-ல் இருந்தால் சிலசமயம் பணவிரயமோ அல்லது முதலீடு செய்யும் செலவோ இருக்கக் கூடும்.

2-ம்வீட்டில் சூரியனும், சந்திரனும் சேர்நது இருந்தால் கண் பார்வையில் குறை இருக்கும். 2-ம் வீட்டு அதிபர் 6 அல்லது 8 அல்லது 12-ம் வீட்டில் இருந்தாலும் கண்பார்வையில் தொந்தரவு இருக்கும். 2-ம் அதிபதி 8-ல் இருந்து அங்கு சூரியனும் இருந்தால் அரசாங்கத்தின் மூலமாகப் பண விரயம் இருக்கும். கிரகங்கள் 2-ம் வீட்டில் இருந்தால் என்ன பலன் என்பதைப் பார்ப்போம்.

<u>சூரியன்</u> : 2-ம் வீட்டில் சூரியன் இருப்பது அவ்வளவு நல்லது அல்ல: கஷ்டத்தின்பேரில்தான் பணம் சம்பாதிக்க முடியும். நல்ல கிரகங்கள் பார்வை இருந்தால்தான் பண வரவு சரளமாக இருக்கும்.

<u>சந்திரன்</u> : பெண்கள் மூலமாகப் பணவரவு இருக்கும். சந்திரன் பெண்கிரகம் அல்லவா? பணவரவு ஒரே மாதிரியாக இருக்காது. உயர்வும், தாழ்வும் இருந்து வரும்.

<u>செவ்வாய்</u> : இவர்கள் சண்டைக்காரர்களாக இருப்பார்கள். ஆனால் பேச்சுத் திறமை இருக்கும்.

<u>புதன்</u> : ஏஜென்சி தொழில் மூலமாகவோ, வியாபாரம் மூலமாகவோ பணம் சம்பாதிப்பர். சிலர் தான் கற்ற கல்வியைக் கொண்டு பணம் சம்பாதிப்பர். சிலருக்கு இரட்டை வருமானம் உண்டு; ஏனெனில் புத ஒரு இரட்டைக் கிரகம்.

<u>குரு</u> : பணப் புழக்கம் நன்றாக இருக்கும். குடும்பம் விருத்தியாகும். பொதுவாக 2-ம் வீட்டில் குரு நன்மையையே செய்யும்.

<u>சுக்கிரன்</u> : பணப் புழக்கம் நன்றாக இருக்கும். மிக இனிமையாகப் பேசுவார். சிலருக்குப் பெண்களாலும், வாகனங்களாலும் வருமானம் உண்டு.

<u>சனி</u> : பணப்புழக்கம் மிகக் குறைவாக இருக்கும்.வேலைக்கேற்ற ஊதியம் கிட்டாது. குடும்ப வாழ்க்கை சுகமாக இருக்காது. பலருடன் கலந்து பழகத்தெரியாதவர்.

<u>ராகு</u> : குடும்பத்தில் குழப்பம் இருக்கும். கண்பார்வையில் கோளாறு ஏற்படும். ராகுவுடன் நல்ல கிரகங்கள் சேர்ந்தாலோ அல்லது பார்த்தாலோதான் நன்மை ஏற்படும்.

<u>கேது</u> : கடுமையகப் பேசக் கூடியவர். பண நஷ்டம் ஏற்படக் கூடும்.

2-ம் வீட்டைப் பற்றி " ஜாதகதத்துவத்தில்" என்ன சொல்லி இருக்கிறது எனப் பார்ப்போம். பணக்காரன் ஆகும் யோகம்:-

1. லக்கினாதிபதியும் லாபாதிபதியும் சேர்ந்து தனஸ்தானத்தில் இருத்தல்.

2. 2-ம் வீட்டு அதிபரும், 10-ம் வீட்டு அதிபரும் சேர்ந்து கேந்திரஸ்தானத்தில் இருத்தல்.

3. 10-ம் வீட்டு அதிபரும், 11-ம் வீட்டு அதிபரும் சேர்ந்து இருத்தல்.

4. ஒரு ஜாதகத்தில் 4-கிரகங்கள் சொந்த வீட்டில் இருத்தல்.

5. 2-ம் வீட்டிற்குடையவன் 9, 10, 11- வது வீட்டில் இருத்தல்.

6. சந்திரனும், செவ்வாயும் சேர்ந்து ஒரே வீட்டில் இருத்தல். இதைச் சந்திரமங்கள யோகம் என்பார்கள்.

7. கேந்திரஸ்தானம் என்று சொல்லுகின்ற 1,4,7,10-ம் வீடுகளில் சுபகிரகங்கள் இருத்தல்.

8. குரு தன் சொந்த வீட்டிலும், 5-ம் வீட்டில் சந்திரனும் இருத்தல்.

9. சூரியன் சிம்மத்திலும், குருவும், செவ்வாயும் 1-ம் வீட்டிலும் இருத்தல்.

10. கீழே புதையல் கிடைப்பதற்கான யோகத்தைக் கீழே கூறி இருக்கிறார்.

11-ம் வீட்டு அதிபதி லக்கினத்திலும், லக்கினாதிபதி 2-ம் வீட்டிலும், 2-ம் வீட்டு அதிபதி 11-ம் வீட்டிலும் இருந்தால் புதையல் கிடைக்கும். (இந்தக் காலத்தில் புதையல் கிடைப்பது என்பது அரிது. லாட்டரி, ரேஸ் போன்ற வற்றிலிருந்து பணவரவு இருக்குமெனக் கொள்ளலாம்)
இவ்வாறாக ஜாதக தத்துவம் பல்வேறு கிரக நிலைகளைக் கூறி இருக்கிறது.

இரண்டாம் இடத்தை வாக்குஸ்தானம் என்று கூறி இருக்கிறோம் அல்லவா? 2-ம் வீடு ஊமை ராசிகளாகி (கடகம், விருச்சிகம், மீனம் ஆகியவை ஊமை ராசிகளாகும்) அதில் கேது இருப்பாரேயாகில் அந்த ஜாதகர் ஊமையாகப் போகக் கூடிய வாய்ப்பு உண்டு. 2-ம் வீட்டில் சந்திரன் இருந்து புதன் பார்ப்பாரேயாகில் அந்த ஜாதகர் மிகவும் தெளிவாகப் பேசுவார். சுக்கிரன் பார்ப்பாரேயாகில் சினிமா,டிராமா போன்ற [illegible]போக்கு அம்சங்களையும், மற்றும் பால் உறவினைப்பற்றியும்

RangaRakes tamilnavarasam.com

போன்ற பொழுதுபோக்கு அம்சங்களையும், மற்றும் பால் உறவினைப்பற்றியும் அதிகமாகப் பேசுவர். சனி பார்த்தாரேயாகில் சொற்பமாகப் பேசுவார். சூரியன் பார்த்தால் மிகவும் கண்ணியமாகப் பேசுவார்.

2-ம் இடத்தைவைத்து ஒருவரின் 2-ம் கல்யாணத்தைப் பற்றிக் கூறவேண்டும். திருமணத்தைப் பற்றி எழுதும்போது நாம் 2-ம் கல்யாணத்தைப் பற்றி எழுதுவோம். மற்றவைகளை அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

இதுவரையில் 2-ம் வீட்டைப் பற்றிப் பார்த்தோம். இந்தப் பாடத்தில் 3-ம் வீட்டைப் பற்றிப் பார்ப்போம். 3-ம் வீட்டை வைத்து என்னவெல்லாம் கூறலாம்?

மூன்றாம் வீட்டை வைத்து ஒருவர் தைரியமானவரா, இல்லையா என்றும் கூறலாம். ஆகவே இந்த வீட்டை தைரிய ஸ்தானம் என்று கூறுவர். ஒருவரின் வலது காதையும் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். காது கேட்குமா அல்லது காதில் ஏதாவது தொந்தரவு இருக்குமா என்றும் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். ஒருவரின் இளைய சகோதரத்தையும் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். ஒருவருக்குப் படிப்பதற்கு ஆசை இருக்கிறதா அல்லது இல்லையா என்பதையும் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். ஒருவருக்குப் 10-ம் வீட்டதிபர் 3-ம் வீட்டிலோ அல்லது 3-ம் வீட்டதிபர் 10-ம் வீட்டிலோ அல்லது 3-ம் வீட்டதிபரும், 10-ம் வீட்டதிபரும் சேர்ந்திருந்தாலும் ஒருவர் போலீஸ் வேலைக்கோ அல்லது ராணுவத்திலோ வேலை செய்வார் என்று கூறலாம். ஏன்? 3-ம் வீடு தைரியத்தைக் குறிக்கிறது. 10-ம் வீடு ஜீவன ஸ்தானம் அல்லவா? போலீஸ், ராணுவம் இவற்றிற்கு மிக முக்கியமானது தைரியம் அல்லவா? ஆக இந்த சேர்க்கை இத்தகைய வேலையைக் குறிக்கிறது. செவ்வாய் கிரகம் தைரியத்திற்குக் காரகம் வகிப்பவர். அவரும் 10ம் வீட்டிலோ அல்லது 10-ம் வீட்டதிபருடன் சேர்ந்தோ அல்லது இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டாலோ போலீஸ் அல்லது ராணுவ வேலைக்குப் போவார் என்று கூறலாம். 3-ம் வீடு குறுகிய பிரயாணத்தைக் குறிக்கிறது. ஒருவர் சென்னையிலிருந்து திருச்சிக்குப் போகிறார் எனக் கொள்ளுங்கள். இது ஒரு குறுகிய பயணம். இந்தப் பயணத்தைக் குறிப்பது 3-ம் வீடு. ஒருவர் சென்னையிலிருந்து சிங்கப்பூர் செல்கிறார் எனக்கொள்ளுங்கள். இது நீண்ட பயணம் அல்லவா? இந்த நீண்ட பயணத்தைக் குறிப்பது 9-ம் வீடு. ஆக 3-ம் வீடு Short Journeys என்று கூறப்படுகிற குறுகிய பயணத்தையும், 9-ம் வீடு Long journey என்று கூறப் படுகிற நீண்ட பயணத்தையும் குறிக்கும்.

என் நண்பர் ஒருவர் இருந்தார். அவர் ஒரு வங்கியில் வேலை செய்து கொண்டிருந்தார். அவருக்கு வங்கியில் Inspection செய்யக் கூடிய வேலை. அது சம்மந்தமாக அவர் அடிக்கடி வெளியூர் செல்ல வேண்டியது இருக்கும். அவர் என்னிடம் "நான் எப்போது உள்ளூரிலேயே இருப்பேன்? அடிக்கடி வெளியூர் செல்ல முடியவில்லை" என்று கேட்டார். அவர் ஜாதகத்தைப் பார்த்த போது அப்போது நடக்கும் தசா, புக்திகள் 3-ம் வீட்டைக் குறிப்பனவாக இருந்தது. அதாவது அவர் மிதுன லக்கினம். 3-க்குடைய சூரியனின் புக்தி நடந்து கொண்டிருந்தது. அடுத்த புக்தியின் அதிபதியான சந்திரன் 9-ம் வீட்டில் இருந்தார். அதற்கும் அடுத்த செவ்வாயானவர் 4-ம் வீட்டில் இருந்தார். நாம் "தற்போது சூரியனின் புக்தி நடந்து கொண்டிருக் கிறது. சூரியன் 3-ம் வீட்டிற்கதிபதி. ஆகவே வெளியூர்ப் பயணத்தைத் தவிர்க்க முடியாது. தற்போது பக்கத்திலுள்ள ஊர்களுக்குச் சென்று கொண்டு இருக்கிறீர்கள். இந்த சூரியன் புக்தி முடிந்து சந்திர புக்தியின்போது இன்னும் தூரத்திலுள்ள ஊர்களுக்குச் சென்றுவருவீகள். அடுத்தபுக்தியான செவ்வாய் 4-ம் வீட்டில் இருக்கிறார். அப்போதுதான் நீங்கள் உள்ளூரிலேயே தங்கி இருக்க முடியும்" என்று கூறினோம். அதன்படியே சூரியபுக்தியின் போது தமிழ் நாட்டிற்குள் பயணம் செய்து கொண்டிருந்த அவர் சந்திர புக்தியின்போது பக்கத்திலுள்ள அண்டை மாநிலங்களுக்கெல்லாம் பயணம் செய்ய ஆரம்பித்தார். சந்திரன் 9-ம் வீட்டில் இருப்பதால் நீண்ட பயணம் மேற்கொள்ள வேண்டியது இருந்தது.

RangaRakes tamilnavarasam.com

4-ம் வீடு என்பது தற்போது குடியிருக்கும் ஊரைக் குறிக்கும். ஆகவே செவ்வாய் புக்தியில் பழையபடி சொந்த ஊரிலேயே வேலைசெய்யும்படியாக மாற்றல் ஆகிவிட்டது. ஆக இப்போது 3-ம் வீடு எப்படி பயணத்தைக் கொடுக்கிறது என்பது விளங்கி இருக்கும். 3-ம் இடம் என்பது தைரியஸ்தானம் அல்லவா? 3-ல் சனி இருந்தால் அவர் மிக நிதானமாகச் செயல்படுவார். அதே இடத்தில் செவ்வாய் இருந்தால் மிக துணிச்சலாக நிதானமிழந்து அவசரப்பட்டு செயல் படுவார்.

இளைய சகோதரம், பக்கத்து வீட்டுக்காரர்கள், ஆகியவற்றைக் குறிப்பதும் இந்த 3-ம் வீடுதான். கடிதப் போக்குவரத்து, எல்லாவிதமான செய்திகள், ஆகியவற்றைக் குறிப்பதும் இந்த 3-ம் வீடுதான். உங்களுக்கும் இளைய சகோதரத்திற்கும் நல்லுரவு இருக்குமா அல்லது இருக்காதா என்பதையும் 3-ம் வீட்டை வைத்துச் சொல்லலாம். 3-ம் வீட்டில் சனி இருப்பாரேயாகில் உங்களுக்கும் உங்கள் சகோதரத்திற்கும் திருப்தியான உறவு இருக்காது; குரு இருந்தால் நல்லுறவு; செவ்வாய் இருந்தால் சண்டை; இவ்வாறாகப் பலன் கூறலாம். 3-ம் வீடு ஏஜென்சித் தொழிலையும் குறிக்கும். 3-ம்வீடும் 2-ம்வீடான தனஸ்தானத்துடனோ, அல்லது 6-ம் வீடான தொழில் ஸ்தானத்துடனோ, அல்லது 10ம் வீடான ஜீவனஸ்தானத்துடனோ சம்மநதப்பட்டு இருந்தால் ஒருவர் Agency தொழில், Broker ஆகிய தொழில் செய்வர். 3-ம் வீட்டில் ஒருவருக்கு கேது இருப்பாரேயாகில் அவரை நாரதர் என்று கூறலாம். ஏனெனில் அவரால் அவர் உண்டு அவர் வேலையுண்டு என்று இருக்க முடியாது.

நீங்கள் ஒரு வீட்டில் இருக்கிறீர்கள். அந்த வீட்டைக் காலி செய்ய வேண்டுமென்றால் 3-ம் வீட்டின் தசை, அல்லது புக்தி காலங்களில்தான் செய்ய முடியும். 4-ம் வீடு என்பது தற்போது குடிருக்கும் வீட்டைக் குறிக்கிறது. 4-ம் வீட்டிற்குப் 12-ம் வீடு 3-ம் வீடல்லவா? ஆக 3ம் வீட்டக் குறிக்கும் தசை அல்லது புக்தியின் போதுதான் நாம் வேறு வீடு குடி செல்ல முடியும்.

உடல் உறுப்புக்களில் காது, கை, தொண்டை,தோள்பட்டை ஆகியவற்றைக் குறிப்பதும் இந்த 3-ம் வீடுதான். 3-ம் வீட்டில் பாப கிரகங்கள் இருந்தால் மேற்கண்ட உறுப்புக்களில் ஏதாவது தொந்தரவு இருக்கும்.ஒருவர் மருத்துவராக இருக்கிறார் எனக்கொள்ளுங்கள். மருத்துவத்திற்குக் காரகம் வகிப்பவர் சூரியன். அதனால்தான் அவர் தன்வந்திரி என்று அழைக்கப் படுகிறார். அவர் 10-ம் வீட்டுடன் சம்மந்தப் பட வேண்டும். அப்போதுதான் ஒருவர் மருத்துவராக முடியம். சரி! ஒருவர் மருத்துவராகிவிட்டார். 10-ம் வீட்டதிபதி 3-ம் வீட்டுடன் சம்மந்தப்பட்டால் அவர் எந்தத் துறையில் மருத்துவராக முடியும். சொல்லுங்கள் பார்ப்போம்? 3-ம் வீடு காதைக் குறிக்கிறது அல்லவா? அவர் E.N.T டாக்டராக இருப்பார். நாம் சொல்லும் விளக்கம் உங்களுக்கு இப்போது புரிந்து இருக்குமென நினைக்கிறோம். ஜீவன, மற்றும் தொழில் ஸ்தானத்தைப் பற்றிப் பார்க்கும்போது இன்னும் விளக்கமாகப் பார்ப்போம்.

ராசிகளில் ஆண்ராசி, பெண்ராசி என்று உண்டென்பது உங்களுக்குத் தெரியும். அதேபோல் கிரகங்களிலும் ஆண் கிரகங்கள், பெண் கிரகங்கள், அலி கிரகங்கள் என்று உண்டு. அவையாவன...

<u>ஆண்கிரகங்கள்</u> : சூரியன், செவ்வாய், குரு ஆகிய மூன்றும் ஆண் கிரகங்கள் எனப்படும்.

<u>பெண் கிரகங்கள்</u> : சந்திரன், சுக்கிரன், ராகு ஆகிய மூன்றும் பெண் கிரகங்கள் எனப்படும்.

அலி கிரகங்கள் : புதன், சனி, கேது ஆகிய மூன்றும் அலிக்கிரகங்கள் எனப்படும்.

3-ம் வீட்டதிபர் ஆண் ராசியில் இருப்பாரேயாகில் அவருக்கு ஆண் சகோதரர்கள் அதிகமிருப்பர் எனக்கொள்ளலாம். அதேபோன்று 3-ம் வீட்டுக்காரர் பெண் ராசியில் இருப்பாரேயாகில் சகோதரிகள் அதிகம் இருப்பார்கள் எனக் கொள்ளலாம். ஒருவருக்கு எவ்வளவு சகோதர, சகோதரிகள் இருப்பார்கள் என்று எப்படிக் கூறுவது? இதற்கு ஒருவழி இருக்கிறது. அது எப்படி எனப் பாருங்கள்.

ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்.

ராசி : கன்னியில் லக்கினம். தனுசில் சுக்கிரன், புதன், சந்திரன், மகரத்தில் கேது, சூரியன்; ரிஷபத்தில் சனி, செவ்வாய்; கடகத்தில் ராகு; சிம்மத்தில் கேது.

நவாம்சம் : மீனத்தில் லக்கினம், சூரியன்; மேஷத்தில் சுக்கிரன்,செவ்வாய், குரு ரிஷபத்தில் கேது, கடகத்தில் சந்திரன், சிம்மத்தில் புதன், கன்னியில் சனி; விருச்சிகத்தில் ராகு.

இதுதான் ஜாதகம்; இவர் லக்கினம் கன்னி. சகோதரனுக்குக் காரகம் வகிப்பவர் செவ்வாய்; அவரே 3-ம் வீட்டிற்கும் உடையவர் ஆகிறார். 3-ம் வீட்டதிபர் நவாம்சத்தில் எவ்வளவு நவாம்சம் சென்றிருக்கிறார் எனப்பாருங்கள். அதை எப்படிக் கண்டு பிடிப்பது? ராசியில் செவ்வாய் ரிஷபத்தில் இருக்கிறார். நவாம்சத்தில் மேஷத்தில் இருக்கிறார். அதாவது 4-வது நவாம்சத்தில் இருக்கிறார். ரிஷபத்தில் ஒன்பது நட்சத்திரப் பாதங்கள் அல்லவா? கார்த்திகை 2,3,4 பாதங்கள்; ரோகிணி 1,2,3,4 பாதங்கள்; மிருகசீரிஷம் 1,2, பாதங்கள். செவ்வாய் ரோகிணி 1-ம் பாதத்தில் இருப்பதால் நவாம்சத்தில் மேஷத்தில் இருக்கிறார். அதாவது கார்த்திகை மூன்றுபாதங்கள், ரோகிணி 1-ம் பாதத்தையும் சேர்த்து மொத்தம் 4 பாதங்கள் சென்று விட்டன; அதைத்தான் நாம் 4 வது நவாம்சத்தில் இருக்கிறார் என மேலே குறிப்பிட்டுள்ளோம். 3-ம் வீட்டிற்கதிபதி 4 நவாம்சம் சென்று இருப்பதால் இவரையும் செர்த்து மொத்தம் 4 பேர்கள் இவருடன் கூடப்பிறந்தவர்கள். இது கூடப் பிறந்தவர்களைக் கண்டுபிடிப்பதற்கு ஒரு வழி. முன்பு குழந்தை பிறப்பதைக் கட்டுப் படுத்த வழி கிடையாது. இப்போதோ கட்டுப்படுத்துவதற்கு வழிகள் பிறந்து விட்டன். இப்போது ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை, அல்லது இரண்டு குழந்தைகள் என்ற அளவில் கட்டுப்பாடு வந்து விட்டது. குழந்தை பிறப்பை செயற்கை முறையில் கட்டுப் படுத்துகிறோம். ஆகவே நாம் மேற்கூறிய விதி இந்தக் காலத்துக்கு ஒத்து வராமல் போகலாம். இருப்பினும் வாசகர்கள் தெரிந்து கொள்ளட்டுமே என்ற எண்ணத்தில் எழுதலானோம்.

பொதுவாக மூன்றாம் வீட்டில் சுப கிரகங்கள் இருப்பின் அந்த பாவம் நன்றாக இருக்கும். மாறாக பாவ கிரகங்கள் இருந்தால் அந்த பாவம் பெரிதும் பாதிக்கப்படும். அதேபோல் மூன்றாம் வீட்டை சுபகிரகங்கள் பார்த்தால் அந்த வீடு பலம் பெற்று நன்றாக இருக்கும். பாவ கிரகங்கள் பார்வை இருப்பின் அந்த வீடு கெட்டு விடும். மூன்றாம் வீட்டு அதிபர் 6,8,12 வீடுகளில் இருந்தாலோ அல்லது 3-ம் வீட்டு அதிபர் பாவர்களின் சேர்க்கை பெற்று இருந்தாலோ அந்த வீடு கெட்டு விடும். இத்துடன் நாம் மூன்றாம் வீட்டைப் பற்றிக் கூறுவதை நிறுத்திக் கொள்வோம். மற்றவைகளை அடுத்தபாடத்தில் படிப்போம். நாம் ஏற்கனவே கூறி இருக்கிறோம், நீங்கள் இன்னும் பல ஜோதிடப் புத்தகங்கள் படிக்க வேண்டுமென்று. படித்தால்தான் மேலும்பல விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடியும். பலாதீபிகை, ப்ருஹத் ஜாதகம், உத்திரகாலாம்ருதம் ஆகியவை மிகவும் பயனுள்ள ஜோதிட நூல்கள். இவைகள்

RangaRakes tamilnavarasam.com

உத்திரகாலாமருதம் ஆகியவை மிகவும் பயனுள்ள ஜோதிட நூலகள். இவைகள் எல்லாம் வடமொழியில் இருந்தாலும் இவைகளின் மொழிபெயர்ப்புக்கள் ஆங்கிலத்திலும், தமிழிலும் கிடைக்கின்றன. அவைகளை வாங்கிப் படியுங்கள். உங்கள் ஜோதிட அறிவு வளரும்.

சென்ற பாடம் வரையிலும் 3-வது வீடு முடியப் பலன் சொல்லத் தெரிந்து கொண்டுள்ளீர்கள். பாடங்களைத் திரும்பத்திரும்பப் படியுங்கள். உங்களுக்குப் புரியும். ஒருவர் ஜோதிடராக வேண்டுமென்றால் எத்தகைய கிரக நிலைகள் இருக்க வேண்டும். நீங்கள் மொட்டு நிலையிலுள்ள ஜோதிடர். (Budding Astrologers). அதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா? ஒருவர் மருத்துவராக வேண்டுமென்றால் சூரியன் ஜீவன ஸ்தானத்துடன் சம்மந்தம் பெற வேண்டும். ஏனெனின் சூரியன்தான் தன்வந்திரி என்றழைக்கப் படுகிறார். ராணுவம் அல்லது போலீஸ் வேலைக்குப் போக வேண்டுமென்றால் செவ்வாய் ஜீவனஸ்தானத்துடன் சம்மந்தம் பெறவேண்டும். கலைத் தொழிலில் ஒருவர் இருக்க வேண்டுமென்றால் சுக்கிரன் சம்மந்தப்பட்டு இருக்க வேண்டும். ஏனெனில் சுக்கிரன்தான் கலைக்கு அதிபதி. இவ்வாறாக ஒவ்வொரு துறைக்கும் ஒரு கிரகம் இருக்கிறது. ஜோதிடத்திற்கு எந்த கிரகம் காரகம் வகிக்கிறது? "புதன்". இவர்தான் ஜோதிடத்திற்குக் காரகம் வகிக்கிறார்.

1. ஜோதிடராக விரும்புகிறவர்கள் ஓரளவிற்குக் கணிதம் தெரிந்தவராக இருக்க வேண்டும். கணிதமென்றால் Algebra, Geometry என்றல்ல; அடிப்படைக் கணிதத்தில் தவறு செய்யாதவறாக இருக்க வேண்டும். ஏனெனில் ஜாதகம் தவறு இல்லாது கணிக்க வேண்டுமல்லவா?

2. நமது முன்னோர்கள் எழுதியுள்ள ஜோதிட நூல்களைப் படிக்க வேண்டும்.

3. அதில் கூறப்பட்டுள்ள விதிகளை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

4. ஜோதிடர்களுக்கு தெய்வபக்தி மிக அவசியம். அந்த பக்தி இருந்தால்தான் பலன்களைச் சரியாகச் சொல்லமுடியும்.

ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். எந்த ஒரு துறைக்கும் ஒரு எல்லை இருக்கிறது. அந்த எல்லை வரையிலும்தான் நாம் செல்ல முடியும். அதேபோல் ஜோதிடத்திற்கும் எல்லை உண்டு. அந்த எல்லைக்குள் இருந்து நாம் பலன் சொல்ல முடியும். புதன் ஒருவரின் ஜாதகத்தில் 1, 4, 7, 10 கேந்திர ஸ்தானங்களிலோ, அல்லது வாக்கு ஸ்தானமான 2-ம் வீட்டிலோ இருக்க வேண்டும். புதன் ஜாதகத்தில் கெட்டுப் போகாது இருக்க வேண்டும். புதனும், சந்திரனும் ஒரு ஜாதகத்தில் சேர்ந்து இருந்தாலோ, அல்லது பார்த்துக் கொண்டாலோ ஒருவர் ஜோதிடத்தில் தேர்ச்சி பெற முடியும். சந்திரன் மனதுக்குக் காரகம் வகிப்பவர் அல்லவா? புதன் ஒருவரின் அறிவுத்திறனுக்குக் காரகம் வகிப்பவர். ஆக இருவரின் சேர்க்கையும் தெளிவான சிந்தனைக்கும், அறிவு பூர்வமான சிந்தனைக்கும் வழிவகுக்கும். ஆக வலுவான புதன் தீர்க்கமாகச் சிந்தித்துப் பலன் சொல்ல உதவுவார். அந்த புதனுக்கு குருவின் பார்வையும் இருக்குமேயாகில் தெய்வ அனுகிரகம் கிட்டி பலன் சொல்ல உதவி கிடைக்கும். அதைத் தவிரவும் குருவின் பார்வை ஜோதிடத்தில் ஆழ்ந்த அறிவையும் கொடுக்கும். ஜோதிடராகும் யோகத்தைப் பற்றி ஒரு தமிழ் நூல் கீழ்க் கண்டவாறு கூறுகிறது:-

"ஆட்சி நல் உச்சத்தோடே
அருள் குரு பார்வை பெற்று
மாட்சிமை உடைய வாக்கில்
மாபுதன் நிற்பாரேயாகில்
சூட்சும புத்தியோடே
சோதிடக் கலைகள் கற்றே
பேச்சினில் ஞானம் சொட்டும்
பெரும் புகழ் சோதிடன் காண்"

அதாவது 2-ம் வீடான வாக்கு ஸ்தானத்தில் புதன் உச்சம் அல்லது ஆட்சி பெற்று இருந்து குருவின் பார்வையும் இருக்குமேயாகில் அந்த ஜாதகர் ஜோதிடக் கலையில் சிறந்து விளங்குவர். இதுதான் இந்தப் பாடலின் பொருள். ஜோதிடத்தில் தேர்ச்சி பெற என்ன கிரக அமைப்புக்கள் வேண்டும் என்பதைப் பார்த்தீர்கள்.

நாம் இப்போது மற்றொரு முக்கியமான விஷயத்தைப் பற்றி விவாதிக்கப் போகிறோம். ஒருவருக்குக் கல்யாணம் ஆகவில்லை; தாமதம் ஆகிறது எனக் கொள்ளுங்கள். உடனே அவர் எதாவது பரிகாரம் செய்யலாமா? எனக் கேள்வி கேட்ப்பார். பரிகாரம் செய்தால் அவர் திருமணம் ஆகிவிடும் என்பது அவர் எண்ணம். நாம் இப்போது இந்தப் பரிகாரத்தைப் பற்றித்தான் விவாதிக்கப் போகிறோம். பரிகாரம் என்பது எல்லாப் பிரச்சனைகளுக்கும் தீர்வு ஆகுமா? பரிகாரம் செய்தால் நாம் விருப்புவது எல்லாம் நடைபெறுமா? இதுதான் இந்தப் பாடத்தின் மிக்கியமான விவாதம் ஆகும்.

நாம் போன ஜென்மத்தில் செய்த காரியங்களின் பலனைத்தான் இப்போது இந்த ஜென்மத்தில் அனுபவித்து வருகிறோம். போன ஜென்மத்தில் நல்லவை செய்தோமேயானால் இந்த ஜென்மத்தில் நன்றாக இருப்போம். பாவங்கள் செய்தோமேயானால் அதற்கேற்ற பலனை அனுபவிப்போம். நாம் நல்லது செய்தோமா அல்லது தீயவை செய்தோமா என்பதை ஜாதகத்தைப் பார்த்தால் தெரியும். நாம் செய்யும் பாபங்கள் பலவகைப் படும்.

1. மிகக் கொடூரமான பாபங்கள் செய்தோர்; இத்தகைய பாபங்கள் செய்தோருக்கு என்ன பரிகாரம் செய்தும் பலன் இருக்காது. எவ்வளவுதான் பணம் செலவழித்துப் பரிகாரங்கள் செய்தும் பலனே இருக்காது. கொலை, கொள்ளை செய்தோர், வயதான தாய், தந்தைகளைக் கைவிட்டோர் இம்மாதிரிக் குற்றங்கள் செய்தோர்களுக்கு மன்னிப்பே கிடையாது. இவர்கள் செய்த பாபங்களுக்கு "துருத கருமம்" எனப் பெயர். போனஜென்மத்தில் செய்த பாபத்தின் பலனை இந்த ஜென்மத்தில் இவர்கள் அனுபவிக்கிறார்கள். இந்தப் பாபங்களுக்கு என்ன பரிகாரம் செய்தும் பலனே இருக்காது. ஒருவர் ஜாதகத்தில் லக்கினத்திற்கோ, அல்லது சந்திரனுக்கோ அல்லது தற்போது நடக்கும் தசா, புக்தி நாதர்களுக்கோ குருவின் பார்வையோ அல்லது 9-ம் வீட்டிற்குடையவன் பார்வையோ இருக்காது. அவர்கள் பார்த்தால்தான் செய்கின்ற பரிகாரங்களுக்குப் பலன்கள் இருக்கும். அதனால்தான் சிலர் என்ன பரிகாரம் செய்தும் பலன்கள் கிடைப்ப தில்லை.

2. சிலர் மன்னிக்கக்கூடிய சிறிய குற்றங்கள் செய்து இருப்பர். அம்மாதிரிக் குற்றங்கள் செய்திருப்போருக்கு அவர்கள் செய்யக்கூடிய பரிகாரங்களுக்குப் பலன் கிட்டும். அவர்களுக்கு லக்கினத்திற்கோ, சந்திரனுக்கோ அல்லது தசாபுக்தி நாதர்களுக்கோ குருவின் பார்வையோ அல்லது 9-ம் வீட்டுக்காரரின் பார்வையோ இருக்கும். அவ்வாறு இருப்பவர்களுக்கு அவர்கள் செய்யக் கூடிய பரிகாரங்களுக்குப் பலன் கிட்டும். இத்தகைய பாபங்களுக்கு "துருத-அத்ருத கருமம்" எனப்பெயர்.

3. சிலர் மிகச் சிறிதளவு குற்றங்கள் புரிந்திருப்பர். அச்செயல்களால் யாரும் பாதிக்கப்படாதிருந்திருப்பர். அவ்வாறு செய்த தவறுக்கு "அத்ருத கருமம்" எனப் பெயர். அவர்கள் எந்தவிதப் பரிகாரமும் செய்யாமலே அவர்களுக்கு அனுகூலமாகக் காரியங்கள் நடக்கும். அப்படிப் பட்டவர்களுக்கு லக்கினத்திலோ, அல்லது சந்திரனுடனோ குருவோ அல்லது 9-ம் வீட்டிற்காரரோ சேர்ந்திருப்பார்.

இதிலிருந்து என்ன தெரிகிறது ? ஒருவர் ஜாதகத்தில் லக்கினத்துடனோ அல்லது சந்திரா லக்கினத்துடனோ குருவோ அல்லது 9-ம் வீட்டிற்குடையவனோ சேர்ந்திருப்பது அல்லது பார்ப்பது மிக நல்லது என்று தெரிகிறது அல்லவா?

இப்போது நீங்கள் ஒருவர் ஜாதகத்தைப் பார்த்து அவர் பரிகாரம் செய்ய வேண்டுமா அல்லது வேண்டாமா என்று சொல்ல முடியும் அல்லவா? ஆகவே எல்லோருக்கும் பரிகாரங்கள் தேவையில்லை. மற்றவைகளை அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

இந்தப் பாடத்தில் நாம் 4-வது வீட்டைப் பற்றிப் பார்க்கப் போகிறோம். நாலாம் வீட்டை வைத்து என்னவெல்லாம் கூறலாம்? ஒருவர் நிரந்தரமாகக் குடியிருக்கும் வீட்டைக் குறிக்கிறது. ஒருவருக்கு சொந்த வீடு இருக்குமா? அல்லது இருக்காதா? என்பதும் இந்த வீட்டை வைத்துக் கூறிவிடலாம். வீடுமட்டுமல்ல; ஸ்திர சொத்துக்களான நில, புலன்கள் ஒருவருக்குக் கிட்டுமா? அல்லது கிட்டாதா? என்பதையும் இந்த வீட்டை வைத்துக் கூறி விடலாம். சரி! எப்படி கூறுவது? செவ்வாயானவர் ஸ்த்ர சொத்துக்களுக்கு அதிபதி அல்லவா? அவர் 4-ம் வீட்டில் இருந் தாலோ அல்லது 4-ம் வீட்டைப் பார்த்தாலோ அல்லது 4-ம் வீட்டின் அதிபதியுடன் சேர்ந்து இருந்தாலோ அல்லது பார்த்தாலோ ஒருவருக்கு ஸ்திர சொத்துக்கள் வாங்கயோகம் உண்டு என்று கூறலாம்.

4-ம் வீட்டுடன் சுக்கிரன் சம்மந்தப் பட்டால் என்ன கிடைக்கும்? சுக்கிரன் வாகனகாரகன் அல்லவா? அவர்களுக்கு வாகனம் கிட்டும். வாகனம் என்றால் அது நான்கு சக்கரங்களுள்ளகாராக இருக்கலாம்; அல்லது மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் போன்ற இரண்டு சக்கர வாகனங்களாகவும் இருக்கலாம்; எப்படி இருப்பினும் அவர்களுக்கு வாகன யோகம் உண்டு. படிப்பை பற்றிக் கூற வேண்டுமானால் 4-ம் வீட்டுடன் புதன் சம்மந்தப்பட்டுள்ளாரா? எனப்பார்ப்பது அவசியம். புதன் சம்மந்தப்பட்டு இருப்பாரேயாகில் அவர் ஒரு பட்டப்படிப்பு முடியப் படிப்பார் எனக் கொள்ளலாம். 4-ம் வீடென்பது பட்டப் படிப்பு வரையிலான படிப்பைக் குறிக்கிறது. அதற்கு மேலுள்ள படிப்பை 9-ம் வீடு குறிக்கிறது. சூரியனும், புதனும் ஒரு வீட்டில் சேர்ந்து இருப்பார்களேயாகில் அவர் படிப்பில் கெட்டிக்காரராக இருப்பார் எனக்கொள்ளலாம்.

சூரியனுடன் எந்த கிரகம் சேர்ந்து இருந்தாலும் அந்த கிரகத்தின் காரகத்துவம் மிகச்சிறந்து விளங்கும். உதாரணமாக புதன் கல்விக்குக் காரகம் வகிப்பவர். அவர் சூரியனுடன் சேர்ந்து இருந்தால் அவர் கல்வியில் சிறந்து விளங்குவார். சுக்கிரன் கலைகளுக்குக் காரகம் வகிப்பவர் அல்லவா? சுக்கிரனும், சூரியனும் சேர்ந்து இருந்தால் அவர் கலைகளில் திறமை உள்ளவராக இருப்பார். சிலர் சூரியனுடன் ஏதாவது கிரகம் சேர்ந்து இருந்தால் அந்த கிரகம் சூரியனால் எறிக்கப் பட்டுவிடும் எனக் கூறுவர். அது தவறான கருத்து. அந்தக் கிரகத்தின் காரகத்துவம் சூரியனால் அதிகரிக்கப்படும் என்பதுதான் உண்மை. 4-ம் வீடு மறைத்து வைக்கப் பட்டு இருக்கும் சொத்துக்களைக் குறிக்கிறது. ஒருவருக்குப் புதையல் கிடக்குமா? அல்லது கிடைக்காதா? என்பதை இந்த வீட்டை வைத்துக் கூறலாம்.

சனியானவர் எதையும் ஒளித்து வைக்கும், மறைத்து வைக்கும் குணம் கொண்டவர். அவர் தனஸ்தானத்தையோ அல்லது ஜீவனஸ்தானத்தையோ குறிப்பவராகி 4-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் அந்த ஜாதகர் கறுப்புப் பணம் வைத்து இருப்பர் எனக் கொள்ளலாம். உதாரணமாக மேஷ லக்கினக் காரரான ஒருவருக்கு சனியானவர் 10-ம் வீட்டிற்கும், 11-ம் வீட்டிற்கும் அதிபதி. அவர் கடகத்தில் இருப்பாரேயாகில் அந்த ஜாதகர் கறுப்புப் பணம் வைத்திருக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம். 4-ம் வீட்டில் இல்லாமல் பார்த்தாலும் அதே பலன்தான். காளிதாசன் "உத்திர காலாம்ருதத்தில்" கால்நடை கல், நிலங்களிலிருந்து கிடைக்கும் அரிசி, கோதுமை போன்ற தானியங்கள், எண்ணை வித்துக்கள் ஆகியவற்றையும் 4-ம் வீட்டை வைத்துத்தான் கூறவேண்டுமெனக் கூறுகிறார். 4-ம் வீடு தாயாரையும் குறிக்கிறது. சந்திரனும் தாயருக்குக் காரகம் வகிப்பவர்தான். 4-ம்

RangaRakes tamilnavarasam.com

4-ம் வீடு தாயாரையும் குறிக்கிறது. சந்திரனும் தாயருக்குக் காரகம் வகிப்பவர்தான். 4-ம் வீட்டில் சுபக்கிரகங்கள் இருந்து, சந்திரனும் சுபர்களின் சம்மந்தம் பெற்றால் அந்த ஜாதகருக்கு நீண்ட ஆயுளுடன் கூடிய தாயார் அமைவார் எனக் கூறலாம்.

நான்காம் வீட்டு அதிபதி ஒவ்வொரு வீட்டிலும் இருந்தால் என்ன பலன் என்பதைப் பார்ப்போம்.

முதல் வீட்டில் : மிகுந்த படித்தவராக இருப்பர்.

இரண்டாம் வீட்டில் : தாய் வழிச்சொத்து இவருக்குக் கிடைக்கும். கிண்டலாகப் பேசும் சுபாவம் கொண்டவராக இருப்பார்.

மூன்றாம் வீட்டில் : நான்காம் வீட்டு அதிபதி 3-ம் வீட்டில் இருப்பது அவ்வளவு நல்லது அல்ல; நான்காம் வீடு குறிக்கின்ற காரகத்துவங்களெல்லாம் சரியாக இருக்காது.

நான்காம் வீட்டில் : தன் சொந்த மதத்தின்மேல் நம்பிக்கை உள்ளவராக இருப்பார். குடும்பத்தில் மிக்க அக்கரை உள்ளவராக இருப்பார்.

5-ம் வீட்டில் : இவருடைய தாயார் வசதி உள்ள வீட்டிலிருந்து வந்தவராக இருப்பார். மற்றவர்களால் மதிக்கப் படுவராக இருப்பார்.

6-ம் வீட்டில் : முன்கோபியானவர். நல்ல எண்ணங்கள் இல்லாதவர்.

7-ம் வீட்டில் : வீடு, வாசலுடன் இருப்பவர். 7-ம் வீடு சராசியாக இருந்தால் வெளியூரிலும், ஸ்திர ராசியாக இருந்தால் உள்ளூரிலும் சம்பாத்தியம் செய்வர்.

8-ம் வீட்டில் : இது துஸ்தானம் அல்லவா? மறைவிடமும் ஆகும். செவ்வாயும் கெட்டிருந்தால் ஸ்திர சொத்துக்களுக்குப் பங்கம்.

9-ம் வீட்டில் : ஸ்திர சொத்துக்களால் மன நிறைவு உண்டாகும். தகப்பனாராலும் அனுகூலம்.

10-ம் வீட்டில் : அரசியலில் புகழ் பெறுவர். பலர் மதிக்கும் வண்ணம் வாழ்வர்.

11-ம் வீட்டில் : ஸ்திர சொத்துக்கள் மற்றும் கால் நடைகள் விற்பனையில் முன்னேற்றம். தாயாரால் அனுகூலம்.

12-ம் வீட்டில் : ஸ்திர சொத்துக்களால் துன்பம். இளம் வயதிலேயே தாயார் மரணம்.

இப்போது 4-ம் வீட்டில் இருக்கும் கிரகங்களுக்கு என்ன பலன் என்று பார்ப்போம்.

சூரியன் : பிதுராஜித சொத்துக்கள் கிடைக்க வழியுண்டு. வேதாந்தத்திலும், மற்றும் புதிய விஷயங்களிலும் ஆர்வம் உண்டு.

சந்திரன் : சுற்றத்தாரால் மகிழ்ச்சியுண்டு. சிற்றின்பங்களில் பிரியம் அதிகம். சந்திரன் ஓர் நீர்க் கிரகமாதலால் வீட்டிலே நீர் வசதியுண்டு.

செவ்வாய் : வீடு கட்டும் யோகமுண்டு. தாயார் மூலமாக அனுகூலமில்லை. அரசியலில் முன்னேற்றமுண்டு. தாயாருடன் சண்டை போடக் கூடிய நிலை இருக்கும். ராகுவோ அல்லது கேதுவோ கூட இருக்குமேயாகில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் இருக்கும்.

RangaRakes tamilnavarasam.com

புதன் : படிப்பில் தேர்ச்சி இருக்கும். பாட்டு மற்றும் கலைகளில் ஆர்வம் இருக்கும்.

குரு : படிப்பில் தேர்ச்சி, வேதாந்தத்தில் ஆர்வம், அரசாங்கத்தின் உதவி, நல்ல சுமுகமான குடும்பச் சூழ்நிலை, தன் சொந்த மதத்தில் தீவீர நம்பிக்கை.

சுக்கிரன் : வாகன யோகம், தாயின் மீது தீவீரபக்தி, அமைதியானகுடும்ப வாழ்க்கை, நினைத்த காரியம், ஆசைகள் நிறைவேறுதல்

சனி : சிறிய வயதில் தாயாரிடமிருந்து பிரிவு, வாயு உபத்திரவம், வீட்டாலும் வாகனத்தாலும் தொந்தரவு, சோம்பேரித்தனமான குணம், சொந்தக் காரர்கள் நடுவில் மரியாதை குறைவு, தனிமையை விரும்பும் குணம், பிதுரார்ஜித சொத்துக்கள் கிடைக்காமை ஆகியவை.

ராகு : முட்டாள்தனமான காரியங்கள் செய்வர், நம்பகத்தன்மை இல்லாது நடந்து கொள்வர்.

கேது: தாயாரால் அனுகூலமில்லை; வெளி நாட்டில் வாழக் கூடிய சூழ்நிலை; வழ்க்கையில் பலதரப் பட்ட அனுபவங்கள்;

4-ம் வீட்டின் மற்ற பலன்களை அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

ராசிகளில் சர ராசி; ஸ்திர ராசி; உபய ராசி என்று இருக்கிறது என நாம் எழுதி இருந்தோம். மேஷம், கடகம், துலாம்,மகரம் ஆகியவை சர ராசிகளாகும். ரிஷபம், சிம்மம், விருச்சிகம், கும்பம் ஆகியவை ஸ்திர ராசிகளாகும். மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகியவை உபய ராசிகளாகும். சரராசி என்றால் என்ன பொருள்? சரம் என்றால் இயங்கிக் கொண்டே இருப்பது என்று பொருள். ஸ்திரம் என்றால் ஒரே நிலையில் இருப்பது எனப் பொருள். உபயம் என்றால் ஒரேநிலையில் இல்லாது அசைந்தும் அசையாமலும் இருப்பது எனப் பொருள். இவைகள் எல்லாம் பலன் சொல்ல எப்படிப் பயன்படுகின்றன? உதாரணமாக ஒருகிரகம் ஒருவருக்கு உடல் உபாதையைக் கொடுக்கக் கூடிய கிரகமாக இருக்கிறது எனக் கொள்ளுவோம். அந்த கிரகம் சர ராசியில் இருந்தால் பரம்பரை நோய் வரக் கூடும். ஸ்திர ராசியில் இருந்தால் குணப்படுத்தாத முடியாத நோயாக வரக் கூடும். உபய ராசியில் இருக்கும் கிரகங்கள் மூலமாக அவ்வப்போது வந்து போகும் நோய் வரக்கூடும். இவ்வாறு இந்த ராசிகளின் தன்மைகள் பலன் சொல்லப் பயன்படுகின்றன. ஒருவர் ஜாதகத்தில் 4-ம் இடம் சர ராசியாக இருந்து அதன் அதிபதியும் சரராசியில் இருந்தால் அந்த ஜாதகருக்குப் பல இடத்தில் வீடுகள் இருக்கும். இது வீட்டுயோகம் உள்ளவர்களுக்குப் பொருந்தும். வீடுயோகம் இல்லாதவர்களுக்கு 4-ம் வீட்டு அதிபர் சரராசியிலும், 4-ம் வீடு சர ராசியிலும் இருந்தால் அவர் பல வீடுகளில் வசிப்பர் எனக் கொள்ளலாம். ஸ்திர ராசியில் இருந்தால் ஒரே வீட்டில் வசிப்பர் எனக் கொள்ளலாம்.

4-ம் வீட்டு அதிபர் 3-ம் வீட்டிலோ அல்லது 3-ம் வீட்டதிபருடனோ சேர்ந்து இருப்பாரேயாகில் அவருக்கு சகோதரன் மூலமாக ஸ்திர சொத்துக்கள் கிடைக்கும். அதேபோல லக்கினாதிபதி பலம் பெற்று 4-ம் இடத்திலும், 4-ம் வீட்ட்டதிபர் பலம் பெற்று லக்கினத்திலும் இருந்தால் அவர் சுய முயற்சியில் வீடு கட்டுவர். சிலருக்கு மனைவி மூலமாக வீடு கிடைக்கிறது அல்லவா? அதற்கு எத்தகைய கிரக நிலைகள் இருக்க வேண்டும்? களத்திர காரகனான சுக்கிரன் 4-ம் இடத்திலும், 4-க்குடையவன் 7-ம் இடத்திலும் இருப்பார்களேயானால் களத்திரம் மூலம் வீட்டு லாபம் உண்டாகும். சத்துருக்கள் மூலம் எப்படி பூமி லாபமுண்டாகுமெனப் பார்ப்போம். 6-ம் இடம் சத்துரு ஸ்தானம் அல்லவா? 6-ம் வீட்டதிபன் 4-ம் வீட்டிலோ அல்லது நாலாம் வீட்டதிபன் 6-ம் வீட்டிலோ இருந்து 4-ம் வீட்டதிபன் 6-ம் வீட்டதிபனை விட பலம் பொருந்தி இருந்தால் அவருக்கு விரோதிகளிடமிருந்து பூமிலாபம் கிடைக்கும்.

ஒருவருக்கு மாடி வீடு எப்படிக் கிடைக்குமெனப் பார்ப்போம்? நவாம்ச லக்கினத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நவாம்ச லக்கினத்திற்கு 4-ம் வீட்டில் சந்திரன், சுக்கிரன் இவர்களிருந்தால் மாடி வீடு கட்டுவர். அல்லது நவாம்ச லக்கினத்திற்கு 4-ம் வீட்டில் உச்சமடைந்த கிரகமிருக்குமேயகில் அவருக்கும் மாடி வீட்டு யோகம் உண்டு. நாம் இதுவரையில் வீட்டு யோகத்திப் பற்றிப் பார்த்தோம். காரகத்துவங்களையும் இனிப் பார்ப்போம். தாயாரைக் குறிப்பதும் 4ம் வீடு அல்லவா? 4-ம் வீட்டிற்கதிபதி லக்கினாதிபதியினால் பார்க்கப் பட்டு கேந்திரத்தில் இருந்தாலும், அல்லது சுபகிரகங்களினால் பார்க்கப் பட்டு இருந்தாலும் தாயரிடத்தில் மிக்க அன்புடன் இருப்பர். மாதுர்காரகனான சந்திரன் இரண்டு பாப கிரகங்களின் நடுவில் இருந்தால் அல்லது சேர்ந்து இருந்தால் மாதாவிற்குக் கெடுதல் உண்டாகும்.

4-ம் வீட்டதிபதி பாவிகள் சம்மந்தமில்லாமல் கேந்திரஸ்தானத்திலோ, திரிகோண ஸ்தானத்திலோனைருந்தால் பந்துக்களை விரும்புபவனாக அந்த ஜாதகன் இருப்பான். 4-க் குடையவன் பாபக் கிரகத்துடன் சேர்ந்தாலும், பாபர்கள் வீட்டிலிருந்தாலும் நீச வீடு, சத்துருக்கள் வீட்டிலிருந்தாலும் பந்துக்களோடு சேர்ந்து இருக்க மாட்டான். 4-ம் வீடு படிப்பு ஸ்தானமல்லவா? 4-ம் வீட்டிற்குடையவனும் சுக்கிரனும் சேர்ந்து கேந்திர ஸ்தானத்திலிருந்தாலும், புதன் உச்ச ராசியில் இருந்தாலும் ஜாதகன் படிப்பு மிகுந்தவனாவான். நாம் ஏற்கனவே கூறிருக்கிறோம், நாலாம் இடம் என்பது கல்லூரிவரையிலான படிப்பு வரையிலும்தான். அதற்கு மேற்பட்ட படிப்பை 9-ம் வீட்டைக் கொண்டுதான் தீர்மானிக்க வேண்டும். ஒருவர் ஜோதிடராக வேண்டுமென்றால் புதன் கேந்திரஸ்தானங்களுடன் சம்மந்தப் பட்டு இருக்க வேண்டும். அதைத் தவிரவும் சுக்கிரன் 2 அல்லது 5 அல்லது 9-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டு இருக்க வேண்டும். அவ்வாறு இருப்பவர்கள்தான் ஜோதிடத்தில் வல்லவராக இருக்க முடியும். சரி! ஒருவர் கணிதத்தில் வல்லவராக இருக்க எந்த கிரகம் நன்றாக இருக்க முடியும். கணிதத்திற்கு அதிபதி புதன். அவர் ஜாதகத்தில் கெடாமல் இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் அவர் கணிதத்தில் வல்லவராக இருக்க முடியும். சட்டப் படிப்புப் படிக்க எந்த கிரகம் உதவும்? சட்டத்திற்குக் காரகன் குரு. அவர் ஜாதகத்தில் நல்ல விதமாக அமைந்தால்தான் ஒருவர் வழக்கறிஞ்கராக முடியும். இப்போது எல்லோரும் Engineering படிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதற்கு எந்த கிரகம் உதவி செய்யும்? Engineering படிப்பவர்களுக்குக் கணிதம் மிக முக்கியம். அவர்கள் Drawing, Plan போடுவதில் தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும். இவற்றிற்கெல்லாம் அதிபதி புதன். இயந்திரங்களுக்கு அதிபதி செவ்வாய். கட்டிடத் தொழிலுக்கு அதிபதி செவ்வாய். புதனும், செவ்வாயும் படிப்பு சம்மந்தமான நாலாம் வீட்டுடனோ அல்லது 9-ம் வீட்டுடனோ சம்மந்தப் பட்டால் ஒருவர் Civil அல்லது Mechanical Engineer ஆக முடியும். Chemical - க்கு அதிபதிசுக்கிரன். அவரும் புதனும் சேர்ந்து ஒருவரை Chemical Engineer -ஆக ஆக்க முடியும். ஆதாவது படிப்பு ஸ்தானத்துடன் சம்மந்தப் பட வேண்டும். அப்போதுதான் அவர் Chemical Engineer ஆக முடியும். சந்திரன் நீருக்கு அதிபதியல்லவா? அவரும் புதனும் Textile Engineer களை உருவாக்க முடியும். பூமியிலுள்ள கனி வளங்களைக் குறிப்பது சனி. பூமியைக் குறிப்பது செவ்வாய். சனி-செவ்வாய்-புதன் - இந்தச் சேர்க்கை Mines Engineer-ஐக் குறிக்கிறது.

சரி! மருத்துவராக எந்த கிரகச் சேர்க்கை இருக்க வேண்டும். சூரியனுக்குப் பெயர் தன்வந்திரி. அவர் படிப்பு ஸ்தானத்துடன் சமமந்தப் பட்டால்தான் ஒருவர் மருத்துவராக முடியும். இப்போது எந்தெந்த கிரக சேர்க்கை பெற்றால் ஒருவர் என்ன படிக்க முடியும் என்று தெரிந்து கொண்டீர்கள்.

சரி! ஒருவர் நான் இப்போது பட்டப் படிப்பு முடித்து விட்டேன். மேற்கொண்டு படிக்க முடியுமா? எனக் கேட்க்கிறார் எனக் கொள்ளுங்கள்? எப்படி பதில் சொல்வது? தற்போது நடக்கும் தசா, புக்திகளைப் பாருங்கள். அவை படிப்புக்கு உண்டான 4 அல்லது 9 அல்லது 11-ம் வீடுகளைக் குறித்தால் அவர் மேற்கொண்டு படிப்பார் எனக் கொள்ளலாம். குறிக்க வில்லை என்றால் அவருக்கு மேற்கொண்டு படிப்பு இல்லை எனக் கூறிவிடலாம். 4, 9 தானே படிப்பு ஸ்தானம். 11-ம் வீட்டை ஏன் பார்க்க வேண்டும் எனக் கேட்க்கலாம்? 11-ம் வீடு லாபஸ்தானம் அல்லவா? உங்கள் ஆசைகளை நிறைவேற்றுகின்ற வீடு அல்லவா? ஆகவே 11-ம் வீட்டையும் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒருவருடைய படிக்க வேண்டுமென்ற ஆசையும் நிறைவேற வேண்டுமல்லவா? ஆகவே 11-ம் வீட்டையும் எடுத்துக் கொண்டு பலன் சொல்லுங்கள்.

7-ம் வீடு என்பது களத்திரஸ்தானம் என்று முன்பே எழுதி இருக்கிறோம். அதைத் தவிர ஒருவர் வியாபாரம் செய்வாரா அல்லது மாட்டாராஎன்றும் 7-ம் வீட்டைக் கொண்டுதான் சொல்ல வேண்டும். நாம் வங்கியிடம் கடனுக்கு முயற்சி செய்கிறோம் எனக் கொள்ளுங்கள். அந்த வங்கியைக் குறிப்பது 7-ம் வீடு. அதாவது நாம் யாருடனாவது

RangaRakes tamilnavarasam.com

ஏதாவது Transaction வைத்துக் கொண்டால் அந்த நபரைக் குறிப்பது 7-ம் வீடு. ஒருவர் கல்லூரியில் அல்லது பள்ளியில் Scholarsship-க்கு முயற்சி செய்கிறார் எனக் கொள்ளுங்கள். Scholarship கொடுப்பது அந்தக் கல்வி நிலையம்தானே. அந்தக் கல்வி நிலையத்தைக் குறிப்பது 7-ம் வீடு. இதையெல்லாம் எதற்கு எழுதுகிறோம் என்றால் ஒருவர் Scholarship-ல் படிப்பாரா? என்ற கேள்வி எழுந்தால் எப்படி பதில் சொல்லுவது என்பதற்காகத்தான். சரி! கல்வி நிலையம் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறது எனக்கொள்ளுங்கள். அதாவது அதற்கு வரவேண்டிய பணம் குறைகிறது என்பதுதானே பொருள். அதாவது அந்த அளவிற்கு அந்தக் கல்வி நிலையத்திற்குப் பண நஷ்டம் என்பதுதானே பொருள். அந்தப் பண நஷ்டத்தைக் குறிப்பது எந்த வீடு? 7-ம் வீட்டிற்குப் 12-ம் வீடான 6-ம் வீடுதான். ஆக 6-ம் வீடு என்பது உங்களுடன் Transaction வைத்து இருப்பவரின் நஷ்டத்தைக் குறிக்கிறது. 11-ம் வீடு உங்களின் லாபத்தைக் குறிக்கிறது. Scholarship கிடைத்தால் உங்களுக்கு லாபம் தானே! ஆக ஒருவர் "எனக்கு படிப்பதற்கு "ஸ்காலர்ஷிப்" கிடைக்குமா? என்று கேள்வி கேட்டால் 4ம் வீடு 6-ம் வீட்டுடனும் 11-ம் வீட்டுடனும் சம்மந்தம் உள்ளதா? எனப் பாருங்கள். அப்படி இருந்தால் அவருக்கு ஸ்காலர்ஷிப் கிடைக்குமெனப் பொருள்

உதாரணத்திற்கு ஒரு ஜாதகத்தைப் பாருங்கள். இவருக்கு மேல் படிப்பிற்கு ஸ்காலர்ஷிப் கிடைத்தது. ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்.

லக்கினம் : மீனம், சந்திரன் மீனத்தில்;
3-ம் வீடான ரிஷபத்தில் கேது;
4-ம் வீடான மிதுனத்தில் சனி, சுக்கிரன்;
5-ம் வீடான கடகத்தில் சூரியன், புதன்;
6-ம் வீடான சிம்மத்தில் செவ்வாய்;
9-ம் வீடான விருச்சிகத்தில் ராகு;
12-ம் வீடான கும்பத்தில் குரு.

நவாம்சம்:

விருச்சிகத்தில் லக்கினம்;
3-ம் வீடான மகரத்தில் ராகு, சூரியன்;
4-ம் வீடான கும்பத்தில் சந்திரன்;
6-ம் வீடான மேஷத்தில் சனி, குரு;
8-ம் வீடான மிதுனத்தில் சுக்கிரன்;
9-ம் வீடான கடகத்தில் கேது;
10-ம் வீடான சிம்மத்தில் செவ்வாய்;
12-ம் வீடான துலாத்தில் புதன்.

இவர் பிறந்தது 08-08-1974. இவர் ஸ்காலர்ஷிபில் மேற்படிப்புப் படித்தார். மேற்படிப்பிற்குண்டான 9-ம் வீட்டின் அதிபதி செவ்வாய் 6-ம் வீட்டில்; அந்தச் செவ்வாய் லாபாதிபதியான சனியால் பார்க்கப் படுகிறார். ஆக இவருக்கு மேற்படிப்புப் படிக்க Scholarship கிடைத்தது. இந்த ஜாதகத்தில் இன்னும் ஒரு வேடிக்கை இருக்கிறது. 7-ம் இடம் களத்திரஸ்தானம் அல்லவா? களத்திர ஸ்தானாதிபதி புதன் 5-ம் வீட்டில், 6-ம் வீட்டு அதிபனான சூரியனுடன் இருக்கிறார். கணவன் மனைவிக்குப் பிரிவை உண்டாக்கும் வீடு 6-ம் இடமல்லவா! ஏன்? 7-ம் வீட்டிற்குப் 12-ம் வீடு 6-ம் வீடு. ஆக7-ம் வீடு திருமணத்தைக் கொடுத்தால் 6-ம் வீடு பிரிவைக் கொடுக்கும். இவர் திருமணமாகி மனைவியைப் பிரிய வேண்டிய நிலை இருந்தது. சூரியன் யார்? அவர் தகப்பனாருக்குக் காரகம் வகிப்பவர் அல்லவா? ஆக இந்தப் பிரிவிற்கு அவர் தகப்பனாரே காரணமானார். வேடிக்கையைப் பார்த்தீர்களா? படிப்பிற்கு உதவி செய்த 6-ம் வீடு எப்படித் திருமண வாழ்க்கையில் விளையாடி விட்டது பார்த்தீர்களா?

RangaRakes tamilnavarasam.com

ஒருகிரகம் சில காரியங்களுக்கு நல்லவராக இருப்பார். அதே சமயத்தில் வேறு சில காரியங்களுக்குத் தொந்தரவு கொடுப்பவராக இருப்பார். இதுதான் கிரகங்களின் கண்ணாமூச்சி விளையாட்டு. நாம் இத்துடன் 4-ம் வீட்டை முடித்துக் கொள்வோம். அடுத்த பாடத்தில் 5-ம் வீட்டைப் பற்றிப் பார்ப்போம்.

நாம் இப்போது 5-ம் வீட்டைப் பற்றிப் பார்க்கப் போகிறோம். 5-ம் வீட்டை வைத்து என்னவெல்லாம் கூறலாம்? 5-ம் வீட்டைப் பூர்வ பண்ணிய ஸ்தானம் என்று கூறுவர். போன ஜென்மத்தில் ஒருவர் புண்ணியம் செய்தாரா அல்லது பாபம் செய்தாரா என்பதை இந்த வீட்டைக் கொண்டு தீர்மானிக்கலாம். பாப கிரகங்களான சனி, செவ்வாய், ராகு, கேது, சூரியன் இவைகள் 5-ம் வீட்டில் இருக்குமேயாகில் அவர் போன ஜென்மத்தில் பாபம் செய்தவர் எனக் கூறலாம். இயற்கையிலேயே சுப கிரகங்களான குரு, சுக்கிரன், வளர்பிறைச் சந்திரன், தீயரோடு சேராத புதன் ஆகியோர் 5-ம் வீட்டில் இருப்பார்களேயானால் அவர் பாபம் செய்யாதவர் எனக் கூறலாம். ஆக ஒருவர் முற்பிறவியில் பாபம் செய்தவரா அல்லது புண்ணியம் செய்தவரா என்பதை 5-ம் வீட்டைக் கொண்டு மேலே கூறியவற்றிலிருந்து தீர்மானிக்கலாம்.

அடுத்தது 5-ம் வீட்டைப் புத்திர ஸ்தானம் என்றழைப்பர். ஒருவருக்குக் குழந்தை பிறக்குமா அல்லது பிறக்காதா என்பதையும் இந்த வீட்டைக் கொண்டு தீர்மானம் செய்யலாம். புத்திரஸ்தானத்தில் சனி, ராகு, கேது, செவ்வாய், சூரியன் ஆகியோர் இருந்தால் புத்திர நாசம் என்று கூறுவர். 5-ம் வீட்டில் சனி இருந்தால் "தத்துப் பிள்ளை யோகம்" என்று கூறுவர். அதாவது அவருக்குக் குழந்தைகள் யோகம் இல்லை என்று பொருள். ஆனால் சிலருக்கு 5-ம் பாவம் கெட்டிருந்தும் குழந்தைகள் யோகம் இருக்கும். அதற்குக் காரணத்தைப் பின்னால் பார்ப்போம். பொதுவாக 5-ம் வீட்டில் பாப கிரகங்கள் இருப்பது நல்லது இல்லை என்று தெரிந்து கொள்ளுங்கள்.

ஒருவர் காதல் விவகாரத்தைக் குறிப்பதும் இந்த 5-ம் வீடுதான். 7-ம் வீட்டு அதிபதி 5-ம் வீட்டில் இருந்தாலும், 5-ஆம் வீட்டு அதிபர் 7-ம் வீட்டில் இருந்தாலும் ஒருவர் காதல் திருமணம் செய்வர் என்று கூறலாம். 7-ம் வீடு திருமணத்தைக் குறிக்கும் வீடு அல்லவா? 5-ம் வீடு காதல் விவகாரத்தைக் குறிப்பதனால் 7-ம் வீடும், 5-ம் வீடும் சம்மந்தப் பட்டால் அது காதல் திருமணத்தில்தான் முடியும்.

கலை சம்மந்தப் பட்ட துறையையும் குறிப்பது இந்த வீடுதான். சினிமா, டிராமா, பாட்டு, நடிப்புப் போன்ற கலைத்துறைகளையும் இந்த வீடுதான் குறிக்கிறது. 10-ம் வீட்டு அதிபர் சுக்கிரனாக இருந்து அவர் 5-ஆம் வீட்டில் இருந்தால் அவர் கலைத் தொழிலில் இருப்பார் எனக் கொள்ளலாம். ஆக 5-ம் வீடு பொழுதுபோக்கு அம்சங் களையும் குறிக்கிறது எனத் தெரிந்து கொண்டீர்கள். 10-ம் வீடும் 5-ம் வீடும் சம்மந் தப் பட்டால் அவர் கலைத்தொழிலில் இருப்பார் எனக் கொள்ளலாம்.

Speculation - துறையையும் குறிப்பது இந்த வீடுதான். லாட்டரி, ரேஸ், Cross-word Puzzle போன்றவற்றையும் குறிப்பது இந்த வீடுதான். ஒருவருக்கு லாட்டரியில் பரிசு கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்றும் இந்த வீட்டைவைத்து அறியலாம். எப்படி? 5-ம் வீட்டதிபர் 2-ம் வீட்டில் இருந்தால் பரிசு கிடைக்கும் எனக் கொள்ளலாம். 2-ம் வீடு தனஸ்தானம் அல்லவா? 2-ம் வீட்டதிபர் 5-ம் வீட்டில் இருந்தாலும் இந்த மாதிரிப் பரிசு கிடைக்கும் எனக் கொள்ளலாம். 5-ம் வீடு 11-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் பெரும் தொகை கிடைக்க வழியுண்டு. 11-ம் வீடு லாபஸ்தானம் அல்லவா? ஆகையால் பெரும்தொகை கிடைக்க வழியுண்டு. 2-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் சிறிய தொகைதான் கிடைக்கும். ஏனெனில் 2-ம் வீடு தனவரவைத்தான் காட்டுகிறது. 11-ம் வீடு லாபத்தைக் காட்டுகிறது. 2-ம் வீட்டிற்கும் 11-ம் வீட்டிற்கும் உண்டான

RangaRakes tamilnavarasam.com

11-ம் வீடு லாபத்தைக் காட்டுகிறது. 2-ம் வீட்டிற்கும் 11-ம் வீட்டிற்கும் உண்டான வித்தியாசத்தை இப்போது தெரிந்து கொண்டீர்கள் அல்லவா?

ஒருவருடைய புத்திகூர்மையையும் குறிப்பது இந்த வீடுதான். கிரகங்களில் புதனும், வீடுகளில் 5-ம் வீடும் புத்திசாலித்தனத்தையும் குறிக்கிறது.

ஒருவர் என்ன தெய்வத்தைத் தொழவேண்டும் என்பதையும் 5-ம் வீட்டை வைத்துக் கூறிவிடலாம். 5-ம் வீட்டில் என்ன கிரகம் இருக்கிறதோ அதை வைத்து நீங்கள் வழிபடவேண்டிய தெய்வத்தைக் கூறவேண்டும். எந்தெந்த கிரகத்திற்கு யார் அதிதேவதை என்று கீழே கொடுத்து இருக்கிறோம்.

| கிரகம் | அதிதேவதை |
|---|---|
| சூரியன் | சிவன் |
| சந்திரன் | பார்வதி |
| செவ்வாய் | முருகன் |
| புதன் | விஷ்ணு |
| குரு | தக்ஷிணாமூர்த்தி |
| சுக்கிரன் | லக்ஷ்மி |
| சனி | சாஸ்தா |
| ராகு | காளி, துர்கை, கருமாரியம்மன் |
| கேது | வினாயகர், சண்டிகேஸ்வரர் |

ஒருவருக்கு 5-ம் வீட்டில் கேது இருக்கிறது எனக் கொள்ளுங்கள்;அவர் வினாயகரை உபாசனை செய்ய வேண்டும். செவ்வாய் இருக்குமேயாகில் முருகனை வழிபட வேண் டும். இவ்வாறாக மேற்கூறிய தெய்வங்களை வழிபட வேண்டும். இவ்வாறாக 5-ம் வீட்டைக் கொண்டு ஒருவர் எந்த தெய்வத்தை வழிபட வேண்டும் என்று கூறலாம். மந்திர உச்சாடனம், வேதங்கள், மதநம்பிக்கை, இவற்றையெல்லாம் இந்த வீட்டைக் கொண்டு அறியலாம். கேது ஞானகாரகன். 5-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் அவருக்கு அவர் மதத்தின்மேல் தீவீர பக்தி இருக்கும். இப்போது 5-ம் வீட்டு அதிபர் ஒவ்வொரு வீட்டிலும் இருந்தால என்ன பலன் என்று அறிவோம்.

லக்கினத்தில் இருந்தால் தெய்வ அனுக்கிரகம் அவருக்குக் கிடைக்கும். Providential Help என்று சொல்வார்களே அது அவர்களுக்குக் கிடைக்கும். லக்கினத்தில் கெட்ட கிரகம் இருந்து அதனுடன் 5-ம் வீட்டதிபர் இருந்தால் துர்தேவதைகளை வசியம் செய்பவராக இருப்பார்.

2-ம் வீட்டில் இருந்தால் லாட்டரி, ரேஸ் போன்றவற்றிலிருந்து பணம் கிடைக்கும். சரி1 எப்போது கிடைக்கும்? 5-ம் வீட்டையும், 2-ம் வீட்டையும் குறிக்கும் தசா, புக்தி காலங்களில் கிடைக்கும். அரசாங்கத்திடமிருந்து பணவரவு கிட்டும். ஏனெனில் 5-ம் வீடு அரசாங்கத்தையும் குறிக்கிறது. ஒருவருக்கு 5-ம் வீட்டையும் 2-ம் வீட்டையும் குறிக்கும் கிரகங்களின் தசா,புக்தி காலங்களில் புத்திரபாக்கியம் உண்டாகும். 5-ம் வீடு புத்திரத்தையும், 2-ம் வீடு குடும்பத்தையும் குறிப்பதனால் அப்போது புத்திர பாக்கியம் உண்டாகும். 5-ம் வீட்டதிபதியுடன் பாபகிரகங்களின் சேர்க்கை இருந்து 2-ல் இருந்தால் அப்போது பணவிரயம் ஏற்படும். ரேஸ், ஸ்பெகுலேஷன் துறையில் பணத்தைக் கோட்டை விடுவர். அரசாங்கத்திற்கு தண்டமாகப் பணம் செலுத்துவர்.

3-ம் வீடு சிறு பயணத்தைக் குறிக்கிறது அல்லவா? 5-ம் வீடு மதம் கோவில்களைக் குறிக்கிறது. ஆக இவர் தெய்வதரிசனத்திற்காக வெளியூர்ப்பயணம் மேற்கொள்ளுவர். 3-ம் வீடு என்பது 5-ம் வீட்டிற்குப் 11-வது வீடு அல்லவா? புத்திர பாக்கியம் உண்டென்று கூறலாம். 5-ம் வீட்டின் காரகத்துவங்கள் நன்றாக இருக்கும் எனக்கொள்ளலாம். இதுதான் 5-ம் வீட்டதிபர் 3-ல் இருந்தால் பலன்.

5-ம் வீட்டதிபர் 4-ல் இருந்தால் 5-ம் வீட்டின் காரகத்துவங்கள் பாதிக்கப்படும். ஏனெனில் 5-ம் வீட்டிற்குப் 12-ம் வீடு 4-ம் வீடல்லவா! 5-ல் சுபக்கிரகங்கள் இருந்தால்தான் அந்தவீட்டின் காரகத்துவம் ஓரளவிற்கு நன்றாக இருக்கும். இவரின் புத்திரர் விவசாயம் அல்லது கட்டிடத்தொழில் சம்மந்தமான தொழிலில் இருப்பார் எனக்கொள்ளலாம். இவரின் தாயார் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்.

5-ம் வீட்டதிபர் 5-ல் இருந்தால் தன் தொழிலில் திறமையுடன் இருப்பார். மந்திர சாஸ்த்திரங்களில் திறமைமிகுந்தவராக இருப்பார். இவரின் குழந்தைகள் கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்குவர். அரசாங்கத்தின் உதவி இவர்களுக்குக் கிட்டும். புத்திரர்களால் இவருக்கு உதவி கிட்டும்.

5-ம் வீட்டதிபர் 6-ல் இருந்தால் புத்திர பாக்கியம் குறைவு எனக் கொள்ளலாம். ஏனெனில் 6-ம் இடம் மறைவு ஸ்தானம் அல்லவா! தாய்மாமன் நன்றாக புகழுடன் இருப்பார்.

6-ம் இடம் தாய்மாமனைக் குறிக்கிறது அல்லவா! சிலர் தாய்மாமனின் குழந்தையை தத்து எடுத்துக் கொள்வர். புத்திரர்களால் நன்மைகளையோ அல்லது லாபத்தையோ எதிர்பார்க்க முடியாது.

7-ல் இருந்தால் காதல் திருமணம்செய்து கொள்வர். 5-ம் இடம் காதலையும், 7-ம் இடம் திருமணத்தையும் குறிக்கிறது அல்லவா? இந்த சேர்க்கை காதல் திருமணத்தைக் கொடுக்கும்.

8-ம் இடத்தில் இருந்தால் புத்திர சந்தான தோஷம் உண்டு. அதிர்ஷ்டக்குறைவானவர் என்று கூறலாம்.

9-ம் வீட்டில் இருந்தால் இவருடைய புத்திரர்களில் ஒருவர் நற்பெயருடன் நன்றாக இருப்பார். கல்வியில் திறமையுடன் இருப்பர். பிதுர் பாக்கிய சொத்துக்கள் கிடைக்கும். பெரியவர்களிடம் பக்தி விசுவாசத்துடன் இருப்பர். சாஸ்த்திரங்களில் தேர்ச்சியும், பாண்டித்தியமும் பெற்று தெய்வீக வழிபடுகளில் பற்றுதலுடனும், தீவீர நம்பிக்கையுடனும் இருப்பார்கள். தருமம், நீதி ஆகியவற்றைக் கடைப் பிடித்து வாழ்க்கை நடத்துவார்கள்.

10-ம் வீட்டில் இருந்தால் புத்திர சந்தான விருத்தி ஏற்படும். சத்காரியங்களில் ஈடுபாடு உள்ளவர்களாக இருப்பார்கள். தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு உள்ளவர்களாக இருப்பார்கள். அரசின் நன்மதிப்பைப் பெற்றவர்களாக இருப்பார்கள்.

11-ம் வீடு லாபஸ்தானம் அல்லவா? அங்கு 5-ம் வீட்டு அதிபதி இருப்பின் இவரின் புத்திரர் நற்பெயரெடுத்து நல்ல நிலைக்கு வருவர். இவருக்குப் புத்திரர்களால் உதவி கிடைக்கும். மேலே கூறியதுபோல் லாட்டரி, ரேஸ்போன்றவற்றிலிருந்து பணவரவு உண்டாகும். பொதுவாக 5-ம் இடத்தின் காரகத்துவங்கள் சிறந்து விளங்கும்.

12-ம் வீட்டில் இருந்தால் இதுவும் புத்திர தோஷம்தான். மனைவிக்கு அடிக்கடி கர்பச்சிதைவு ஏற்படும். உடல் நிலை பாதிக்கக்கூடும். எதிலும் பற்றில்லாத வாழ்க்கை வாழ்வர். தெய்வீக வாழ்க்கை வேண்டி ஊர் ஊராகச் சுற்றுவர்.

RangaRakes
tamilnavarasam.com

நாம் 5-ம் வீட்டிற்குடையவர் ஒவ்வொரு வீட்டிலும் இருந்தால் என்ன பலன் என்று தெரிந்து கொண்டோம். அடுத்த பாடத்தில் 5-ம் வீட்டின் மற்ற பலன்களைப் பார்ப்போம்.

5-ம் வீடு புத்திர ஸ்தானம் என்று தெரிந்து கொண்டீர்கள். 5-ம் வீட்டில் பாபகிரகங்கள் இருப்பது நல்லதில்லை எனவும் தெரிந்து கொண்டீர்கள். 5-ம் வீட்டில் ராகு இருந்தாலும், 5-ம் வீட்டதிபர் ராகுவுடன் கூடினாலும் அது சார்ப்ப தோஷம் என்று கூறுவார்கள். அதாவது சர்பத்தின் சாபத்தால் புத்திர தோஷம் உண்டாயிற்று. கேது இருந்தால் பிராமணசாபத்தால் புத்திர தோஷம் உண்டாயிற்று. நாம் இதுவரை மாந்தியைப் பற்றி எழுதவில்லை; கேரள ஜோதிடத்தில் மாந்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். மாந்திக்கு நட்சத்திரங்களோ, தசா புக்திகளோ இல்லாததால் நாம் அவ்வளவு அதற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை; நாம் வரும் பாடங்களில் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அதைப் பற்றி விரிவாக எழுதுகின்றோம். நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். இப்போதைக்கு மாந்தி 5-ம் வீட்டில் இருப்பது நல்லது இல்லை என்று தெரிந்து கொள்ளுங்கள். 5-ம் வீட்டில் சந்திரன், சுக்கிரனுடன் மாந்தியும் இருந்தால் ஸ்திரிஹத்தி தோஷமும், பசுஹத்தி தோஷமும் ஏற்பட்டு புத்திர உற்பத்தி தடைப்படும். அதே போன்று புத்திர காரகனான குருவுடன் மாந்தி சேர்ந்து இருந்தால் பிராமண சாபத்தால் புத்திர உற்பத்தி தடையுறும். சரி! இவ்வாறு இருந்தால் என்ன பரிகாரம் செய்யலாம்? இவ்வாறு தோஷமுள்ளவர்கள் சேது ஸ்னானம், நாகப் பிரதிஷ்டை செய்தல், அரசமரப் பிரதஷ்ஷணம் செய்தல் போன்றவற்றைச் செய்ய வேண்டும். இவைகள்தான் இதற்குப் பரிகாரங்கள்.

பெண்ணில் ஜாதகத்தில் 5-ம் இடம்மிக முக்கியமானதாகும். ஏனெனில் குழந்தையைப் பெறப் போகிறவள் அவள்தான். அந்த்த 5-ம் வீட்டிலே செவ்வாய் இருப்பதோ பார்ப்பதோ அவ்வளவு நல்லது இல்லை; செவ்வாய் ஆயுதங்களுக்கு அதிபதியல்லவா? ஆக குழந்தை பிறக்கும் சமயத்தில் ஆயுதம் உபயோகிக்க வேண்டியது இருக்கும். அதாவது இந்தக் காலத்திலே Scissorian - என்று சொல்லுகின்றார்களே அவ்வாறு குழந்தை பிறப்பு இருக்கும். பித்ருகாரகன் சூரியன். அவன் 5-ம் வீட்டில் நீச்சனாகி பாப கிரகங்களுடன் கூடியிருந்தால் பித்ரு சாபத்தால் குழந்தைகள் இருக்காது என்று "சராவளி" (ஒரு ஜோதிட நூல்). கூறுகிறது. சூரியன் 5-ம் வீட்டிற்குடையவனாகி இரண்டு பாபக்கிரகங்களுடன் சேர்ந்து இருந்தாலும் பித்ருசாபமாகும். 5-க் குடையவன் 9-ம் வீட்டிலும், 9-ம் வீட்டிற்குடையவன் 5-ம் வீட்டிலும் இருந்து பாபகிரகங்களின் சேர்க்கை பெற்றால் அதுவும் பித்ருசாபம்தான். 9-ம் வீடு பித்ரு ஸ்தானம் அல்லவா? ஆகவே பித்ருஸ்தானாதிபதி கெடக் கூடாது என்கிறது "சராவளி". இந்தப் பித்ரு சாபத்தைப் போக்க வேண்டுமென்றால் "கயா" வில் ஸ்ரார்த்தம் செய்ய வேண்டுமென்பது விதி. பொதுவாக புத்திர ஸ்தானத்தில் பாபகிரகங்கள் இருப்பது புத்திர உற்பத்தியைக் குறைக்கும்.

நமக்குத் தெரிந்த ஜாதகத்தைக் கொடுக்கின்றோம். குறித்துக் கொள்ளுங்கள்.

லக்கினம்: மீனம்.

5-ம் வீட்டில் சூரியன், சுக்கிரன்,ராகு, சனி ஆகிய 4 கிரகங்கள் இருக்கின்றன. இதில் சூரியன் 6-ம் வீட்டிற்கதிபதியாகி இயற்கையிலேயே ஒரு பாப கிரகம். ராகு மற்றொரு பாப கிரகம். சனியும் ஒரு பாப கிரகம். சுக்கிரன் இயற்கையிலேயே ஒரு சுப கிரகமாக இருந்தாலும் 3,8-ம் வீடுகளுக்கு அதிபதியான தால் அவரும் ஒரு பாப கிரகமாகின்றார். இவ்வளவு பாப கிரகங்கள் இருப்பதனால் இவருக்குக்

RangaRakes tamilnavarasam.com

ஒரு பாப கிரகமாகின்றார். இவ்வளவு பாப கிரகங்கள் இருப்பதனால் இவருக்குக் குழந்தைகள் இல்லை; இதுவரையில் நாம் 5-ம் வீட்டைப் பற்றிப் பார்த்தோம். இனி நாம் 6-ம் வீட்டைப் பற்றிப் பார்ப்போம்.

6-ம் வீடு என்றால் மறைவுஸ்தானம் என்றுதான் பலர் நினைத்துக் கொண்டு இருக்கின்றனர். அது மறைவு ஸ்தானம் மட்டும் அல்ல; அதற்குப் பல காரகத்துவங்கள் உண்டு. அவற்றைப் பற்றிப் பார்ப்போம். முதலில் அது வியாதிகளைக் குறிக்கும் வீடு. மனிதன் என்று இருந்தால் வியாதி என்றும் ஒன்று உண்டு. வியாதிகளைக் குறிக்கும் வீடு அதுதான். 12-ம் வீடு என்பது மருத்துவமனையைக் குறிக்கும். 6-ம் வீட்டு அதிபதி 12-ம் வீட்டில் இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். உதாரணமாக புதன் 6-ம் வீட்டு அதிபதியாகி 12-ம் வீட்டில் இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். புதனானவர் 6-ம் வீட்டையும், 12-ம் வீட்டையும் குறிக்கிறார். புதன் தசை, அல்லது புக்திகளில் ஒருவர் வியாதியால் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற வேண்டியது இருக்கும். சரி! ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். எப்போது குணமடைவார்?

நாம் அதற்கும் பதில் சொல்ல வேண்டுமல்லவா? 11-ம் வீடு என்பது லாபத்தைக் குறிக்கிறது என்று நாம் கூறியிருந்தோம். அது வியாதி குணமடையும் காரகத்துவங்களையும் குறிக்கிறது. 12-ம் வீடு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுதலைக் குறிக்கிறது. 12-ம் வீட்டிற்குப் 12-ம் வீடு எது? 11-ம் வீடு. 12--ம் வீட்டிற்கு எதிர்மறையான பலன்களைக் கொடுக்க வேண்டுமல்லவா? ஆகவே 11-ம் வீடு வியாதி குணமாதலையும் குறிக்கிறது. அதேபோல் 6-ம் வீடு வியாதியைக் குறிக்கிறது. 6-ம் வீட்டிற்குப் 12-ம் வீடு வியாதி குணமாதலைக் குறிக்கிறது அல்லவா? 6-ம் வீட்டிற்குப் 12-ம் வீடு எது? 5-ம் வீடு. ஆக 5-ம் வீடு வியாதி குணமாதலையும் குறிக்கிறது. ஆக 6, 12-ம் வீடுகள் வியாதியும், அதனால் மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதையும் குறித்தால் 5-ம் வீடும் 11-ம் வீடும் வியாதி குணமாதலைக் குறிக்கிறது. 5-ம் வீட்டின் தசையின் போதோ அல்லது புக்தியின் போதோ ஒருவருக்கு வியாதி குணமாகும். அதேபோல் 11-ம் வீட்டின் தசையின் போதோ அல்லது புக்தியின் போதோ ஒருவருக்கு வியாதி குணமாகும். அடுத்ததாக 6-ம் வீடு என்பது நாம் செய்யும் அடிமைத்தொழிலைக் குறிக்கிறது. வேலைக்குச் செல்பவர் எல்லோரும் அடிமைத்தொழிலாளர்தான். ஆக 6-ம் வீடு நாம் செய்யும் தொழிலைக் குறிக்கிறது. 6-ல் ஒரு கிரகம் இருக்கிறது எனக் கொள்ளுங்கள். அதன் தசா புக்தி காலங்களில் ஒருவருக்கு வேலை கிடைக்கும். அல்லது பதவி உயர்வு கிடைக்கும். இப்போது உங்களுக்கு ஒரு சந்தேகம் வந்து இருக்கும். 6-ம் வீட்டில் உள்ள ஒரு கிரகத்தின் தசா, புக்தி காலத்தில் ஒருவருக்கு வேலை கிடைக்குமா அல்லது உடல் நிலை பாதிக்கப் படுமா? எப்படிக் கூறுவது? 6-ம் வீட்டில் உள்ள கிரகம் லக்கினமாகிய முதல் வீட்டுடன் சம்மந்தப் பட்டால்தான் உடல் நிலை பாதிக்கும். முதல் வீட்டுடன் சம்மந்தப் படவில்லையானால் உடல்நிலை பாதிக்காது. லக்கினாதிபதியும், 6-ம் வீட்டில் உள்ள கிரகமும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளலாம்; அல்லது சேர்ந்து இருக்கலாம். அவ்வாறு 6-ம் வீடும் 1-ம் வீடும் சம்மந்தப் பட்டால்தான் ஒருவரின் உடல்நிலை பாதிக்கப்படும்.

அடுத்ததாக ஒருவரின் வேலையாட்களைக் குறிப்பதும் இந்த வீடுதான். 6-ம் வீட்டில் சுபர்கள் இருந்தால் வேலையாட்கள் மூலமாக ஒருவர் பயனடைவார். பாப கிரகங்கள் இருந்தால் அவர்களால் செலவுதான். பயன் இருக்காது.

6-ம் வீடு நமக்குப் பிரியமான சாப்பாட்டையும் குறிக்கிறது. ஒருவரின் 6-ம் வீட்டில் சனியிருந்தால் போஷாக்கற்ற உணவுவகைகளை உட்கொள்ளுவார். போதுமான அளவு சாப்பாடும் கிடைக்காது. சுக்கிரன் இருக்குமேயாகில் வகை,வகையான உணவுவகைகளை உட்க்கொள்ளுவர். ஒரளவிற்கு மதுபானத்திலும் பிரியம் இருக்கும். சந்திரன் ஒரு நீர்க்கிரகம் அல்லவா? நீர்சம்மந்தப்பட்ட உணவுவகைகளை விரும்பி உட்கொள்ளுவார். அதுவும் 6-ம் இடம் நீர்ராசிகளாகிவிட்டால் கேட்க்கவே வேண்டாம்.

RangaRakes tamilnavarasam.com

மதுபானப் பிரியராக இருப்பார். அதைத் தவிர பாட்டில்களில்வரும் குளிர்பானங்களையும் விரும்பிச் சாப்பிடுவார். குரு இருக்குமேயாகில் நல்ல உணவுவகைகளை உட்கொள்ளுவார். செவ்வாய் இருந்தால் தேவைக்கு அதிகமாக உட்கொள்வர். இவ்வாறாக கிரகங்களின் குணாதிசயங்களை வைத்துப் பலன் சொல்லவேண்டும்.

6-ம் வீடு கடன் என்றும் கூறுவார்கள். 6-ம் வீட்டின் அதிபதி 8-ம் வீட்டில் இருப்பாரேயானால் ஒருவருக்குக் கடன் தொல்லைகள் அதிகம் இருக்கும். 6-ம் வீட்ட்டின் அதிபதி 11-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் கொடுத்த கடன் திரும்பி வரும். அல்லது உத்தியோகத்தில் பதவி உயர்வு தேடிவரும். 6-ம் வீடு 12-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் நாம் வீங்கியகடனைக் கொடுப்போம். அதாவது 6-ம் வீடு கடனைக் குறிக்கிறது. 12-ம் வீடு செலவைக் குறிக்கிறது. 6-ம் 12-ம் சேர்ந்தால் நாம் வாங்கிய கடனைத்திருப்பிக் கொடுப்போம்.

சரி! நமக்கு வங்கியிலிருந்து பணம் கடனாகப் பெறவேண்டும். எப்படிப் பதில் சொல்வது? 7-ம் வீடு நாம் ஒருவருடன் செய்யும் Transaction-ஐக் குறிக்கிறது. அதாவது 7-ம் வீடு வங்கியைக் குறிக்கிறது. நமக்குப் பணம் கொடுப்பதென்றால் வங்கியின் பணம் குறைகிறது அல்லவா? நமது பணம் இருப்புக் கூடுகிறது. 7-ம் வீட்டிற்குப் 12-ம் வீடு வங்கியின் பண இழப்பையும் 11-ம் வீடு அல்லது 2-ம் வீடு நாம் பணம் பெறுதலையும் குறிக்கிறது. 6-ம் வீட்டு அதிபதி 2-ம் வீட்ட்டிலோ அல்லது 2-ம் வீட்டின் அதிபதி 6-ம் வீட்டிலோ இருக்குமேயாகில் ஒருவருக்கு வங்கியிலிருந்து பணம் கிடைக்குமெனக் கூறலாம். நாம் இத்துடன் 6-ம் வீட்டைப் பற்றி நிறுத்திக் கொள்வோம்.

மற்றவைகளை அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

ஆறாம் வீட்டைப் பற்றி ஓரளவிற்கு போன பாடத்தில் எழுதி இருந்தோம். மீதியை இந்தப் பாடத்தில் எழுதுவோம். 6-ம் வீடு நம்முடைய எதிரிகளைக் குறிக்கிறது அல்லவா? அதில் பாப கிரகங்கள் இருப்பார்களேயாகில் எதிரிகள் ஓரளவிற்குக் குறைவாகவே இருப்பர். நல்ல கிரகங்கள் இருந்தால் எதிரிகள் அதிகம் இருப்பர். 6-ம் வீட்டில் சூரியன் இருந்தால் ஒருவர் அரசியலில் பெயர் வாங்க முடியும். 6-ம் வீடு எதிராளியின் தோல்வியைக் குறிக்கும் வீடல்லவா? சூரியன் அரசியலுக்குண்டான கிரகம். 6-ம் வீட்டிலுள்ள சூரியனை சனி பார்த்தால் இருதய சம்மந்தமான நோய் வரக் கூடும். 6-ம் வீட்டில் சந்திரன் இருந்தால் இளம் வயதில் உடல் உபாதை நிறைய இருக்கும். அது சிலருக்கு பாலாரிஷ்டமாகக் கூட இருக்கும். சமையல்கலையில் வல்லவராக இருப்பர். 6-ம் வீட்டில் செவ்வாய் இருந்தால் எதிரிகளை எளிதாக வெல்லுவர். 6-ம் வீட்டில் புதன் இருந்து ராகு, சனி, செவ்வாய் போன்ற கிரகங்களின் சேர்க்கையோ அல்லது பார்வையோ இருக்குமேயாகில் நரம்புசம்மந்தமான வியாதிகளோ, சித்தப் பிரமையோ ஏற்படக் கூடும். குரு இருந்தால் மரியாதைக் குறைவு ஏற்படும். சிலர் துர்தேவதைகளை வசியம் செய்வதில் ஈடுபடுவர். சுக்கிரன் இருந்து கெட்ட கிரகங்களின் சேர்க்கையோ அல்லது பார்வையோ இருக்குமேயாகில் பிறபெண்களுடன் தொடர்பு இருக்கும். சனி இருந்தால் இவருக்கு எதிரிகள் இருக்க மாட்டார்கள். 6-ம் வீடு செய்யும் வேலையையும் குறிக்கிறது அல்லவா? 6-ம் வீட்டில் சனி இருந்தால் இரும்புத் தொழில், சுரங்கவேலைகள் ஆகியவற்றில் வேலை செய்வர். ராகு பாபியருடன் சேர்ந்து இருந்தால் அந்தரங்க உறுப்புக்களில் வியாதி இருக்கும். ராகுவுடன் சனியும் சந்திரனும் சேர்ந்து இருந்தால் ஹிஸ்டீரியா நோயினால் அவதிப் படுவர். கேது 6-ம் வீட்டில் இருப்பது அவ்வளவு கெடுதல் இல்லை.

6-ம் வீட்டிற்கதிபதி லக்கினத்தில் லக்கினாதிபதியுடன் இருப்பாரேயாகில் அந்த ஜாதகர் நோயினால் அவதிப்படுவர். அவர்களுடன் ராகுவும் சேர்வாரேயாகில் அந்த ஜாதகர் வீட்டில் களவு போகும். 6-ம் வீட்டிற்கதிபதி 3-ம் வீட்டில் இருந்தால் அந்த ஜாதகருக்கும் அவர் இளைய சகோதரத்திற்கும் நல்லுறவு இருக்காது. காது, தொண்டை சம்மந்தமான வியாதி இருக்கும். பொதுவாக 6-ம் வீட்டை வைத்துத்தான் ஒருவருக்கு வரக்கூடிய வியாதிகளைச் சொல்ல வேண்டும். வரப்போகும் வியாதிகளைப் பற்றி Medical Astrology- என்ற தலைப்பில் பார்ப்போம். இப்போது இத்துடன் 6-ம் வீட்டை முடித்துக் கொள்வோம். அடுத்த வீடான 7-ம் வீட்டைப் பற்றிப் பார்ப்போம்.

7-ம் வீட்டிற்குப் பல காரகத்துவங்களுண்டு. அதில் தலையானது விவாஹம். அதனால் தான் 7-ம் வீட்டை களத்திரஸ்தானம் என்பார்கள். முதலில் நாம் திருமணத்தைப் பற்றி விவாதிப்போம். திருமணம் என்றால் என்ன? அதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். திருமணமென்பது ஒரு சட்டபூர்வமான பிணைப்பு. அதாவது கணவன் - மனைவி என்ற உறவு சட்டபூர்வமாக்கப்படுகிறது. இந்த சட்டபூர்வமான பிணைப்பைக் குறிப்பது 7-ம் வீடு. இந்த திருமணம் என்ற பந்தத்தால் குடும்பத்தில் ஒரு நபர் கூடுகிறார். ஒருவராக இருந்தவர் மனைவியால் இருவராகிறார். இந்த நபர் அதிகரிப்பதைக் குறிப்பது 2-ம் வீடு. அந்த தம்பதியினர் திருமணத்தால் கூடி மகிழ்கின்றனர். அந்த தம்பதியினர் கூடி மகிழ்தலைக் குறிப்பது 11-ம் வீடு. ஆக 2, 7, 11-ம் வீட்டைக் குறிக்கின்ற கிரகங்கள் தசா, புக்திக் காலத்தில்தான் ஒருவருக்குத் திருமணம் ஆகிறது. முதலில் நாம் திருமணத்தைப் பற்றி விரிவாக விவாதித்த பின்னர் மற்ற காரகத்துவங்களைப் பற்றி

RangaRakes tamilnavarasam.com

திருமணத்தைப் பற்றி விரிவாக விவாதித்த பின்னர் மற்ற காரகத்துவங்களைப் பற்றிப் பார்ப்போம்.

நமது கிரந்தங்கள் ஒருவருக்குத் திருமணம் ஆவதற்கு என்னென்ன கிரக சேர்க்கை களை கூறுகின்றனவென்று பார்ப்போம்.

1. சந்திரனும், சுக்கிரனும் fruitful signs - என்று சொல்லப் படுகின்ற கடகம், விருச்சிகம், மீனம், ரிஷபம் ஆகியவற்றில் இருத்தல்.

2. 7-ம் வீட்டின் அதிபதி மேற்கண்ட வீடுகளில் இருத்தல்.

3. குரு அல்லது சுக்கிரன் 2 அல்லது 7 அல்லது 11-ம் வீடுகளில் இருத்தல்.

4. லக்கினாதிபதியும் 7-க்குடையவனும் சேர்ந்து இருத்தல்.

5. சுப கிரகங்கள் 2 அல்லது 7 அல்லது 11-ம் வீடுகளில் இருத்தல்.

இவ்வாறாகப் பலகிரக சேர்க்கைகளை நமது கிரந்தங்கள் சொல்லுகின்றன. அதாவது திருமணத்திற்குண்டான வீடுகளான 2, 7,11 வீட்டில் நல்ல கிரகங்கள் அல்லது அந்த வீட்டதிபர்கள் நல்லவருடன் சேர்க்கை பெற்றிருப்பின் திருமணம் ஆகுமென்பது உறுதி.

திருமணம் தாமதமாவதற்கான காரணங்கள்

1. சனி 1 அல்லது 5 அல்லது 7-ம் வீட்டில் இருத்தல். சனி லக்கினத்தில் இருந்தால் 7-ம் பார்வையாக 7-ம் வீட்டைப் பார்க்கிறார் அல்லவா? அதனால் திருமணம் தாமதம் ஆகும்.

2. 5-ம் வீட்டில் சனி யிருந்தால் அவர் திருமணத்திற்குண்டான வீடுகளான 2, 7, 11 ஆகிய வீடுகளை பார்க்கிறார். ஆகவே திருமணம் தாமதம் ஆகிறது.

3. சனி களத்திரமான 7-ம் வீட்டில் இருந்தால் திருமணம் தாமதம் ஆகத்தான் செய்யும்.

4. களத்திரஸ்தானமான 7-ம் வீட்டில் ராகு, செவ்வாய் போன்ற பாபக் கிரகங்கள் இருத்தல் திருமணத்தைத் தாமதப் படுத்தும்.

இதைத்தவிர 7-ம் வீடு விட்டு, விட்டுச் செல்லும் பயணத்தைக் குறிக்கிறது. 3-ம் வீடு குறுகிய பயணத்தையும், 9-ம் வீடு நீண்ட பயணத்தையும் குறிப்பதுபோல் 7-ம் வீடு விட்டு விட்டுச் செல்லும் பயணத்தையும் குறிக்கிறது. இன்னும் விளக்கமாகச் சொல் லப் போனால் ஒருவர் சென்னையிலிருந்து டெல்லி செல்கிறார் எனக் கொள்ளுங் கள். இது பயணத்தைக் குறிக்கிறது. இந்த மாதிரிப் பயணம் செய்வதை 3-ம் வீடும் 9-ம் வீடும் குறிக்கும். எப்படி? 3-ம் வீடு சொந்த வீட்டிலிருந்து இடம் பெயர்தலைக் குறிக்கிறது. 9-ம் வீடு நீண்ட பயணத்தைக் குறிக்கிறது. சரி! ஒருவர் நேராக டெல்லி செல்லாமல் 4 அல்லது 5 இடங்களைப் பார்த்துவிட்டு டெல்லி செல்கிறார் எனக் கொள்ளுங்கள். அப்போது 7-ம் வீடு சம்மந்தப் பட்டு இருக்கும். சிலர் ஊர் ஊராக தெய்வ தரிசனம் செய்வார்கள். அவர்களுக்கு அப்போது 3,7,9-ம் வீடுகளைக் குறிக்கின்ற தசா, புக்தி, அந்தரங்கள் நடந்து கொண்டிருக்கும். அப்போதுதான் அந்த மாதிரி ஊர், ஊராகப் பயணம் செய்ய முடியும்.

7-ம் வீடு மாரகத்தையும் குறிக்குமென நாம் ஏற்கனவே எழுதி இருக்கிறோம். ஒருவருக்கு ஆயுள் முடியும்போது 7-ம் வீட்டின் அதிபதியின் தசையோ அல்லது

RangaRakes tamilnavarasam.com

7-ல் உள்ள கிரகங்களின் தசையோ, புக்தியோ நடந்து கொண்டிருந்தால் அவர் மரணத்தைக் கொடுப்பார். இதைப் போன்று பல காரகத்துவங்கள் 7-ம் வீட்டிற்கு இருக்கின்றன.

7-ம் வீட்டு அதிபதி ஒவ்வொரு வீடுகளிலும் இருந்தால் என்ன பலன் என்று பார்ப்போம்.
* லக்கினத்தில் இருந்தால் ஜாதகர் தமக்கு நன்றாகத் தெரிந்தவரை மணம் முடிப்பர்.

* 2-ம் வீட்டில் இருந்தால் தமது கணவன் அல்லது மனைவி மூலம் பண வரவு இருக்கும். பணவரவு என்றால் சொத்துடன் வர வேண்டும் என்று என்ன வேண்டாம். வேலையிலிருந்தாலும் பண வரவுதான். சரி! இரண்டாம் வீடு தனஸ்தானம்; 7-வது வீடு கணவன் அல்லது மனைவியைக் குறிக்கிறது. ஆகக் கணவன் அல்லது மனைவி மூலமாகப் பண உதவி கிடைக்கும் எனக் கூறிவிட்டோம். அவ்வாறு 7-ம் வீட்டதிபனை பாவக்கிரகங்கள் பார்த்தாலோ அல்லது சேர்ந்து இருந்தாலோ ஒருவர் மனைவியை தவறான வழியில் பணம் சம்பாதிக்கும்படி செய்யலாம்.

* 7-ம் வீட்டதிபன் 3-ல் இருந்தால் இளைய சகோதரத்தினர் வெளிநாட்டில் இருக்கலாம். பாவக் கிரகங்களின் சேர்க்கை இருந்தால் இளைய சகோதரத்தின் கணவனுடனோ அல்லது மனைவியுடனோ தொடர்பு வைத்து இருப்பர்.

* 4-ல் இருந்தால் மிக சந்தோஷமான குடும்ப வாழ்க்கை அமையும். ஜாதகரே நன்கு படித்து இருப்பர்.

* 5-ல் இருந்தால் காதல் திருமணம் அமைய வாய்ப்பு உண்டு. நல்ல வசதியான இடத்திலிருந்து கணவனோ அல்லது மனைவியோ அமைவர்.

* 6-ம் வீட்டில் 7-ம் வீட்டு அதிபதி இருப்பது அவ்வளவு நல்லதல்ல; திருமண வாழ்க்கை சந்தோஷமாக அமையாது. ஏனெனில் 7-ம் வீட்டிற்கு மறைவு ஸ்தானம் 6-ம் வீடல்லவா? மாமன் மகள் அல்லது மகனை மணம் செய்து கொள்ளக் கூடும். 6-ம் வீடு தாய் மாமனை குறிக்கிறது அல்லவா?

* 7-ம் வீட்டில் இருந்தால் கணவன் அல்லது மனைவி நல்ல விதமாக அமைவாள்.

* 7-ம் வீட்டின் அதிபதி குரு, சுக்கிரனாக இருந்து 8-ம் வீட்டில் இருந்தால் ஜாதகரை விட உயர்வான இடத்திலிருந்து பெண் அல்லது பையன் கிடைக்கும். பொதுவாகத் திருமணவாழ்க்கை நன்றாக இருக்காது. ஏனெனில் 8-ம் இடம் மறைவு ஸ்தானம் அல்லவா?

* 7-ம் வீட்டிற்கதிபதி 9-ம் வீட்டில் இருந்தால் ஜாதகருடைய தகப்பனர் வெளிநாட்டில் இருக்கலாம். அல்லது ஜாதருக்கு வெளிநாட்டுத் தொடர்புகாரணமாக அதிர்ஷ்டம் அடிக்கலாம். 9-ம் வீடு வெளி நாட்டுப் பயணத்தைக் குறிக்கிறது அல்லவா? 9-ம் வீடு தர்மத்தையும், ஒரு நெறியான வாழ்க்கையும் குறிக்கிறது அல்லவா? ஆகவே தெய்வ நம்பிக்கையுடன் மதத்தில் பற்றுள்ள வாழ்க்கைத் துணை அமையக் கூடும்.

* 10-ம் வீட்டில் இருந்தால் ஜாதகர் வெளி நாட்டில் உத்தியோகம் கிடைத்து பெயருடனும், புகழுடனும் இருப்பர். அல்லது மிகவும் நல்ல கௌரவத்துடன் கூடிய வாழ்க்கைத் துணை அமையும். வாழ்க்கைத் துணையால் வசதியும் பெருகும்.

* 11-ம் வீட்டில் இருந்தால் நல்ல பண வசதியுள்ள வாழ்க்கைத்துணை அமையும். இன்னும் சிலருக்கு அவர்கள் நண்பர்களே வாழ்க்கைத்துணையாக அமையும். 11-ம் வீடு நண்பர்களைக் குறிக்கும் வீடு அல்லவா!

* 12-ம் வீட்டில் இருந்தால் வாழ்க்கை கசக்கும். வாழ்க்கை சுகமிருக்காது. பொதுவாக 7-ம் வீட்டில் 9-ம் வீட்டு அதிபதியோ அல்லது நல்ல கிரகங்களோ இருக்குமேயாகில் வாழ்க்கை இனிக்கும். மனதுக்கொத்த தம்பதி கிடைக்கும். ஒருவருக்கு 7-ம் வீட்டு அதிபதியும், சுக்கிரனும் பெண்ராசியில் இருக்குமேயாகில் அவர் மனதிற்கேற்றபடி மனைவி அமைவாள்.

7-ம் வீட்டில் சனி, ராகு, செவ்வாய் போன்ற பாப கிரகங்கள் இருப்பது விரும்பத்தக்கது அல்ல; ஒருவர் ஜாதகத்தில் சனியும், சந்திரனும் சேர்ந்து இருந்தால் அதற்கு "புனர்ப்பூ" என்று பெயர். இது ஒரு தோஷம் ஆகும். இது கல்யாணம் ஆவதற்குப் பல தடங்கல்களைக் கொடுக்கும். நிச்சயம் ஆனால்கூட திருமணம் ஆவதற்குப் பல தடங்கல்களைக் கொடுக்கும். சனியும் புதனும் 7-ம் வீட்டில் இருந்தால் ஒரு விதவையோ அல்லது மனைவி இறந்த ஆண்மகனோ வாழ்க்கைத் துணைவராக அமைவர். 7-ம் வீடு பார்களால் பாதிக்கப்பட்டு அங்கு புதனும் இருப்பாரேயாகில் 2 தாரம் அமையும். பொதுவாக 7-ம் வீட்டில் 6-ம் வீட்டு அதிபதியோ அல்லது 8-ம் வீட்டு அதிபதியோ இருப்பது அமைதியான வாழ்க்கைக்குக் குந்தகம் விளைவிக்கிறது. அதேபோண்று 6-ம் வீட்டு அதிபதியும் 7-ம் வீட்டு அதிபதியும் சேர்ந்து இருந்தால் அவர்கள் மனத்தாங்கலினால் பிரியும் சூழ்நிலை ஏற்படுகிறது. திருமண வாழ்க்கை சோபிப்பது இல்லை.

ஒரு ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். கன்னியா லக்கினம். லக்கினத்தில் சனியும் ராகுவும்; 3-ம் வீடான விருச்சிகத்தில் சூரியன், சுக்கிரன்,புதன்; 4-ம் வீட்டில் செவ்வாய்; 7-ம் வீட்டில் குரு; 7-ம் வீட்டில் சந்திரன், ராகு. 7-ம் வீட்டின் அதிபதி 6-ம் வீட்டில் இருக்கிறார். 7-ம் வீட்டிற்கு எதிமறையான பலன்களைக் கொடுக்கும் வீடல்லவா? 8-ம் வீட்டில் அதிபதியான் செவ்வாய் தனுசிலிருந்து 7-ம் வீட்டைப் பார்க்கிறார். 6-ம் வீட்டின் அதிபதியான சனியும் லக்கினத்திலிருந்து 7-ம் வீட்டைப் பார்க்கிறார். 7--ம் வீட்டிற்கு இவ்வளவு பாதகம் இருப்பதனால் அவர்கள் திருமண வாழ்வு அமைதியாக இல்லை; பிரிய நேரிட்டது.

7-ம் வீட்டிற்கு 6-ம் வீட்டின் சம்மந்தமில்லையென்றால் திருமணவாழ்க்கை மிக மோசமாக இருப்பதில்லை; 8-ம் வீடு சம்மந்தப் பட்டால் சண்டை பூசலுடன் வாழ்க்கையை ஓட்டுகின்றார்கள்.

பெண்கள் ஜாதகத்தில் 7-ம் வீட்டைப் போலவே 8-ம் வீடும் மிக முக்கியமானதாகும். ஏனெனில் 8-ம் வீட்டை மாங்கல்ய ஸ்தானம் என்றழைப்பர். 7, 8 வீடுகளில் செவ்வாய், ராகு,சனி ஆகியவை மூன்றும் இருக்குமேயாகில் அப்பெண்விதவையாவாள். செவ்வாய் மட்டும் 7-ல் இருந்து சுபர்களின் பார்வை இல்லையென்றால் அந்தத் தம்பதியினர் சண்டையிட்டுக் கொள்வார்கள்.

7-ம் வீட்டின் அதிபதி 5-ல் இருந்தால் காதல் திருமணத்திற்கு வாய்ப்பு அதிகமென்று மேலே எழுதியிருந்தோம். 7-ம் வீட்டின் அதிபதி 5-ம் வீட்டில் இருந்தால் சந்தோஷமான குடும்ப வாழ்க்கையைக் கொடுப்பதில்லை; 7-ம் வீட்டில் அதிபதி 5-ம் வீட்டிலும் 5-ம் வீட்டு அதிபதி 7-ம் வீட்டிலும் பரிவர்த்தனை யோகமாகும். யோகமென் றால் அதிர்ஷ்டம் என்று அர்த்தமில்லை. மரண யோகத்தையும் யோகமென்றுதான் குறிப்பிடுகிறோம். யோகமென்றால் கிரகச் சேர்க்கை என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். கீழே ஒரு ஜாதகத்தைக் கொடுத்துள்ளோம். இவர்கள் திருமண நாளிலிருந்து சண்டைதான் போட்டுக் கொள்கிறார்கள். திருமணம் நடந்து 2 - வருஷம்தான் ஆகிறது. அடிதடி - சண்டை; போலீஸ் ஸ்டேஷன் வரையிலும் போய்விட்டது. இப்போது இருவரும்

RangaRakes tamilnavarasam.com

Divorce - க்கு மனுச் செய்துள்ளார்கள். ஜாதகத்தைப் பாருங்கள்.

ரிஷபம் லக்கினம்; 4-ம் வீட்டில் (சிம்மத்தில்) சந்திரன், கேது; 5-ல் செவ்வாய்; 6-ம் வீட்டில் ( துலாத்தில்) குரு, சுக்கிரன் ; 7-ல் சூரியன், புதன்; 10-ல் (கும்பத்தில்) ராகு.

7-ம் வீட்டின் அதிபதி செவ்வாய் புதனுடைய வீட்டிலும் அதாவது கன்னியிலும், 5-ம் வீட்டின் அதிபதி புதன் 7-ம் வீட்டிலும் பரிவர்த்தனை ஆகி யிருக்கிறார்கள் பார்த்தீர் களா! இந்த தோஷமானது அவர்களை விவாகரத்துவரைக்கும் கொண்டுபோய் விட்டது. இதில் இன்னொன்று கவனிக்க வேண்டிய விஷயம். புதனானவர் 7-ம் வீட்டுடன் நிறைய சம்மநதப் பட்டு விட்டார். 7-ம் வீட்டில் இருப்பதோடு 7-ம் வீட்டின் அதிபதியும் புதன் வீடான கன்னியில் இருக்கிறார். ஆகவே 7-ம் வீடானது புதனுடன் நிறைய சம்மந்தப் பட்டு விட்டது. புதன்தான் இரட்டைக் குணம் உடைய வராயிற்றே. ஆக இரண்டு திருமணத்தைக் கொடுக்கும் யோகத்தை அளிக்கிறார். 7-ல் சூரியன் இருந்தாலும் திருமணவாழ்க்கை சுகப்படாது என்ற கருத்தும் உண்டு. இனி 7-ம் வீட்டில் கிரகங்கள் இருந்தால் என்ன பலன் என்று பார்ப்போம்.

சூரியன் : திருமண வாழ்க்கை சுகப்படாது. பெண்களுக்கு இருந்தால் இந்த மனக்கசப்பு விவாக ரத்து வரைக்கும் போய்விடும்.

சந்திரன் : காமம் மிகுந்து இருப்பார். வாழ்க்கைத் துணைவர் அல்லது துணைவி அழகாக இருப்பார்.

செவ்வாய் : திருமணவாழ்க்கை சண்டை நிறைந்ததாக இருக்கும்.

புதன் : பாபருடன் இருந்தால் 2-வது திருமணம் உண்டு. வாழ்க்கைத் துணை கெட்டிக்காரத்தனம் மிகுந்தவராக இருப்பர்.

குரு : நல்ல குணமுள்ள வாழ்க்கைத் துணை கிடைக்கும். வாழ்க்கை சந்தோஷமாக இருக்கும்.

சுக்கிரன் : மனதுக்கு இனிமையான வாழ்க்கை அமையும். காமம் மிகுந்தவர்.

சனி : திருமணம் தாமதமாகும். திருமண வாழ்க்கையும் திருப்திகரமாக இருக்காது.

ராகு : திருமண வாழ்க்கை சந்தோஷமாக இருக்காது. மனைவி வியாதி உள்ளவளாக இருப்பாள். ஆணாக இருந்தால் கள்ளத்தனமான தொடர்பு இருக்கும்.

கேது : திருமண வாழ்க்கை சந்தோஷமாக இருக்காது. ஆணாக இருந்தால் கள்ளத்தனமான தொடர்பு இருக்கும்.

இதுவரையில் 7-வது வீட்டைப் பற்றிப் பார்த்தோம். இனி 8-ம் வீட்டைப், பற்றி அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

RangaRakes tamilnavarasam.com

இதுவரையில் 7 வீடுகளைப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள். இப்போது 8-ம் வீட்டைப் பற்றிப் பார்க்கலாம். பொதுவாகவே 8-ம் வீடு என்பது துஸ்தானம் என்று கூறுவார்கள். 8-ம் வீட்டை வைத்து ஒருவரின் ஆயுள், தோல்விகள், துன்பங்கள், அகௌரவமான செயல்கள், தடைகள், அபகீர்த்தி ஆகியவற்றைக் கூறலாம். பெண்களுக்கு 8-ம் வீடென்பது மாங்கல்யஸ்தானம் ஆகும். ஒருபெண் தீர்க்க சுமங்கலியாக இருப்பாளா அல்லது விதவையாக ஆவாளா என்றும் 8-ம் வீட்டை வைத்துக் கூறலாம். ஒருவரின் ஆயுளைக் கூறும்போது 8-ம் வீட்டுடன் லக்கினத்தையும், 3-ம் வீட்டையும் பார்த்துத்தான் கூறவேண்டும். அப்போதுதான் சரியாக வரும்.

இவைகளைத்தவிர மூதாதையர் சொத்துக்கள் கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்பதையும் இந்த வீட்டை வைத்துத்தான் கூறவேண்டும். மற்றும் உயில்கள், இன்ஷூரன்ஸ், பிராவிடண்ட் பண்டு (Provident Fund), Gratuity, ஆகியவைகள் கிடைக்குமா அல்லது கிடைக்காதா என்பது பற்றியும் இந்த வீட்டை வைத்துத்தான் கூறவேண்டும்.

ஒருவருக்கு மரணம் இயற்கையானதா அல்லது துர்மரணமா என்பது பற்றியும் இந்த வீட்டை வைத்துத்தான் கூறவேண்டும். ஒருவருடைய ஜாதகத்தில் லக்கினாதிபதி 8-ல் இருந்தாலோ அல்லது 8-ம் வீட்டின் அதிபதியுடன் சேர்ந்து இருந்தலோ அல்லது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டாலோ அவரின் மரணத்திற்கு அவரே காரணமாகிறார். ஒருவர் ஜாதகத்தில் 3-ம் வீட்டு அதிபர் 8-ம் வீட்டில் இருக்கிறார் எனக்கொள்ளுங்கள். 3-ம் வீடு என்பது என்ன? 3-ம் வீடு குறுகிய பயணத்தைக் குறிக்கிறது அல்லவா? ஆகவே அவர் பயணம் செய்யும் போது மரணம் சம்பவிக்கலாம். 12-ம் வீட்டின் அதிபதி 8-ல் இருக்கிறார் எனக்கொள்ளுங்கள். 12-ம் வீடு என்பது அயலூரினையோ அல்லது அயல் நாட்டினையோ அல்லது மருத்துவமனையையோ குறிக்கிறது அல்லவா? ஆகவே அந்த இடத்தில் மரணம் சம்பவிக்கலாம். 9-ம் வீட்டுக்காரர் 8-ம் வீட்டில் இருந்தால் நீண்ட பயணம் செய்யும்போதோ அல்லது அயல் நாட்டிலோ மரணம் சம்பவிக்கலாம்.

மரணத்திப் பற்றிக் கூற முதலில் இவர் எவ்வளவு ஆண்டுகள் வாழ்வார் என்று கண்டு பிடிக்க வேண்டும். இது அவ்வளவு எளிதான காரியமல்ல; இதற்குப் பல கணித முறைகள் இருக்கின்றன. அவைகளை நாம் இப்போது சொல்லிக் கொடுக்க இயலாது. பாடம் முழுவதையும் முடித்தபின் அவைகளைப் பார்ப்போம். 8-ம் வீடு ஜல ராசியில் வருமானால் ஒருவருக்கு நீரால் மரணம் வரக் கூடும். நெருப்பு ராசியாக வருமேயானால் நெருப்பால் அபாயமுண்டு. துர்மரணமும் சம்பவிக்கும்.

பொதுவாக சனியானவர் எதையுமே மெதுவாகக் கொடுக்கக் கூடியவர். அவர் 8-ல் இருந்தால் ஆயுள் தீர்க்கமென்று கூறலாம். மரணமென்று வரும்போது மிகவும் கஷ்டத்தைக் கொடுத்துவிட்டுக் கொஞ்சம், கொஞ்சமாகத்தான் கொல்வார். சிலர் வெகு நாட்கள் படுத்த படுக்கையாக இருப்பர். அவர்களுக்கெல்லாம் சனி 8-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டு இருப்பார். குரு 8-ல் இருந்தால் மரணம் இயற்கையானதாக இருக்கும். கஷ்டப் படாமல் இறப்பர். செவ்வாய் இருந்தால் அது துர்மரணமாக இருக்கும். விபத்தில் காலமாகலாம். அதனால்தான் 8-ல் செவ்வாய் இருந்தால் தோஷம் என்று கூறுகிறார்கள். பெரியம்மையால் முன்பெல்லாம் மரணமடைவார்கள் தெரியுமா? 8-ம் வீட்டுடன் செவ்வாய்

RangaRakes tamilnavarasam.com

பெரியம்மையால் முன்பெல்லாம் மரணமடைவார்கள் தெரியுமா? 8-ம் வீட்டுடன் செவ்வாய் சம்மந்தப் பட்டால் அம்மை நோயால் மரணம் சம்பவிக்கக் கூடும். ஒருவருக்கு நெருப்பு ராசி 8-ம் வீடாக வருகிறது எனக்கொள்ளுங்கள். அங்கு செவ்வாய் இருந்தால் செருப்பினாலோ அல்லது கலகங்களினாலோ அல்லது வெடிமருந்துகளினாலோ மரணம் சம்பவிக்கும். அதே வீடு ஜலராசியாகி அங்கு செவ்வாய் இருந்தால் நீரில் மூழ்கி மரணம் சம்பவிக்கும். பொதுவாக ஆயுளைப்பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ள C.G.ராஜன் அவர்கள் எழுதிய "ஜாதக ராஜ பாவ இருவாஷி - பாகம் நெ. 1 என்னும் ஆயுள் பாவம்" என்ற புத்தகத்தைப் படிக்கவும். நாம் எல்லவற்றையும் இங்கு எழுதிவிட முடியாது. அதில் விரிவாக மரணத்தைப் பற்றி எழுதி இருக்கிறார்கள்.

மரணம் என்பது ஒருவரின் வாழ்வின் முடிவில் வருவது. அதற்குமுன் அவர் வாழ்ந்தாக வேண்டும். ஆகவே 8-ம் வீட்டின் மற்ற காரகத்துவங்களையும் பார்ப்போம். நாம் வியாபாரம் செய்கின்றோம் என்று கொள்ளுங்கள். ஒருவரிடம் வாங்கி மற்றொரு வருவரிடம் விற்பனை செய்கிறோம். நாம் வாங்குபவரையும், நம்மிடம் வாங்குபவரையும் குறிப்பது 7-வது வீடு. அவருடைய தனஸ்தானத்தைக் குறிப்பது 7-க்கு 2-ம் வீடான 8-ம் வீடு. 8-ல் நல்ல கிரகங்கள் இருந்தால் அவருடைய பொருளாதாரம் நன்றாக இருக்குமென்றும் 8-ல் பாப கிரகங்கள் இருந்தால் அவருடைய பொருளாதாரம் வளமற்று இருக்குமென்றும் கூறலாம். நீங்கள் ஒருவருடன் கூட்டு வியாபரம் செய்ய விரும்புகிறீர்கள் எனக் கொள்ளுங்கள். உங்கள் பாகஸ்தரைக் குறிப்பது 7-ம் வீடு. அவருடைய தனத்தைக் குறிப்பது 7-க்கு இரண்டாம் வீடாகிய 8-ம் வீடு. 8-ம் சுபக்கிரகங்கள் இருந்தால் அவர் இந்த கூட்டு வியாபாரத்தால் நன்மை பெறுவார் எனக் கொள்ளலாம். கெட்ட கிரகங்கள் இருந்தால் இந்த வியாபாரத்தால் அவருக்கு அனுகூலமில்லை எனக் கூறிவிடலாம்.

8-ம் வீடு என்பது இந்த பிரபஞ்சத்திலுள்ள மறைந்திருக்கும் உண்மைகளைக் குறிக்கிறது. அங்கு குருவோ அல்லது சனியோ ( இரண்டும் வேதாந்தத்தைக் குறிக்கின்ற கிரகங்கள்) இருக்குமேயானல் இந்தப் பிரபஞ்சத்திலுள்ள உண்மைகளைக் கண்டறிய முற்படுவார். புதனும் அப்படித்தான். புதன் மிகவும் புத்திசாலித்தனமான கிரகம் அல்லவா? 8-ல் புதனிருக்க அவரும் பிரபஞ்ச ரகசியங்களைக் கண்டறிய முற்படுவார். ஜோதிட சாஸ்த்திரமும் பிரபஞ்ச ரகசியம் தானே. அதில் உள்ள ரகசியங்களையும் கண்டறிய முற்படுவார்.

4-வது வீடென்பது ஒருவரின் பூர்வீக சொத்தைக் குறிக்கிறது. அதில் சுபக்கிரகங்கள் இருந்தால் பூர்வீக சொத்துக் கிடைக்கும். எப்படி? ஒருவர் ஜாதகத்தில் 9-ம் வீடு தகப்பனாரைக் குறிக்கிறது அல்லவா? 8-ம் வீடென்பது பூர்வீக சொத்தையும் குறிக் குமென்று கூறினோம். 9-ம் வீட்டிற்கு 8-ம் வீடு எது? 4-ம் வீடல்லவா? ஆகவே 4-ம் வீட்டில் சுபக் கிரகங்கள் இருந்தால் ஒருவருக்கு பூர்வீக சொத்துக் கிடைக்குமென்று கூறலாம்.

9-ம் வீடு தகப்பனாரைக் குறிக்கிறது அல்லவா? தகப்பனார் தன் பணத்தை Shares, Securities போன்றவற்றில் முதலீடு செய்து இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். 12-ம் வீடு என்பது Investments - களைக் குறிக்கிறது. தகப்பனாரின் Investments - களைக் குறிப்பது எந்த வீடு? 9-ம் வீட்டிற்குப் பன்னிரண்டாம் வீடு. அதாவது 8-ம் வீடு. ஆக 8-ம் வீட்டில் சுபக்கிரகங்கள் இருந்தால் ஒருவர் தன் தகப்பனார் செய்து வைத்திருந்த Investments அவருக்குக் கிடைக்குமென்று கூறலாமல்லவா? ஆக 8-ம் வீட்டை துஸ்தானமென்று கூறி ஒதுக்குதல் எவ்வாறு பொருந்தும்? 8-ம் வீட்டில் சுபக்கிரகம் இருந்தால் அந்த கிரகம் மறைவு ஸ்தானத்தில் இருக்கிறது என்று கூறி அந்த கிரகம் அந்த தசாகாலங்களில் நல்லதைச் செய்யாது என்று கூறுவார்கள். அந்த வாதம் சரியல்ல என்பது நமது வாதம். அதேபோல் ஒருவருக்கு 8-ம் வீட்டில் பாப கிரகங்கள் இருந்தால் அந்த கிரகத்தின் தசா, புக்திக் காலங்களில் அவருடைய பிதுராஜித சொத்துக்கள் அழியக் கூடும்.

RangaRakes
tamilnavarasam.com

தாயாரைக் குறிப்பது 4-ம் வீடு. 5-ம் வீடென்பது லாட்டரி, ரேஸ், Speculation துறை ஆகியவற்றைக் குறிக்கிறது என்றும் முன்பே எழுதி இருக்கிறோம். 4-ம் வீட்டிற்கு 5-ம் வீடு என்பது எது? 8-வது வீடு. ஆக ஒருவர் ஜாதகத்தில் 8-ம் வீட்டின் அதிபதியின் தசையோ அல்லது புக்தியோ அல்லது 8-ல் உள்ள கிரகத்தின் தசையோ அல்லது புக்தியோ நடக்கும்போது ஒருவரின் தாயாருக்கு லாட்டரி, ரேஸ் போன்ற வற்றிலிருந்து பணம் கிடைக்க வழியுண்டு. ஆக 8-ம் இடம் என்பது துஸ்தானமென்று ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. 8-ம் வீட்டைப் பற்றிய மற்றவைகளை அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

RangaRakes tamilnavarasam.com

எட்டாம் வீட்டதிபதி ஒவ்வொருவீட்டிலும் இருந்தால் என்ன பலன் என்று பார்ப்போம்.

**முதல் வீட்டில்** : கடன் தொல்லையால் அவர் அவதிப் படுவார். துரதிஷ்டசாலி. உடல் மிகவும் பலகீனமாக இருக்கும்.

**2-ம் வீட்டில்** : பலவிதமான தொந்தரவுகள் இருந்து வரும். கண், மற்றும் பல் தொந்தரவுகள் இருந்து வரும். குடும்பத்தில் சண்டையும். சச்சரவுகளும் இருந்து வரும்.

**3-ம் வீட்டில்** : காது சம்மந்தமான பிரச்சனைகள் இருந்துவரும். இளைய சகோதரத்துடன் மனஸ்தாபங்களும், சண்டையும் இருந்து வரும்.

**4-ம் வீட்டில்** : இருந்தால் மனதின் நிம்மதி பாதிக்கப்படும். பணப்பிரச்சனையுடன் மற்ற பிரச்சனைகளும் இருந்து வரும். தாயாரின் உடல் நிலையில் பாதிப்பு இருந்து வரும். ஸ்திர சொத்துக்களினாலும் தொந்தரவு இருந்து வரும். 8-ம் வீட்டின் அதிபதியுடன் இன்னும் சில பாபக் கிரகங்கள் சேர்ந்தால் ஸ்திரசொத்துக்கள் விற்க வேண்டிய நிலை உண்டாகும். 4-ம் வீடு ஒருவரின் வளர்ப்பு மிருகங்களையும் குறிக்கிறது அல்லவா? அவைகளுக்கும் வியாதி வந்து தொந்தரவு ஏற்படும். 4-ம் வீட்டில் பாப கிரகங்கள் இருந்தால் அவைகள் ஜீவன ஸ்தானமான 10-ம் வீட்டைப் பார்க்கும் அல்லவா? பாப கிரகங்கள் பார்த்தால் என்னவாகும்? தொழிலில் தொந்தரவுகள் இருந்து வரும்.

**5-ம் வீட்டில்** : 8-ம் வீட்டிற்குடைய கிரகம் இருந்தால் என்னவாகும்? 5-ம் வீடு புத்திர ஸ்தானமல்லவா? புத்திரர்களுக்குத் தொல்லையும் தீங்கும் ஏற்படும். 5-ம் இடம் புத்திஸ்தானம் அல்லவா? 8-ம் வீட்டு அதிபரும் இன்னும் சனி, செவ்வாய் போன்ற பாபக் கிரகங்களும் சேர்ந்தால் Hysteria போன்ற மன நோய்கள் வரக்கூடும். சிலருக்கு நரம்புத்தளர்ச்சி போன்ற நோய்களும் வரக் கூடும்.

**6-ம் வீட்டில்** : இது ஒரு நல்ல கிரக ஸ்தானம் அல்ல; அந்த கிரகத்தின் தசா, புக்திக் காலங்களில் உடல் நிலை பாதிப்பினால் பண விரையம் ஆவதுடன், அவகீர்த்தியான காரியங்களும் நடந்து வரும். கௌரவமும் பாதிக்கப் படும். 6-ம் வீடு தாய் மாமன் வீடல்லவா? தாய் மாமனுக்கு பலவகையிலும் பாதிப்பு இருந்து வரும்.

**7-ம் வீட்டில்** : ஆயுள் பாவம் பாதிக்கப் படும். 7-ம் இடம் களத்திர ஸ்தானம் அல்லவா? கணவன் அல்லது மனைவிக்கு உடல் பாதிப்பு இருக்கும். கணவன் - மனைவி உறவு பாதிக்கப்படும். 7-ம் இடமானது வெளி நாடு செல்லுதலையும் குறிக்கிறது அல்லவா? வெளிநாட்டிலும் பல பிரச்சனைகளைச் சந்திக்க வேண்டியதிருக்கும்.

**8-ம் வீட்டில்** : ஆயுள் தீர்க்கமாக இருக்குமெனக் கூறலாம். 8-ம் வீடென்பது தகப்பனார் ஸ்தானமான 9-ம் வீட்டிற்குப் 12-ம் வீடல்லவா! ஆகவே அந்த கிரகத்தின் தசா, புக்தி காலங்களில் தகப்பனருக்கு உடல் நிலை பாதிக்கும். தகப்பனாருக்கு வீண் செலவுகள் இருந்து வரும். ஜாதகருக்கும் விரும்பத்தகாத நிகழ்வுகள் நடந்து வரும்.

**9-ம் வீட்டில்** : ஜாதகருக்குத் தகப்பனார் அனுகூலமாக இருக்க மாட்டார். உதாரணத்திற்கு ஒரு ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். ஜாதகரின் லக்கினம்

RangaRakes
tamilnavarasam.com

உதாரணத்திற்கு ஒரு ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். ஜாதகரின் லக்கினம் கன்னி; 4-ம் வீடான தனுசில் சந்திரன், புதன், சுக்கிரன். 5-ம் வீட்டில் கேது, சூரியன். 9-ம் வீடான ரிஷபத்தில் செவ்வாய், சனி. 11-ம் வீடான கடகத்தில் ராகு. 12-ம் வீடான சிம்மத்தில் கேது. தகப்பனார் ஸ்தானமான 9-ம் வீட்டில 8-ம் வீட்டிற்குடைய செவ்வாயும், 6-ம் வீட்டிற்குண்டான சனியும், இரண்டு பாபிகள் இருப்பதைப் பாருங்கள். தகப்பனார் இவருக்கு விரோதி என்றே கூறலாம். இவருடைய நலனில் சிறிதும் அக்கரை காட்டாதவர்; தன்னுடைய வெறுப்புக்களைத் தவிர வேறெதையுமே தன் மகனுக்குக் காட்டாதவர். இந்த ஜாதகர் முன் ஜென்மத்துப் பாபம் இப்படி ஒரு தகப்பனார் இவருக்கு வாய்த்திட்டார். 9-ம் வீடு மேற்படிப்பைக் குறிக்கிறது அல்லவா? மேற்படிப்பும் பாதிக்கப்படும். 9-ம் வீடு நீண்ட பயணத்தைக் குறிக்கிறது அல்லவா? நீண்ட பயணத்தின்போது பிரச்சனைகள் உறுவாகும். 9-ம் இடம் தர்மஸ்தானம் அல்லவா? அவர் செய்யும் தர்மங்கள், உதவிகள் ஆகியவற்றிற்கு உரிய அங்கீகாரம் கிடைக்காது.

**10-ம் வீடென்பது** ஒருவரின் ஜீவனஸ்தானமாகும். ஜீவனஸ்தானத்தில் 8-ம் வீட்டதிபர் இருந்தால் தொழிலில் முன்னேறுவது சிரமமாக இருக்கும். போட்டிகள் நிறைய இருக்கும். இவருக்குப் பின்னால் வேலையில் சேர்ந்தவருக்குப் பதவி உயர்வு கிட்டும். இவருடைய கௌரவத்திற்குப் பங்கம் விளைகின்றது போன்ற காரியங்கள் நடக்கும். 8-ம் வீடென்பது தகப்பனாரின் Investments, உயில் ஆகியவற்றையும் குறிக்கிறது என இதற்கு முந்தைய பாடங்களில் எழுதி இருக்கிறோம். ஆக தகப்பனாரின் இத்தைகைய சொத்துக்கள் இந்த ஜாதருக்குக் கிட்டும்.

**11-ம் வீட்டில்** : 11-ம் வீடு மூத்த சகோதரத்தின் வீடல்லவா! 8-ம் வீட்டின் அதிபர் 11-ல் இருந்தால் மூத்த சகோதரத்திற்குத் தொந்தரவுகள் இருந்து வரும். அல்லது மூத்த சகோதரத்தால் ஜாதகருக்குத் தொந்தரவுகள் இருந்து வரும். 11-ம் வீடு நண்பர்களைக் குறிக்கிறது அல்லவா? நண்பர்களாலும் தொந்தரவு இருந்து வரும். 8-ம் வீடு Insurance, P.F., Gratuity, உயில் ஆகியவற்றையும் குறிக்கிறது எனக் கூறி இருந்தோம். ஆக 8-ம் வீட்டதிபர் 11-ல் இருந்தால் அந்த கிரகத்தின் தசா, புக்தி காலங்களில் மேற்கண்டவைகளிலிருந்து பணம் கிடைக்கும்.

**12-ம் வீட்டில்** : 8-ம் வீட்டின் அதிபதி 12-ல் இருந்தால் அந்த கிரகத்தின் தசா, புக்திகாலங்களில் வீண் தண்டச் செலவுகளும், விரயங்களும் இருந்து வரும். பல விதக் கஷ்டங்கள் இருக்கும். பொதுவாக 8-ம் வீட்டின் அதிபதி 12-ல் இருப்பது விரும்பத்தக்கது அல்ல.

இனி 8-ம் வீட்டில் கிரகங்கள் இருந்தால் என்ன பலன்கள் என்று பார்ப்போம்.

**சூரியன்** : 8-ம் வீடு மறைவு ஸ்தானமாதலால் சூரியன் அங்கு மறைந்து விடுகிறார். ஆயுள் குறைவு, அரசாங்கத்திடமிருந்து உதவியின்மை, தகப்பனாருக்குத் தோஷம், கண் நோய், மனக் குழப்பம், செலவு ஆகியவை ஏற்படும்.

**சந்திரன்** : நீரில் கண்டம், கப நோய், ஆகியவை ஏற்படும். சந்திரன் மனதுக்குக் காரகம் வகிப்பவர் அல்லவா? மனபிராந்தி, மனது சம்மந்தமான நோய்கள் ஏற்படக்கூடும். சந்திரன் தாயாருக்குக் காரகம் வகிப்பவர் அல்லவா? தாயாரால் இந்த ஜாதகருக்கு அனுகூலங்கள் மிகவும் குறைவாக இருக்கும். பிதுரார்ஜித சொத்துக்கள் எளிதாக கைக்கு வந்து சேரும். சந்திரனுடன் செவ்வாயும், சனியும் சேர்வார்களேயாகில் கண்பார்வை பாதிக்கப்படும்.

**செவ்வாய்** : விபத்துக்களால் மரணம் ஏற்படுக்கூடும்; பண நாசம் ஏற்படும்; குடும்பத்தில் அடிக்கடி சண்டை ஏற்பட்டு குடும்ப நிம்மதி பாதிக்கப் படும்.பைல்ஸ் போன்ற இரத்த சம்மந்தமான நோய்களால் அவதிப் படுவர்.

**புதன்** : மந்திர தந்திரங்களில் சிறந்து விளங்குவர்; கணித சாஸ்த்திரம், சட்ட நுணுக்கம், வியாபாரம் முதலியவற்றில் சிறந்து விளங்குவர்.

**குரு** : குரு எங்கு இருந்தாலும் அந்த வீட்டின் காரகத்துவத்தை அதிகரிக்கச் செய்வார் அல்லவா? 8-ம் வீடு ஆயுள்ஸ்தானமாகையால் அவர் ஆயுளை அதிகரிக்கச் செய்வார். உபாதையற்ற மரணம் ஏற்படும். புத்திர தோஷம் உண்டாகும்.

**சுக்கிரன்** : சுக்கிரன் 8-ம் வீட்டில் இருப்பது நல்லதே. செல்வம் உண்டாகும். வாழ்க்கைக்குத் தேவையான சகல சௌக்கியங்களும் கிடைக்கும். ஜாதகருடைய கணவன் அல்லது மனைவிக்குப் பண நிலைமை நன்றாக இருக்கும். இளம்வயதில் பல ஏமாற்றங்கள் ஏற்பட்டு அதன் காரணமாக பக்தி மார்க்கத்தை நாடுவார்.

**சனி** : நீண்ட ஆயுள் உண்டு. ஜாதகரின் கணவன் அல்லது மனவிக்குப் பொருளாதாரம் சுகப்படாது. சொற்பக் குழந்தைகள். வாயுத் தொந்தரவு இருக்கும்;

**ராகு** : ராகு இருந்தால் பல தொந்தரவுகள் இருந்து வரும். பொதுவாழ்வில் நற்பெயர் இருக்காது. ராகுவுடன் சந்திரனும் கூட இருந்தால் மன நோயால் பீடிக்கப்படுவர்.

**கேது** : கேதுவுக்கு சுபர்கள் பார்வையோ அல்லது சுபர்களோ சேர்ந்து இருந்தால் தொந்தரவு எதுவுமில்லை. கெட்டவர்கள் சேர்க்கைஇருப்பின் நற்பயன் எதுவுமில்லை. சமயத்தில் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணத்தைக் கொடுப்பார்.

இதுவரையில் 8-ம் வீட்டைப் பற்றித் தெரிந்து கொண்டீர்கள். இனி அடுத்த பாடத்தில் 9-ம் வீட்டைப் பற்றிப் பார்ப்போம்.

மிக முக்கியமானவீடான 9-ம் வீட்டைப், பற்றி நாம் இப்போது பார்க்கப் போகிறோம். ஒருவருடைய குருவைப் பற்றிக் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். போன ஜென்மத்து அதிர்ஷ்டத்தையும் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். பொதுவாக இதைப் பிதா ஸ்தானமென்றுதான் கூறுவோம். அதாவது ஒருவரின் தகப்பனாரை இந்த வீட்டை வைத்துத்தான் கூற வேண்டும். கிரகங்களில் சூரியனை வைத்து எப்படி தகப்பனாரைக் கூறுகின்றோமோ அதைப் போல் 9-ம் வீட்டை வைத்து தகப்பனாரைப் பற்றிக் கூறவேண்டும். ஒருவருடைய நீண்ட பயணத்தைக் குறிப்பதும் இந்த வீடுதான். ஒருவர் செய்கின்ற தர்மத்தையும் இந்த வீட்டை வைத்துத்தான் கூற வேண்டும். 9-ம் வீட்டில் சுப கிரகங்கள் இருந்தால் அவர் செய்கின்ற தருமங்கள் எல்லோராலும் போற்றப்படும். பாப கிரகங்கள் இருப்பின் அவர்கள் செய்யும் தர்மம் எடுபடாமல் போய்விடும். சனி, செவ்வாய், ராகு போன்ற பாப கிரகங்கள் இருந்தால் அவர்கள் செய்யும் தர்மம் எடுபடாமல் போய்விடும்.

5-ம் வீடும் பூர்வபுண்ணிய ஸ்தானம் என்றுதான் அழைக்கப் படுகிறது. 9-ம் வீடு போன ஜென்மத்து அதிர்ஷ்டத்தைக் குறிக்கிறது. ஆக திரிகோண ஸ்தானமான 5-ம் வீடும் 9-ம் வீடும் கெடாமல் இருந்தால் ஒருவர் போன ஜென்மத்தில் புண்ணியம் செய்தவர் எனக் கொள்ளலாமல்லவா? அதாவது சுபக் கிரகங்களான குரு, சந்திரன்,புதன் சுக்கிரன் போன்ற கிரகங்கள் இருந்து அல்லது 9-ம் வீட்டைப் பார்த்தால் அவர் போன ஜென்மத்தில் புண்ணியம் செய்தவர் எனக் கொள்ளலாம். அதாவது போன ஜென்மத்தில் புண்ணியங்கள் செய்து அதன் விளைவாக இந்த ஜென்மத்தில் நல்ல பலன்களை அனுபவிக்கப் போகின்றார் எனக் கூறலாம்.

9-ம்வீடு ஒருவரின் மத நம்பிக்கை, வேதாந்தங்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது. குருவானவர் வேதாந்தத்தைக் குறிக்கும் கிரகம். 9-ம் வீட்டில் குரு இருந்தால் ஒருவர் மதம், வேதாந்தங்கள் ஆகியவற்றில் நம்பிக்கை உள்ளவராக இருப்பார். சனி இருந்தாலும் அவ்வாறே மத சம்மந்தமான விஷயங்களில் நம்பிக்கை உள்ளவராக இருப்பார். கோவில்கள், சத்சங்கங்கள் மற்றும் தெய்வ தரிசனங்கள் ஆகியவற்றைக் குறிப்பதும் இந்த வீடுதான். கல்லூரிக்கு மேற்பட்டப் படிப்பையும் குறிப்பது இந்த வீடுதான். இதில் சுப கிரகங்கள் இருந்து நடப்பு தசா, புக்திகளும் 9-ம் வீட்டைக் குறித்தால் அவர் கல்லூரிப் படிப்பிற்கு மேற்பட்டப் படிப்பைப் படிப்பார் எனக் கொள்ளலாம்.

சட்டப் படிப்பைக் குரிப்பதும் இந்த வீடுதான். (கிரகங்களில் குருவானவர் சட்டப் படிப்பைக் குறிப்பார்.) ஆன்மீக சிந்தனைகள், உபாத்தியாயர் தொழில், புரோஹிதம் தொழில் ஆகியவற்றையும் இந்த வீடுதான் குறிக்கும். தேவதைகளை வசியம் செய்தலையும் இந்த வீடுதான் குறிக்கும்.

நீண்டபயணத்தைக் குறிப்பதும் இந்த வீடுதான். ஒருவர் வெளிநாடு செல்கிறார் என்றால் 9-ம் வீட்டின் தொடர்பு இன்றி அவர் வெளிநாடு செல்ல முடியாது. அதாவது 9-ம் வீட்டின் அதிபதி அல்லது 9-ம் வீட்டிலுள்ள கிரகங்களின் தசா, புக்திகளில்தான் ஒருவர் வெளிநாடு செல்ல முடியும். ஒருவர் "உங்களிடம் நான் வெளிநாடு செல்ல முடியுமா?" எனக் கேட்கிறார் எனக் கொள்வோம். இதற்கு நாம் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். வெளி நாடு செல்வது என்றால் என்ன?

1. நாம் இருக்கும் இடத்திலிருந்து பிரிந்து செல்ல வேண்டும்.

2. நீண்ட பயணத்தை மேற்கொள்ள வேண்டும்.

3. சற்றும் பழகாத முன், பின் தெரியாத இடத்தில் இருக்க வேண்டும். இவைதான் வெளிநாடு செல்லுதலைக் குறிக்கிறது.

நாம் தற்போது இருக்கும் வீட்டை/ நாட்டைக் குறிப்பது 4-ம் வீடு. அந்த வீட்டிற்குப் 12-ம் வீடான 3-ம் வீடு தான் இடம் பெயர்தலைக் குறிக்கிறது.

நீண்ட பயணம் மேற்கொள்ளுவதை 9-ம் வீடு குறிக்கிறது. சற்றும் பழகாத, முன் பின் தெரியாத இடத்திற்குச் செல்வதை 12-ம் வீடு குறிக்கிறது. ஆக 3, 9, 12-ம் வீட்டைக் குறிக்கின்ற கிரகங்களின் தசாபுக்திகாலங்களில்தான் ஒருவர் வெளி நாடு செல்ல முடியும். ஆக 9-ம் வீட்டின் உபயோகம் வெளிநாடு செல்ல எப்படிப் பயன் தருகிறது பார்த்தீர்களா?

சற்றும் முன்பின் தெரியாதவர்களையும் வெளி நாட்டவர்களையும் இந்த வீடுதான் குறிக்கும். ஒருவர் தனக்கு சொந்தத்தில் திருமணமாகுமா? அல்லது அந்நியத்தில் திருமணமாகுமா? எனக்கேட்கிறார் எனக் கொள்ளுங்கள். 7-ம் வீடு திருமணத்தைக் குறிக்கிறது அல்லவா? 7-ம் வீடும் சந்திரனும் சம்மந்தப் பட்டால் தாயார் வழி உறவில் திருமணமாகுமென்று கூறலாம். சூரியன் சம்மந்தப்பட்டால் தகப்பனார் வழி உறவில் திருமணமாகுமெனக் கூறலாம். புதன் சம்மந்தப்பட்டால் தாய் மாமன் உறவில் திருமணமாகுமெனக் கூறலாம். 9-ம் வீட்டுடன் சம்மந்தப்பட்டல் அந்நியத்தில் திருமணமாகும் எனக்கூறலாம். ஏன் அந்நிய நாட்டினராகக் கூட இருக்கலாம்.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒருகுலதெய்வம் உண்டு. அந்த குலதெய்வம் அனுகூலமாக உள்ளதா இல்லையா என்பது பற்றியும் நாம் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். இயற்கையிலேயே உள்ள சுபக்கிரகங்கள் 9-ம் வீட்டில் இருந்தால் குலதெய்வத்தின் ஆதரவு இருக்கிறது எனப் பொருள். 9-ம் வீட்டின் அதிபதியும் நல்ல இடத்தில் இருப்பாரேயாகில் குல தெய்வத்தின் ஆதரவு இருக்கிறது எனப் பொருள். நல்ல இடமென்றால் கேந்திர ஸ்தானங்களிலோ அல்லது திரிகோண ஸ்தானங்களிலோ அல்லது லாப ஸ்தானமான 11-ம் வீட்டிலோ இருந்தால் குலதெய்வம் கைகொடுக்கு மெனக் கூறலாம்.

3-ம் இடமானது புத்தகங்கள், பத்திரிக்கைகள் வெளியிடுதலைக் குறிக்கிறது. அதாவது பொழுது போக்கு அம்சமான புத்தகங்களையும், பத்திரிக்கைகளையும் தான் குறிக்கிறது. ஆனால் 9-ம் இடமோ மதம் சம்மந்தமான புத்தகங்கள், ஆன்மீக சம்மந்தமான புத்தகங்கள், வெளிநாட்டு சம்மந்தமுள்ள புத்தகங்கள் ஆகியவற்றைக் குறிக்கிறது.

9-ம்வீடு அதிபதியானவர் லக்கினத்தையோ அல்லது சந்திரனையோ பார்ப்பாரேயாகில் அந்த ஜாதகர் செய்யும் பரிகாரகங்களுக்குப் பலன் இருக்கும். 9-ம் வீடு குலதெய்வத்தைக் குறிக்கிறது அல்லவா? ஆகவே குல தெய்வத்தின் பக்கபலம் அந்த ஜாதகருக்குக் கிடைக்கும்.

இதுவரையில் 9-ம் வீட்டைப் பற்றி ஓரளவிற்குத் தெரிந்து கொண்டீர்கள். மற்றவைகளை அடுத்த பகுதியில் பார்ப்போம்.

RangaRakes tamilnavarasam.com

9-ம் வீட்டைப் பற்றி ஓரளவிற்குச் சென்ற பாடத்தில் தெரிந்து கொண்டீர்கள். இந்தப் பாடத்தில் மீதமுள்ளவற்றைப் பார்ப்போம். 9-ம் வீட்டிற்குடைய கிரகம் லக்கினத்தில் இருந்தால் பெரியவர்களிடமும், குரு, தெய்வம் ஆகியோரிடம் நம்பிக்கையுடையவராக இருப்பர். தருமங்கள் செய்பவராகவும் இருப்பர். தெய்வ வழிபாடு நிரம்ப இருக்கும்.

9-ம் வீட்டதிபதி 2-ம் வீட்டில் இருந்தால் அயல் நாட்டுத் தொடர்பு மூலம் பணவரவு இருக்கும். தகப்பனாரின் மூலமாகவும் பணவரவு இருக்கும்.

3-ம் வீட்டில் இருந்தால் இளைய சகோதரர், சகோதரிகளின் ஆதரவு இருக்கும்.

4-ம் வீட்டில் இருந்தால் தாயின் ஆதரவு இருக்கும். நல்ல செல்வாக்குடன் இருப்பார்கள்.

5-ம் வீட்டில் இருந்தால் புத்திரர்கள் சகல சௌபாக்கியத்துடன் இருப்பார்கள். தெய்வீக வழிபாட்டினால் குடும்பம் பிரகாசமாக இருக்கும்.

6-ம் வீட்டில் இருந்தால் வெளிநாட்டில் வேலைவாய்ப்பிற்கு யோகமுண்டு. உத்தியோக சம்மந்தமாக வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள வேண்டியதுவரும். தகப்பனார் உடல் நிலை பாதிக்கக் கூடும்.

7-ம் வீட்டில் இருந்தால் நல்ல தெய்வபக்தியுள்ள பெண்கிடைக்கும். அந்நியத்திலிருந்து பெண் கிடைக்கும். வெளிநாட்டுப் பயணமும் கிடைக்கும்.

8-ம் வீட்டில் இருந்தால் தகப்பனாருக்குக் கண்டம் எனக் கொள்ளலாம். பிதாவின் உடல் நிலையும் பாதிக்கப்படும்.

9-ம் வீட்டில் இருந்தால் தகப்பனார் நீண்ட ஆயுளுடன் இருப்பார். தான, தருமங்களும், தெய்வீக வழிபாடுகளும் நிறைந்து இருக்கும். தகப்பனார் சொத்துக்கள் ஸ்திரமாக இருக்கும்.

10-ம் வீட்டில் இருந்தால் அரசாங்கத்தில் உயர் பதவியில் இருப்பர். தகப்பனாருடைய சொத்துக்கள் சிறந்த முறையில் விருத்தியாகும். பெரிய மனிதர்களின் நட்புக் கிடைக்கும்.

11-ம் வீட்டில் இருந்தால் தகப்பனாரால் லாபம் கிடைக்கும். குடும்பத்தில் சகல செல்வங்களும் நிறைந்து இருக்கும். தெய்வ காரியங்கள் வீட்டில் நிறைந்து இருக்கும். அயல் நாட்டுத் தொடர்பு மூலம் லாபம் உண்டாகும்.

12-ம் வீட்டில் இருந்தால் தகப்பனாருக்குக் கெடுதி உண்டாகும். தகப்பனாரின் சொத்துக்கள் நிலைக்காது. வெளிநாட்டுப் பயணம் உண்டாகும்.

இனிமேல் 9ம் வீட்டில் கிரகங்கள் நின்ற பலனைப் பார்ப்போம்.

<u>சூரியன்</u> : பொதுவாக ஒரு கிரகம் எதற்குக் காரகம் வகிக்கிறதோ அந்தக் காரகத்தைக் குறிக்கும் வீட்டில் அந்த கிரகம் இருப்பது நல்லது அல்ல என்று ஜோதிட

Ranga Rakes tamilnavarasam.com

காரகத்தைக் குறிக்கும் வீட்டில் அந்த கிரகம் இருப்பது நல்லது அல்ல என்று ஜோதிட உலகம் கூறுகிறது. உதாரணமாக தாயாரைக் குறிப்பது சந்திரன்; 4-ம் வீடும் சந்திரனைக் குறிக்கிறது. ஆக தாயாரைக் குறிக்கின்ற கிரகமான சந்திரன், தாயாரைக் குறிக்கின்ற 4-ம் வீட்டில் இருப்பது தாயாருக்கு நல்லது அல்ல என்று கூறுவார்கள். இதைத்தான் "காரகோ பாவன சாய" என் சமஸ்கிருதத்தில் கூறுவார்கள். அதேபோன்று சகோதரத்தைக் குறிக்கும் கிரகமான செவ்வாய், சகோதரத்தைக் குறிக்கும் 3-ம் வீட்டில் இருப்பது நல்லது அல்ல; களத்திரத்தைக் குறிக்கும் வீடான சுக்கிரன், களத்திரஸ்தானமான 7-ம் வீட்டில்; இருப்பது நல்லது அல்ல; அதேபோல் தகப்பனாருக்குக் காரகம் வகிப்பவரான சூரியன், 9-ம் வீட்டில் இருப்பது நல்லது அல்ல; அதாவது தகப்பனாருக்கு தோஷம் என்றும் கூறலாம். ஆனால் இந்த விதிக்கு ஒரு விதிவிலக்கு உண்டு. ஆயுள்காரகனான சனி, ஆயுள்ஸ்தானமான 8-ம் வீட்டில் இருந்தால் தீர்க்க ஆயுள் உண்டு என்று ஜோதிட உலகம் கூறுகிறது. குரு பணத்திற்கு அதிபதி. 2-ம் வீடு தனஸ்தானத்தைக் குறிக்கிறது. "காரகோ பாவன சாயன" விதியின்படி குரு, 2-ம் வீட்டில் இருக்கக் கூடாது அல்லவா? ஆனால் அனுபவபூர்வமாகப் பார்க்கும்போது குரு 2-ம் வீட்டில் இருக்கப் பிறந்தவர்கள் நல்ல பண வசதியுடன் இருந்து வருகிறார்கள். இது அனுபவபூர்வமான உண்மை. சரி! நமது பாடத்துக்கு வருவோம்; 9-ம் வீட்டில் சூரியன் இருப்பது தகப்பனாருக்கு நன்மை அல்ல; இதைப் பிதுர் தோஷம் என்றும் கூறலாம். 9-ம் வீடு உயர் படிப்பைக் குறிக்கிறது அல்லவா? இங்கு சூரியனும் புதனும் சேர்ந்து இருக்கப் பிறந்தவர்கள் மிகுந்த புத்திகூர்மை உள்ளவர்களாக இருப்பார்கள். படிப்பில் அவர்கள் ஏதேனும் ஒரு Professional Course-ல் வல்லமை பெற்று இருப்பார்கள். சுறுக்கமாகச் சொல்லப் போனால் 9-ல் சூரியன், புதன் இருக்கப் பிறந்தவர்கள் படிப்பில் வல்லவர்களாக இருப்பார்கள்.

<u>சந்திரன்</u> : இங்கு சந்திரன் இருப்பது நல்லது அதுவும் தாயாருக்கு. நல்ல மனம் படைத்தவர்களாக இருப்பார்கள். இங்கு செவ்வாயும் சந்திரனும் சேர்ந்து இருந்தால் தாயாருக்கு காயம்படும்.தாயாரை கடும் வார்த்தைகளால் பேசுவர்.

<u>செவ்வாய்</u> : தகப்பனாருக்கு உபாதைகளைக் கொடுக்கும். குருவோ அல்லது புதனோ இருக்கப் பிறந்தவர்கள் படிப்பில் கெட்டிக்காரர்களாகவும்,மத விஷயங்களில் நம்பிக்கை உடையவர்களாகவும் இருப்பார்கள்.

<u>புதன்</u> : இங்கு இருப்பது ஒருவரை மிக அறிவாளியாக ஆக்கும்.எதையும் அலசி, ஆராய்ந்து பார்க்கும் குணம் கொண்டவர்களாக இருப்பார்கள். குருவும் சேர்ந்து கொண்டால் மிக வேடிக்கையாகவும், கெட்டிக்காரத்தனமாகவும் பேசுவர்.

<u>குரு</u> : சட்டப் படிப்பில் முன்னேற்றம் காணமுடியும். தன் சொந்த சகோதரர்களுடன் மிகவும் பிரியமாக இருப்பர். மிகவும் தெய்வபக்தியுடன் வாழ்க்கை நடத்துவர். வெளிநாடு செல்லும் யோகம் இவருக்கு இருக்கும். ஒரு குறிக்கோளுடைய வாழ்க்கை இருக்கும்.

<u>சுக்கிரன்</u> : மிக சௌக்கியமான வாழ்க்கை நடத்துவர். அதிர்ஷ்டசாலியாகவும் இருப்பர். கலைகளில் திறமைசாலியாக இருப்பர்.

<u>சனி</u> : ஒரு தனிமைப்படுத்தப்பட்ட வாழ்க்கை இருக்கும். தகப்பனருடன் நல்ல உறவு இருக்காது. மேல் படிப்பில் மந்தத்தன்மை இருக்கும். புதனும், சனியும் சேர்ந்தால் இவர் நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருக்கமாட்டார்.

<u>ராகு</u> : தகப்பனாரை தூஷிப்பர். கடவுள் மேலும், அவர் சார்ந்துள்ள மதத்தின் பேரிலும் அவ்வளவு நம்பிக்கை இருக்காது.

<u>கேது</u> : தகப்பனாருடன் நல்லுறவு இருக்காது. மிக்க தைரியம் உள்ளவராக இருப்பர்.

இத்துடன் 9-ம் வீட்டைப் பற்றி முடித்துக் கொள்வோம். இனி அடுத்த பாடத்தில் 10-ம் வீட்டைப் பற்றிப் பார்ப்போம்.

இதுவரை நாம் 9-வீடுகளைப் பற்றித் தெரிந்து கொண்டோம். இப்போது 10-வது வீட்டைப் பற்றிப் பார்க்கப் போகின்றோம். இது மிகவும் முக்கியமான வீடாகும். இது ஒரு கேந்திரஸ்தானம் ஆகும். இதை ஜீவன ஸ்தானம் என்றழைப்பார்கள். ஒருவருக்கு மதிப்பு, கௌரவம் ஆகியவற்றையும் கொடுப்பது இந்த வீடுதானாகும். ஒருவரின் தொழிலைக் குறிப்பதும் இந்த வீடுதான். ஒருவருடைய பொதுவாழ்வைக் குறிப்பதும் இந்த வீடுதான். (Public Life). ஒருவரின் மதிப்பு, மரியாதை, உலகத்திலுள்ள சுகங்கள், இவைகளையெல்லாம் குறிப்பதும் இந்த வீடுதான். ஒருவரின் பதவி உயர்வு, வியாபார விருத்தி ஆகியவற்றைக் குறிப்பதும் இந்த வீடுதான். ஒருவரின் ஜாதகத்தில் 10-ம் வீட்டில் சனியிருந்து சுபரால் பார்க்கப்பட்டால் ஒருவரின் வாழ்க்கை உயர்வு மெதுவாகவும், நிரந்தரமாகவும் இருக்கும். உயர்வு மெதுவாகத்தான் இருக்கும். சனி சுபரால் பார்க்கப் படாமல் இருந்தால், வலுவில்லாமலும் இருந்தால் மிகச் சாதாரணமான பதவியே வகிப்பர். உயர் நிலைக்கு வருவது கடினம்.

சூரியன் : சூரியன் ஒருவருக்கு நல்லவிதமாக அமைந்துவிட்டால் மதிப்பு, மரியாதை ஆகியனவெல்லம் கிட்டும். அரசாங்க உத்தியோகம் கிடைக்கும். ஏனெனில் அரசாங்கத்தைக் குறிப்பவர் அவர்தான். சூரியன் சம்மநதப் பட்டால் செய்யும் தொழிலில் மரியாதை அல்லது கௌரவம் கிட்டும். சூரியன் மேலதிகாரிகளுக்குக் காரகம் வகிப்பவர் அல்லவா? அவர்கள் துணையுடன் பதவி உயர்வு பெற்று முன்னேற முடியும். சூரியன் தொழிலில் நிரந்திரத்தைக் கொடுப்பவர். அரசியலுக்கும் இவர் காரகம் வகிப்பதனால் அரசியலில் இவர் முன்னேற முடியும். மற்றவர்கள் இவர்மேல் வைத்துள்ள நம்பிக்கைக்குப் பாத்திரமாக நடந்து கொள்வார்.

சந்திரன் : பொதுவாக சந்திரனானவர் நிலையில்லாத தன்மை கொண்டவர். அவர் எங்கு இருந்தாலும் மாற்றத்தைக் கொடுப்பார். அதையும் தவிர மக்கள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுப்பவர். நல்ல கிரகங்கள் சேர்க்கையோ அல்லது பார்வையோ இருப்பின் மக்கள் தொடர்பு காரணமாக மிகவும் பிரபலமானவராக இருப்பர். பாவர் சேர்க்கை பெற்றிருப்பின் பொதுவாழ்க்கையில் கெட்ட பெயரே வந்து சேரும். வியாபரத்தில் ஏற்றதாழ்வுகள் இருக்கும். தொழிலில் இருந்தாலும் வருமானத்தில் ஏற்றதாழ்வுகள் இருக்கும். அடிக்கடி பிரயாணம் செய்ய வேண்டியதுவரும். சந்திரன் சரராசியில் இருந்து 10-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் தொழில் சம்மந்தமாகப் பிரயாணம் செய்ய வேண்டியது வரும். இதை நீர்க்கிரகம் என்பார்கள். நீர் சம்மந்தப்பட்ட தொழிலைக் கொடுப்பார். சிலர் கப்பல் சம்மந்தப்பட்ட தொழிலில் பணிபுரிவர்.

செவ்வாயானவர் தைரியத்தைக் குறிக்கும் கிரகம். போலீஸ், ராணுவம் போன்றவற்றில் தொழில் இருக்கும். தொழிற்சாலைகள், இயந்திரங்கள் போன்றவற்றையும் இவர் குறிப்பதால் இது சம்மந்தமான வேலையையும் இவர் கொடுப்பார். நெருப்புக்கும் இவர் அதிபதியாவதால் நெருப்பு சம்மந்தமான வேலையையும் இவர் கொடுப்பார். நிலம், வீடு போன்ற ஸ்திர சொத்துக்களுக்கும் இவர் அதிபதியாவதால் இது சம்மந்தமான வேலைகளிலும் இந்த ஜாதகர் ஈடுபடுவர். செவ்வாய் நன்கு இருக்கப் பிறந்தவர்கள் வீடு வாங்கி விற்பது போன்ற Real Estate - Business-ல் இருப்பார். செவ்வாய் வலுவற்று இருப்பவர்கள் வீட்டு வீலை செய்யும் தொழிலாளியாக இருப்பார்.

புதன் பத்தாம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் கமிஷன் வியாபாரம், ஏஜென்சித் தொழில்

புதன் பத்தாம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் கமிஷன் வியாபாரம், ஏஜென்சித் தொழில் ஆகியவற்றில் இருப்பார். புதன் அறிவு கூர்மையைக் குறிக்கும் கிரகம் அல்லவா? புத்திகூர்மையைக் கொண்டுள்ள தொழில்களில் எல்லாம் இவர் சிறந்து விளங்குவார். ஆலோசனைத் தொழில், ஜோதிடம், மாந்திரீகம் போன்றவற்றில் இவர் சிறந்து விளங்குவர். புதன் இரட்டைக் கிரகம் அல்லவா? சிலருக்கு இரண்டுவிதமான தொழில் செய்ய முடியும். பொதுவாக புதன் 10-ம் இடத்துடன் சம்மந்தப் பட்டவர்கள் எஜமானராக இருப்பதைவிட ஒருவருக்குக் கீழ் இருப்பதையே விரும்புவார்கள்.

குரு ஒரு சுபக் கிரகம். அவர் 10-ம் வீட்டில் இருந்தால் புகழையும், பதவியையும் கொடுப்பார். அவர் தனகாரகன் அல்லவா? பணம் புழங்குகின்ற இடத்தில் வேலை கிடைக்கக் கூடும். பேங்குகள், கருவூலங்கள், போன்ற பணம் புழங்குகின்ற இடங்களில் வேலை கிடைக்கும். மிகவும் நியாயமான முறையில் சம்பாதிப்பார். குரு வேதாந்தம், மதங்களைக் குறிக்கிறது அல்லவா? இது சம்மந்தமான வேலையும் கிடைக்கும். பொதுவாக குருவானவர் உயர்ந்த பதவியைக் கொடுப்பார். இவருக்குப் பாவரின் சேர்க்கையோ அல்லது பார்வையோ இருப்பின் மிகச் சாதாரண பதவியிலேயே இருப்பார்.

சுக்கிரன் : கலைக்கு அதிபதியான கிரகம். 10-ம் வீட்டுடன் சம்மந்தப்பட்டால் கலைத் தொழில் சம்மந்தப் பட்ட துறையில் பணிபுரியலாம். வண்டி, வாகனங்களைக் குறிப்பதும் சுக்கிரன்தான். வாகனங்கள் சம்மந்தப்பட்ட துறையிலும் பணிபுரியலாம். சுக்கிரன் பெண்களுக்குக் காரகம் வகிப்பவர். சுபர்கள் சேர்க்கையோ அல்லது பார்வையோ பெற்றிருப்பின் பெண்களால் அனுகூலம் அடைவர். இரண்டாம் வீட்டுடனும் சம்மந்தப்பட்டால் தேனொழுகப் பேசி காரியத்தை முடிப்பர். அழகு சாதனங்களை குறிப்பவரும் அவரே. ஆக அழகு சாதனங்கள் சம்மந்தப் பட்ட தொழிலிலும் இருப்பர்.

நாம் இதுவரையில் 10-ம் வீட்டை தொழில் ஸ்தானம் என்றும், ஜீவன ஸ்தானமென்றும் கூறி வந்தோம். 10-ம் வீட்டில் என்னென்ன கிரகங்கள் இருந்தால் எப்படித் தொழில் அமையும் எனவும் பார்த்தோம். இந்த வீட்டைக் கர்மஸ்தானமென்றும் கூறுவார்கள். அதாவது தாயார், தகப்பனருக்குக் கர்மம் செய்யும் வீடாகும். எப்படி? 9-ம் வீடு தகப்பனாரைக் குறிக்கிறது அல்லவா? 10-ம் வீடு என்பது 9-ம் வீட்டிற்கு 2-ம் வீடு. 2-ம் வீடு மாரகத்தைக் கொடுக்குமன்றோ! ஆகவே இந்த வீடு தகப்பனாருக்கு மாரகத்தைக் கொடுக்கும் வீடாக அமைந்து விடுகிறது. அதேபோல் 4-ம் வீடு தாயாரைக் குறிக்கிறது அல்லவா? 10-ம் வீடு என்பது 4-ம் வீட்டிற்கு 7-ம் வீடல்லவா? 7-ம் வீடும் மாரக ஸ்தானமன்றோ! ஆக 10-ம் வீடு தாயாருக்கு மாரகஸ்தானமாக அமைந்து விடுகிறது. ஒருவருக்கு 10-ம் வீட்டிலுள்ள கிரகத்தின் தசையோ அல்லது புக்தியோ அல்லது 10-ம் வீட்டிற்குடையவனின் தசையோ அல்லது புக்தியோ நடக்கும் போது அவரின் தாயோ அல்லது தந்தையோ மரணமடையலாம். அப்போது அவருக்குக் கர்மம் செய்ய நேரம் வந்து விட்டது எனக் கூறுவார்கள். ஆக 10ம் இடம் ஜீவனத்தை மட்டும் குறிக்கவில்லை. தாய், தகப்பனாரின் மாரகத்தையும் அது குறிக்கிறது. ஆக ஒருவரின் 10-ம் வீட்டைக் குறிக்கின்ற கிரகங்களின் தசா, புக்திகளில் தாய் அல்லது தந்தையை இழக்க நேரிடும் எனத் தெரிந்து கொண்டீர்களல்லவா?

ஒருவருக்குப் "பதவி உயர்வு கிட்டுமா?" - என்ற கேள்வி எழலாம். அதற்கு 10-ம் வீட்டை மட்டும் வைத்துப் பதில் சொல்ல முடியாது. 2-ம் இடமான தன ஸ்தானம், 6-ம் வீடான தொழில் ஸ்தானம், 10-ம் வீடான ஜீவன ஸ்தானம், 11-ம் வீடான லாபஸ்தானம் ஆகியவற்றை வைத்துத்தான் கூறமுடியும். இந்த நான்கு வீட்டையும் குறிக்கின்ற கிரகங்களின் தசா, புக்திக் காலங்களில்தான் ஒருவருக்குப் பதவி, உயர்வோ அல்லது வேலையோ கிட்டும்.

10-ம் வீடென்பது 9-ம் வீட்டிற்கு 2-ம் வீடு என்று மேலே கூறி இருந்தோம். 2-ம் வீடு தனஸ்தானம் அல்லவா? ஆக தகப்பனாரின் பொருளாதாரம், பணவசதி, குடும்ப வாழ்க்கை ஆகியவற்றையும் இந்த வீட்டை வைத்துக் கூறலாம். இத்துடன் இந்தப் பாடத்தை

RangaRakes tamilnavarasam.com

பத்தாம் வீட்டைப் பற்றி ஓரளவிற்கு நாம் தெரிந்து கொண்டோம். இப்போது மீதமுள்ளவற்றைப் பார்ப்போம். முதலில் ஒருவரின் "தொழிலை நிர்ணயிப்பது எப்படி?" எனப் பார்ப்போம்.

10-ம் வீட்டிலுள்ள கிரகம், 10ம் வீட்டைப் பார்க்கும் கிரகம், 10-ம் வீட்டின் அதிபதி, 10-ம் வீட்டின் அதிபதி இருக்கும் நவாம்சாதிபதி ஆகியவற்றை வைத்துத்தான் ஒருவரின் தொழிலை நிர்ணயம் செய்ய முடியும். உதாரணத்திற்கு சில ஜாதகங்களை கீழே கொடுத்துள்ளோம். அவைகள் உங்களுக்கு மிக்க உதவியாக இருக்கும். ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்.

ராசி : லக்கினம்-தனுசு; மகரம்-சூரியன், சந்திரன், புதன்; மீனம்-கேது; மேஷம்- குரு, சனி; கன்னி-ராகு; விருச்சிகம்- செவ்வாய்;

நவாம்சம் : லக்கினம்-தனுசு; மகரம்-செவ்வாய்; மேஷம்-ராகு; ரிஷபம்-சூரியன்; கடகம் - சந்திரன்; சிம்மம் - சனி,புதன்,குரு; துலாம் - கேது; விருச்சிகம் - சுக்கிரன்.

10-ம் வீட்டின் அதிபதியார்? புதன்; அவர் நவாம்சத்தில் சூரியனின் வீட்டில் இருக்கிறார்; 10-ம் வீட்டில் ராகு; ராகுவுக்கு சொந்த வீடு எதுவும் கிடையாது. ஆகவே வீட்டின் அதிபதியான புதனின் பலனைத்தான் கொடுப்பார். ஆக புதன், சூரியன் சார்ந்த தொழிலைத்தான் கொடுக்க முடியும்.

1. சூரியன் சம்மந்தப் பட்டதால் அரசு சம்மந்தமான துறையில் வேலை செய்ய முடியும். ஏனெனில் சூரியன் அரசுத்துறைகளுக்குக் காரகம் வகிப்பவர் அல்லவா? புதன் Accounts சம்மந்தமான தொழிலைக் கொடுப்பவர். ஆக புதனும் சூரியனும் சேர்ந்து இவரை அரசாங்கத்தில் Accounts சம்மந்தமான தொழிலைக் கொடுத்து இருக்கலாம்.

அல்லது

2. புதன் கமிஷன் தொழிலுக்கு அதிபதி. சூரியன் அரசாங்கத்திக் குறிப்பவர் அல்லவா? ஆக இவர் அரசாங்கம் சம்மந்தப்பட்ட சிறு சேமிப்பிலோ அல்லது பங்குகளிலோ வியாபாரம் செய்து அதற்குண்டான கமிஷன் பெறலாம்.

அல்லது

3. சூரியன் தன்வந்திரி என்றழைக்கப் படுகிறார். அவர் மருத்துவத் தொழிலுக்கு அதிபதி. புதன் எதையும் ஆராய்ந்து முடிவெடுக்கும் புத்தி கூர்மையைக்கொடுக்கின் றவர். ஆக இருவரின் சேர்க்கை இவரை ஒரு மருத்துவராக ஆக்கி இருக்கலாம்.

அல்லது

4. சூரியன் தங்கம், தாமிரம் போன்ற உலோகங்களுக்கு அதிபதி. ஆக இவர் தங்க வியாபாரமோ அல்லது தாமிர வியாபாரமோ செய்பவராக இருக்கலாம்.

இவ்வாறாக பலவிதமான தொழில்களைச் சொல்லலாம். ஆக ஒருவரின் தொழிலைக்

RangaRakes tamilnavarasam.com

இவ்வாறாக பலவிதமான தொழில்களைச் சொல்லலாம். ஆக ஒருவரின் தொழிலைக் கூறுவது என்பது மிகவும் கடினமான காரியம். உண்மையில் இவர் ஒரு அரசாங்க வங்கியில் பணி புரிந்தார். ஆக 10-ம் வீட்டிற்குடைய புதன், நவாம்சாதிபதி சூரியனுடன் சம்மந்தப்பட்டதால் அரசாங்க சம்மந்தமுடைய தொழில் செய்து வந்தார். வங்கித் தொழிலுக்கு வருவதற்கு முன்பு அரசாங்கப் பள்ளிகளில் கணித ஆசிரியராகத் தன்வாழ்க்கையைத் தொடங்கினார். புதன் கணிதத்திற்கும் அதிபதியல்லவா? ஆக இவர் அரசாங்கப் பள்ளிகளில் கணித ஆசிரியராகப் பணிபுரிந்தார். புதனும், சூரியனும் எப்படி இவர் ஜீவனத்தைக் கொடுத்தது பார்த்தீர்களா?

இன்னும் ஒரு ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்.

<u>ராசி</u> : லக்கினம் - மகரம்; லக்கினத்தில் கேது, சந்திரன்; கும்பத்தில் செவ்வாய்; கடகத்தில் சுக்கிரன், ராகு; சிம்மத்தில் சூரியன், புதன்; துலாத்தில் சனி; விருச்சிகத்தில் குரு;

<u>நவாம்சம்</u> : லக்கினம்-மிதுனம்; லக்கினத்தில் புதன், சந்திரன்; கன்னியில் சுக்கிரன், கேது; விருச்சிகத்தில் சூரியன்; தனுசில் செவ்வாய், சனி; மகரத்தில் குரு; மீனத்தில் ராகு.

இவர் தொழில் என்னவாக இருக்குமென உங்களால் யூகிக்க முடிகிறதா? 10-ம் வீட்டின் அதிபதி சுக்கிரன்; 10-ம் வீட்டில் சனி; 10-ம் வீட்டிற்குடைய சுக்கிரன் நவாம்சத்தில் கன்னியில்; கன்னிக்கு அதிபதி புதன். ஆக இவருக்கு சுக்கிரன், சனி, புதன் சம்மந்தப்பட்ட தொழில்தான் அமையும். சரி! பலவித சாத்தியக் கூறுகளைப் பார்ப்போம்.

1. சுக்கிரன் காரகம் வகிக்கும் தொழில்களான கலைத் தொழில், வாகனங்கள் சம்மந்தமான தொழில்கள், பெண்கள் உபயோகிக்கும் வாசனைத் திரவியங்கள், ஆகியவற்றில் வேலையில் இருக்கலாம். சுக்கிரன் ஜாதகத்தில் கடகத்தில் ஜலராசியில் இருக்கிறார். சுக்கிரன் வாகனக்களுக்கு அதிபதி; ஜலராசியில் இருப்பதால் ஜலம் சம்மநதப்பட்ட தொழிலில், அதாவது கப்பலில் இருக்கலாம். சுக்கிரன் கால்நடைகளுக்கு அதிபதி. அவர் ஜல ராசியில் இருப்பதால் நீர் சம்மந்தப்பட்ட அதாவது பால் வியாபாரத்தில் இருக்கலாம்.

சுக்கிரன் புதன் நவாம்சத்தில் இருப்பதால் சுக்கிரனும், புதனும் சம்மந்தப்பட்ட தொழிலில் இருக்கலாம். சுக்கிரன் ராசியில் சர ராசியில் இருக்கிறார். சரம் என்றால் நகர்ந்து கொண்டே இருக்க வேண்டுமல்லவா? வாகனங்கள் நகர்ந்து கொண்டே இருப்பன அல்லவா? சுக்கிரன் வாகனத்திற்குக் காரகம் வகிப்பதனாலும், புதன் கணக்கு மற்றும் Accounts களுக்குக் காரகம் வகிப்பதனாலும் இவர் Transport சம்மந்தமான தொழிலில் கணக்கராக இருக்கலாம்.

10-ம் இடத்தில் சனி. சனி பூமியில் புதைந்து இருக்கும் கனிமங்களைக் குறிக்கிறது. சுக்கிரன் ஜலராசியில் இருப்பதனால் இவர் Petrol போன்ற திரவியங்கள் சம்மந்தப்பட்ட தொழிலில் இருக்கலாம். அதாவது Madras Refineries, Indian Oil Corporation போன்ற நிறுவனங்களில் பணிபுரியலாம்.

இவ்வாறு பல தொழில்கள் நமக்குக் கிடைப்பதால் ஒருவரின் தொழிலைத்துல்லியமாகக் கூறுதல் மிகவும் கடினம். இதற்கு அனுபவம்தான் கைகொடுக்க வேண்டும். மேலா கூறிய ஜாதகத்தில் அவர் Transport Department - ல் கணக்கராகப் பணிபுரிகிறார்.

இந்த ஜாதகத்திக் குறித்துக் கொள்ளுங்கள்.

<u>ராசி</u> : சிம்ம லக்கினம்; லக்கினத்தில் குரு, சந்திரன்; 3-ம் வீட்டில் அதாவது

RangaRakes tamilnavarasam.com

துலாத்தில் செவ்வாய்; 4-ம் வீட்டில் அதாவது விருச்சிகத்தில் சூரியன், சனி, புதன், ராகு; 5-ல் அதாவது தனுசில் சுக்கிரன்; ரிஷபத்தில் அதாவது 10-ல் கேது.

நவாம்சம் : லக்கினம் - ரிஷபம்; மிதுனத்தில் குரு; கடகத்தில் சனி; சிம்மத்தில் சுக்கிரன், கேது. 7-ம் வீட்டில் அதாவது விருச்சிகத்தில் சந்திரன்; மகரத்தில் சூரியன், புதன், செவ்வாய்; 10-ல் அதாவது கும்பத்தில் ராகு.

இவர் தொழிலக் கூற முடியுமா? 10-ம் வீட்டு அதிபது சுக்கிரன். அவர் நவாம்சத்தில் சூரியனின் வீட்டில் இருக்கிறார். ஆக சூரியன், சுக்கிரன் சம்மந்தப் பட்ட தொழிலாகத்தான் இருக்க வேண்டும். சூரியன் தனவந்த்ரி என்றழைக்கப் படுகிறார். அதாவது மருத்துவத்திற்கு அதிபதி. இந்த ஜாதகர் ஒரு மருத்துவர். மருத்துவத்தில் பல துறைகள் இருக்கிறது அல்லவா?. இவர் எந்தத் துறையைச் சேர்ந்தவர் ? 10-ம் வீட்டிற்கதிபதி சுக்கிரன்; இவர் பெண்களைக் குறிக்கிறார். சுக்கிரன் 5-ம் வீட்டைக் குறிக்கிறது. 5-ம் வீடு மகப்பேற்றைக் குறிக்கிறது அல்லவா? இவர் மகப்பேரு பார்க்கும் மருத்துவர். என்ன விளக்கம் புரிகிறதா? இவ்வாறாக ஒவ்வொரு ஜாதகத்தையும் ஆராய வேண்டும். இத்துடன் இதை நிறுத்திக் கொள்வோம்.

நம்மிடம் பலர் தொழில் சம்மந்தமான கேள்விகளைக் கேட்பதுண்டு. அத்தகைய கேள்விகளை உங்கள் முன் வைத்துவிட்டு அதற்கு பதிலும் அளிக்கப் போகின்றோம்.

கேள்வி : ஒருவர் துணி வியாபாரம் செய்ய எத்தகைய கிரக நிலைகள் இருக்க வேண்டும்?

பதில் : சுக்கிரன் துணிகளுக்குக் காரகன். புதன் வியாபரத்திற்கு அதிபதி. ஆக புதனும், சுக்கிரனும் 10-ம் வீட்டுடன் சம்மந்தப்பட்டவர்களுக்கு துணி வியாபாரம் அமையும்.

கேள்வி : கட்டிடம் Contract எடுத்துத் தொழில் செய்ய எத்தகைய கிரக நிலைகள் இருக்க வேண்டும்?

பதில் : கட்டிடங்களுக்கு அதிபதி செவ்வாய். புதன் Contract அல்லது Agency-க்கு அதிபதி. ஆக செவ்வய்-புதன் சேர்க்கை இந்தத் தொழிலுக்குத் தேவை.

கேள்வி :தையல் தொழில் செய்யத் தேவையான கிரகங்கள் என்ன?

பதில் : இதில் மூன்று வித கிரக் சேர்க்கை இருக்க வேண்டும். துணிகளுக்கு சுக்கிரன் காரகம் வகிக்கிறார். செவ்வாயானவர் மிஷின் சம்மந்தப் பட்ட தொழிலைக் குறிக்கிறார். சனி உடல் வருத்திச் செய்யும் தொழிலைக் குறிப்பார். ஆகவே சுக்கிரன், செவ்வய்,சனி சம்மந்தப் பட்டவர்கள் தையல் சம்மந்தமான தொழிலில் இருப்பார்கள்.

கேள்வி :சுறுக்கெழுத்தாளராக என்ன சேர்க்கை இருக்க வேண்டும்?

பதில் : புதன் புத்தகங்களையும், Clerical work - களையும் குறிக்கிறது. செவ்வாய் மெஷினரிகளைக் குறிக்கிறது. சனி எதையும் சுறுக்கமாகத் தெரிவிப்பதைக் காட்டுகிறது. Short-hand என்பதே எதையும் சுறுக்கமாகத் தெரிவிப்பது அல்லவா? ஆக புதன், செவ்வய், சனி சம்மந்தப்பட்டால் ஒருவர் சுறுக்கெழுத்தாளராக முடியும்.

கேள்வி : போலீஸ் அல்லது ராணுவத்திற்கு ஏந்த கிரக சேர்க்கை இருக்க வேண்டும்?

பதில் : செவ்வாய். அவர்தான் ஒருவருக்கு தைரியத்தைக் கொடுப்பவர். ஒருவரின் ஜீவனஸ்தானத்துடன் செவ்வாய் சம்மந்தப் பட்டால்தான் ஒருவர் போலீஸ் ஆக முடியும். செவ்வாயுடன் சுக்கிரனும் சம்மந்தப் பட்டால் ஒருவர் போக்குவரத்துத் துறையைச் சேர்ந்தவராக இருப்பார். ஏனெனில் சுக்கிரன் வாகனங்களுக்குக் காரகம் வகிப்பவர். குரு சம்மந்தப் பட்டால் சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பவராக இருப்பார். குரு சட்டம், ஒழுங்குகளுக்குக் காரகம் வகிப்பவர் அல்லவா!

கேள்வி : விவசாயக் கருவிகளை விற்பனை செய்ய என்ன கிரகச் சேர்க்கை இருக்க வேண்டும்?

இருக்க வேண்டும்?

பதில் : விவசாயத்திற்குக் காரகம் வகிப்பவர் சுக்கிரன். மெஷினரிகளுக்குக் காரகம் வகிப்பவர் செவ்வாய். ஏஜென்சிகளுக்குக் காரகம் வகிப்பவர் புதன். இந்த மூவர் சேர்க்கை இருக்க வேண்டும்.

கேள்வி : "எவர் சில்வர்" பாத்திரங்களை விற்பனை செய்ய என்ன கிரகச் சேர்க்கை இருக்க வேண்டும்?

பதில் : துருப்பிடிக்காத இரும்புதான் எவர்சில்வர் என்பது. இரும்பைக் குறிப்பது சனி. சுத்தம் செய்து பொலிவுபடுத்துதலைக் குறிப்பது சுக்கிரன். ஆக இந்த இரண்டு கிரகச் சேர்க்கைதான் எவர்சில்வர் வியாபாரத்தைக் குறிக்கிறது.

கேள்வி : இனிப்புப் பண்டங்களை வியாபாரம் செய்ய எந்த கிரகச் சேர்க்கை இருக்க வேண்டும்?

பதில் : இனிப்புக்களுக்குக் காரகம் வகிப்பவர் சுக்கிரன். அவர் ஜீவன ஸ்தானத்துடன் சம்மந்தப்பட வேண்டும்.

கேள்வி :பெட்ரோல் சம்மந்தமான தொழிலைக் குறிப்பது எந்த கிரகம்?

பதில் : சனியானவர் பூமிக்கு அடியில் இருக்கும் பொருள்களைக் குறிக்கிறார். பெட்ரோல் என்பது நீர்சம்மந்தமானது அல்லவா? ஆக நீர்க் கிரகமான சந்திரனும் சம்மந்தப்பட்டு இருக்க வேண்டும். சுத்தீகரிக்கப்பட்ட எண்ணெய் அல்லவா பெட்ரோல் என்பது; ஆக சுக்கிரனும் சேர்ந்திருக்க வேண்டும்.சனி-சந்திரன் -சுக்கிரன் சேர்ந்ததுதான் பெட்ரோல் என்பது.

கேள்வி :ஒருவர் பத்திரிகை நடத்த வேண்டுமென்றால் அதற்கு என்ன கிரகச் சேர்க்கை இருக்க வேண்டும்?

பதில் : ஒருவர் அச்சு ஆபீஸ் வைத்து பத்திரிகை நடத்தலாம். பத்திரிகைகளுக்குக் காரகம் வகிப்பவர் புதன். அச்சு அடிக்கிற மெஷினைக் குறிப்பது செவ்வாய். ஆக செவ்வாய், புதன் சேர்க்கை அச்சு அடிக்கும் மெஷின் வைத்து பத்திரிகை நடத்துபவர்களைக் குறிக்கிறது. ஒருவர் எந்த மாதிரியான பத்திரிகை நடத்துவர் என்று கூடக் கூறலாம். செவ்வாய், புதனுடன் சுக்கிரன் சம்மந்தப் பட்டால் பெண்கள் சம்மந்தமான அல்லது சினிமா சம்மந்தமான பத்திரிகை நடத்தலாம். இல்லை ஆபாசப்புத்தகங்கள் கூட வெளியிடலாம். சூரியன் சம்மந்தப்பட்டால் அரசியல் அல்லது மருத்துவப் பத்திரிகை நடத்தலாம். குருவாக இருந்தால் குழந்தைகள் அல்லது ஆன்மீகப் பத்திரிகை அல்லது சட்டம் சம்மந்தமான பட்த்திரிகை நடத்தலாம். பாடப் புத்தகங்கள் அல்லது ஜோதிடப் பத்திரிகை நடத்துவதற்கு புதனின் சேர்க்கையும் இருக்க வேண்டும். சனி சேர்ந்தால் தொழிலாளர் சம்மந்தமான பத்திரிகை நடத்தலாம்.

கேள்வி : தோல் வியாபாரம் செய்ய எந்த கிரகச் சேர்க்கை இருக்க வேண்டும்?

பதில் :கால் நடைகளைக் குறிப்பது சுக்கிரன். தோலைக் குறிப்பது சனி. தோல்பதனிடும் இயந்திரங்களைக் குறிப்பது செவ்வாய். ஆக இந்த மூன்றின் சேர்க்கைதான் ஒருவருக்கு தோல் பதனிடும் வேலையைக் கொடுக்க முடியும்.

கேள்வி : இப்போது எல்லோரும் Engineering College -ல் சேர்ந்து படிக்கிறார்கள். அப்படிப் படிக்க என்ன கிரகச் சேர்க்கை இருக்க வேண்டும்?

பதில் :பொதுவாக Engineering என்றாலே புதன்தான் அதற்குக் காரகம் வகிக்கிறார். Mechanical Engineering என்றால் புதனுடன் செவ்வாயும் சேர வேண்டும். Marine Engineering என்றால் புதன், செவ்வாயுடன் சந்திரனும் சேர வேண்டும்.

நாம் மேலே பல தொழில்களுக்குண்டான கிரகச் சேர்க்கையைக் கூறி இருந்தோம். உங்களுக்கு பல தொழில்களை எப்படி கிரகச் சேர்க்கை மூலம் தேர்ந்தெடுப்பது என்பதை விளக்குவதற்காகவே கூறி இருந்தோம். ஒருவரின் தொழிலைக் கூறுவது என்பது அவ்வளவு எளிதான காரியமல்ல. ஏனெனில் ஒரு கிரகத்துக்குப் பல காரகத்து வங்கள் இருப்பதால் அதைக் கூர்ந்து கவனித்துக் கூற வேண்டும். இல்லையென்றால் நகைப்புக்குள்ளாவீர்கள்.

இப்போது ஒரு ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்:

ராசி : தனுர் லக்கினம்; லக்கினத்தில் சுக்கிரன்; 2-ம் வீட்டில் சந்திரன்; 4-ம் வீட்டில் கேது; 5-ம் வீட்டில் செவ்வாய்; 10-ம் வீட்டில் ராகு; 11-ம் வீட்டில் குரு; 12-ம் வீட்டில் சூரியன், புதன், சனி;

நவாம்சம் : ரிஷப லக்கினம்;லக்கினத்தில் சுக்கிரன்; 2-ல் குரு;4-ல் சிம்மத்தில் சந்திரன், ராகு; 6-ல் புதன்; 8-ல் செவ்வாய்;10-ல் கேது; 11-ல் சூரியன்,சனி;

இவர் என்ன தொழில் என்று கூற முடியுமா? 10-ம் வீட்டிற்கு அதிபதி புதன்; அவர் சுக்கிரன் நவாம்சத்தில் இருக்கிறார்; புதன் ராசியில் செவ்வாய் வீட்டில் இருக்கிறார். ஆக புதன், செவ்வாய், சுக்கிரன் இவருக்கு தொழிலைக் கொடுக்க வேண்டும். நாம் சாத்தியக் கூறுகளைப் பார்ப்போம்.

1. புதன் Engineering கல்விக்கு அதிபதி; கூட செவ்வாயும் சேர்ந்து இருப்பதால் இவர் ஒரு Mechanical Engineer- ஆக இருக்கக் கூடும். சுக்கிரனும் சேர்ந்து இருப்பதால் போக்குவரத்து சம்மந்தமான துறையில் இவர் Engineer ஆக இருக்கக்கூடும்.

2. புதன் புத்தகங்களுக்கு அதிபதி; அவர் செவ்வாய் வீட்டில் இருப்பதால் புத்தகம் அச்சிடும் வேலையில் இருக்கலாம்; சுக்கிரனும் சம்மந்தப் பட்டுள்ளதால் பெண்கள் சம்மந்தமான புத்தக வெளியீடுகளிலோ அல்லது சினிமா சம்மந்தப் பட்ட புத்தகங்களிலோ இருக்கலாம்; இவ்வாறு பல தொழில்களைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். இருப்பினும் இவர் எங்கு வேலை பார்த்தார் என்று சொல்லிவிடுகிறோம்.

புதன் அதிபதியாக இருக்கும் Accounts - தொழிலில் B.Com பட்டதாரியானார். சுக்கிரன் சம்மந்தப்பட்ட Fertiliser-களைத் தயாரிக்கும் அலுவலகத்தில் பணிபுரிந்தார். ஒருகிரகம் பல தொழில்களைக் குறிப்பதால் ஒருவர் தொழிலைக் குறிப்பிடுவது மிக சிரமமான காரியம். அனுபவம்தான் எல்லாவற்றையும் கற்றுத் தர வேண்டும்.

ஒருவர் எந்த மாதிரியான தொழில் செய்ய முடியும் என்பதைப் போன பாடத்தில் பார்த்தீர்கள். பலவகைப் பட்ட கிரகங்களின் சேர்க்கையால் எந்தத் தொழில் செய்ய முடியும் என்பதையும் விளக்கி இருந்தோம். ஒருவருக்கு எப்பொழுது பதவி உயர்வு கிடைக்கும் என்பதை இப்போது பார்ப்போம். பதவி உயர்வு கிடைக்க நாம் 2,6,10 மற்றும் 11-ம் வீடுகளை ஆராய வேண்டும். இந்த வீட்டைக் குறிக்கும் கிரகங்களால்தான் பதவி உயர்வைக் கொடுக்க முடியும். ஏன்? இரண்டாம் வீடென்பது பண வரவைக் குறிக்கிறது. பதவி உயர்வென்றால் பண வரவும் இருக்க வேண்டுமல்லவா? பணவரவைக் குறிப்பது 2-ம் வீடல்லவா? ஆக இரண்டாம் வீட்டைக் குறிக்கின்ற கிரகங்களின் தசாபுக்திக் காலத்தில் ஒருவருக்குப் பதவி கிடைக்கும். 6-ம் வீடென்பது நாம் செய்யும் தொழிலைக் குறிக்கிறது. நாம்செய்யும் தொழிலிலிருந்துதானே நாம் பதவி உயர்வை எதிர்பார்க்கிறோம். ஆக நாம் 6-ம் வீட்டையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.10-ம் வீடென்பது ஜீவனஸ்தானம். ஜீவனமென்பது தொழிலாக இருக்கலாம். அல்லது உத்தியோகமாக இருக்கலாம். அதில் உயர்வு பெற வேண்டுமென்றால் அந்த வீட்டைக் குறிக்கின்ற கிரகங்களின் தசா, புக்திக் காலங்களில் தானே முடியும். ஆக 10-ம் வீட்டையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். 11-ம் வீடென்பது லாப ஸ்தானம். அதாவது நம் ஆசைகளை நிறைவேற்றிக் கொடுக்கின்ற வீடாகும். ஆக 11-ம் வீட்டையும் நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த நான்கு வீடுகளைக் குறிக்கும் தசாபுக்தி காலங்களில்தான் ஒருவர் பதவி உயர்வு பெற முடியும்.

6-ம் வீடென்பது, ரண, ரோகம், வியாதி, கடன் ஆகியவற்றைத்தான் குறிக்குமென்று என்று சிலர் நினைத்துக் கொண்டு இருக்கின்றனர். அது தவறு. 6-ம் வீடு ஒருவருக்கு வெற்றியையும் கொடுக்கும் வீடாகும். 7-வது வீடு நம்முடன் போட்டி போடுபவரைக் குறிக்கிறது. அவருக்கு தோல்வியைக் கொடுப்பது 12-ம் வீடல்லவா?

7-க்குப் 12-ம் வீடு எது? 6-ம் வீடல்லவா? ஆக ஒருவர் 6-ம் வீடு குறிக்கின்ற தசாபுக்திக் காலங்களில் எடுத்த முயற்சியில் வெற்றி பெற முடியும். உதாரணத்திற்கு ஒரு ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்.

மிதுன லக்கினம்.
கடகத்தில் சூரியன், சுக்கிரன்; சிம்மத்தில் புதன்;
துலாத்தில் ராகு;
தனுசில் சந்திரன்;
மகரத்தில் செவ்வாய்;
மீனத்தில் குரு;
மேஷத்தில் சனி, கேது;

இவர் ஒரு தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வந்தார். இவருக்கு செவ்வாய் தசை அப்போதுதான் ஆரம்பமாயிற்று; செவ்வாய் 6-ம் வீட்டிற்கு அதிபதி; 8-ம் வீட்டில் இருக்கிறார்; ஆகக் கடனால் கஷ்டப்படுவார் என்று பலர் ஆரூடம் கூறினார்கள். அப்பொழுது அவருடைய கம்பெனியில் பதவி உயர்வுக்கு பலரைப் பரிசீலனை செய்தார்கள். இவரைக் காட்டிலும் அனுபவத்தில் அதிகமுள்ள அதிகம் படித்த பலர் இருக்க இவரைத் தேர்வு செய்தார்கள்.

அதற்கான காரணங்களைப் பார்ப்போம். செவ்வாயானவர் 6-ம் வீட்டிற்கும் 11-ம் வீட்டிற்கும் அதிபதி. 6-ம் வீடு என்பது நாம் மேலே கூறியதுபோல் மற்றவருக்குத் தோல்வியையும், ஜாதகருக்கு வெற்றியையும் கொடுக்கும் வீடல்லவா? 6-ம் வீடென்பது செய்யும் தொழிலைக் குறிக்கும் வீடல்லவா? 11-ம் வீடு லாபத்தைக் குறிக்கும் வீடு. ஆக செவ்வாய் தசை சுய புக்தியில் இவருக்குத் தொழிலில் பதவி உயர்வைக் கொடுத்தது. பார்த்தீர்களா 6-ம் வீடு எப்படித் தொழிலில் வெற்றியைக் கொடுத்தது என்று! அதேபோன்று 10-ம் இடத்தைக் குறிக்கின்ற தசா, புக்திக் காலங்களில் ஒருவருக்குப் பதவி உயர்வு கிட்டும்.

5ம் வீட்டையும் 9-ம் வீட்டையும் திரிகோண ஸ்தானமென்று கூறுவார்கள். ஆகையால் இந்த வீடுகள் மிக உயர்வாகக் கருதப்படுகின்றன. ஆனால் செய்யும் தொழிலைப் பொருத்தவரையில் 5-ம் வீடும் 9-ம் வீடும் நன்மை பயக்காதவை. ஏனெனில் 5-ம் வீடு என்பது 6-ம் வீட்டிற்குப் 12-ம் வீடு; 9-ம் வீடென்பது 10-ம் வீட்டிற்குப் 12-ம் வீடு. எந்த வீட்டிற்கும் அதற்குப் 12-ம் வீடு நன்மை பயக்காதவை அல்லவா! உதாரணத்திற்கு கீழே கொடுத்துள்ள ஜாதகத்தைப் பாருங்கள்.

ராசி :

தனுசு லக்கினம்;
4-ம் வீடான மீனத்தில் செவ்வாய், கேது;
6-ம் வீடான ரிஷபத்தில் குரு, சனி;
7-ம் வீடான மிதுனத்தில் சூரியன், புதன்;
8-ம் வீடான கடகத்தில் சுக்கிரன்;
9-ம் வீடான சிம்மத்தில் சந்திரன்;
10-ம் வீடான கன்னியில் ராகு;

நவாம்சம்:

லக்கினம்: மேஷம்;
2-ம் வீடான ரிஷபத்தில் குரு;
4-ம் வீடான கடகத்தில்
கேது, சுக்கிரன்;
5-ம் வீடான சிம்மத்தில் செவ்வாய்;
7-ம் வீடான துலாத்தில் புதன்;
8-ம் வீடான விருச்சிகத்தில் சனி, சந்திரன்;
10ம் வீடான மகரத்தில் ராகு;
11ம் வீடான கும்பத்தில் சூரியன்.

ஜெனன காலத்தில் இருப்பு தசை சுக்கிரன்: 3 வருஷம்; 2 மாதம் 7 நாள்

இவர் ஒரு Chartered Accountant. கல்விக்கு அதிபதியாகிய புதன் தன் சொந்த வீட்டில் சூரியனுடன் இருப்பது இவருக்கு ஒரு நல்ல கல்வியைக் கொடுத்துள்ளது.
4-ல் செவ்வாய். பூமிகாரகனாகிய செவ்வாய், ஸ்திர சொத்துக்களைக் குறிக்கும் 4-ம் வீட்டில் இருப்பதால் இவருக்கு சொந்தத்தில் வீடு உள்ளது. 8-ம் வீட்டில் சுக்கிரன்.
8-ம் வீடு என்பது இவருடைய வாழ்க்கைத் துணைவியின் தன ஸ்தானம் அல்லவா! மனைவியினுடைய தன ஸ்தானத்தில் சுக்கிரன் இருப்பதால் ஒரு வசதியான வீட்டிலிருந்து ஒரு பெண் மனைவியாக வாய்த்தாள். 10-வது வீட்டின் அதிபதியான புதன் சூரியனுடன் சேர்ந்து இருப்பதால் இவர் தொழிலில் சேரும் போதே ஒரு அதிகாரியாகவே சேர்ந்தார். Sun Gives authority and Power. இதெல்லாம் இவருடைய ஜாதகத்தைப் பற்றிய விளக்கங்கள். இவருக்கு ராகு தசை,

RangaRakes tamilnavarasam.com

செவ்வாய் புக்தி நடந்து கொண்டிருந்த போது இவர் வேலையை இழக்க நேரிட்டது. ராகு 10-ல் இருந்தாலும் 9-ம் வீட்டிற்குடைய சூரியனின் சாரத்தில் அதாவது உத்திர நட்சத்திரத்தில் இருக்கிறார். புக்தி நாதனாகிய செவ்வாய் 5ம் வீட்டிற்கும், 12-ம் வீட்டிற்கும் அதிபதி. ராகு 9-ம் வீட்டுப் பலனையும், செவ்வாய் 5-ம் வீட்டுப் பலனையும் கொடுத்து விட்டார்கள். நாம் மேலே கூறியதுபோல் 9-ம் வீடும், 5-ம் வீடும் செய்கின்ற தொழிலுக்கு எதிர் மறையான பலனைக் கொடுக்கக் கூடிய வீடுகள் அல்லவா? ஆகவே அவர் தன்னுடைய வேலையை இழக்க நேரிட்டது. எப்படி 5-ம் வீடும், 9-ம் வீடும் வேலை செய்கின்றனவென்று பார்த்தீர்களா?

இதைப்போல் பல ஜாதகங்களை நம்மால் உதாரணம் காட்ட முடியும். அவைகளைப் பற்றி விளக்கமாகப் "பலன் சொல்வது எப்படி?" என்று எழுதும் போது உதாரணமாக அளிப்போம். நாம் இப்போது 12- பாவங்களையும் பற்றி விளக்கமாக எழுதி வருகிறோம். இதை முடித்தபின்பு பலன் எப்படிச் சொல்வது என்று எழுதப் போகின்றோம். அப்போது இதைப்போல் பல ஜாதகங்களை விளக்கமாக எடுத்துக் கொண்டு எழுதுவோம். 5-ம் வீடும் 9-ம் வீட்டினுடைய மறு பக்கத்தைத்தான் நாம் மேலே எழுதியுள்ளோம்.

நாம் இதுவரையில் எந்தெந்த கிரகச் சேர்க்கை இருந்தால் எந்த மாதிரியான தொழில் அமையும் என்றும், பதவி உயர்வு எப்போது வரும் என்றும், பதவிக்கு எப்போது பங்கம் வரும் என்றும் எழுதி இருந்தோம். நீங்களும் ஓரளவிற்குப் புரிந்து கொண்டிருப்பீர்கள் என்று நினைக்கிறோம். சிலருக்கு இரண்டுவிதமான வருமானம் வரும். அதாவது ஒரு தொழிலில் இருப்பார். மாலை நேரங்களில் அல்லது நேரம் கிடைக்கும்போது வேறு வேலை செய்வர். சிலர் வேலை செய்து கொண்டே L.I.C Agent, அல்லது அரசாங்கம் அமுல்படுத்தியுள்ள சிறு சேமிப்புத் திட்டங்கள் ஆகியவற்றிற்கு Agent ஆக இருப்பர். மருத்துவரை எடுத்துக் கொள்ளுங்கள். அரசாங்க மருத்துவ மனைகளில் மருத்துவராக இருந்து அரசாங்க ஊதியம் பெறுவர். காலை அல்லது மாலையில் தனிப்பட்ட முறையில் மருத்துவம் பார்த்து சம்பாதிப்பர். இந்த மாதிரி சம்பாதிக்க Professional - ஆகப் படித்து இருக்க வேண்டும். ஒரு டாக்டர் அல்லது Engineer அல்லது வக்கீலால் மட்டுமே இவ்வாறாக சம்பதிக்க இயலும். சிலர் வேலையில் இருந்துகொண்டே பகுதி நேரத்தில் வேறொரு இடத்தில் கணக்கெழுதிப் பணம் சம்பாதிப்பர். இவ்வாறு இரண்டு விதவருமானத்தைத்தான் இரட்டை வருமானம் என்று கூறுகிறோம். சிலரின் மனைவி வேலை பார்த்து சம்பாதிப்பர். இதுவும் ஒரு விதத்தில் இரட்டை வருமானம்தான். இவ்வாறாக இரண்டு வித சம்பாதியத்திற்கு எப்படிப்பட்ட கிரக அமைப்பு இருக்க வேண்டுமென்பதைப் பார்ப்போம்.

புதனுக்கு இரட்டைக் கிரகமென்று பெயர். உபய ராசிகளான மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகியவைகளுக்கு இரட்டை ராசிகளென்று பெயர். புதன் வருமானத்தைக் கொடுக்கக்கூடிய 2-ம் வீடு அல்லது 10-ம் வீட்டுடன் சம்மந்தப்பட்டு இருப்பாரேயாகில் அவருக்கு இரட்டை வருமானத்திற்கு யோகமுண்டு. உதாரணத்திற்கு ஒரு ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள். புதன் எதையும் இரண்டாகக் கொடுக்கக் கூடியவர்.

தனுர் லக்னம்;
லக்கினத்தில் சூரியன், புதன்;
3-ல் அதாவது கும்பத்தில் குரு;
மீனத்தில் சனி;
மேஷத்தில் கேது;
கடகத்தில் சந்திரன்;
துலாத்தில் செவ்வாய், ராகு;
12-ல் சுக்கிரன்.

தனுர் லக்கினத்திற்கு 7-ம் வீட்டின் அதிபதி புதன்; அதாவது அவர் மனைவியைக் குறிப்பது புதன்; அவரே 10-ம் வீட்டிற்கும் அதிபதியாகி லக்கினத்தில் இருக்கிறார். இவர் மனைவி இவர் வேலை பார்க்கும் அலுவலகத்திலேயே பணி புரிகிறார். ஆக இவருக்கு இரட்டைக் கிரகமான புதன் இரட்டை வருமானத்திக் கொடுத்து விட்டார்.

இன்னும் ஒரு ஜாதகத்தை குறித்துக் கொள்ளுங்கள்.

மிதுன லக்கினம்;
கன்னியில் ராகு;

கன்னியில் ராகு;
10-ல் சந்திரன், கேது;
11-ல் சூரியன், புதன், குரு, சனி;
12-ல் செவ்வாய், சுக்கிரன்;

இவருக்கு 7,10-க் குடையவன் குரு லாப ஸ்தானமான மேஷத்தில்; குருவுடன் புதன்; ஆக இவருக்கும் மனைவி மூலமாக வருமானம் உண்டு. ஆக இவருக்கும் இரட்டை வருமானம் கிடைக்கிறது. இதுவரையில் மனைவி மூலமாக வருமானம் வருபவரின் ஜாதகங்களைப் பார்த்தோம்.

சிலர் அரசாங்கத்தில் வேலை பார்ப்பர். சம்பளம் என்று மாதம் பிறந்தால் வாங்குவர். மேஜைக்கு அடியிலும் தினமும் பணம் வாங்குவர். இதுவும் ஒரு வகை வருமானம்தானே. நிரந்தரமான சம்பளம். அதைத்தவிர தினமும் மேல் வரும்படி. ஆக இரண்டு வகையில் வருமானம். இவருக்கு எப்படிப் பட்ட கிரக அமைப்பு இருக்க வேண்டும்? 10-ம் வீடு என்பது ஜீவனஸ்தானம் ஆகும். 2-ம் வீடு தன ஸ்தானம் ஆகும். 6-ம் வீடு நீங்கள் செய்யும் தொழிலைக் குறிக்கிறது. இந்த மூன்று வீடுகளில் ஒன்றுடன் சனி சம்மந்தப்பட்டு இருப்பர். சனிதான் எதையும் ரகசியமாகச் செய்பவராயிற்றே! மேஜைக்கு அடியிலும் வாங்க வேண்டுமென்றால் ரகசியமாகத்தானே வாங்க வேண்டும். ஆக சனி இந்த வீடுகளுடன் சம்மந்தப்பட்டு இருப்பர். சனிமட்டும் போதுமா? போதாது. இந்த வீடுகளுடன் இரட்டை ராசிகளான மிதுனம், கன்னி, தனுசு, மீனம் ஆகிய ராசிகளோ அல்லது இரட்டை ராசியான புதனோ சம்மந்தப்பட்டு இருக்க வேண்டும். உங்களுக்குத் தெரிந்தவர்கள் இந்த மாதிரியான வருமானம் உள்ளவர்கள் இருப்பார்கள். அவர்கள் ஜாதகத்தை வாங்கிப் பாருங்கள். நாம் மேலே கூறியபடி கிரக நிலகள் இருக்கின்றனவா என்று பாருங்கள். உண்மை விளங்கும்.

நம்முடைய வாசகர்களில் ஒருவர் திடீரென்று ஒரு கேள்வி கேட்டார். நீங்கள் 6-ம் வீடு ரணம், ரோகம், வியாதி, கடன், செய்யும் உத்தியோகம், மனவியிடமிருந்து பிரிந்து இருத்தல், போட்டியில் வெற்றி பெறுதல் ஆகியவற்றைக் குறிக்கிறது என்று கூறுகின்றீர்கள். ஒருவருக்கு 6-ம் வீட்டு அதிபதியின் தசை நடக்கிறது எனக் கொள்ளுங்கள். இதில் எது நடக்கும்? அவர் உடல் நிலை பாதிக்கப் படுமா? வேலை கிடைக்குமா? இல்லை போட்டியில் வெற்றி பெறுவாறா? இல்லை மனைவியுடன் சண்டை போட்டுக் கொண்டு Divorce செய்வாறா? எப்படிப் பலன் சொல்வது? எனக் கேட்டார்.

மிகவும் நியாயமான கேள்வி? நாம் பதில் சொல்லியே தீர வேண்டும். ஒருவருக்கு 6-ம் வீட்டின் அதிபதி தசையோ அல்லது 6-ல் உள்ள கிரகத்தின் தசையோ நடக்கிறது எனக்கொள்வோம். தசை முழுவதும் உடல் நிலை பாதிக்காது. லக்கினத்தைக் குறிக்கும் கிரகத்தின் புக்தியோ அல்லது லக்கினத்தில் உள்ள கிரகத்தின் புக்தியோ நடக்க வேண்டும். அப்போதுதான் உடல் நிலை பாதிக்கப்படும்.

லக்கினம் என்பது ஒருவரின் உடலைக் குறிக்கிறது அல்லவா? அப்போது உடல் நிலை பாதிக்கப்படும். உதாரணமாக ஒருவருக்குக் கன்னியா லக்கினம் எனக்கொள்ளுங்கள். 6-ம் வீட்டிற்கு அதிபதியான சனியின் தசை நடைபெறுகிறது எனக்கொள்ளுவோம். 19-ஆண்டுகளுமா உடல் நிலை பாதிக்கப்படும். புதனானவன் லக்கினாதிபதி. ஆக புதன் புக்தியில் உடல் நிலையில் பாதிப்பு இருக்கும். அப்போது உடல் நிலை குன்றும். லக்கினத்தில் வேறு ஏதாவது கிரகம் இருந்தாலும், உதாரணமாக கேது இருக்கிறது எனக் கொள்ளுங்கள். கேது புக்தியிலும் உடல்நிலையில் பாதிப்பு இருக்கும். அதாவது எந்த கிரகம் லக்கினத்தைக் குறிக்கிறதோ அந்த கிரகத்தின் புக்தியில் உடல் பாதிப்பு இருந்துவரும். சரி! புதனானவர் 12-ம் வீட்டில் இருக்கிறார். என்ன பலன்?

புதன் லக்கினாதிபதி; 12-ம் வீட்டில் இருக்கிறார். ஆக புதன் 1ம்வீட்டையும் 12ம்

RangaRakes tamilnavarasam.com

வீட்டையும் குறிக்கிறார். 12-ம் வீடு மருத்துவமனையைக் குறிக்கிறது அல்லவா? தசாநாதன் உபாதையையும் புக்தி நாதன் அதனால் மருத்துவமனையில் இருத்தலையும் குறிக்கிறார். ஆக சனிதசை, புதன் புக்தியில் ஒருவர் நோய்வாய்ப் பட்டு மருத்துவமனையில் இருப்பார்.

சரி! புதன் 12-ம் வீட்டில் இல்லாமல் 8-ம் வீட்டில் இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். 8-ம் வீடு தண்டச் செலவுகளைக் குறிக்கிறது அல்லவா? ஆக சனிதசை, புதன்புக்தியில் உடல் உபாதைகாரணமாக தண்டச் செலவு செய்வார்.

சுக்கிரன் புக்தி நடக்கிறது எனக் கொள்ளுங்கள். கன்னியா லக்கினத்திற்கு சுக்கிரன் 2-ம் வீட்டிற்கு அதிபதி அல்லவா? சரி! அப்போது அவர் வங்கியில் கடன் வாங்க மனுச் செய்து இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். 7-ம் வீடு என்பது நாம் மனுச்செய்துள்ள வங்கியைக் குறிக்கிறது. நமக்குப் பணம் கொடுக்க வேண்டும் என்றால் வங்கியில் உள்ள பணம் குறைகிறது அல்லவா? பணம் கொடுப்பதை அல்லது பணம் குறைவதைக் குறிப்பது 7-க்குப் 12-ம் வீடான 6-ம் வீடல்லவா? ஆக 6-ம் வீட்டைக் குறிக்கின்ற தசா, புக்திக்காலத்தில் ஒருவருக்குப் பணம் கிடக்கும். நாம் மேற்கூறிய உதாரணத்தில் சனி 6-ம் வீட்டின் அதிபதி. அவர் தசையில் பணம் கிடைக்கும். எந்த புக்தியில் கிடைக்கும். தனவரவைக் குறிக்கின்ற 2-ம் வீட்டைக் குறிக்கின்ற கிரகத்தின் புக்தியிலோ அல்லது லாபத்தைக் கொடுக்கும் 11-ம் வீட்டைக் குறிக்கின்ற கிரகத்தின் புக்தியிலோ பணம் கிடைக்கும். இங்கு சுக்கிரன் 2-ம் வீட்டின் அதிபர். ஆக சனிதசை, சுக்கிர புக்தியில் ஒருவருக்கு எதிர்பார்த்த கடன் கிடைக்கும். அதேபோல் இந்த தசை, புக்தியில் ஒருவருக்கு வேலை கிடைக்கும். அல்லது வேலை செய்து கொண்டிருப்பவராக இருந்தால் பதவி உயர்வு கிடைக்கும். 6-ம் வீடு உத்தியோகத்தையும் 2-ம் வீடு பணவரவையும் குறிக்கிறது அல்லவா?

சரி! இவருக்கு குரு புக்தி நடக்கிறது எனக் கொள்ளுங்கள். குரு 9-ம் வீட்டில் இருக்கிறார் எனவும் கொள்ளுங்கள். 7-ம் வீடு மனைவியையும் 9-ம் வீடு அயல் நாட்டுப்பயணத்தையும் குறிக்கிறது அல்லவா? 6-ம் வீடு கணவன் மனைவி பிரிதலைக் குறிக்கிறது. ஆக இவர்மனைவி இவரை விட்டு அயல் நாட்டுப் பயணம் செய்வார் எனக்கொள்ள வேண்டும். சரி! குருவானவர் 12- வீட்டில் இருக்கிறார் எனக் கொள்வோம். 6-ம் வீடும் 12-ம் வீடும் கணவன்-மனைவி பிரிதலைக் குறிக்கிறது. ஆக குருபுக்தியில் கணவன்-மனைவி பிரிந்து இர்ப்பார்கள். ஏன் இது Divorce வரை கூடப் போகலாம்.

சரி! குரு 12-ம் வீட்டிற்குப் பதிலாக 11-ம் வீட்டில் இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். இப்போது 6,7,11-ம் வீட்டின் பலன்கள் நடைபெறும். சரி! இவர் பதவி உயர்வுக்கோ அல்லது வேறு எதற்கோ போட்டி போடுகிறார் எனக் கொள்ளுங்கள். அல்லது தேர்தலுக்கோ போட்டி இடுகிறார் எனக் கொள்ளுங்கள். இவர் அந்தப் போட்டியில் வெற்றி பெறுவார். 7-ம் இடம் போட்டி போடுபவரையும், 6-ம் இடம் அவருடைய தோல்வியையும் 11-ம் வீடு இந்த ஜாதகருடைய வெற்றியையும் குறிக்கிறது. ஆக சனிதசை, குரு புக்தியில் அவர் போட்டியில் வெற்றி பெறுவார்.

சரி! சனிதசை சனி புக்தி. சனியானவர் 12-ம் வீட்டில்; இப்போது என்ன பலன் கிட்டும்? சனி 5-ம் வீட்டிற்கும், 6-ம் வீட்டிற்கும் அதிபதி. 12-ம் வீட்டில் இருக்கிறார். 6-ம் வீடு உங்கள் வேலையாளர்களைக் குறிக்கிறது. 12-ம் வீடு உங்களுக்கு நஷ்டம். ஆக உங்கள் வேலையாளர்கள் உங்களுக்குப் பண நஷ்ட்டத்தைக் கொடுக்கலாம். அல்லது 5-ம் வீடு உங்க குழந்தைகளைக் குறிப்பதனால் குழந்தைகள் மூலமாகச் செலவு இருக்கலாம்.

நாம் மேலே கூறிய விளக்கங்கள் உங்களுக்குப் புரிந்து இருக்குமென்று நினைக்கிறோம். மற்றவைகளை அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

RangaRakes tamilnavarasam.com

நாம் ஜீவனபாவமான 10-ம் வீட்டைப் பற்றி எழுதி கொண்டு இருக்கிறோம். ஜீவனம் என்றால் வேலைதான் பார்க்க வேண்டுமென்பதில்லை. வியாபாரமும் செய்யலாம். வியாபாரம் செய்வதென்றால் ஒருவரிடமிருந்து பொருளை வாங்கி மற்றோருவரிடம் விற்க வேண்டும். விற்பதிலே லாபம் வர வேண்டும். இதுதான் வியாபாரம். நாம் சாமான் வாங்குபவரையும், விற்பவரையும் குறிப்பது 7-ம் வீடு. (7th house indicates the persons with whom one is transacting). அதாவது 7-ம் வீடு வியாபாரத்தைக் குறிக்கிறது. நாம் வங்கியில் கடனுக்கு மனுச் செய்துள்ளோம் எனக் கொள்ளுங்கள். அந்த வங்கியைக் குறிப்பது 7-ம் வீடு. கல்லூரியில் படிக்கும் மாணவன் கல்லூரியில் Scholarship எதிர்பார்க்கிறான் எனக் கொள்ளுங்கள். அந்தக் கல்லூரியைக் குறிப்பது 7-ம் வீடு. ஒருவர் திருமணம் செய்துகொள்ளும் பெண்ணைக் குறிப்பது 7-ம் வீடு. இவ்வாறாக நாம் யாருடன் எல்லாம் தொடர்பு வைத்துள்ளோமோ அவர்களை எல்லாம் குறிப்பது 7-ம் வீடு. சரி! நமது வியாபாரத்திற்கு வருவோம்.

கிரகங்களிலே வியாபாரத்திக் குறிப்பது புதன். இவர் 7-ம் வீட்டில் இருப்பரேயாகில் வியாபாரம் நல்லவிதமாக நடக்கும். புதன் இருந்தால் விற்பனை அமோகமாக இருக்கும். வியாபாரத்திற்கு அனுகூலமில்லாத கிரகம் சனியாகும். அவர் இருப்பாரேயாகில் வியாபாரம் மந்தமாகும். 7-ல் சனி இருக்கப் பிறந்தவர் வியாபாரம் செய்யமலே இருத்தல் நல்லது ஆகும். பொதுவாக சுபகிரகங்கள் 7-ம் வீட்டில் இருத்தல் வியாபார அபிவிருத்தியைக் கொடுக்கும்.

அடுத்து தற்போது நடக்கும் தசா, புக்திக் காலங்களையும் மனத்தில் கொள்ள வேண்டும். 5, 12-ம் வீட்டைக் குறிக்கும் தசா, புக்திக் காலங்களில் வியாபாரத்தில் நஷ்டம்தான் இருக்கும். லாபம் இருக்காது. ஏன்? 5-ம் வீடன்பது 7-ம் வீட்டிற்குப் 11-ம் வீடு. 7-ம் வீடன்பது உங்களுடன் Transaction செய்பவரைக் குறிக்கிறது என்று மேலே கூறி இருக்கின்றோம். ஆக அவர்களுக்கு லாபம் என்றால் இந்த ஜாதகருக்கு நஷ்டம்தானே. 12-ம் வீடென்பது ஜாதகரின் நஷ்டத்திக் குறிக்கும் வீடு. ஆக 5, 12-ம் வீட்டைக் குறிக்கும் தசா, புக்திக் காலங்களில் ஒருவருக்கு வியாபா ரத்தில் லாபம் கிடைப்பது கடினம். அதேபோன்று 6, 11-ம் வீட்டைக் குறிக்கும் தசா, புக்திகாலங்களில் ஒருவருக்கு லாபம் கிடைக்கும். 6-ம் வீடென்பது 7-ம் வீட்டிற்குப் 12-ம் வீடல்லவா? 11-ம் வீடென்பது ஜாதகரின் லாபத்தைக் குறிக்கும் வீடல்லவா. ஆக 6, 11 வீடுகளிக் குறிக்கும் கிரகங்களின் தசா, புக்திக் காலங்களில் ஒருவருக்கு லாபம் கிடைக்கும். உதாரணத்திற்கு ஒரு ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்.

ராசி:

லக்கினம் விருச்சிகம்;
லக்கினத்தில் சனி, கேது, சூரியன்;
2-ம் வீட்டில் சுக்கிரன்;
5-ம் வீட்டில் சந்திரன்;
6-ல் குரு;
7-ல் ராகு;
8-ல் செவ்வாய்; 12-ல் புதன்;

நவாம்சம்:

நவாமசம்:-

கும்ப லக்கினம்; லக்கினத்தில் சனி, செவ்வாய்;
மீனத்தில் ராகு;
ரிஷபத்தில் புதன்;
மிதுனத்தில் குரு;
சிம்மத்தில் சுக்கிரன்;
கன்னியில் சூரியன், கேது;
மகரத்தில் சந்திரன்;

இவர் சூரிய தசை நடக்கும்போது வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். சூரியன் லாபாதிபதி. லக்கினத்தில் அமர்ந்து 7-ம் வீட்டை பார்க்கிறார். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைத்தது. வியாபாரமும் நல்லபடியாக நடந்து வந்தது. சந்திரதசை ஆரம்பித்தது. சந்திரன் மீனத்தில் புதனுடைய நட்சத்திரமான ரேவதியில் இருக்கிறார். புதன் 12-ம் வீட்டில் இருக்கிறார் அல்லவா? ஆக சந்திரன் தான் இருக்கும் வீடான 5-ம் வீட்டின் பலனையும், 12-ம் வீட்டில் உள்ள புதனின் பலனையும் கொடுத்து விட்டார். ஆக வியாபாரத்தில் பெருத்த நஷ்டம். சூரியதசையில் சேர்த்ததையெல்லாம் சந்திர தசையில் விட்டுவிட்டார்.

மற்றும் ஒரு ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்.

ராசி : மிதுன லக்கினம்;
லக்கினத்தில் சனி;
2-ம் வீட்டில் சூரியன், சுக்கிரன், சந்திரன், செவ்வாய்;
3-ல் ராகு, புதன்;
5-ல் குரு;
9-ல் கேது;

இந்த ஜாதகர் சுக்கிர தசை ஆரம்பமான உடன் தான் வேலை செய்த கம்பெனியில் இருந்து ஓய்வு பெற்றார். பின் வியாபரம் செய்ய எண்ணினார். வியாபாரத்தைத் தொடங்கினார். சுக்கிரன் 5,12 வீடுகளுக்கு அதிபதியல்லவா? வியாபாரத்தில் நஷ்டத்தைக் கொடுத்து விட்டார்.

ராசிகளில் நிலராசிகள் என்று சொல்லக் கூடிய ரிஷபம், கன்னி, மகரம் ஆகிய ராசிகள் வியாபாரத்திற்கு உதவாதவை. அங்கு இருக்கும் கிரகங்களும் வியாபாரத்திற்கு அனுகூலமாக இருக்காது.

வியாபாரம் செய்வதற்கு முதலில் ஒருவருக்கு தைரியம் வேண்டும். தைரியம் இருந்தால்தான் வியாபாரம் செய்ய முடியும். தைரியத்தைக் கொடுப்பவர் செவ்வாய் அல்லவா? அவர் தசாநாதனுடனாவது அல்லது புக்தினாதனுடனாவது சம்மந்தப்பட வேண்டும். அப்போதுதான் ஒருவர் வியாபாரம் செய்ய முடியும்.

10-ம் இடத்தைக் கர்மஸ்தானம் என்று கூறுவார்கள். அதாவது தாய், தந்தையருக்கு ஒருவர் செய்யக் கூடிய கடைசிக் காலக் கருமங்களிக் குறிப்பது இந்த இடம்தானாகும். 4-ம் இடம் என்பது தாயாரைக் குறிக்கிறது அல்லவா! 4-ம் வீட்டிற்கு 7-ம் வீடு பாதகஸ்தானம் அல்லவா? ஆக 10-ம் வீடு தாயாரின் மரணத்தைக் குறிக்கிறது அல்லவா? அதேபோன்று 9-ம் வீடு தகப்பனாரைக் குறிக்கிறது அல்லவா? 10-ம் இடம் என்பது 9-ம் வீட்டிற்கு 2-ம் வீடு அதாவது மரணத்தைக் குறிக்கும் வீடல்லவா? அதனால்தான் 10-ம் இடம் என்பது கர்மஸ்தானம் என அழைக்கப்படுகிறது. ஒருவருக்கு 10-ம் வீட்டு அதிபதியின் தசையோ அல்லது 10-ல் உள்ள கிரகத்தின் தசையோ அல்லது புக்தியோ நடக்கும்போது அவருடைய தாயோ அல்லது தந்தையோ

RangaRakes tamilnavarasam.com

மரணமடையக்கூடும். ஒருவருக்குக் கருமத்திற்குக் காலம் வந்துவிட்டது என்பதை 10-ம் வீட்டை வைத்துத்தான் கூற வேண்டும்.

ஒருவரின் மனைவிக்கு ஸ்திர சொத்துக்கள், வாகனங்கள், மனைவியின்கல்வி ஆகியவற்றைக் குறிப்பதும் இந்தப் 10-ம் வீடுதான். ஏனெனில் 7-க்கு 4-ம் வீடு இந்த வீடுதானே. இத்துடன் இந்த வீட்டைப் பற்றி நிறுத்திக் கொள்வோம்.

அடுத்த பாடத்தில் 11-ம் வீட்டைப் பற்றிப் பார்ப்போம்.

RangaRakes tamilnavarasam.com

11-ம் இடம் லாபஸ்தானம் எனப்படும். ஒருவர் சம்பாதியத்தில் செலவு போக மீதம் உள்ளத்தைத்தான் இந்த வீடு குறிக்கிறது. லக்கினம் என்பது ஒருவரின் சொந்த முயற்சியில், உடல் உழைப்பிலிருந்து சம்பாத்தியம் செய்வதைக் குறிக்கிறது. 2-ம் வீடு என்பது ஒருவர் சம்பாதித்த பணவரவைக் குறிக்கிறது. மூன்றாம் வீடென்பது ஏஜென்சித் தொழில், இளைய சகோதரத்தின் மூலம் வரவு, சிறு கதைகள், கட்டுரைகள் மூலம் எழுதிச் சம்பாதிப்பது ஆகியவற்றைக் குறிக்கிறது. 4-ம் வீடு ஸ்திரசொத் துக்கள் மூலம் வரவு, தாயார் மூலம் வரவு, வாகனங்கள் மூலம் வரவு ஆகியவற்றைக் குறிக்கிறது. 5-ம் வீடென்பது லாட்டரி மூலம் பண வரவு, குழந்தைகள் மூலம் பணவரவு, லாட்டரி, ரேஸ் மூலம் பணவரவு ஆகியவற்றைக் குறிக்கிறது. 6-ம் வீடு என்பது கடன் மூலம் வரும் பணத்தைக் குறிப்பது, செல்லப் பிராணிகள் மூலம் பணம் சம்பாதிப்பது, வேலை செய்து பணம் சம்பாதிப்பது ஆகியவற்றைக் குறிக்கிறது. வியாபாரம் மூலமான பண வரவு, மனைவி மூலமான பண வரவு ஆகியவற்றைக் குறிப்பது 7-ம் வீடு. 8-ம் வீடென்பது பரம்பரைச் சொத்து மூலம் வரும் பணம், P.F., Insuranace ஆகியவற்றின் மூலம் வரும் பணம் ஆகியவற்றைக் குறிக்கிறது. அயல் நாட்டுத் தொடர்பு மூலம் வரவு, அந்நியர் மூலம் பண வரவு, தகப்பனார் மூலம் பண வரவு, ஆகியவற்றை 9-ம் வீடு குறிக்கிறது. ஒருவர் தன் தொழில் மூலம் சம்பாதிப்பதை 10-ம் வீடு குறிக்கிறது. ஆக முதல் 10 வீடுகள் மூலமாக ஒருவர் சம்பாதிக்கிறார். 12-ம் வீடு என்பது செய்யும் செலவைக் குறிக்கிறது. ஆக 12-ம் வீட்டின் மூலமாகச் செலவு செய்கிறார். வரவில் செலவுபோக மீதமுள்ளதைக் குறிப்பது 11-ம் வீடு. இந்தப் 11-ம் வீடுதான் ஒருவர் வாழ்க்கையில் என்ன சேமிக்க முடியும் என்பதைக் குறிக்கிறது.

தவிரவும் 11-ம் வீடு என்பது ஒருவருடைய ஆசைகள் நிறைவேறும் வீடாக இருக்கிறது. ஒருவருக்குப் பதவி உயர்வு கிடைக்குமா? குழந்தை பிறக்குமா? ஒருவர் தேர்தலில் வெற்றி பெற முடியுமா? இது போன்ற எல்லாக் கேள்விகளுக்கும் 11-ம் வீட்டை வைத்துத்தான் பதில் சொல்ல முடியும். அதாவது எந்த ஆசை ஒருவருக்கு இருந்தாலும் அந்த ஆசை நிறைவேறுமா என்பதை 11-ம் வீட்டைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும்.

11-ம் வீடு நண்பர்களைக் குறிக்கிறது. நண்பர்கள் நல்லவர்கள்தானா, அவர்களை நம்பலாமா என்பதையும் 11-ம் வீட்டை வைத்துக் கூற வேண்டும். ஒருவர் ஒரு பெண்ணுடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறார் எனக் கொள்ளுங்கள். திருமணம் என்பது ஒரு சட்டபூர்வமான உறவு. அதைக் குறிப்பது 7-ம் வீடு; மனைவியிடம் வைத்திருக்கும் உறவு என்பதை 7-ம் வீடும் 11-ம் வீடும் குறிக்கின்றன. அவ்வாறு இல்லாமல் மனைவி என்ற உறவு இல்லாமல், ஒரு பெண்ணிடம் வைத்திருக்கும் உறவைக் குறிக்கும் வீடு 11-ம் வீடுதான்.

11-ம் வீடு மூத்த சகோதரத்தைக் குறிக்கிறது. 11-ம் வீட்டில் நல்ல கிரகங்கள் இருப்பார்களேயானல் மூத்த சகோதரம் நல்ல விதமாக அமையும். உதவி செய்யும் மனப்பான்மையுடனான மூத்த சகோதரம் அமையும். சனி, செவ்வாய் போன்ற பாப கிரகங்கள் இருந்தால் மூத்த சகோதரத்தால் பயன் ஒன்றும் இல்லை.

ஒரு பெண்ணிணுக்குக் குழந்தை இல்லையெனக் கொள்ளுங்கள். அந்த ஜாதகத்தில் 5-ம் வீடென்பது அந்தப் பெண்ணின் புத்திரபாவத்தைக் குறிக்கிறது. 11-ம் வீடென்பது அவள் கணவனின் புத்திர பாவத்தைக் குறிக்கிறது. எப்படி? 7-ம் வீடு கணவனைக்

RangaRakes tamilnavarasam.com

அவள் கணவனின் புத்திர பாவத்தைக் குறிக்கிறது. எப்படி? 7-ம் வீடு கணவனைக் குறிக்கிறது அல்லவா? அவனுடைய புத்திர ஸ்தானம் 7-க்கு 5-ம் வீடல்லவா? அது 11-ம் வீடல்லவா? 5-ம் வீடு பாதிக்கப்பட்டு இருந்தால் அந்தப் பெண் குழந்தை பெற முடியாதவளென்றும், 11-ம் வீடு பாதிக்கப் பட்டு இருந்தால் அவள் கணவன் குழந்தையைப் பெற முடியாதவனென்றும் கூற வேண்டும். எப்படி பாதிக்கப்பட்டு இருக்க வேண்டுமென்பதை பின்பு விளக்குகின்றோம். சில நாட்களுக்கு முன்புநமக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. ஒரு பெண் பேசினார். தான் தன்கணவனுடன் Divorce-க்கு apply செய்திருப்பதாகவும், தனியாக வாழ்வதாகவும் கூறினார். தனக்குக் குழந்தை பிறக்க வேண்டுமென்றும் அதற்கு வழி இருக்கிறதா? எனக்கேட்டார். கணவனுடன் வாழாத பெண்ணிற்கு எப்படிக் குழந்தை பிறக்க முடியும்? எனப் திருப்பிக் கேட்டோம். அவர் தனக்கு மறுமணம் நடக்குமா? எனக் கேட்டார். நாம் மறுநாள் பதில் சொல்வதாகக் கூறிவிட்டு தொலைபேசியைக் கீழே வைத்து விட்டோம். இந்தப் பெண் ஜாதகம் எதுவும் கொடுக்க வில்லை. கணவனின் ஜாதகமும் கிடையாது. நாம் உடனே ஆரூடம் மூலமாக ஜாதகம் கணித்தோம். (ஆரூடம் என்பது நாம் பலன் சொல்ல நினைக்கும் நேரத்தில் உள்ள கிரக நிலைகளை வைத்து ஜாதகம் கணிப்பது.) ஆராய்ந்து பார்த்ததில் மறுமணம் இல்லை என்ற பதில்கிடைத்தது. கணவனுக்கும் புத்திர பாக்கியம் இல்லை என பதில் கிடைத்தது. அதாவது ஆரூட ஜாதகத்தில் 11-ம் இடத்தைப் பார்த்தபோது புத்திரம் இல்லை எனத் தெரிந்தது. ஆனால் அந்தப் பெண்ணின் 5-ம் பாவம் நன்றாக புத்திரபாக்கியத்துடன் இருந்தது. ஆக அந்தப் பெண்ணிற்கு புத்திரம் கிடைக்கும்.

மறுநாள் அந்தப்பெண் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது "உங்களுக்கு புத்திர பாக்கியம்கிருக்கிறது. உங்கள் கணவருக்கு அந்த பாக்கியம் இல்லை. மறு மணத்திற்கும் யோகமில்லை. ஆகவே உங்களுக்குக் குழந்தை ஆசை இருந்தால் Test-tube Baby- தான் வைத்துக்கொள்ள வேண்டுமென்று கூறினோம். அந்தப் பெண்ணும் அந்த எண்ணம்தான் அவள் மனதில் உள்ளது என்று கூறினார். அதாவது ஒரு ஜாதகத்தில் 11-ம் இடமென்பது கணவனின் புத்திரபாக்கியத்தையும் அவனுக்குக் குழந்தை உண்டா அல்லது இல்லையா என்றும் கூற முடியும் என்பதை விளக்கத்தான் இந்த நிகழ்ச்சியைக் கூறினோம்.

பொதுவாக 11-ம் இடத்தை உபஜெயஸ்தானம் என்று கூறுவார்கள். 3,6,10,11 ஆகிய வீடுகள் உபஜெயஸ்தானம் என்றழைக்கப் படுகின்றன. அதில் பாப கிரகங்கள் இருந்தாலும் நன்மையையே செய்யும் என்று கூறுகிறது ஜோதிட உலகம். ஜாதக தத்வம் என்ற நூல் கீழ்வருமாறு கூறுகிறது. 11-ல் நல்ல கிரகம் இருந்தால் அவைகள் தங்கள் தசா, புக்திக் காலங்களில் நேர்மையான வழியில் சம்பாதிக்க வைப்பர்கள். தீயகிரகங்கள் இருந்தால் நேர்மையற்ற வழிகளில் சம்பாதிக்கும்படி செய்வார்கள்.

அடுத்ததாக மிக முக்கியமான விஷயம் 11-ம் வீட்டைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். சர லக்கினங்களுக்கு 11-ம் வீட்டின் அதிபதி பாதகாதிபதி என்றழைக்கப்படுகிறார். அதாவது மேஷம், கடகம், துலாம், மகரம் ஆகிய சர லக்கினக்காரார் களுக்கு 11-ம் வீட்டின் அதிபதி மாரகாதிபதியாகிறார். இவர் மாரகாதிபதியானதால் கெடுதல்தான் செய்வார் என்று ஒருசிலர் கருதுகின்றனர். அது மிகவும் தவறான கருத்தாகும். அதாவது இவர் தசா, புக்தி, அல்லது அந்திரத்தில் மரணம் சம்பவிக்கும். அவ்வளவே. மற்ற காலங்களில் 11-ம் வீட்டின் காரகத்துவப்படி நல்லதே செய்வார். நல்லதே நடக்கும். மாரகாதிபதியான காரணத்தால் ஆயுள் முழுவதும் கெடுதலே செய்ய மாட்டார். இது அனுபவபூர்வமான உண்மை.

11-ம் வீட்டில் உள்ள கிரகங்கள் என்ன பலன் கொடுக்கின்றன என்பதைப் பார்ப்போம். சூரியன் இருந்தால் உயர்ந்த லட்சியம் உள்ளவராகவும் அவைகளை அடைவதற்குப் பாடுபடுவர் எனவும் கொள்ளலாம். நல்ல உயர்ந்த பதவியிலுள்ளவர்கள் நண்பர்களாக அமைவர். ஆகையால் அத்தகைய நண்பர்களிடமிருந்து பயன் பெறுவர். பொது வாழ்விலும் பெறுமை பெறுவர்.




சந்திரன் இருந்தால் என்ன பலன் என்று பார்ப்போம். சந்திரன் நிலையற்றவர் என்றும் அடிக்கடி மாறும் சுபாவம் உள்ளவர் எனறும் உங்களுக்குத் தெரியும். ஆகவே அடிக்கடி நண்பர்களை மாற்றிக் கொண்டிருக்கும் சுபாவம் உள்ளவராக இருப்பார். சந்திரன் ஸ்திர ராசியில் இருந்தாலோ அல்லது ஸ்திர ராசியிலுள்ள கிரகத்தால் பார்க்கப் பட்டாலோ இவ்வாறு அடிக்கடி மாற்றும் சுபாவம் இருக்காது. சந்திரன் பெண் கிரகமல்லவா? ஆகவே 11-ல் சந்திரன் உள்ள ஜாதகருக்கு பெண் நண்பர்கள் இருப்பார்கள்.

செவ்வாய் ஒரு தைரியமுள்ள கிரகம். அதை ஒரு முரட்டு கிரகம் என்று கூடச்சொல்லலாம். சுபரின் (குரு, புதன், சுக்கிரன்) பார்வை இருந்தால் நண்பர்களுடன் ஒத்துப் போகும் சுபாவம் இருக்கும். இல்லையென்றால் அவர்களுடன் சண்டைதான் மிஞ்சும்.

புதனும் ஒரு நிலையில்லாத கிரகம். அடிக்கடி மாறும் குணமுள்ளது. புத்திசாலித்தனத்தைக் கொடுக்கும் கிரகம். ஆகவே படித்த, புத்திசாலியான நண்பர்களை இந்த ஜாதகர் பெற்றிடுவர். தீய க ிரகங்கள் பார்வை இருப்பின் நண்பர்களால் துன்பம் உண்டாகும்.

குரு 11-ம் வீட்டில் இருந்தால் நல்ல நண்பர்கள் கிடைப்பார்கள். பண வசதியுள்ள தயாள குணமுள்ள நண்பர்கள் கிடைப்பார்கள். பல வழிகளிலும் உதவும் நண்பர்களைப் பெற்றிடலாம் குருவ ின் மூலமாக.

அடுத்தது சுக்கிரன். அவர் இங்கு இருந்தால் பெண் நண்பர்கள் அதிகமிருப்பார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை இருக்கும். கலையார்வமிக்க நண்பர்கள் இருப்பார்கள். சுக்கிரன் பொது வாழ்க்கையைக் குறிக்கிறார். சுக்கிரன் 11-ல் இருக்கப் பிறந்தவர்கள் பொதுவாழ்வில் வெற்றி பெறுவர்.

சனியானவர் 11-ல் இருக்கப் பிறந்தவருக்கு அவரை விட மூத்தவயதினர் நண்பர்க ளாக இருப்பர். அல்லது அவரைவிட சமூக அந்தஸ்தில் கீழாக உள்ளவரை நண்பர்களாகப் பெறுவர். சனி சில நண்பர்களைக் கொடுப்பர்; ஆனால் குருவானவர் அதிக அளவு நண்பர்களைக் கொடுப்பார். சன ியானவர் பாபகிரகங்களின் சம்மந்தப்பட்டால் இந்த ஜாதகர் நண்பர்களிடத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஏமாற்றப்படுவர். 11-ம் இடமென்பது ஒருவரின் ஆசைகளை நிறைவேற்றும் இடமாகையால் அங்கு சனி இருப்பது அவ்வளவு விரும்பத்தக்கது அல்ல; அவரின் ஆசை கள் மெதுவாகத்தான் நிறைவேறும். முழுமையாகவும் நிறைவேறாது.

பொதுவாக சர லக்கினங்களுக்கு (அதாவது மேஷம், கடகம், துலாம் மகரம்) 11-ம் வீடு பாதகஸ்தானம் என்றும் அதன் அதிபதி பாதகாதிபதி என்றும் அழைக்கப்படும். ஆகவே 11-ம் வ ீட்டு அதிபர் கெடுதல்தான் செய்வர், நல்லதே செய்ய மாட்டர் என்ற கருத்து சிலரிடையே நிலவுக ிறது. அது மிகவும் தவறான கருத்தாகும். பாதகாதிபதி என்றால் மரணத்தைக் கொடுப்பவர் என்றுதான் பொருள். எப்போது ஆயுள் முடிகிறதோ அப்போதுதான் அவர் மரணத்தைக் கொடுப்பார். மற்ற காலங்களில் ஆயுள் முழுவதும் அவர் நல்லதையேதான் செய்வர். இது அனுபவபூர்வமான உண்மை. இத்துடன் 11-ம் வீட்டை முடித்துக் கொள்வோம்.

RangaRakes tamilnavarasam.com

இதுதுடன் 11-ம் வீட்டை முடித்துக் கொள்வோம்.

இனி நாம் அடுத்த வீடான 12-ம் வீட்டைப் பற்றி இனி பார்ப்போம்.

பொதுவாக 12-ம் வீட்டை துஸ்தானமென்றும், அதில் உள்ள கிரகங்களோ அல்லது அதன் அதிபரோ நன்மை செய்ய மாட்டார்களென்றும் கூறுவார்கள். அது சரியான வாதமல்ல. 12-ம் வீடு பாபர்களால் பாதிக்கப் பட்டால்தான் கெடுதலைச் செய்ய முடியும்.

இது செலவுகள், நஷ்டங்கள், ஏமாற்றம், துக்கங்கள், முதலீடு செய்தல், வாங்கிய கடனைத் திருப்பித்தருதல், சிறைத் தண்டனை, வெளி நாடுகளில் குடியேறுதல், மருத்துவமனையில் சிகிச்சை, தருமங்கள், ஆன்மீக சம்மந்தமான விஷயங்களுக்கு தர்மம் செய்தல் ஆகியவற்றைக் குறிக்கிறது. 6-ம் வீடென்பது செல்லப் பிராணிகளைக் குறிப்பதுபோல் 12-ம் வீடு மிருகங்களைக் குறிக்கிறது.

உதாரணமாக கன்னியா லக்கினத்தை எடுத்துக் கொள்ளுங்கள். 12-ம் வீட்டின் அதிபதி சூரியன் ஆவார். அவர் 2-ம் வீடான தனஸ்தானத்தில் சுக்கிரனுடன் இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். நாம் உடனே"12-ம் வீட்டின் அதிபதி விரயத்தைக் கொடுப்பார். ஆக்வே சூரிய தசா, புக்திகளில் கஷ்டப் படுவீர்கள்" என்று பலன் சொன்னால் பொருத்தமாக இருக்காது. 12-ம் வீட்டின் அதிபதி சுக்கிரனுடன் சேர்ந்து இருக்கும் காரணத்தால் அப்போது நகைகள், ஆடம்பரப் பொருள் வாங்குவது சம்மந்தமான செலவு இருக்கும் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். சுக்கிரன் நகைகள், ஆடம்பரமான பொருள்களுக்கு அதிபதி அல்லவா. 12-ம் இடம் செலவையும், 2-ம் இடம் பொருள் சேர்க்கையைக் குறிக்கிறது அல்லவா? ஆக சூரியனின் தசா, புக்தி காலங்களில் ஆடை, ஆபரணச் சேர்க்கை இருக்குமென்று கூறினால் பொருத்தமாக இருக்கும் அல்லவா? 3-ம் வீடும் 12-ம் வீட்டு அதிபனும் சம்மநதப் பட்டால் பலன் எப்படி இருக்கும்? 3-ம் வீடு இளைய சகோதரத்தைக் குறிக்கிறது. 3-ம் வீடு சிறு பயணங்களைக் குறிக்கிறது. 3-ம் வீடு சிறுகதை எழுதுவதையும், புத்தகங்கள் வெளியிடுதலையும் குறிக்கிறது. ஆக செலவைக் குறிக்கும் 12-ம் வீடுடன் சம்மந்தப்படுவதினால் மேற்கூறிய காரகத்துவம் சம்மந்தமான செலவுகள் இருக்கும். சரி! 4-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் எப்படி இருக்கும்? 4-ம் இடத்தின் காரகத்துவம் என்ன? தாயார், வீடு,வாசல் போன்ற சொத்துக்கள், வாகனம் வாங்குதல் போன்றவற்றைக் குறிக்கிறது. அப்போது ஒருவர் வீடுவாங்கலாம். வாகனம் வாங்கலாம். தாயாருக்காக செலவு செய்யலாம். ஆகவே இதுபோன்ற செலவுகள் இருக்கும். ஒருவரின் தாயார் வெளி நாடு செல்கிறார் எனக் கொள்ளுங்கள். 12-ம் வீடு என்பது 4-ம் வீட்டிற்கு 9-ம் வீட்டைக் குறிக்கிறது அல்லவா? 9-ம் வீடு வெளி நாட்டுப் பயணம், நீண்ட பயணம் ஆகியவற்றைக் குறிக்கிறது அல்லவா? ஆக அப்போது அவரின் தாயார் வெளிநாடு செல்வார். அதற்காக அவர் பணம் செலவழிப்பார்.

5-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் என்ன பலன்? 5-ம் வீடு குழந்தைகளைக் குறிக்கிறது. ஆக குழந்தைகள் சம்மந்தமான செலவுகள் இருக்கும். 5-ம் வீடு ஸ்பெகுலேஷன் (Speculation) துறையைக் குறிக்கிறது அல்லவா? ஆக ஸ்பெகுலேஷனில் பண நஷ்டப் படுவார். 5-ம் வீடு சினிமா, டிராமா போன்ற கலைத்துறையினைக் குறிக்கிறது அல்லவா? இதுபோன்ற துறைகளில் பணத்தைக் கோட்டை விடுவார் எனவும் கொள்ளலாம். 6-ம் வீடு கடன், ரோகம், ரணத்தைக் குறிக்கிறது அல்லவா? 12-ம் வீடு 1-ம் வீடு , 6-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டு இருந்தால் உடல் ஆரோக்கியமின்மை காரணமாக மருத்துச் செலவு, மருத்துவமனை சம்மந்தமான செலவுகள் செய்வார். 6-ம் வீட்டுடன் மட்டும் சம்மந்தப் பட்டால் கடன் தொல்லையால் அவதிப்படுவார்.

7-ம் வீடு மனை, மற்றும் வியாபாரத்தைக் குறிக்கிறது அல்லவா? 7-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் மனைவி மூலமாகச் செலவு செய்வர். வியாபரம் செய்பவராக இருந்தால் வியாபாரத்தில் நஷ்டப் படுவர். 8-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் அவமானகரமான காரியங்கள் நிகழும். கடன் தொல்லை காரணமாக அவமானப்பட நேரிடும். ஜெயில் தண்டனையும் கிட்டக் கூடும். 9-ம் வீடு தகப்பனாரையும், நீண்ட பயணத்தையும் குறிக்கிறது அல்லவா? தகப்பனாருக்கக ஒருவர் செலவு செய்யக் கூடும். அல்லது வெளி நாட்டுப் பயணம் மேற்கொள்ளக் கூடும்.

10-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டால் தொழில் சம்மந்தமான செலவுகள் இருக்கும். இவ்வாறாக 12-ம்

இதுவரையில் 11-வீடுகளைப் பார்த்தீர்கள். இப்போது 12-வது வீட்டைப் பற்றிப் பார்ப்போம். பொதுவாக 12-ம் வீட்டை துஸ்தானமென்று கூறுவார்கள். அதாவது 12-ம் வீட்டு அதிபதியும் நல்லது செய்ய மாட்டார். 12-ம் வீட்டிலுள்ள கிரகங்களும் நல்லவை செய்யா. 12-ம் வீடு மறைவு ஸ்தானம் ஆவதால் அதிலுள்ளகிரகங்களும் மறைந்து விடுகின்றன. ஆகையால் நன்மை செய்ய முடியாது அந்த கிரகங்களால்; இதுதான் பொதுவாக ஜோதிடர்களின் வாதம்.

பொதுவாகவே நாம் எந்த வீட்டையும் அவ்வாறு ஒதுக்கிவிட முடியாது. 12-ம் வீட்டால் பல நன்மைகளும் இருக்கின்றன. அவற்றையெல்லாம் இந்தப் பாடத்தில் தெரிந்து கொள்வோம். எந்தவீடும் நன்மை ஒன்றையே செய்வது இல்லை; அதைப் போல் எந்த வீடும் கெடுதலையே செய்வதும் இல்லை; இரண்டும் கலந்துதான் இருக்கும். 5-ம் வீட்டையும் 9-ம் வீட்டையும் திரிகோண ஸ்தானமென்பார்கள்.திரிகோண ஸ்தானம் மிக உயர்வாக ஜோதிட உலகம் கருதுகிறது. அதன் அத ிபர்களும், அதிலுள்ள கிரகங்களும் நன்மையே செய்வார்கள் என்ற கருத்தும் நிலவுகிறது. ஆனால் அவர்கள் தசா,புக்திக் காலங்களில் ஒருவர் தன் உத்தியோகத்தை இழக்க நேரிடும் என்று அந்த பாவங்களைப் பற்றி எழுதும் போது கூறி இருந்தோம். இதுதான் உண்மை. அதேபோல் 8-ம் வீட்டு அதிபர் கெடுதலைச் செய்ய வேண்டிய அவசியமில்லை;அவர் தசாபுக்திக் காலங்களில் ஒருவருக்குப் பிதுராஜித சொத்துக்கள் கிடைக்கலாம்; அல்லது வெகு நாளாக வரவேண்டிய P.F., Gratuity, Superannuation போன்றவை கிடைக்கலாம். ஆகவே 8-ம் வீடு என்பது கெடுதலை மட்டும் செய்யாது. நம்மைகளையும் செய்யும். சரி! நாம் இப்போது 12-ம் வீட்டைப் பற்றிப் பார்ப்போம்.

12-ம் வீடென்பது செலவுகள், நஷ்டங்கள், முதலீடுகள், நன்கொடைகள், தர்மங்கள், ஆகியவற்றைக் குறிக்கிறது. நாம் வாங்கும் பொருள்களையும் இந்த 12-ம் வீடு குறிக்கின்றது.
ஒருவர் கன்னியா லக்கினம் எனக் கொள்ளுங்கள். அவருக்கு 12-ம் வீட்டின் அதிபதியான சூரியன ின் தசை நடக்கிறது எனக் கொள்ளுங்கள். சூரியன் 2-ம் வீட்டில் இருக்கிறதெனவும் கொள்ளுங்கள். இரண்டாம் வீடென்பது நகை, ஆபரணம், முதலீடு ஆகியவற்றைக் குறிக்கிறது அல்லவா? சூரிய தசையில் அவர் நகை, ஆபரணங்கள் ஆகியவற்றை வாங்கலாம். அல்லது Shares, அரசாங்க பத்திரங்கள் ஆகியவற்றில் முதலீடு செய்யலாம். சரி! 2-ம் வீட்டிற்குப் பதிலாக 3-ம் வீட்டில் இருக்க ிறார் எனக் கொள்ளுங்கள். 3-ம் வீடு இளைய சகோதரத்தைக் குறிக்கிறது அல்லவா? ஆகவே இளைய சகோதரத்திற்காக அவர் செலவு செய்ய வேண்டியது வரும். அல்லது 3-ம் இடம் சிறிய பயணங்களைக் குறிக்கிறது அல்லவா? ஆகவே பயணங்களுக்காகச் செலவு செய்ய வேண்டியது வரும். 3-ம் வீடென்பது 4-ம் வீட்டிற்குப் 12-ம் வீடல்லவா? ஆக தாயாரின் மருத்துவமனைச் செலவுகள் செய்ய வேண்டியதுவரும். இல்லையென்றால் தாயாரின் ஈமக் கடன்களுக்காகச் செலவு செய்ய வேண்டியது வரும். இதில் வேடிக்கையைப் பாருங்கள். 2-ம் வீட்டில் இருக்கின்றபோது சுபச் செலவுகளைக் கொடுத்தார். 3-ம் வீட்டில் அசுபச் செலவுகளைக் கொடுத்து விட்டார். சரி! 5-ம் வ ீட்டில் சூரியன் இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். 5-ம் வீடு புத்திர ஸ்தானம் அல்லவா? ஆகக் குழந்தைகள் சம்மந்தமாகச் செலவு செய்ய வேண்டியதுவரும். அல்லது வியாபாரம் செய்பவராக இருந்தால் வியாபாரத்தில் நஷ்டம் உண்டாகும். எப்படி? 7-ம் வீடு வியாபாரத்தையும் அதாவது உங்களிடமிருந்து பொருள்கள் வாங்குவோர் அல்லது விற்போரையும் குறிக்கிறது. 5-ம் வீடு என்பது 7-ம் வீட்டிற்கு லாபத்தைக் கொடுக்கும் வீடல்லவா? ஆக உங்களோடு வாங்கி விற்போருக்கு லாபம் என்றால் உங்களுக்கு நஷ்டம்தானே. ஆக 5-ம் வீட்டோடு 12-ம் வீட்டின் அதிபதி சம்மந்தப் பட்டால் வியாபாரத்தில் நஷ்டம் உண்டாகும். இவ்வாறாக 12-ம் வீடு எந்த வீட்டுடன் சம்மந்தப் பட்டுள்ளார் எனப்பார்த்துப் பலன் சொல்ல வேண்டும்.

12-ம் வீடு நாம் வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கும் வீடாகும்.ஒருவர் கடனாளியாக இருக்க றொர். அவர் " என்னால் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியுமா? அல்லது நான் கடனாள ியாகவேஇருப்பேனா?"எனக் கேட்கலாம். அவர் ஜாதகத்தில் 12-ம் வீட்டைக் குறிக்கின்ற கிரகம் 8-ம் வீட்டிலோ அல்லது 5-ம் வீட்டிலோ இருக்குமேயானால் அவர் நிச்சயமாகக் கடனைத் திருப்பிக் கொடுப்பார் எனக் கொள்ளலாம். எப்படி? 7-ம் வீடென்பது கடன் கொடுத்தவரைக் குறிக்கிறது. 12-ம் வீடு ஒருவர் கடன் திருப்பிக் கொடுப்பதைக் குறிக்கிறது. 8-ம் வீடு கடன் கொடுத்த வரின் தனஸ்தானத்தையும், 5-ம் வீடு அவரின் லாபஸ்தானத்தையும் குறிப்பதால் 12-ம் வீட்டு அதிபதி இந்த இரண்டு வீடுகளில் ஒன்றில் இருந்தால் கொடுத்தவருக்குப் பணம் திருப்பிக் கிடைக்கும் என்ற உறுதியை இந்த கிரக நிலைகள் அளிக்கின்றன.

12-ம் வீட்டில் சுபகிரகங்களான குரு, சுக்கிரன், புதன், சந்திரன் போன்றவை இருக்குமேயாகில் சுபச் செலவுகள் இருக்குமெனக் கொள்ளலாம். திருமணச் செலவுகள், உயர்படிப்பிற்காகச் செலவு, வெளி நாட்டுப் பயணத்திற்காகச் செலவு செய்வது ஆகியவை சுபச் செலவாகும். அதேபோல் சனி, ராகு, கேது, செவ்வாய், சூரியன் போன்ற பாப கிரகங்கள் இருப்பது அசுபச் செலவைக் கொடுக்கும்.

12-ம் வீடென்பது ஒருவருக்குத் தனியையாக வாழும் வாழ்க்கையைக் கொடுக்கும் வீடாகும். ஒருவருக்கு ஜெயில் தண்டனையைக் கொடுக்கும் வீடும் அதேவீடாகும். 3-ம் வீடு, 8-ம் வீடு, 12-ம் வீடும் சேர்ந்தாற்போல் ஜெயில் தண்டனையைக் கொடுக்கும் வீடுகளாகும். இதைச் சற்று விபரமாக விளக்குவோம். 4-ம் வீடென்பது ஒருவர் ஸ்திரமாக வாழும் வீட்டைக் குறிக்கிறது. ஜெயில் தண்டனையென்றால் தன் சொந்த வீட்டை, தன் சுற்றத்தாரையெல்லாம் விட்டு வாழவேண்டுமல்லவா? 4-ம் வீட்டிற்குப் 12-ம் வீடான 3-ம் வீடு ஸ்திரமாகவாழும் வீட்டை விட்டு வெளியேறுதலைக் குற ிக்கிறது. ஜெயில் தண்டனையென்றால் ஒருவருக்கு அவமானகரமான சம்பவம் அல்லவா? அந்த அவமானத்தைக் கொடுப்பது 8-ம் வீடாகும். 12-ம் வீடென்பது தனிமையில் வாழும் வாழ்க்கையைக் குறிக்கிறது. ஆக 3,8,12-ம் வீடுகளைக் குறிக்கின்ற கிரகங்களின் தசா, புக்திக் காலங்களில் ஒருவர் ஜெயில் தண்டனையை அனுபவிக்க நேரிடும். உதாரணத்திற்கு ஒரு ஜாதகத்தைக் குறித்துக் கொள்ளுங்கள்.

ராசி : லக்கினம்- மகரம்; 5-ம் வீட்டில் கேது; 7-ம் வீட்டில் குரு; 8-ம் வீட்டில் சூரியன், செவ்வாய், சுக்கிரன், புதன், 10-ம் வீட்டில் சனி; 11-ல் ராகு; சந்திரன் லக்கினத்தில்

நவாம்சம் : சிம்ம லக்கினம்; 2-ம் வீட்டில் கேது; 7-ல் குரு; 8-ல் சந்திரன், சனி, ராகு, புதன்; 1-ல் செவ்வாய்; 12-ல் சூரியன், சுக்கிரன்

இவர் பால் வியாபாரம் செய்து வந்தார். ராகுதசை, குரு புக்த ியில் பாலில் தண்ணீர் கலந்த குற்றத்திற்காக 6-மாதம் ஜெயில் தண்டனை விதித்து விட்டார்கள். சரி! எப்படி ராகு தசை, குரு புக்தியில் ஜெயில் தண்டனை கிடைத்தது என்பதைப் பார்ப்போம். 11-ல் ராகு; அவர் நல்லதையே செய்ய வேண்டும். செய்யவில்லை. அதற்கு மாறாக ஜெயில் தண்டனையைக் கொடுத்து விட்டார். ராகு 11-ல் இருந்தாலும் அவர் இருப்பது புதனின் நட்சத்திரமான கேட்டையில்; புதன் இருப்பது 8-ம் வீட்டில்; ஆக 8-ம் வீட்டின் பலனையும் கொடுக்கும் அதிகாரம் ராகுவிற்கு கிடைத்து விடுகிறது. அடுத்ததாக குரு 7-ம் வீட்டில் உச்சத்தில்; இருப்பினும் அவர் 3, 12-ம் வீடுகளுக்கு அதிபதி; ஆகவே 3,8,12 வீடுகள் கொடுக்கும் ஜெயில் தண்டனை இவருக்கும் கிடைத்து விட்டது. உச்சனாக இருப்பதால் நல்லதையே செய்ய வேண்டும் என்ற நியதி இல்லையென்பதைப் பாருங்கள். ஒருவர் House Arest என்கிற வீட்டுக் காவலில் வைக்கப் படுகிறார் எனக் கொள்ளுங்கள். அவர் வ ீட்டிலேயே இருப்பதால் 3ம் வீட்டிற்குப் பதிலாக 4-ம் வீடு சம்மந்தப் பட்டு இருக்கும். அதாவது 4, 8, 12-ம் வீடுகள் சம்மந்தப் பட்டு இருக்கும்.

மீதமுள்ளவற்றை அடுத்த பாடத்தில் பார்ப்போம். 12 பாவங்களையும் பற்றி எழுதியபின் மாந்தியைப் பற்றி எழுதப்போகின்றோம். மாந்தியை எப்படிக் கணிப்பது அதன் பலன்கள் என்ன என்பதையும் எழுதிவிட்டால் அதற்குப் பின் பலன் எப்படிக் கூறுவது என்றும் விளக்கிவிட்டால் ஜோதிடம் ஓரளவ ிற்குச் சொல்லிக் கொடுத்தாற்போல் ஆகும். பலன் சொல்வது என்பது மிகவும் கடினமான கார ியமாகும் பார்ப்போம். நம்மால் முடிந்ததை விளக்கமாகவே கூறுவோம்.

RangaRakes tamilnavarasam.com

12-ம் வீடு ஒருவருக்கு பயம், தாழ்வு மனப்பான்மையை, சந்தேகம் ஆகியவற்றையெல்லாம் கொடுக்கக் கூடிய வீடு.

அதேபோன்று 12-ம் வீடு என்பது மனித குலத்திற்கு ஒருவர் செய்யும் சேவையையும் குறிக்கும் வீடாகும். தெரெஸா போன்றவர்கள் மனித குலத்திற்குச் செய்யும் சேவையைக் குறிக்கும் வீடு அது. 6-வது வீடு என்பது நாம் செய்யும் அடிமைத் தொழிலைக் குறிப்பது போல், 12-ம் வீடு ஒருவர் தன்னலமில்லாது செய்யும் சேவையைக் குறிக்கிறது. ஆறாம் வீட்டிற்கும் 12-ம் வீடிற்கும் பல ஒற்றுமை, வேற்றுமைகள் உண்டு. 6-ம் வீடு ஒருவர் செய்யும் தொழிலைக் குறித்தால் 12-ம் வீடு ஒருவரின் தன்னலமில்லாத சேவையைக் குறிக்கிறது. 6-ம் வீடு நாம் வளர்க்கும் செல்லப் பிராணிகளைக் குறித்தால் 12-ம் வீடு காட்டு மிருகங்களைக் குறிக்கிறது. 6-ம் வீடு கடன் வாங்குவதைக் குறித்தால் 12-ம் வீடு கடன் கொடுப்பதைக் குறிக்கிறது. 6-ம் வீடு நம்மோடு கொடுக்கல், வாங்கலில் இருப்போருக்கு நஷ்டத்தைக் கொடுத்தால், 12-ம் வீடு நமக்கு நஷ்டத்தைக் கொடுக்கிறது. 6-ம் வீடு நமக்கு இருக்கும் எதிரிகளைக் குறித்தால் 12-ம் வீடு நமக்கு உள்ள மறைமுகமான எதிரிகளைக் குறிக்கிறது.

இனி 12-ம் வீட்டில் உள்ள கிரகங்களுக்கு என்ன பலன் என்று பார்ப்போம். சூரியன் இங்கு இருப்பாரேயாகில் இவர்களின் எதிரிகளுக்கு இவர் எமனாக விளங்குவார். சூரியன் 10-ம் வீட்டுக்கு அதிபதியாகி 12-ம் வீட்டில் இருப்பாரேயாகில் அவருக்கு ஜெயில் சம்மந்தமான உத்தியோகம் கிடைக்கும் என்று கூறலாம். ஏனெனில் 12-ம் வீடு ஜெயிலையும், சூரியன் அரசாங்கத்தையும் குறிக்கிறது அல்லவா! சூரியன் தன்வந்திரி என்று அழைக்கப் படுகிறார் அல்லவா. 12-ம் வீடு மருத்துவமனையைக் குறிக்கிறது அல்லவா? ஆகவே மருத்துவ மனையில் மருத்துவராகப் பணிபுரியும் வாய்ப்பும் இருக்கிறது. சரி! சூரியன் 12-ல் இருந்து பாபருடன் கூடியிருந்தாலோ அல்லது பாபரால் பார்க்கப்பட்டாலோ, பெரிய மனிதர்களின் பகை வந்து சேரும். தனிமைப்பட்டு வாழ நேரிடும்.

சரி! அடுத்த கிரகமான சந்திரனைப் பற்றிப் பார்ப்போம். சந்திரன் ஒரு நீர்க் கிரகம். அவர் 10-ம் வீட்டுடன் சம்மந்தப்பட்டு 12-ம் வீட்டில் இருப்பாரேயாகில் கடல்,கப்பல் சம்மந்தப்பட்ட தொழிலில் இருப்பார். நீர் சம்மநதப் பட்ட தொழில் அமையும்.

பொதுவாக செவ்வாய் இந்த இடத்தில் இருப்பது நல்லது அல்ல; 12-ல் செவ்வாய் இருந்து சனியால் பார்க்கப்பட்டாலோ அல்லது சனியுடன் சேர்ந்து இருந்தாலோ ஒருவருக்கு ஜெயில் தண்டனை கூடக் கிடைக்கலாம். இல்லையென்றால் தீவீரமாக நோயால் பீடிக்கப்பட்டு மருத்துவமனையில் நீண்ட நாள் இருக்க வேண்டியதுவரும். 12-ம் இடம் மறைமுக எதிரிகளைக் குறிக்கும் இடம்மென்று கூறி இருந்தோம். செவ்வாய் அங்கிருந்து பாபர்களின் சேர்க்கை பெற்றால் எதிரிகள் மூலமாக காயம், ரணம் ஆகியவை ஏற்படும். மிருகளைகளைக் குறிபதும் 12-ம் வீடு என எழுதி இருந்தோம். மிருகங்களின் மூலமாக உடலில் ரணங்கள் ஏற்படக்கூடும்.

புதன். புதன் இங்கு தனியாக இருந்தால் எதாவது சிறிய துக்கங்களுக்காக கவலைப்படுபவராக இருப்பார். புதன் எழுத்துத் துறைகளுக்கும் காரகனல்லவா? ஏதாவது தவறுதலாக எழுதி அதனால் பல பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டியவராக இருப்பார்.சனி, செவ்வாய் போன்ற தீய கிரகங்கள்பார்வை பெற்றால் பணம் கையாடல், தஸ்தாவேஜுகளைத்திருத்துதல் போன்ற தவறான செய்கைகளில் ஈடுபடுவர். 12-ம் இடம் மறைவுஸ்தானம் எனப்படும் அல்லவா? மறைந்து இருக்கும் உண்மைகளைக் கண்டறியும் திறமை பெற்றிருப்பர். சுறுக்கமாகச் சொல்லப்போனால் C.I.D. போன்ற துறைகளில் இவர்கள் சிறப்பாகப் பணிபுரிவர்.

அடுத்தது குரு. மிகவும் ஆன்மீக சிந்தனை உள்ள கிரகம். இங்கு தீயவர் சம்மந்தப் படாமல்

RangaRakes tamilnavarasam.com

இருந்தால் சத்சங்கங்களிலோ, அனாதை ஆசிரமங்களிலோ, தர்மத்தைப் பரப்பும் ஸ்தாபனங்களிலோ தங்கள் காலத்தைக் கழிப்பர். ஆன்மீகத்துறையில் மிகுந்த ஈடுபாடு இருக்கும். தங்கள் விரோதிகளை வெற்றி காண்பர். பெரும் பணம் படைத்தோர் தர்மஸ்தாபனங்களுக்குப் பெறும் பொருளுதவி செய்வர்.

அடுத்த கிரகம் சுக்கிரன். 12-ம் வீட்டை அயன், சயன, போகஸ்தானம் என்று கூறுவார்கள். சுக்க ிரன் இங்கு இருப்பது சிற்றின்பத்தில் அதிக நாட்டம் கொடுக்கும். சுபகிரகங்கள் பார்வையோ அல்லது சேர்க்கையோ இருப்பவர் வேலி தாண்டிச் செல்ல மாட்டார். செவ்வாய் சேர்ந்திருப்பின் பிற பெண்களிடம் நாட்டம் கொண்டு மனம் செல்கின்றபடியெல்லம் செல்வர். சுக்கிரனும், சனியும் சேர்ந்து இங்கு இருப்பின் மனைவியை விட்டுப் பிரியும் நிலை இவருக்கு உண்டாகும்.

சனி. சிலர் தனிமையை விரும்பலாம். சிலர் தனிமையான இடத்தில் வாழ வேண்டும் என வ ிரும்ம்புவார்கள். சனி 12-ல் இருப்பவர்களுக்கு அவர்கள் விரும்பிய அத்தகைய வாழ்க்கை க ிடைக்கும். சனி 6-ம் வீட்டுடன் சம்மந்தப் பட்டு 12-ம் வீட்டில் இருந்தால் மிகவும் நாள்பட்டு குணம் ஆகின்ற வியாதியால் மருத்துவமனையில் அவதிப்படுவர்.

நம்மிடம் பலர் ஜோதிட சம்மநதமான பிரச்சனைகளுக்கு வருவர். "நான் அதிகக் கடனில் இருக்க ிறேன். என்னால் அவற்றைத் திருப்பிக் கொடுக்க முடியுமா?" இந்தக்கேள்வி பலர் கேட்க்கின்றனர். அவற்றிற்கு நாம் பதில் அளிக்க வேண்டாமா? 12-ம் வீடு என்பது நாம் பட்ட கடனைத் திருப்பி அளிக்கும் வீடு. 8-ம் வீடு என்பது நமக்குக் கடன் கொடுத்தவரின் தனஸ்தானம். நாம் பணம் கொடுத்தால் அவருடைய பணம் கையிருப்பு அதிகரிக்கிறது அல்லவா? ஆக 12-ம் வீடும் 8-ம் வ ீடும் சம்மந்தப்பட்டால் ஒருவர் தான் வாங்கிய கடனைத் திருப்பி அளிக்க முடியும்.

12-ம் இடத்திற்கு மோட்சஸ்தானம் என்று பெயர். அதாவது ஒருவருக்கு மரணத்தைக் கொடுக்கக் கூடிய வீடும் இதுதான். 12-ம் வீட்டைக் குறிக்கின்ற தசா, புக்திக் காலங்களில் அவருக்கு ஆயுள் முடிந்து விட்டல் மரணம் சம்பவிக்கும்.

மற்றும் இடது கண்,பாதங்கள், ஆகியவற்றையும் 12-ம் பாவம் குறிக்கிறது. பாவ கிரகங்கள் இருப்ப ின் இந்த உறுப்புக்கள் பாதிக்கப்படலாம். நாம் இத்துடன் 12-ம் பாவத்தை முடித்துக் கொள்வோம். இதற்குப்பின் மாந்தி என்றால் என்ன வென்றும், அதை ஜாதகத்தில் எப்படிப் போடுவது என்றும் அதன் பலன்கள் என்ன வென்றும் பார்ப்போம். அதற்குப்பின் சில யோகங்களைப் பற்றிப் பார்ப்போம். அத்துடன் 12 பாவங்களைப் பற்றிய நமது விளக்கங்கள் முடிந்து விடும். கடைசியாக ஒரு ஜாதகத்தை வைத்துப் பலன் எப்படிச் சொல்வது எனப் பார்ப்போம். அத்துடன் நமது ஜோதிட பாடங்கள் முடிவுக்கு வரும்.

RangaRakes tamilnavarasam.com

நீங்கள் இது வரையில் 12 வீடுகளைப் பற்றியும், அதில் எந்தெந்த கிரகங்கள் இருந்தால் என்ன பலன் என்பதையும் தெரிந்து கொண்டீர்கள். இந்தப் பாடத்தில் மாந்தியைப்பற்றித் தெரிந்து கொள்ளப் போகின்றோம். பொதுவாக கேரள மாநிலத்தைத் தவிர மற்ற மாநிலங்களில் மாந்திக்கு அதிக முக்க ியத்துவம் கொடுப்பதில்லை. இந்த மாந்திக்கு குளிகன் என்ற மற்றொறு பெயரும் உண்டு. இதை ஆங்கிலத்தில் Titan- என்றழைப்பர்கள். அதாவது ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு உப கிரகமுண்டு. பூமிக்கு, சந்திரன் உப கிரகமாக இருப்பதுபோல் சனிக்கு இந்த மாந்தி உப கிரகம். சனிக்கு மொத்தம் 10 உப கிரகங்களுண்டு. இந்தப் 10-ல் ஒன்றுதான் மாந்தி என்றழைக்கப்படும் குளிகனாகும். இது சனிக்கு உபகிரகமாக இருப்பதனால் தானோ என்னமோ இதை சனியின் பிள்ளை என்று நமது பெர ியவர்கள் அழைத்தனர். இந்த மாந்தியை எப்படி ஜாதகத்தில் குறிப்பது என்று பார்ப்போம்.

மாந்தி ஒவ்வொரு கிழமைக்கும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உதயமாவார். இதை நாம் நாழிகையில் க ீழே கொடுத்துள்ளோம்.

| மாந்தி உதயம் | பகல்(நாழிகை) | இரவு (நாழிகை) |
|---|---|---|
| ஞாயிறு | 26 | 10 |
| திங்கள் | 22 | 06 |
| செவ்வாய் | 18 | 02 |
| புதன் | 14 | 26 |
| வியாழன் | 10 | 22 |
| வெள்ளி | 06 | 18 |
| சனி | 02 | 14 |

ஞாயிற்றுக்கிழமை பகலில் சூரிய உதயத்திலிருந்து 26 நாழிகைக்கு மாந்தி என்கின்ற குளிகன் உதயமாகும். இரவில் ஒரு குழந்தை பிறந்தால் சூரிய அஸ்தமனத்தி லிருந்து 10 நாழிகைக்குக் மாந்தி உதயமாகும். இரவில் குறிப்பிட்டுள்ள நாழிகைகளெல்லாம் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு எனக் கொள்ள வேண்டும். இதைப்போல் ஒவ்வொரு கிழமைக்கும் எந்தெந்த நாழிகையில் மாந்தி உதயமாக ிறது எனக்கண்டு மாந்தியை ஜாதகத்தில் கணிக்க வேண்டும்.

நாம் உதாரணத்திற்கு ஒரு ஜாதகத்தில் மாந்தியைப் போடுவோம். ஒரு குழந்தை இந்த ஆண்டு பங்குனி மாதம் 1-ம் தேதி சென்னையில் பகல் 9.00 மணிக்கும், மற்றொரு குழந்தை இரவு 9.00 மணிக்கும் பிறக்கிறது எனக் கொள்வோம். இதற்கு நாம் மாந்தியைப் போடப் போகின்றோம்.

பங்குனியில் சூரிய உதயம் எந்த ராசியில்? முன்பு படித்தவைகளை ஞாபகப் படுத்திக்கொள்ளுங்கள். மீனத்தில் உதயமாகும். சரி! மாந்தியைப் போடுவோம் வாருங்கள்.

| | நா. வி. |
|---|---|
| மீனம் இருப்பு | 4. 16 |
| மேஷம் | 4. 28 |
| ரிஷபம் | 5. 03 |
| மிதுனம் | 5. 29 |
| கடகம் | 5. 22 |

| | |
|---|---|
| கடகம் முடிய சூரிய உதயத்திலிருந்து முடிந்த நாழிகைகள் | 24 . 38 |
| **சிம்மம்** | |
| மகம் 1-ம் பாதம் | 0. 34 |
| மகம் 2-ம் பாதம் | 0. 34 |
| மகம் 3-ம் பாதம் | 0. 34 |
| | ------------ |
| | 26.24 |

இருபது நாழிகைக்கு குளிகன் உதயமாவதால் சிம்மராசியில், மகம் 3-ம் பாதத்தில் அதாவது மிதுன நவாம்சத்தில் உதயமாகிறார். அதாவது ராசியில் சிம்மத்திலும், நவாம்சத்தில் மிதுனத்திலும் போட வேண்டும். நாம் மேலே எழுதியது புரிகிறது அல்லவா? சிலர் "சிம்மத்தில் மகம் முதல் பாதத்திற்கு 0.34 நாழிகை என்று எப்படிப் போட்டீர்கள்?" என்று கேட்க்கலாம். சென்னைக்கு சிம்ம ராசியின் அளவு 5 நா 06 வினாழிகைகள் அல்லவா ? சிம்மத்தில் மொத்தம் 9 பாதங்கள் அல்லவா? அப்படியானால் ஒரு பாதத்தின் அளவு 0.34 நாழிகைகள் தானே!

சரி! இரவில் பிறந்த குழந்தைக்கு எப்படிப் போடுவது? ஞாயிரன்று இரவு 10 நாழிகைக்கு குளிகன் உதயமாகிறது அல்லவா? அதாவது சூரியன் அஸ்தமனத்திலிருந்து 10 நாழிகைக்கு குளிகன் உதயமாகிறார். சூரிய அஸ்தமனமும் பஞ்சாங்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

அன்று சூரிய உதயம் காலை 6 . 17 மணி
அன்றைய சூரிய அஸ்தமனம் மாலை 6 . 22 மணி

பகல் பொழுதின் அளவு : 11 . 55 மணி

இதை நாழிகையாக்குங்கள். 29 நாழிகை 48 வினாழிகை வரும். இந்தப் பகல் பொழுதின் கால அளவிற்கு "அகஸ்" எனப் பெயர். "அகஸ்" என்பது ஒரு இடத்தின் சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் ஆகும் வரையிலான பகல் பொழுதின் அளவாகும்.

இரவில் குளிகன் உதயம் கண்டுபிடிக்க இந்த அகசுடன் அன்று குளிகன் உதயமாகும் நாழிகையான 10.00 நாழிகையைக் கூட்டுங்கள். 39 நா 48 வினாழிகை வரும். அதாவது சூரிய உதயத்திலிருந்து 39 நாழிகை 48 வினாழிகைக்கு குளிகன் உதயமாகிறார். இப்போது ராசியும், நவாம்சமும் மேலே கண்டதுபோல் கண்டுபிடியுங்கள் பார்ப்போம்.

| | நா. வி. |
|---|---|
| மீனம் இருப்பு | 4. 16 |
| மேஷம் | 4. 28 |
| ரிஷபம் | 5. 03 |
| மிதுனம் | 5. 29 |
| கடகம் | 5. 22 |
| சிம்மம் | 5. 08 |
| கன்னி | 5. 04 |
| | ---------- |
| | 34.50 |

**துலாம்**

| | | |
|---|---|---|
| சித்திரை | 3-ம் பாதம் | 0 . 35 |
| சித்திரை | 4-ம் பாதம் | 0 . 35 |
| ஸ்வாதி | 1-ம் பாதம் | 0 . 35 |
| ஸ்வாதி | 2-ம் பாதம் | 0 . 35 |
| ஸ்வாதி | 3-ம் பாதம் | 0 . 35 |
| ஸ்வாதி | 4-ம் பாதம் | 0 . 35 |
| விசாகம் | 1-ம் பாதம் | 0 . 35 |
| விசாகம் | 2-ம் பாதம் | 0 . 35 |
| விசாகம் | 3-ம் பாதம் | 0 . 35 |
| | | ---------- |
| | | 40 . 05 |

குளிகன் உதயமாகும் நாழிகை 39 நாழிகை 48 வினாழிகையாதலால் துலா ராசியில் விசாகம் 3-ம் பாதத்தில் உதயமாகிறார். அப்படியானால் துலாத்தில் ராசியிலும். நவாம்சத்தில் மிதுனத்திலும் குள ிகனைப் போட வேண்டும். இப்போது குளிகனை எப்படிக் கணிதம் செய்ய வேண்டுமென்று தெரிந்து கொண்டீர்கள் அல்லவா!

To Sum up :

குளிகனைக் கணிக்க

1. பிறந்த கிழமை
2. குளிகன் உதயமாகும் நேரம்.

இவை தெரிந்தால் போதுமானது. மிக எளிதாகப் போட்டு விடலாம்.

சரி! மாந்தியைப் போட்டு விட்டோம். அதற்குப் பலன் எப்படிச் சொல்வது? அதையும் கீழே கொடுத்துள்ளோம்.

பொதுவாக மாந்தியானவர் அசுபப் பலன்களைத்தான் கொடுக்கின்றார். 10, 11-ம் வீடுகளைத் தவிர வேறு எந்த வீட்டில் இருந்தாலும் அவர் அசுப பலனைத்தான் கொடுக்கின்றார்.

முதல் வீடான லக்கினம் : இங்கு மாந்தி இருந்தால் முகத்தில் வசீகரமும் அழகும் குறைவாக இருக்கும். எப்போதும் வாட்டத்துடன் காணப்படுவர். நற்குணங்கள் குறைவாக இருக்கும். சிலருக்கு உடலில் நோய் இருந்து கொண்டே இருக்கும்.

2-ம் வீடு : பணப் புழக்கம், ஆபரண யோகம், வாக்கு சுத்தம் ஆகியவை குறைவாக இருக்கும். கண் பார்வை கூட சிலருக்குக் குறையும். குடும்பத்தில் அமைதி குறையும். குடும்ப ஒற்றுமையும் குறையும்.

3-ம் வீடு : சகோதரத்தால் உபயோகமில்லை. தைரியம் குறைவாக இருக்கும். பொதுவாக 3-ம் பாவத்தைக் குறிக்கும் காரகத்துவங்கள் பாதிக்கப்படும்.

4-ம் வீடு : கல்வியில் தடை உண்டாகும். தாயால் அனுகூலங்கள் குறைவாக இருக்கும். வாகன யோகம் குறைவாக இருக்கும்.

5-ம் வீடு : இது புத்திர தோஷத்தை ஏற்படுத்தும்.முற்பிறவியில் செய்த தீவினைகளுக்கு இப்பிறவிய ில் பலன் அனுபவிக்க நேரிடும்.

6-ம் வீடு : உறவினர்களைப் பிரிய நேரிடும். கடன் வந்து சேரும். தாய் மாமன் உறவு உதட்டளவ

RangaRakes tamilnavarasam.com

ிலதான் இருக்கும்.

7-ம் வீடு : களத்திரஸ்தானத்தில் மாந்தி நிற்க களத்திர தோஷத்தைக் கொடுக்கும். 7-ம் வீடு வ
ியாபாரத்தையும் குறிக்கிறது அல்லவா? வியாபாரம் மந்தமாகும். கூட்டு வியாபாரம் செய்பவர்களுக்கு நல்ல கூட்டாளி அமைய மாட்டார்.

8-ம் வீடு : விபத்துக்கள் நடக்க வாய்ப்பு உண்டு. பிதுராஜித சொத்துக்களில் வியாஜ்யம் இருந்து வரும். பெண்களாக இருந்தால் மாங்கல்ய பாக்கியம் குறைவு.

9-ம் வீடு : தந்தையால் அனுகூலங்கள் குறைவு. தருமம் செய்தாலும் நல்ல பெயர் கிடைக்காது. அதிர்ஷ்டம் குறைவாக இருக்கும்.

10-ம் வீடு : இங்கு மாந்தி சுப பலன்களைக் கொடுக்கிறார். தொழில் நல்ல விதமாக அமையும். வாழ்வில் நல்ல உயர் பதவிக்கு வர முடியும். நல்ல பெயரும் புகழும் கிடைக்கும்.

11-ம் வீடு : தன லாபம் உண்டு. மூத்த சகோதரர்கள் நல்ல விதமாக அமைவர். எடுத்த காரியங்கள
ில் வெற்றியும், லாபமும் உண்டாகும்.

12-ம் வீடு : தன விரயங்கள் இருக்கும். நிம்மதியான உறக்கம் இருக்காது. அலைச்சல்கள் மிகுந்து ந
ிம்மதியான வாழ்க்கை இருக்காது.

இவைகளெல்லாம் மாந்தியின் பொதுப் பலன்கள். பொதுவாக 10-ம் வீடு, 11-ம் வீடு தவிர மற்ற வ
ீடுகளில் நல்ல பலன் தருவது இல்லை."மாந்தியின் கெடுபலன்களில் இருந்து விடுபட பரிகாரங்கள் செய்யலாமா?" என்றால் பரிகாரங்கள் எதுவும் நம் நூல்களில் சொல்லப்படவில்லை. நவக
ிரகங்களுக்குப் பரிகாரம் இருப்பதுபோல் மாந்திக்குக் கோவில் கிடையாது. கேரளாவில் மட்டும் கோவ
ில் உண்டு.

மாந்திக்குப் பார்வை எதுவும் கிடையாது. தான் இருக்கும் வீட்டிற்குத்தான் பலன் கொடுப்பார். அதேபோல் கேந்திர ஸ்தானங்கள், திரிகோண ஸ்தானங்கள் ஆகிய வற்றில் இருந்தாலும் பலன்கள் மாறுவது இல்லை. கோட்ச்சார பலன்கள் எதுவும் மாந்திக்குக் கிடையாது. கோட்ச்சாரபலன் என்பது க
ிரகங்களின் தற்போதைய நிலை. மாந்திக்கு நட்சத்திரங்களோ, வீடுகளோ இல்லையாதலால் அது தசா,புக்திகளிலும் இடம்பெறவில்லை. ஆகவேதான் பொதுவாக மாந்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

சென்றபாடத்தில் நாம் மாந்தியைப் பற்றித் தெரிந்து கொண்டோம். நாம் மாந்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை. அதற்குண்டான காரணங்களையும் சென்ற பாடத்தில் எழுதி இருந்தோம். இந்தப் பாடத்தில் சில யோகங்களைப் பற்றிப் பார்ப்போம். நீங்கள் சிலர் ஜாதகப் பலன்கள் சொல்லும்போது இந்த யோகங்களுக்கு மிக முக்கியத்துவம் கொடுப்பதைப் பார்த்து இருப்பீர்கள். யோகம் என்றால் ராஜ யோகம் எனறு நினைத்து விட வேண்டாம். யோகங்கள் இருந்தால் வாழ்க்கையே சொர்க்கமாகிவிடும் என்ற எண்ணமும் வேண்டாம். யோகங்கள் என்றால் கிரக சேர்க்கை என்று பொருள். அவ்வளவுதான். மரணயோகத்தையும் யோகம் என்றுதான் குறிப்பிடுகிறோம். ஆகவே யோகம் என்றால் மிக அதிர்ஷ்டத்தைக் கொடுக்கக் கூடியது என்று நினைக்க வேண்டாம். சிலருக்கு ராஜயோகச் சேர்க்கை இருக்கிறது எனக் கொள்வோம். "இந்த கிரகச் சேர்க்கை எப்போது பலந்தரும்? ஆயுள் முழுவதும் பலன் தருமா?" என்ற கேள்விக்குச் சரியான விடை கிடைப்பது இல்லை. இருப்பினும் யோகத்தைப் பற்றி எழுதாவிட்டால் நமது பாடங்கள் நிறைவு பெறாது என்ற எண்ணத்தில்தான் எழுதுகின்றோம்.

முதலில் நாம் எடுத்துக் கொண்டுள்ள யோகம் "கஜகேசரி யோகம்". ஒருவர் ஜாதகத்தில் குருவானவர் சந்திரனுக்குக் கேந்திரஸ்தானமான ஒன்று, அல்லது நாலு அல்லது ஏழு அல்லது 10ம் வீடுகளில் இருத்தல்; அதாவது ஜாதகத்தில் சந்திரனுடன் சேர்ந்து இருக்கலாம்; அல்லது சந்திரனிலிருந்து 4-ம் வீட்டிலோ அல்லது 7-ம் வீட்டிலோ அல்லது 10-ம் வீட்டிலோ இருக்கலாம். அவ்வாறு வீற்றிருந்தால் இதை "கஜகேசரி யோகம்" என்றழைப்பார்கள். சரி! இது இருந்தால் என்ன பலன்? நமது ஜோதிட நூல்கள் கூறி இருப்பதைப் பார்ப்போம். நல்ல பெயரும், புகழும் கிடைக்கும். தீர்க்க ஆயுளுடன் இருப்பர். பணப்புழக்கம் நன்றாக இருக்கும். பகைவர்களை வெற்றி கொள்வார்கள். இந்தப் பலன்களைப் பார்க்கும்போது இது ஒரு சுப யோகமாகவே தெரிகிறது. பல ஜாதகங்களைப் பார்க்கும்போது நல்ல வசதியான வாழ்க்கை உடையவர்களாகவே விளங்கி இருக்கிறார்கள். ஆகவே இந்த யோகம் உள்ளவர்களை நாம் பலன் சொல்லும்போது அதிர்ஷ்டசாலிகள் என்றழைக்கலாம்.

**சந்திர மங்கள யோகம்**:- செவ்வாயும், சந்திரனும் சேர்ந்து இருத்தல்; அதாவது ஒரு ஜாதகத்தில் செவ்வாயும், சந்திரனும் சேர்ந்து இருப்பார்களேயாகில் இந்த யோகம் உண்டாகிறது. இதன் பலன்கள்: முறையற்ற காரியங்கள் மூலம் பணம் சம்பாதிப்பர். தன் தாயரைக் கடின சொற்கள் மூலம் கடிந்து கொள்வர். அதேபோல் செவ்வாயும் சந்திரனும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொண்டாலும் இந்த யோகம் உண்டாகிறது. இந்த சந்திரமங்கள யோகம் இருப்பவர்கள் சற்று முன் கோபிகளாக இருப்பதை நாம் அனுபவத்தில் பார்த்து இருக்கிறோம்.

**சுனபா யோகம்**:- சந்திரன் இருக்கும் வீட்டிற்கு அடுத்த வீட்டில் சூரியனைத் தவிர வேறு ஏதாவது கிரகங்கள் இருத்தல்; இவ்வாறு இருந்தால் அது சுனபா யோகம் எனப்படும். இந்த யோகத்தின் பலன்கள்: சுயமாகச் சொத்துச் சேர்க்கமுடியும். நல்ல பெயருடனும், புகழுடனும் வாழ முடியும். நாம் நம் அனுபவத்தில் பார்க்கும்போது சந்திரனுக்கு அடுத்த வீட்டில் ஏதாவது கிரகம் இருந்தால் ஒருவர் சொத்துக்கள் சேர்த்து முன்னுக்கு வந்துவிடுவது இல்லை. ஆகவே இந்த யோகத்தை அப்படியே எடுத்துக் கொண்டு பலன் சொல்ல வேண்டாம். நம்மை எங்கேயோ கொண்டுபோய் விட்டுவிடும்.

**அனபாயோகம்**:- சந்திரனுக்குப் 12-ம் வீட்டில் சூரியனைத்தவிர ஏதாவது கிரகம் இருத்தல்; நல்ல புகழுடன் கூடிய வாழ்க்கை கிடைக்கும். இந்த யோகமும் அனுபவபூர்வமாகப் பார்க்கும்போது சரியாக வரவில்லை; இருப்பினும் வாசகர் களுக்குத் தெரிந்து இருக்கட்டுமேயென்று எழுதினோம்.

சந்திரனுக்குப் பக்கத்து வீட்டில் கிரகங்கள் இருந்தால் சுனபா யோகமென்றும், அனபாயோகமென்றும் பார்த்தோம். கிரகங்களே இல்லாமல் தனித்து இருந்தால்? அதற்குக் "கேமத்திரும யோகம் " என்று பெயர். இந்த யோகமுள்ளவர் ஏழ்மை நிலையில் இருப்பர். நற்காரியங்களில் ஈடுபடமாட்டார். பணத்தைக் கையாடல் செய்பவர்; இப்படியெல்லாம் ஜோதிட உலகம் கூறுகிறது.

RangaRakes tamilnavarasam.com

பணத்தைக் கையாடல் செய்பவர்; இப்படியெல்லாம் ஜோதிட உலகம் கூறுகிறது.

**அதி யோகம்**:- குரு, புதன், சுக்கிரன் இவைகளெல்லாம் சுப கிரகங்கள். இவைகள் சந்திரனுக்கு 6, 7, 8 -ம் வீடுகளில் இருந்தால் அதற்கு அதியோகமென்று பெயர். இந்த மூன்று கிரகங்களும் ஏதாவது ஒரு வீட்டில் இருக்கலாம்; அல்லது இரண்டு வீடுகளில் இருக்கலாம்; அல்லது மூன்று வ ீடுகளிலும் இருக்கலாம். மூன்று கிரகங்கள் இல்லாவிட்டாலும் ஏதாவது இரண்டு கிரகங்களாவது இருந்தாலும் அதுவும் அதியோ கம்தான். இதற்குப் பலன் என்ன? அந்த ஜாதகர் மிகவும் மகிழ்ச்ச ியான வாழ்க்கை வாழ்வர். நீண்ட ஆயுளுடன், தன்னை எதிர்த்தவர்களை வென்று நல் வாழ்க்கை வாழ்வர். இந்தப் பலன்கள் சரியாக வருகின்றனவாவென்று ஜாதகத்தைப் பரிசோதித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

**சகட யோகம்**:- சந்திரனுக்கு 6, 8, 12-ம் வீடுகளில் குரு இருந்தால் இதற்குச் சகட யோகமென்று பெயர். இந்த மாதிரி அமைப்புடையவர் அதிர்ஷ்டமில்லாதவர். கஷ்ட ஜீவனமுள்ளவர்; மிகவும் ப ிடிவாதகுணமுள்ளவர்; அதனால் பலராலும் வெறுக்கப்படுபவர்.

**அமல யோகம்**:- லக்கினத்திற்கோ அல்லது சந்திரனுக்கோ பத்தாம் வீட்டில் ஒரு சுபகிரகமிருந்தால் அதற்கு அமல யோகமென்று பெயர். இதற்குப் பலன் என்னவென்றால் நல்ல பெயருடனும், புகழுடனும் வாழ்க்கை அமையும்.

**ஹம்ச யோகம்**:- குருவானவர் கேந்திர ஸ்தானங்களில் இருந்து அது அவரின் சொந்த வீடாகவோ அல்லது உச்ச வீடாகவோ இருக்குமேயாகில் அது ஹம்ஸ யோகத்தைக் கொடுக்கும். இந்த யோகமுள்ளவர் நற்குணங்களோடு நல்வாழ்வு வாழ்வர். நல்ல அழகுள்ள சரீரத்தை உடையவராக இருப்பர்.

**மாளவியா யோகம்**:- குருவைப்போல் சுக்கிரனும் சொந்த வீட்டிலோ அல்லது உச்ச வீட்டிலோ இருந்தால் அது கேந்திர ஸ்தானமாக இருந்தால் இந்த யோகத்தைக் கொடுக்கிறது. நல்ல அழகிய உருவ அமைப்பையும், வாகன யோகத்தையும், நல் மனைவியையும் கொடுக்கும். அதாவது சுக்கிரன் காரகத்துவம் வகிக்கின்றவைகளெல் லாம் நன்றாக அமையும்.

**சச யோகம்**:-சனி கேந்திரத்தில் இருந்து அது சொந்த வீடாகவோ அல்லது உச்ச வீடாகவோ இருந்தால் இந்த யோகத்தைக் கொடுக்கும். இந்த அமைப்புள்ளவர் களுக்கு நல்ல வேலைக் காரர்கள் அமைவர். மற்றவர்கள் சொத்தை அபகரிக்கும் எண்ணம் கொண்டவராக இருப்பர்.

**ருசக யோகம்**:- செவ்வாய் சொந்த வீட்டிலோ அல்லது உச்ச வீட்டிலோ இருந்து அது கேந்திர ஸ்தானமாக இருந்தால் இந்த யோகம் ஏற்படும். நல்ல உடல்வாகு உள்ளவராக இருப்பார். நல்ல பணவளம் உள்ளவராக இருப்பார். எதிலும் தலைமை தாங்கும் திறமை கொண்டவராக இருப்பார்.

**பத்ர யோகம்**:- புதன் கேந்திர ஸ்தானங்களிலிருந்து அது புதனின் சொந்த வீடாகவோ அல்லது உச்ச வீடாக இருந்தால் அது பத்ர யோகமெனப் படும்.மிகவும் கெட்டிக் காரத்தனம் உள்ளவராக இருப்பார். சாதுர்யமாக நடந்து கொள்வர். புதன் காரகத்துவம் வகிக்கின்றவைகளெல்லாம் சிறந்து வ ிளங்கும்.

**புத-ஆதித்ய யோகம்**:- புதனும், சூரியனும் சேர்ந்து இருந்தால் அதற்கு புத ஆதித்ய யோகமென்று பெயர். மிகவும் கெட்டிக்காரத்தனம் கொண்டவராக இருப்பார். எந்தக் காரியம் செய்தாலும் புத்திசால ித்தனம் அதில் இருக்கும்.

**தர்ம, கர்மாதிபதி யோகம்**:- 9-ம் வீட்டின் அதிபதியும், 10-ம் வீட்டின் அதிபதியும் சேர்ந்து இருந்தால் அதற்கு தர்ம - கர்மாதிபதி யோகம்என்று பெயர். 9-ம் வீட்டிற்கு தர்ம ஸ்தானமென்றும், 10- ம் வீடிற்கு கர்ம ஸ்தானம் என்றும் பெயரல் லவா? ஆகையால்தான் அதற்கு தர்ம-கர்மாதிபதி யோகமென்று பெயர். இந்த யோகமிருந்தால் நல் வாழ்க்கை அமையும். யோகங்களைக் கொடுக்கும்.

**மாலிகா யோகம்**:- ராகு, கேதுக்களைத் தவிர மற்ற 7 கிரகங்களும் வரிசையாக 7 வீடுகளில் இருந்தால் அதற்கு கிரக மாலிகா யோகமென்று பெயர். அதாவது 7 கிர கங்களும் வரிசையாக

RangaRakes tamilnavarasam.com

ஒவ்வொரு வீட்டில் இருக்க வேண்டும். 7 கிரகங்களும் லக்கினத்திலிருந்து ஆரம்பித்து வரிசையாக 7 வீடுகளில் இருந்தால் லக்ன மாலிகா யோகமெனப் பெயர். வாழ்க்கையில் உயர்ந்த பதவி வகிப்பர். பண வசதி நன்றாக இருக்கும்.

2-ம் வீட்டிலிருந்து ஆரம்பித்து வரிசையாக இருந்தால் அதற்குத் தன மாலிகா யோகமெனப் பெயர். இந்த யோகமிருந்தால் பண வசதி நன்றாக இருக்கும்.

3-ம் வீட்டிலிருந்து ஆரம்பித்தால் விக்கிரம மாலிகா யோகமெனப் பெயர். மிக்க தைரியசாலியாக இருப்பர். தலைமை தாங்கும் குணம் உள்ளவராக இருப்பர்.

4-ம் வீட்டிலிருந்து ஆரம்பித்தால் தர்ம சிந்தனை உள்ளவராக இருப்பர். வாழ்க்கையில் பல சுகங்களை அனுபவிப்பார். இதற்கு சுக மாலிகா யோகமெனப் பெயர்.

5-ம் வீட்டிலிருந்து ஆரம்பித்தால் மிகவும் தெய்வ நம்பிக்கை கொண்டவராக இருப்பர். புகழ் வாய்ந்தவராகவும் இருப்பர். இதற்குப் புத்திர மாலிகா யோகமெனப் பெயர்.

6-ம் வீட்டிலிருந்து ஆரம்பித்தால் பேராசை மிகுந்தவராக இருப்பர். பணத்திற்குக் கஷ்டப் படுபவராகவும் இருப்பார். சத்ரு மாலிகா யோகமென அழைக்கப் படும்.

7-ம் வீட்டிலிருந்து ஆரம்பித்தால் அதற்கு களத்திர மாலிகா யோகமெனப் பெயர். பெண்மோகம ிருக்கும். பதவிமேலும் மோகமிருக்கும்.

8-ம் வீட்டிலிருந்து ஆரம்பித்தால் மிகவும் ஏழ்மையானவராக இருப்பார். மனைவிக்குக் க ீழ்ப்படிந்தவராகவும் இருப்பார்.

9-ம் வீட்டிலிருந்து ஆரம்பித்தால் பாக்கிய மாலிகா யோகமெனப் பெயர். மிகவும் வசதியான வாழ்க்கை கிடைக்கும். தெய்வ நம்பிக்கை இருக்கும்.

10-ம் வீட்டிலிருந்து ஆரம்பித்தால் கர்ம மாலிகா யோகமெனப் பெயர். நல்ல மதிப்புள்ள வாழ்க்கை அமையும். எடுத்த முயற்சியில் வெற்றி கிட்டும்.

11-ம் வீட்டிலிருந்து ஆரம்பித்தால் லாப மாலிகா யோகமெனப் பெயர். எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

12-ம் வீட்டிலிருந்து ஆரம்பித்தால் விரய மாலிகா யோகமெனப் பெயர். வாங்கும் பொருள்களை லாபமான விலைக்கு வாங்குவர். நல்ல விதத்தில் பணத்தை முதலீடு செய்வர்.

இந்த கிரக மாலிகா யோகம் லக்கினத்திலிருந்துதான் ஆரம்பிக்க வேண்டுமென்றும் ஆரம்பித்து முதல் 5-லிருந்து 9-வீட்டுக்குள் முடிய வேண்டுமென்ற கருத்துமுண்டு. முதல் 5-வீட்டிற்குள் முடிந்தால் ஒருவீட்டிற்கு ஒரு கிரகம் என்ற நிலைமை மாறி சில வீடுகளில் 2 கிரகங்கள் கூட இருக்கும்.

**தரித்திர யோகம்**:- 11-ம் வீட்டு அதிபதி 6 அல்லது 8 அல்லது 12 -ம் வீட்டில் இருந் தால் அதற்குத் தரித்திர யோகமனப் பெயர். இந்த ஜாதகர் கடனாளியாக இருப்பார். ஏழ்மை மிகுந்து இருக்கும். நியாயமற்ற செயல்களைச் செய்யவும் தயங்க மாட்டார்.

**சரஸ்வதி யோகம்**:- குரு, சுக்கிரன், புதன் ஆகியோர் 1, 2, 4, 5, 7, 9, 10 ஆகிய வீடுகளில் தனித்தோ அல்லது சேர்ந்தோ இருத்தல்; குருவுக்கு அந்த வீடு சொந்த வீடாகவோ அல்லது உச்ச வீடாகவோஅல்லது நட்பு வீடாகவோ இருத்தல் வேண்டும். இத்தகைய அமைப்பிற்கு சரஸ்வதி யோகமெனப் பெயர். இந்த ஜாதகருக்கு சரஸ்வதி கடாஷ்ஷம் இருக்கும். அத்துடன் நல் மனைவ ியும், நற் புத்திரர்களும் வாய்த்திடுவர்.

**சர்ப கண்ட யோகம்**:- ராகுவும், மாந்தியும் 2-ன் வீட்டில் இருந்தால் இந்த யோகம் ஏற்படுகிறது. இவர்களுக்கு பாம்புக்கடி ஏற்படக் கூடும்.

RangaRakes
tamilnavarasam.com

**உத்தம கிரக யோகம்**:- 4-ம் வீட்டின் அதிபதி கேந்திரத்திலோ அல்லது திரிகோணத் திலோ இருத்தல்; அத்துடன் சுபகிரகங்கள் பார்வையோ அல்லது சேர்க்கையோ இருப்பின் நல்ல வீடு அமையும். 4-ம் வீட்டின் அதிபதியும், 10-ம் வீட்டின் அதிபதியும் சேர்ந்து செவ்வாயுடனும், சன ியுடனும் இருந்தால் பல வீடுகள் இருக்குமெனக் கூறப்படுகிறது.

நாம் மேலே சில யோகங்களைக் குறிப்பிட்டோம். இன்னும் 100-க் கணக்கான யோகங்கள் பற்றி நமது முன்னோர்கள் கூறி இருக்கிறார்கள். அவைகளையெல்லாம் கூற வேண்டுமானால் நாம் அதற்குத் தனிப் புத்தகமே எழுத வேண்டியது இருக்கும். அது சாத்தியமாகாது.

நாம் அடுத்த பாடத்திலிருந்து பலன் எப்படிக் கூறுவது என்று விளக்கப் போகிறோம். அதையும் வ ிளக்கிவிட்டால் நமது பாடங்கள் ஓரளவிற்கு முடிவுக்கு வந்து விடும். மற்றவைகளை அடுத்த பாடத்த ில் பார்ப்போம்.

இதுவரையில் 40 பாடங்களைப் படித்து முடித்து விட்டீர்கள். ஜோதிடத்தைப் பற்றி ஓரளவிற்குப் புரிந்து கொண்டிருப்பீர்கள். இப்போது பலன் எப்படிச் சொல்வது என்று பார்ப்போம். பொதுவாகப் பல ஜோதிடர்கள் கிரகங்களின் ஆதிபத்தியத்தை மட்டுமே வைத்துக் கொண்டு பலன் சொல்லுவர். உதாரணமாக ஒருவருக்குக் கன்னியா லக்கினம் எனக் கொள்ளுங்கள். அவருக்கு செவ்வாய் தசை நடக்கிறது எனக்கொள்ளுங்கள். உடனே கன்னியா லக்கினத்திற்கு செவ்வாயானவர் 3, 8 -ம் வீடுகளுக்கு அதிபதி. ஆகவே அவர் நல்லதையே செய்ய மாட்டார் எனக் கூறுவார்கள். செவ்வாய் எங்கு இருக்கிறார் எனவும், எந்த நட்சத்திரச் சாரத்திலிருக்கிறார் எனவும் கணக்கில் எடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆதிபத்தியத்தை வைத்தே பலனைக் கூறுவார்கள். சிலர் வெறும் கோச்சாரத்தை மட்டும் வைத்தே பலனைக் கூறுவார்கள். தற்போது உங்களுக்கு ஏழரை நாட்டுச் சனி, அஷ்டமத்துச் சனி, என்று பல நிகழ்வுகளுக்கும்அவற்றைக் கையைக் காட்டுவார்கள். தற்போது மிதுன ராசிக்காரர்களுக்கு ஏழரை நாட்டுச் சனி நடைபெற்று வருகிறது. என்ன பிரச்சனை அவர்களுக்கு வந்தாலும் கோட்ச்சாரத்தையே காரணம் காட்டுவார்கள். அதே மிதுன ராசியில் பிறந்த மற்றொருவருக்கு எந்தப் பிரச்சனையும் இல்லாது இருக்கும். அவருக்கு ஏன் அந்தப் பிரச்னை வரவில்லை எனப் பார்க்க மாட்டார்கள். இவ்வாறு பலரும் பலவிதமாகப் பலன் கூறி வருகின்றார்கள். நாம் நமது வாசகர் களுக்கு ஓர் எளிய வழி முறையக் கற்றுக் கொடுப்போம். உதாரணத்திற்கு ஓர் ஜாதகத்தைப் பார்ப்போம். இதுவும் கன்னியா லக்கின ஜாதகம்தான். இவருக்கு செவ்வாய் தசை எப்படி இருந்தது எனப் பார்க்கப் போகிறோம். கன்னியா லக்கினத்திற்கு 3, 8-ம் வீட்டிற்கு உடையவரல்லவா? செவ்வாய் கஷ்டத்தையல்லவா கொடுத்திருக்க வேண்டும். அவ்வாறு செய்யவில்லை. பல நம்மைகளைச் செய்து விட்டார். கஷ்டங்கள் எதுவும் செய்ய வில்லை.

**ராசி**

லக்னம் : கன்னி
4ம் வீட்டில் : சந்திரன், புதன், சுக்கிரன்
5ம் வீட்டில் : சூரியன், கேது
9ம் வீட்டில் : செவ்வாய், சனி (வ)
11ம் வீட்டில் : ராகு
12ம் வீட்டில் : குரு (வ)

**நவாம்சம்**

லக்னம் : மீனம்
லக்னத்தில் சூரியன்
2ம் வீட்டில் : சுக்கிரன், செவ்வாய், குரு
3ம் வீட்டில் : கேது
5ம் வீட்டில் : சந்திரன்
6ம் வீட்டில் : புதன்
7ம் வீட்டில் : சனி
9ம் வீட்டில் : ராகு

இவருக்கு செவ்வாய் தசை ஆரம்பமாகியது. எல்லோரும் கூறியது போல் செவ்வாய் பல கஷ்டங்களைக் கொடுக்கும் என எதிர்பார்த் தார். என்ன நடந்தது எனப் பார்ப்போம்?முதலில் ஒரு பதவி உயர்வு பெற்றார். அலுவலகத்தில் அவர் செய்த வேலைக்கு முக்கியத்துவம் கிடைத்தது. மிகத் திறமைமையானவர் என அலுவலகத்தில் மதிக்கப்பட்டு முக்கியமான பொறுப்புக்கள் அவருக்குக் கொடுக்கப்பட்டன. வீடு ஒன்று கட்டி முடித்தார். இவ்வாறு பல நல்ல காரியங்கள் அந்த செவ்வாய் தசையில் நடந்தது.

தசையில நடநதது.

இதற்குக் காரணம் என்ன? 3, 8-க் குடையவர் கஷ்டத்தைக் கொடுப்பதற்கு பதில் பல நன்மைகளைச் செய்யக் காரணம் என்ன?

சரி! முதலில் ஒரு கிரகம் எப்படிப் பலன் அளிக்கிறது எனப் பார்ப்போம். ஒருகிரகம் எந்த நட்சத்திரச் சாரத்தில் இருக்கிறது எனப் பார்க்க வேண்டும். அதை எப்படிப் பார்ப்பது? மேற் கூறிய ஜாதகத்தில் செவ்வாய் ரிஷபத்தில் இருக்கிறார். ரிஷபத்தில் என்னென்ன நட்சத் திரங்கள் இருக்கின்றன? கார்த்த ிகை 2,3,4 பாதங்கள், ரோகிணி 1,2,3,4 பாதங்கள், மிருகசீரிஷம் 1, 2 பாதங்கள். இதில் எந்த நட்சத்திரத்தின் சாரத்தில் இருக்கிறது எனப் பாருங்கள். மேற்கண்ட ஜாதகத்தில் செவ்வாயானவர் ரோகிணியின் சாரத்தில் இருக்கிறார். ரோகிணி முதல் பாதத்தில் இருக்கிறார். அதனால்தான் செவ்வாயை நவாம்சத்தில் மேஷத்தில் போட்டிருக்கிறோம்.

ரோகிணியின் அதிபதி யார்? சந்திரனல்லவா? ஆகவே செவ்வாய் சந்திரன்கொடுக்க வேண்டிய பலன்களைக் கொடுத்து விட்டார். சந்திரன் இந்த ஜாதகத்தில் 11-ம் வீட்டிற்கு அதிபதியல்லவா? அவர் 4-ம் வீட்டில் இருக்கிறார். ஆக 4, 11-ம் வீட்டுப் பலன்களைசெவ்வாய் கொடுத்து விட்டார். 4-ம் வீடு என்பது ஸ்திர சொத்துக்களைக் குறிக்கும் வீடல்லவா? ? 11-ம் வீடு என்பது நமது ஆசைகளைப் பூர்த்தி செய்யும் வீடல்லவா? ஆக செவ்வாய் இவருடைய ஆசையான சொந்தவீடு கட்ட வேண்டும் என்ற கனவைப் பூர்த்தி செய்து விட்டது.

1. ஒரு கிரகம் முதலில் தான் எந்த நட்சத்திரத்தின் சாரத்தில் இருக்கிறதோ அதன் அதிபதி கொடுக்க வேண்டிய பலன்களைக் கொடுப்பார். மேற்கண்ட உதாரணத்தில் செவ்வாய் சந்திரனின் சாரத்தில் இருக்கிறார். சந்திரன் 11-ம் வீட்டிற்கு அதிபதியாகி 4-ம் வீட்டில் இருக்கிறார் அல்லவா. சந்திரன் 4,11வீடுகளின் பலனைக் கொடுக்க வேண்டும். ஆக அவர் கொடுக்க வேண்டிய பலன்களை அவர் சாரத்தில் இருக்கும் செவ்வாய் கொடுத்து விட்டார்.

அதற்கு அடுத்தபடியாக தன் ஆதிபத்தியமுள்ள வீடுகளின் பலனைக் கொடுப்பார். இந்த ஜாதகத்தில் மூன்றாம் வீட்டிற்கும், 8-ம் வீட்டிற்கும் அதிபதி. அவர் 9-ம் வீட்டில் இருக்கிறார். ஆக 3,8,9-ம் வ ீட்டின் பலன்களையும் கொடுக்க வேண்டும். அப்படி என்ன அந்த வீடுகளின் பலனைக் கொடுத்தார் எனப் பார்ப்போம். 3-ம் வீடு என்பது குறுகிய பயணத்தையும், 9-ம் வீடு என்பது நீண்ட பயணத்தையும் குறிக்கிறது அல்லவா? இவர் செவ்வாய் தசையின் போது பல பயணங்களை மேற் கொள்ள வேண்டியது இருந்தது. ஆக 3, 9 -ம் வீட்டுப் பலன்களையும் அனுபவித்தார்.

அடுத்ததாக ஒரு கிரகம் எந்த கிரகத்துடன் கூடி இருக்கிறதோ, அல்லது பார்க்கப் படுகிறதோ அதன் பலனையும் கொடுப்பார். இந்த ஜாதகத்தில் செவ்வாயானவர் சனியுடன் சேர்ந்து இருக்கிறார். சனி 5, 6-ம் வீடுகளுக்கு அதிபதியல்லவா? 6-ம் வீடென்பது என்ன? 6-ம் வீடு செய்யும் தொழிலைக் குற ிக்கிறது அல்லவா? 6-ம் வீடும் 11-ம் வீடும் தொழிலில் முன்னேற்றத்தைக் குறிக்கிறது அல்லவா? ஆக இந்த செவ்வாயின் தசையில் உத்தியோகத்தில் பதவி உயர்வைப் பெற்றார். இந்த ஜாதகத்தில் செவ்வாய் யாராலும் பார்க்கப் படவில்லை. ஆகையால் பார்க்கும் கிரகத்தின் பலனை அவரால் கொடுக்க இயலவில்லை. இப்போது ஒருகிரகம் எப்படிப்பலன் அளிக்கிறது எனத் தெரிந்து கொண்டீர்கள். சரி! சூரியன் தனது தசையில் எப்படிப் பலன் அளித்து இருப்பார் எனக் கூறுங்கள் பார்ப்போம்.

சூரியன் 12-ம் வீட்டின் அதிபதி. 5-ல் இருக்கிறார். அவர் இருப்பது சொந்த நட்சத்திரமான உத்த ிராடத்தில். சொந்த நட்சத்திரத்தில் இருப்பதால் அவர் இருக்கும் வீடான 5-ம் வீட்டுப் பலனை முதன்மையாக வழங்குவார். 5-ம் வீடு என்பது குழந்தைகளைக் குறிக்கும் வீடு. அவருக்குத் த ிருமணம் அப்போது ஆகவில்லையாதலால் குழந்தைகள் எதுவும் பிறக்கவில்லை. 5-ம் வீடென்பது பதவி உயர்வைத்தடுக்கும் வீடு. அவருக்குப் பதவி உயர்வு எதுவும் கிடைக்கவில்லை; அவை கை. சூரியன் கேதுவுடன் சேர்ந்திருக்கிறார். கேதுவிற்கு சொந்த வீடுகள் கிடையாது. கேது சனியின் வ ீட்டில் இருப்பதால் சனிகொடுக்கக்கூடிய பலன்களைக் கொடுத்தாக வேண்டும். சனி 5, 6 ம்வீட்டிற்கு அதிபதியாகி 9-ம் வீட்டில் இருப்பதால் 5,6, 9-ம் வீட்டின் பலன்களைக் கொடுத்தாக வேண்டும். அந்த சனியின் வீட்டில் கேது இருப்பதால் கேது சனியின் பலன்களைக் கொடுப்பார். கேதுவுடன் சூர

RangaRakes tamilnavarasam.com

ரியன் சேர்ந்திருப்பதால் சூரியன் கேது கொடுக்கக் கூடிய 6-ம் வீட்டுப் பலன்களையும் கொடுத்து விட்டார். இவருக்கு சூரிய தசை சுய புக்தியில்தான் வேலை கிடைத்தது. ஆகவே சூரியன் எப்படி வேலையைக் கொடுத்தார் பாருங்கள்.

இதே போன்று ஒவ்வொரு கிரகமும் எந்தக்கிரகத்தின் சாரத்தில் இருக்கிறது என்று பார்த்து, எதனுடன் சேர்ந்திருக்கிறது என்று பார்த்தும், யாரால் பார்க்கப்படுகிறது என்று பார்த்தும் பலன் சொல்ல வேண்டும். நாம் உதாரணத்திற்குப் பல ஜாதகங்களைப் பார்ப்போம். அதற்குப்பின் எல்லாம் உங்களுக்கு விளங்கிவிடும்.

நீங்கள் "ப்ரச்சன ஜோதிடம்" பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்கள். இது ஜாதகம் இல்லாதவர்களுக்கு மிக உதவியாக இருக்கும். உங்களுக்கு ஒரு பிரச்சனை இருக்கிறது. உதாரணமாக உங்களுக்கு வேலை கிடைக்கவில்லை எனக் கொள்ளுங்கள். ஜாதகமும் இல்லை. எப்படிப் பலன் கூறுவது? இந்த மாதிரி சமயங்களில்தான் இந்தப் ப்ரச்சன ஜோதிடம் உதவுகிறது. நீங்கள் ஜோதிடரிடம் செல்லும் நேரத்தைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர் பலன் சொல்லுவார். அது சரியாக வரும். உங்களுக்கு எப்போது பிரச்சனை இருக்கிறதோ அப்போது உங்களை ஆள்கின்ற கிரகங்கள் உங்களுக்குப் பலன் சொல்லும். உங்கள் எதிர்காலத்தைக் காட்டும். இந்த கிரகங்களுக்கு "ஆளும் கிரகங்கள்" எனப் பெயர். இந்த ஆளுக் கிரகங்கள் உதவி ப்ரச்சன ஜோதிடத்திற்கு மட்டுமன்றி ஜாதகம் இருப்பவர்களுக்கும் பலன் சொல்லப் பயன்படும். வேலை எப்போது கிடைக்கும்? திருமணம் எப்போது ஆகும்? நான் எப்போது வெளி நாடு செல்வேன்? போன்ற கேள்விகளுக்கும் இந்த ஆள்கின்ற கிரகத்தின் மூலமாகப் பதில் கூற முடியும். அவற்றை எல்லாம் அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

RangaRakes
tamilnavarasam.com

சென்ற பாடத்தில் ஆள்கின்ற கிரகத்தைப் பற்றி எழுதி இருந்தோம். ஆளும் கிரகம் என்றால் நாம் ஒரு ஜாதகத்தைப் பற்றிப் பலன் சொல்ல எப்போது எடுத்துக் கொள்கிறோமோ அப்போது உள்ள க ிரக நிலைகள்தான் ஆளும் கிரகங்கள். சரி! ஒரு உதாரணம் எழுதுகிறேன்.

ஒருவருக்கு எப்போது திருமணம் ஆகும் என ஒரு ஜாதகத்தைப் பார்க்கிறீர்கள். பொதுவாக அநேக ஜோதிடர்கள் என்ன செய்வார்கள் தெரியுமா?

ஜாதகத்தில் சந்திரன் எங்கே இருக்கிறது எனப்பார்ப்பார்கள். தனுசில் இருக்கிறது எனக் கொள்வோம். தற்போது குரு எங்கு இருக்கிறார் எனப்பார்ப்பார்கள். தற்போது கன்னியிலே கோட்ச்சாரரீதியாக குரு பகவான் இருக்கிறார். அதாவது ஜென்ம ராசிக்குப் 10-ல் குரு இருக்கிறார். ஜென்ம ராசிக்கு 2, 5, 7, 9, 11 ம் வீடுகளில் குரு சஞ்சாரம் செய்யும் போது திருமணம் ஆகும் என்று நம்பிக்கை. ஆகவே அவர் கோட்ச்சா ரத்திக் கையில் எடுத்துக்கொண்டு “ தற்போது 10-ல் குரு இருக்கிறார். அடுத்த ஆண்டு 11-ம் வீட்டிற்கு குரு பெயர்வார். ஆகவே அடுத்த ஆண்டு திருமணம் ஆகும்” எனக் கூறுவார்கள். இவர்கள் வாக்கின்படிப் பார்த்தால் யாருக்கெல்லாம் ராசிக்கு 2, 5, 7, 9, 11-ல் குரு இருக்கிறதோ அவர்களுக்குத்தான் திருமணம் ஆகவேண்டும். இன்னும் சுறுக்கமாகச் சொல்லப்போனால் இந்த 5 ரசிக்காரர்களுக்குத்த்தான் ஒரு ஆண்டில் திருமணம் ஆக வேண்டும். மற்றவர்களுக்கு ஆகக் கூடாது. ஆனால் அனுபவப்பூர்வமாகப் பார்க்கும்போது 12 ராசிக் காரகளுக்கும் ஒரு ஆண்டில் திருமணம் ஆகிறது. ஒரு குறிப்பிட்ட ராசியினருக்கு மட்டும் திருமணம் ஆவதில்லை. சரி! எப்படித்தான் பலன் சொல்லுவது? கீழே படியுங்கள் பார்ப்போம்.

பலன் கூற ஆளும் கிரகங்கள் மிகமுக்கியம் என எழுதி இருந்தோம். சரி! ஆளும் கிரகங்கள் எவைகள்? நீங்கள் 08-04-2005 அன்று வெள்ளிக் கிழமை காலை 9.00 மணிக்கு ஒரு ஜாதகத்த ிற்குப் பலன் சொல்லுகிறீர்களெனக் கொள்வோம். அதாவது ஒரு “பெண்ணுக்கு எப்போது திருமணம் ஆகும்?” என்றுதான் நீங்கள் பார்க்கிறீர்கள் எனக் கொள்வோம். ஆளும் கிரகங்கள் எவை? காலை 9.00 மணிக்கு.

உள்ள கிரகங்கள்தான் ஆளும் கிரகங்கள். அவை பின்வறுமாறு:

1. அன்றைய கிழமையின் அதிபதி. அன்று வெள்ளிக் கிழமை. வெள்ளிக்கிழமைக்கு அதிபதி சுக்க ிரன். ஆக சுக்கிரன் ஒரு ஆள்கின்ற கிரகம்.

2. அன்றைய ராசியின் அதிபதி. அப்போது நடப்பு உத்திரட்டாதி. மீன ராசி. மீன ராசிக்கு குரு. ஆக குரு ஒரு ஆள்கின்ற கிரகம்.

3. அன்றைய நட்சத்திர அதிபதி. அன்று உத்திரட்டாதி நட்சத்திரமல் லவா? அதற்கு அதிபதி சனி. ஆக சனியும் ஒரு ஆளும் கிரகம்.

4. அப்போதைய லக்கின அதிபதி. அப்போது ரிஷப லக்கினம். அதன் அதிபதி. சுக்கிரன். அவரும் ஒரு ஆளும் கிரகம்.

5. லக்கின நட்சத்திர அதிபதி. ரிஷபத்தில் ரோகிணி நட்சத்திரத்தில் அப்போது லக்கினம் இருந்தது. ரோகிணிக்கு அதிபதியான சந்திரனும் ஒரு ஆளும் கிரகம்தான்.

இந்த ஐவரும்தான் ஆளும் கிரகங்கள். இந்த ஐந்து பேருடைய தசா, புக்தி காலங்களில்தான் த ிருமணம் நடக்க வேண்டும். இந்த ஆளும் கிரகங்கள்தான் எதிர்காலத்தைக் காட்டும் வழிகாட்டிகள். இந்த வழி காட்டிகள் இல்லாது எதிர்காலத்தைத் துல்லியமாகக் கூற முடியாது. ஆகவே எப்போது பலன் சொல்ல ஆரம்பித்தாலும் இந்த ஆளும் கிரகங்களைத் தனியாகக் குறித்து வைத்துக்

பலன் சொல்ல ஆரம்பித்தாலும் இந்த ஆளும் கிரகங்களைத் தனியாகக் குறித்து வைத்துக் கொள்வது நல்லது. அவை களையும் தற்போது நடக்கும் தசா, புக்திகளையும் ஒப்பிட்டுப் பலன் கூற வேண்டும். ஒரு உதாரண ஜாதகத்தைப் பார்ப்போம்.

இது ஒரு பெண்ணின் ஜாதகம்.

பிறந்த தேதி: 14-04-1972

பிறந்த ஊர்: சென்னை

பிறந்த நேரம் காலை 08:50

ராசி :

ரிஷப லக்னம்
லக்னத்தில் : சனி, செவ், சுக்
3ம் வீட்டில் : கேது
8ம் வீட்டில் : குரு
9ம் வீட்டில் : ராகு
11ம் வீட்டில் : புதன்
12ம் வீட்டில் : சந், சூரி

நவாம்சம் :

ரிஷப லக்னம்
லக்னத்தில் : சந், சுக்
2ம் வீட்டில் : செவ்
4ம் வீட்டில் : குரு
5ம் வீட்டில் : கேது
6ம் வீட்டில் : புதன்
11ம் வீட்டில் : ராகு
12ம் வீட்டில் : சூரி, சனி

ஜெனன காலத்தில் கேது தசை இருப்பு 4 வரு - 05 மாதம்- 06 நாள். இதுதான் அந்தப் பெண்ண ின் ஜாதகம். இந்தப் பெண்ணிற்குத் திருமணம் எப்போது ஆகும்? இதுதான் கேள்வி.

நாம் திருமணமென்றால் என்னவென்று ஏற்கனவே எழுதியுள்ளோம். திருமணமென்பது ஒரு சட்டபூர்வமான பிணைப்பு. கணவன் - மனைவி என்ற பிணைப்பு திருமணத்தின் மூலம் ஏற்படுகிறது. இந்தப் பிணைப்பைக் குறிப்பது 7-ம் வீடு.

அடுத்தது திருமணத்தின்மூலம் வீட்டில் ஒரு நபர் அதிகமாகிறார். ஒருவராயிருந்தவர் இப்போது இருவர் ஆகி விட்டனர். அதாவது குடும்பத்தில் ஒரு நபர் அதிகமாகி விட்டார். இதைக் குறிப்பது 2-ம் வீடு என்ற குடும்பஸ்தானம் ஆகும்.

இந்தத் திருமணத்தின் மூலம் அவர்களுக்குத் தாம்பத்திய உறவு கிடைக்கிறது. இந்தத் தாம்பத்திய உறவினைக் குறிப்பது 11-ம் வீடு. ஆக இந்த 2 ,7,11,-ம் வீட்டைக் குறிக்கின்ற கிரகங்களின் தசை, புக்தி, அந்தரங்களில்தான் ஒருவருக்குத் திருமணம் நடைபெறும்.

நாம் இந்த ஜாதகத்தைக் கையில் எடுத்துக் கொண்டு “திருமணம் எப்போது ஆகும்?” என்று பார்த்த தினம் 04-08-2003 இரவு 8.30 மணிக்கு. அப்போது இருந்த ஆளும் கிரகங்கள்:

1. கிழமையின் அதிபதி : சந்திரன்

2. ராசியதிபதி : அன்று ஸ்வாதி நட்சத்திரம் துலா ராசி - அதிபதி சுக்கிரன்.

3. நட்சத்திரம் : ஸ்வாதி - ராகுவின் நட்சத்திரம் -ஆக ராகு நட்சட்த்திர அதிபதியாகி ஒரு ஆளும் கிரகமாகி விட்டார்.

4. லக்கினாதிபதி : அப்போது லக்கினம்: கும்பம். அதன் அதிபதி சனி. அவரும் ஒரு ஆளும் க ிரகம்.

5. லக்கின நட்சத்திர அதிபதி - லக்கினம் அப்போது பூரட்டாதியில் சென்று கொண்டிருந்தது. ஆக குருவும் ஒரு ஆளும் கிரகமாகிறார்.

ஆக தற்போது கிடைத்துள்ள ஆளும் கிரகங்கள்

1. சந்திரன்
2. சுக்கிரன்
3. ராகு
4. சனி
5. குரு

நாம் அந்தப் பெண்ணின் ஜாதகத்தைப் பரிசீலித்தபோது சந்திர தசை, செவ்வாய் புக்தி நடந்து கொண்டிருந்தது. சந்திரன் திருமணத்தைக் கொடுப்பாரா? அவர் 3-ம் வீட்டிற்கு அதிபதி. 12-ம் வ ீட்டில் உள்ளார். திருமணத்திக் கொடுக்கின்ற வீடுகளுடன் அவர் எப்படி சம்மந்தப் படுகிறார். அவர் 11-ம் வீட்டதிபதியான குருவால் பார்க்கப் படுகிறார். ஆக அவர் 11-ம் வீடு கொடுக்க வேண்டிய பலன்களைக் கொடுக்கிறார். சந்திரன் ஒரு ஆளும் கிரகமாக வருகிறது. ஆக சந்திரன் தசையில் த ிருமணம் நிச்சயம் நடைபெறும்.

அடுத்தது புக்தியைத் தேர்வு செய்தாக வேண்டும். தற்போது நடப்பது செவ்வாய் புக்தி. செவ்வாய் 7-ம் வீட்டின் அதிபதி. திருமணத்திக் கொடுக்க சகல அதிகாரமும் அவருக்கு இருக்கிறது. இருப்ப ினும் ஆளும் கிரகத்தின் பட்டியலில் செவ்வாய் இல்லை. ஆக செவ்வாய் புக்தியில் திருமணம் நடைபெறாது. அவர் திருமணத்தைக் கொடுக்கும் சக்தி இல்லாதவராக இருக்கிறார்.

அடுத்த புக்தி ராகு. ராகு 9-ம் வீட்டில் இருக்கிறார். உத்திராட நட்சத்திரத்தில் இருக்கிறார். உத்த ிராடம் சூரியனின் நட்சத்திரம். சூரியன் கொடுக்கும் பலன்களை ராகு கொடுப்பதற்கு சகல அத ிகாரமும் இருக்கிறது. சூரியன் 12-ல் இருப்பதுபோல் தோன்றினாலும் பாவத்தில் 11-ம் வீட்டிற்குப் போய் விடுகிறார். அதாவது சூரியன் 11-ம் வீட்டில் இருக்கிறார். ஆக 11-ம் வீட்டின் பலனை சூர ியன் கொடுக்கிறார். சூரியன் சாரத்தில் ராகு இருப்பதால் சூரியன் கொடுக்க வேண்டிய பலன்களை ராகு கொடுத்து விடுவார். ராகு ஒரு ஆளும் கிரகமாக இருப்பதாலும், ராகு 11-ம் வீட்டின் பலனைக் கொடுக்க இருப்பதாலும் ராகு புக்தியில் திருமணம் நடக்கும் என்று உறுதியாகக் கூறலாம். ராகு புக்த ியில் திருமணம் நடக் கும் என்று கூறிவிட்டால் போதுமா? ராகு புக்தி 18 மாதங்கள் நடைபெறும். அடுத்து அந்திரத்தையும் பார்க்க வேண்டாமா.

ஆளும் கிரகங்களில் கிழமையின் அதிபதியைக் காட்டிலும் ராசி அதிபதி வலுவானவர். ராசியதிபத ியைக் காட்டிலும் நட்சத்திர அதிபதி வலுவானவர். நட்சத்திர அதிபதியைவிட லக்கினாதிபதி வலுவானவர். லக்கினாதிபதியை விட லக்கின நட்சத்திர அதிபதி வலுவானவர். நமக்கு லக்கின நட்சத்திர அதிபதி குரு. அவர் 11-ம் வீட்டின் அதிபதியாக இருந்தாலும் அவர் 7-ம் வீட்டின் அத ிபதி செவ்வாயால் பார்க்கப் படுகிறார். ஆக அவர் 7 மற்றும் 11-ம் வீட்டுப் பலன்களைக் கொடுக்கும் அதிகாரம் கிடைத்து விடுகிறது. ஆகவே குரு அந்திரத்தில் திருமணம் ஆகும் என்ற முடிவுக்கு வந்தோம். அதையே அந்தப் பெண்ணின் பெற்றோர்களுடமும் கூறி இருந்தோம்.

அந்தப் பெண்ணுக்கு சந்திர தசை, ராகு புக்தி, குரு அந்தரத்தில் திருமணம் நடந்தது. அதாவது அந்தப் பெண்ணிற்கு 14-07-2004 அன்று திருமணம் நடந்தது. நாம் பலன் கூற மேற்கண்ட முறையைத் தான் பின் பற்றி வந்து பலன் கூறுகிறோம்.

நமது வாசகர்களுக்கு எல்லாம் புரிந்து இருக்கும். ஆனால் பாவத்தைப் பற்றி மேலே கூறி இருந்தோம். அது சிலருக்குப் புரியாமல் இருந்து இருக்கும். நாம் இதுவரையில் பாவத்தைப் பற்றி எழுதவில்லை. அது எப்படிப் போடுவது என்றும் சொல்லிக் கொடுக்கவில்லை. ஒரு கிரகம் ராசியில் 5-ம் வீட்டில் இருக்கிறது எனக் கொள்வோம். அது பாவம் போட்டால் 4-ம் வீட்டில் இருக்கலாம். அந்த கிரகம் 5-ம் வீட்டின் பலனைக் கொடுப்பதற்கு பதிலாக 4-ம் வீட்டின் பலனைத்தான் கொடுக்கும். ஆக பலன் சொல்லும்போது ராசியை மட்டும் பார்க்காது பாவத்தையும் வைத்துப் பலன் சொன்னால் இன்னும் அதிக அளவில் சரியான பலனைக் கூறலாம். கம்ப்யூட்டர் ஜாதகங்களில் ராசியைப் போடும்போது பாவமும் போட்டுக் கொடுப்பார்கள். தற்போது இவ்வாறு உபயோகித்து வாருங்கள். சமயம் வரும்போது பாவம் எப்படிப் போடுவது என்று சொல்லிக் கொடுக்கிறோம். முடிந்தால் அடுத்த பாடத்திலேயே எழுதுகிறோம்.

சென்ற பாடத்தில் ஒருவருக்கு எப்போது திருமணம் கும் எனப் பார்த்தோம். இன்னும் ஒரு உதாரணம் கொடுத்தால் சரியாக இருக்குமென நினைத்தோம். இந்த ஜாதகத்தைப் பாருங்கள்.

ஜாதகர் பிறந்த தேதி : 24-07-1975
பிறந்த நேரம் : 10.30 இரவு
பிறந்த ஊர் : Latitude 10.46 N Longtitude 79.09 E

| | | | |
|---|---|---|---|
| லக்கினம் | செவ்வாய், குரு | கேது | புதன் |
| | ராசி | | சூரியன், சனி |
| சந்திரன் | | | சுக்கிரன் |
| | ராகு | | |

| | | | |
|---|---|---|---|
| | குரு | | புதன் |
| கேது | | | சனி |
| | அம்சம் | | ராகு, சந்திரன், சுக்கிரன் |
| | லக்கினம் | செவ்வாய் | சூரியன் |

செவ்வாய் தசை இருப்பு : வருஷம் 6 மாதம் 4 நாள் 18

மேறகணட ஜாதகருககுத திருமணம ஆகவிலலை. நமமிடம வநது திருமணததிறகான நேரம எதுவென்று கேட்டார்கள். நாம் அந்த ஜாதகத்தைப் பற்றி கீழ்வருமாறு பதில் கூறி இருந்தோம்.

லக்கினாதிபதி குரு 2-ல் செவ்வாயுடன் இருக்கிறார். 2-ம் வீட்டில் இருப்பதனால் தன் சொந்த முயற்சியில் சம்பாதித்து உயர் நிலக்கு வரக்கூடும். தவிரவும் குருவானவர் செவ்வாயுடன் செவ்வாய் வீட்டில் இருக்கிறார். இதனால் மிக்க சுறுசுறுப்புடன் இயங்கக் கூடியவராக இருப்பார். அதே சமயம் சிறிது முன் கோபியாகவும் இருப்பார்.4-ம் வீட்டின் அதிபதி புதன் 4-ம் வீட்டிலேயே இருப்பதால் நன்கு படித்தவராகவும் இருப்பார். திருமணத்தைப் பற்றிக் கூறும்போது 5-ல் சனி இருப்பதால் திருமணம் தாமதமாகும். ஏன் தாமதமாகும்என உங்களுக்குத் தெரிந்து இருக்கும். 5-ம் வீட்டில் இருந்து திருமணத்திற்கான வீடுகளான 2,7,11 - ஆகிய வீடுகளைப் பார்ப்பதினால் திருமணம் தாமதமாகும். தவிரவும் சனியும், சந்திரனும் ஒன்றை, ஒன்று பார்ப்பதினால் "புனர்ப்பூ" என்ற தோஷம் ஏற்படுகிறது. இதனால் திருமணம் தாமதப் படுத்தப் படும். உங்களுக்கு விரக்தியையே கொடுத்து விடும் எனக் கூறினோம். அதே போன்று சுமார் 200 க்கும் மேற்பட்ட ஜாதகத்தைப் பார்த்து வெறுப்பு அடைந்த பின்னர் திருமணம் ஆயிற்று.

நம்மிடம் அவர்கள் வந்த தினம் 23-05-2004 காலை 10.30 மணி.

ஆளும் கிரகம் என்னவென்று பாருங்கள்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. ஆக சூரியன் ஒரு ஆளும் கிரகம். அன்று புனர்ப்பூசம் நட்சத்திரம். மிதுன ராசி. ஆக புதனும் குருவும் ஆளும் கிரகங்கள். அப்போது லக்கினம் கடக லக்கினம். பூச நட்சத்திரத்தில் லக்கினம் சென்று கொண்டிருந்தது.

(நாம் சென்னையில் இருப்பதால் இருக்கும் இடத்திற்கு லக்கினம் பார்த்தோம்)

ஆக 1 சூரியன், 2.புதன் 3. குரு 4.சந்திரன் 5. சனி ஆகியவை ஆளும் கிரகங்கள்.

அப்போது குரு தசை நடநது கொண்டு இருந்ததினால் குரு திருமணத்தைக் கொடுப்பாரா? எனப் பார்ப்போம். குரு 2-ம் வீட்டில் இருக்கிறார். 2-ம் வீடு திருமணத்தைக் குறிக்கும் வீடுகளில் ஒன்றல்லவா? ஆக குரு தசையில் திருமணம் நிச்சயம் நடக்கும். அடுத்து புக்தியைப் பார்க்க வேண்டாமா? 11-08-2004 முடிய சனி புக்திநடந்து கொண்டு இருந்தது. ஜாதகத்தில் "புனர்ப்பூ" தோஷம் இருப்பதனால் உடனடியாகத் திருமணத்தை அவரால் கொடுக்க முடியாது. அவர் தாமதப்படுத்தித் தானே கொடுக்க வேண்டும். ஆகவே சனிபுக்தியில் திருமணம் நடக்காது என்ற தர்க்கமான முடிவுக்கு வந்தோம். ஆக அடுத்த புக்தியான புதனைப் பார்ப்போம். அவர் 7-ம் வீட்டின் அதிபதி. 7-ம் வீடு திருமணத்தைக் கொடுக்கும் வீடல்லவா? தவிரவும் ஆளும் கிரகத்தில் புதனும் இருக்கிறார். ஆக புதன் புக்தியில் திருமணம் நடைபெறும், புதன் புக்தி 12-08-2004-ல் இருந்து 17-11-2006 முடிய நடைபெறுகிறது. இந்த 2 1/4 ஆண்டுகளில் திருமணம் நடக்க வேண்டும். ஆனால் இந்த இரண்டே கால் ஆண்டுகளில் திருமணம் நடக்குமென்றால் போதாது. சரி! எந்த அந்திரத்தில் நடக்கும் எனத் தெரிந்து கொள்ள வேண்டாமா? சந்திரன் இருக்கும் இடம் 11-ம் வீடு. அவர் 2-ம் வீட்டின் அதிபதியான செவ்வாயின் நட்சத்திரமான அவிட்டத்தில் இருக்கிறார். ஆக சந்திரன் 2, 11-ம் வீடுகளைக் குறிக்கிறார். ஆகவே சந்திரன் அந்தரத்தில் திருமணமாகுமெனக் கூறினோம். அவ்வாறே சந்திரன் அந்திரத்தில் இவருக்குத் திருமணமாயிற்று. அதாவது 05-09-2005 அன்று திருமணம் நடந்தது.

இவ்வாறு கூறுவதற்கு நிறைந்த அனுபவம் தேவைப்படும். திருமணமானவர்களுடைய ஜாதகங்களை எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு எந்த தசை, புக்தி, அந்திரத்தில் திருமணமாயற்று என்று பல ஜாதகங்களை ஆராய்வு செய்யுங்கள். உங்களுக்கு அந்த அனுபவம் கை கொடுக்கும். "ஆயிரம் பேரைக் கொன்றவன்" அரை வைத்தியன்" என்று ஒரு பேச்சு வழக்கில் உள்ளது. அதைப்போல் பல ஜாதகங்களை ஆய்வு செய்தால் பல உண்மைகள் தெளிவாகும். திருமணத்தைப் பற்றி இரண்டு உதாரண ஜாதகங்கள் கொடுத்து எப்போது திருமணம் ஆகும் என விளக்கி இருந்தோம். இத்துடன் திருமணத்தை நிறுத்திக் கொள்வோம். திருமணம் நடந்த பின் தம்பதியருக்குள் மனக் கசப்பு, சண்டை, பிரிவினை ஆகியவை வருகின்றன அல்லவா?

சென்ற பாடத்தில் எப்போது திருமணம் ஆகுமெனப் பார்த்தோம். திருமணம் ஆன பின்பு எப்போது குழந்தை பிறக்குமெனப் பார்ப்பது வழக்கம். ஆனால் சிலருக்கு எப்போது விவாகரத்தாகும் எனப்பார்க்க வேண்டிய சூழ்நிலை உருவாகிறது. இதற்கான காரணங்களைப் பார்ப்பதுதான் இந்தப் பாடத்தின் நோக்கம்.

பொதுவாகத் திருமணத்திற்கு 2,7,11-ம் வீடுகளைப் பார்க்கிறோம் அல்லவா ? எந்த ஒரு வீட்டிற்கும் அதற்குப் 12-ம் வீடு எதிர்மறையான பலன்களைக் கொடுக்கும். இது ஜோதிட விதி. 7-ம் வீடு திருமணபந்தத்தைக் குறித்தால் 6-ம் வீடு மணமுறிவையும், பந்தங்களுக்குள் உண்டாகும் கருத்து வேறுபாடுகளையும் குறிக்கிறது. மேற்கூறிய வீடுகளுக்கு 12-ம் வீடான 1,6,மற்றும் 10-ம் வீட்டைக் குறிக்கின்ற கிரகங்கள் தங்கள் தசா, புக்திக் காலங்களில் தம்பதியருக்குள் அபிப்பிராய பேதங்களை, பிரிவினைகளை உண்டாக்குகின்றன. உதாரணத்திற்கு கீழே கொடுக்கப்பட்டுள்ள ஜாதகத்தைப் பாருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | சந் | லக்கினம் |
| சனி | | | கேது |
| சுக், ராகு, சூரியன், புதன் | ராசி | | |
| | | குரு | செவ்வாய் |

இந்த ஜாதகத்தில் 7-ம் வீட்டிக்குடையவரான குரு 5-ம் வீட்டில் இருக்கிறார். பொதுவாகவே 5-ம் வீட்டிற்கதிபதி 7-ல் இருப்பதோ அல்லது 7-ம் வீட்டின் அதிபதி 5-ல் இருப்பதோ விரும்பத்தக்கது அல்ல; அது கருத்து வேற்றுமையைக் கொடுக்கிறது. இந்த ஜாதகத்தில் 7-ம் வீட்டின் அதிபதி 5-ல் இருக்கிறார். அதைக் காட்டிலும் 6-ம் வீட்டின் அதிபதி செவ்வாய் 7-ம் வீட்டைப் பார்க்கிறார். திருமணம் ஆனதிலிருந்து சுமார் ஓரிரு ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்திருந்தனர். அதற்குப் பிறகு பிரிவுதான். இப்போது இவருக்கு 70 - வயது ஆகிறது. தனியாகத்தான் வாழ்ந்து வருகிறார். எப்போதாவது மாதத்திற்கு ஒருநாள் இவர் வீட்டிற்கு வந்து ஓரிரு மணி நேரம் இவர் மனைவி தங்கினால் அதிகம். இவர் வாழ்க்கை இப்படியே முடியப் போகிறது. விவாகரத்து என்று ஆகவில்லை; ஆனால் தனித்தனியாகவே வாழ்ந்து வருகின்றனர்.

அடுத்து ஒரு ஜாதகத்தைப் பாருங்கள். இது துலா லக்கின ஜாதகம். பொதுவாகவே துலா லக்கினத்திற்கு குருவானவர் 6-ம் வீட்டின் அதிபதி. இவர் 7-ம் வீட்டைப் பார்த்தால் அந்த ஜாதகர் தன் மனைவியுடன் ஒற்றுமையாய் வாழ்வதில்லை. அவர்கள் பிரிந்து வாழ்வதைப் பல ஜாதகங்களிலே கண்டிருக்கிறோம். அதைப்போல் இதுவும் ஒரு ஜாதகம். இவர்கள் பிரிந்து மட்டும் வாழ்வில்லை. விவாகரத்திற்கு மனுச்செய்துவிட்டு நீதிமன்ற உத்தரவிற்குக் காத்து இருக்கிறார்கள். விவாகரத்திற்குக் காரணம் என்னவென்றால் இவர் மனைவி ஒரு மனநோயாளி. ஆகவே இவர்கள் சேர்ந்து

காரணம் என்னவென்றால் இவர் மனைவி ஒரு மனநோயாளி. ஆகவே இவர்கள் சேர்ந்து வாழமுடியவில்லை.

| | | | |
|---|---|---|---|
| | | சுக், சனி | சூரியன் |
| | ராசி | | புதன்,கேது,செவ்வாய் |
| ராகு | | | சந்திரன் |
| குரு | | லக்கினம் | |

7-ம் வீட்டிற்கு 6-ம் வீட்டின் அதிபதியான குருவின் பார்வை இருப்பதுதான் இவர்கள் பிரிவதற்கு முக்கியக் காரணம் என்றாலும் 7-ம் வீட்டின் அதிபதிக்கு சனியின் பார்வை இருப்பதும் ஒரு காரணம். சனியின் பார்வை மகிழ்வான வாழ்க்கையைக் கெடுக்கிறது. சனி 2-ம் வீடான குடும்பஸ்தானத்தையும் பார்க்கிறார். ஆக மகிழ்வில்லாத குடும்ப வாழ்க்கையால் அவர் மண முறிவை நாட வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளது.

அடுத்து திருமணம் ஆகி ஓர் மாதம் வாழ்ந்து ஓராண்டுக்குள் விவாகரத்து வாங்கிக் கொண்டவர் ஜாதகத்தைப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| சுக் | சூரி, புதன், குரு, கேது | | லக்கினம், செவ் |
| | ராசி | | சனி |
| சந்திரன் | | | |
| | | ராகு | |

நாம் நம் பாடங்களில் எழுதி இருக்கிறோம் “புனர்ப்பூ” தோஷத்தைப் பற்றி. இங்கு சந்திரனும், சனியும் ஒன்றை ஒன்று பார்த்துக் கொள்கின்றன. குடும்பஸ்தானாதிபதி சந்திரனுக்கு சனியின் பார்வை. குடும்பவாழ்க்கையில் சுகமில்லை. அதிருப்திதான். 6-ம் வீட்டின் அதிபதி செவ்வாய் லக்கினத்தில் அமர்ந்து 7-ம் வீட்டைப் பார்க்கிறார். இது விவாகரத்தில் முடிந்து விட்டது.

செவ்வாய் இயற்கையாகவே நல்லவரல்ல; சண்டை, சச்சரவுகளில் ஈடுபட வைப்பவர். இங்கு அவர்

RangaRakes tamilnavarasam.com

6-ம் வீட்டின் அதிபதியானதால் சண்டை, சச்சரவுடன் விவாகரத்து ஆனது.

பொதுவாக ஒருவருக்கு இரண்டாம் திருமணம் ஆகுமா? என்று ஜாதகத்தைப் பார்த்தால் அதற்கு விடை "ஆம்" என்று வந்தால் முதல் திருமணம் விவாகரத்து ஆகி 2-ம் திருமணமா ? அல்லது முதல் மனைவி இறந்தபின் 2-ம் திருமணமா? என்று பார்க்கவேண்டும். இவை எல்லாம் அவ்வளவு எளிதாகப் பார்ப்பவையல்ல.

ஜாதகத்தை மேலெழுந்தவாரியாகப் பார்த்து பதில் சொல்ல முடியாது. ஜாதகத்தை மிகவும் கவனமாக ஆராய்ந்து பதில் சொல்ல வேண்டியவை. பல ஜோதிட வழிமுறைகளை ஆராய்ந்து அதன் மூலமாகச் சொல்ல வேண்டும். நாம் இங்கு எல்லாவற்றையும் எழுதி விட முடியாது. இந்தப் பாடங்களெல்லாம் ஜோதிடம் ஓரளவிற்குத் தெரிய வேண்டும் என்ற எண்ணத்தில் எழுதுகின்றோம்.

மேலும் 'பிரஹத் ஜாதகம்", பலதீபிகை, உத்தரகாலாம்ருதம், போன்ற நூல்களைப் படிக்க வேண்டும். இவைகளெல்லாம் ஜோதிடத்தைப் பற்றி நமது முன்னோர்கள் நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்று விட்டுச் சென்ற சொத்துக்கள். இந்த 20-ம் நூற்றாண்டில் வாழ்ந்த ஜோதிட மேதைகள் Dr. B.V. ராமன் எழுதிய நூலகள், திரு. K.S. கிருஷ்ண மூர்த்தி எழுதிய நூல்கலெல்லாம் மிகுந்த நன்மை பயப்பவை. "முயற்சியுடையார் இகழ்ச்சியயார்" என்ற முது மொழியை கவனத்தில் கொண்டு பல ஜோதிட நூல்களைப் படியுங்கள். பல கேள்விகளுக்கு விடை கிடைக்கும்.

அடுத்த பாடத்தில் குழந்தை பிறப்பைப் பற்றி எழுதுவோம்.

RangaRakes
tamilnavarasam.com

குழந்தை பாக்கியத்திப் பற்றி இந்தப் பாடத்தில் பார்ப்போம் என எழுதி இருந்தோம். திருமணமானால் உடனே குழந்தை பிறந்து விட்டால் புத்திரபாக்கியத்தைப் பற்றிக் கவலைப் பட வேண்டாம். ஆனால் சிலருக்கு அப்படி இல்லை. திருமணமாகிப் பல ஆண்டுகள் கழித்துப் புத்திர பாக்கியம் உண்டாகிறது. சிலருக்கு அந்த பாக்கியமே இருப்பதில்லை. 5-ம் இடமான புத்திரஸ்தானம் பாபக் கிரகங்களின் சம்மந்தம் ஏற்பட்டால் அவர்களுக்கு புத்திர உற்பத்தி தாமதமாகிறது. அல்லது புத்திரமே இல்லாது போகிறது. கீழே கொடுத்துள்ள ஜாதகத்தைப் பாருங்கள். இது ஒரு பெண்ணின் ஜாதகம்.

பிறந்த தேதி :16-03-1970
பிறந்த நேரம் : 11:50
பிறந்த ஊர் : சென்னை

| | | | |
|---|---|---|---|
| சூரி ,சுக் | செவ் ,சனி | | லக்கினம்,சந் |
| புத,ராகு | ராசி | | |
| | | | கேது |
| | | குரு | |

| | | | |
|---|---|---|---|
| ராகு ,சந் | | புத | |
| | அம்சம் | | சனி ,சூரி |
| குரு | | | |
| | சுக் | லக் | கேது |

ஜெனன காலத்தில் இருப்பு திசை:- ராகு - 3 வருஷம் 09 மாதம் 07 நாள்

இந்தப் பெண்ணிற்கு குடும்பஸ்தானாதிபதியாகிய சந்திரனுக்கு குரு பார்வை. குரு 5-ம் வீட்டிலிருந்து பார்ப்பதால், அதுவும் புத்திரகாரகனாகிப் பார்ப்பது நன்மையைத்தான் கொடுக்க வேண்டும். கொடுத்தார். பெண் கர்பமானார். முழுவதுமாகப் பத்துமாதம் குழந்தை தங்கியிருந்தால் பிரச்சனை இல்லை; 8-ம் மாதம் முடியமுன்பே பிரச்சனை ஏற்பட்டு அறுவை சிகிச்சை மூலம் குழந்தையை எடுக்க வேண்டியது இருந்தது. குழந்தை எடை குறைவாக இருந்ததால் Incubator - ல் வைக்க வேண்டிய நிலை. இவ்வளவு செய்தும் குழந்தை பிழைக்கவில்லை; இறந்து விட்டது. இவ்வாறு ஒரு முறை அல்ல; மூன்று குழ்ந்தை பிறந்து மூன்றும் இறந்து விட்டன.. இதற்குக் காரணம் என்ன ?

5-ம் வீட்டிற்கு செவ்வாய், சனி இருவருடைய பார்வையும் 11-ம் வீட்டிலிருந்து கிடைக்கிறது. இருவரும் கடுமையான பாவிகள் அல்லவா? அதுவும் மேஷத்திலிருந்து பார்க்கிறார்கள். மேஷம் ஒரு வறண்ட ராசியல்லவா? ( It is a barren sign). குழந்தை வயிற்றில் நீரில்லாது கஷ்ட்டப்பட்டு அறுவை சிகிச்சை மூலம் எடுக்க வேண்டியதாயிற்று. மூன்று குழந்தைகளும் பிறந்து, இறந்து தற்போது குழந்தை இல்லாது இருக்கின்றார்கள். இதைப்போன்று குழந்தை இல்லாதிருக்கப் பல கிரகச் சேர்க்கைகள் இருக்கின்றன. அவையெல்லாம் இங்கே எழுதுவதென்றால் எளிதான காரியம் அல்ல; நாம் ஏற்கனவே கூறியதுபோல் நமது முன்னோர்கள் எழுதிய ஜோதிட நூல்களைப் படித்து அனுபவத்துடன் ஒத்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் சரியாக வரும். சரி! குழந்தை எப்போது பிறக்கும் என்பதை ஒரு ஜாதகத்துடன் விளக்குவோம். இது ஒரு பெண்ணின் ஜாதகம்.

பிறந்த தேதி : 22-08-1978
பிறந்த நேரம் : 10.40 இரவு
பிறந்த ஊர் : Lat. 08D 45M, Long 77D, 43M

| | | | |
|---|---|---|---|
| கேது | லக்கினம்,சந் | | |
| | ராசி | | புத,குரு |
| | | | சூரி,சனி |
| | | | ராகு,செவ்,சுக் |

| | | | |
|---|---|---|---|
| புதன் | சந் | சூரி | செவ்,சனி |
| ராகு | அம்சம் | | சுக் |
| | | | லக்க ினம்,குரு,கேது |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |

ஜெனன கால இருப்பு தசை கேது 5 வருஷம் 6 மாதம் 29 நாள்

இவருக்கு 2003-ல் திருமணமாயிற்று. 2004-ல் நம்மிடம் இவருக்கு எப்போது குழந்தை பிறக்கும் எனக் கேட்டார்கள். அன்று தேதி 19-03-2004.அன்று வெள்ளிக் கிழமை, சதயம் நட்சத்திரம். நேரம் மாலை 6-10. அப்போதைய ஆளும் கிரகங்கள் என்ன?

1. கிழமையின் அதிபதி சுக்கிரன். 2. ராசி அதிபதி சனி. 3. நட்ஷத்திர அதிபதி ராகு. 4. அப்போதைய லக்கினம் கன்னி. அதன் அதிபதி புதன். லக்கின நட்சத்திர அதிபதி சூரியன். ஆக ஆளும் கிரகங்கள்.

1. சுக்கிரன்.
2. சனி
3. ராகு
4. புதன்
5. சூரியன்.

அந்தப் பெண்ணிற்கு அப்போது சுக்கிரதசை நடந்து கொண்டு இருந்தது. அதுவும் 22-03-2004 அன்று முடிவடைந்து விடுகிறது. அதற்குப்[பின் சூரிய தசை6 ஆண்டுகள். நடக்கும்.. சூரியன் 5-ம் வீட்டிற்கு அதிபதி. அதைத்தவிர ஆளும் கிரகங்களில் ஒருவர். ஆக சூரியதசையில் குழந்தை ப ிறக்கும் என்று கூற நமக்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. சூரிய தசை 6 ஆண்டுகள் ஆயிற்றே. எந்த புக்தியில் நடக்கும் சொல்ல வேண்டாமா? ராகு 6-ம் வீட்டில் இருந்தாலும் 5-ம் வீட்டின் அத ிபதியான சூரியனின் சாரத்தில் இருக்கிரார். ஆக 5-ம் வீட்டின் பலனைக் கொடுக்க சர்வ அத ிகாரமும் அவருக்கு இருக்கிறது. ராகு ஆளும் கிரகத்தில் ஒருவர். ஆக நிச்சயமாக அவர் புக்தியில் குழந்தை பிறக்கும். அதையும் கூறினோம். ஆனால் ராகு புக்தி 10 மாதங்கள் 24 நாட்கள் நடக்க ின்றனவே. ஆகவே அந்தரத்தையும் நாம் சொல்ல வேண்டாமா? சனி 5-ம் வீட்டில். அவர் 5-ம் வ ீட்டின் அதிபதி யுடன் சேர்ந்து இருக்கிறார். ஆளும் கிரகத்தில் சனியும் ஒருவர். ஆக சனி அந்தரத்தில் குழந்தை பிறக்குமெனக் கூறினோம். அதேபோல் அந்த சூரிய தசை, ராகு புக்தி, சனி அந்தரத்தில் குழந்தை பிறந்தது.

எந்த ஒரு காரியம் நடக்கும் என்று கூற வேண்டுமென்றாலும் ஆளுகின்ற கிரகத்தின் துணையின்றிக் கூற இயலாது. அதன் துணையுடன் கூறினால் நிச்சயமாக சரியான நேரத்தைக் கணக் கிட்டுக் கூற முடியும்.

5-ம் வீட்டில் நல்ல கிரகங்கள் இருந்தால் நல்ல குழந்தைகளாகப் பிறக்கும். தீய கிரகங்கள் இருப்பின் நல்ல குழந்தைகள் பிறப்பதில்லை. அதுவும் பெண்களுக்கு 5-ம் வீட்டுடன் தீய கிரகங்கள் சம்மந்தப் பட்டால் மகப்பேறே பிரச்சனை ஆகி விடுகிறது. 5-ல் செவ்வாய் இருந்தாலோ அல்லது பார்த்தாலோ மகப்பேறு அனேகமாக Scissarian - ல் முடிகிறது. 5-ல் சனி புத்திர உற்பத்தியை தாமதப் படுத்துக ிறது. ராகு இருப்பின் கருச்சிதைவு ஏற்படுகிறது. உதாரணத்திற்கு கீழே கொடுக்கப் பட்டுள்ள ஜாதகத்தைப் பாருங்கள். இது ஒரு பெண்ணின் ஜாதகம். இவருக்குத் திருமணம் ஆகிப் பல ஆண்டுகள் ஆகின்றன. இரண்டு முறை கருத்தரித்து சிதைவு ஏற்பட்டு விட்டது. 2-ம் வீட்டில் ராகு குருவுடன் சேர்ந்து இருக்கிறார். குரு 5-ம் வீட்டிற்கும் அதிபதி. குரு புத்திர காரகன் வேறு. குரு ராகுவுடன் சம்மந்தப் பட்டு விட்டதால் புத்திர உற்பத்தி பாதிக்கப்பட்டு விட்டது. கீழே உள்ள ஜாதகத்தைப் பாருங்கள்.

| | | | |
|---|---|---|---|
| | | சனி | கேது |

RangaRakes tamilnavarasam.com

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | ராசி | | சந் |
| | | | |
| ராகு,குரு | லக்கினம் சூரியன்,புதன் | செவ், சுக் | |

ஒர் ஆணின் ஜாதகத்தில் கன்னியா லக்கினம். 5-ம் வீட்டில் சனியும் செவ்வாயும். பிறந்த முதல் குழந்தைக்கு இருதயம் சரியாக இல்லை. பிறக்கும்போதே கோணலாக இருந்தது. இந்த இருதயத்துடன் பல இன்னல்களை அனுபவித்து 22-ம் வயதில் அக்குழந்தை இறந்தது. 5-ம் வீட்டைப் பூர்வ புண்ணியஸ்தானம் என்றும் அழைக்கிறோம். பாப கிரகங்கள் 5-ல் இருந்தால் போன ஜன்மத்தில் நாம் புண்ணியம் செய்யவில்லை என்றுதானே பொருள். நல்ல குழந்தைகள் பிறப்பதே பூர்வ புண்ணியத்தால் தானே.

"உத்தியோகம் புருஷ லட்சணம். எல்லோருக்கும் உத்தியோகம் கிடைத்து விட்டால் பிரச்சனை இல்லை. 1. வேலை எப்போது கிடைக்கும்? 2. பதவி உயர்வு உண்டா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை கிடைக்க வேண்டும். இதை எப்படி ஜோதிட ரீதியாக பதில் சொல்வது? இதைத்தான் நாம் விளக்கப் போகிறோம்.

நாம் ஏற்கனவே கூறி இருக்கிறோம். 10-ம் வீடு என்பது ஜீவனஸ்தானம் ஆகும். 6-ம் வீடென்பது நாம் செய்யும் தொழிலைக் குறிக்கும் வீடாகும். அப்படியானால் 10ம் வீட்டிற்கும், 6-ம் வீட்டிற்கும் என்ன வித்தியாசம். 10-ம் வீடென்பது பொதுவாக ஜீவனத்தைக் குறிக்கிறது. ஜீவனமென்பது வியாபாரமாகவும் இருக்கலாம்; அல்லது உத்தியோக மாகவும் இருக்கலாம். ஆனால் 6-ம் வீடென்பது நாம் செய்யும் உத்தியோகத்தைமட்டும்தான் குறிக்கும். 7-ம் வீடென்பது வியாபாரத்தைக் குறிக்கும். 2-ம் வீடென்பது தனஸ்தானம் அல்லவா? வேலைக்குச் சென்றால் நமக்குப் பணம் கிடைக்குமல்லவா? 11-ம் வீடென்பது லாபஸ்தானம். ஆக 2,6,10,11-ம் வீடுகளைக் குறிக்கின்ற தசா, புக்தி, அந்தரத்தில் வேலை கிடைக்கும். 10 ஆம் இடமான ஜீவனஸ்தானத்தில் குரு, சுக்கிரன் போன்ற சுப கிரகங்கள் இருப்பின் சீக்கிரம் வேலை கிடைக்கும். சனியிருப்பின் வேலை கிடைக்கவே தாமதமாகும். வேலை கிடைத்தாலும் செய்யும் வேலைக்குகந்த சம்பளம் கிடைக்காது. பதவி உயர்வுக்கு மிகவும் காத்திருக்க வேண்டும். செவ்வாயிருப்பின் செய்யும் தொழிலில் பிரச்சனைகள், சண்டை, சச்சரவு போன்றவை இருக்கும். சரி! எப்போது வேலை கிடைக்கும் என்பதைப் பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| லக்கினம், சனி | ராகு | | |
| | ராசி | | |
| செவ் | | | குரு,சந்திரன் |
| | சூரியன் | புதன்,கேது | சுக்கிரன் |

| | | | |
|---|---|---|---|
| | புதன்,ராகு | | |
| | | | குரு |
| செவ் | அம்சம் | | சுக்கிரன் |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| லக்கினம்,சந்திரன் | | சூரி,சனி,கேது | |

சூரிய தசை பாக்கி : 5 வருஷம் 8 மாதம் 02 நாட்கள்

இவர் பிறந்த தேதி : 26-11-1967.

இவர் தாம் பார்க்கும் வேலை திருப்தி அளிக்கவில்லை என்றும் வேறு வேலை கிடைக்குமா? எனவும் கேட்டார். அன்று 05-01-2006 வியாழக்கிழமை. அப்போதைய ஆளும் கிரகங்களைப் பார்த்தோம்.

அன்றைய கிழமை - வியாழன். குரு அன்றைய நாளின் அதிபதி ஆகிறார். அன்றைய நட்சத்திரம் பூரட்டாதி- ராசி - கும்பம். சனி ராசியதிபதியாகவும் குரு நட்சத்திர அதிபதியாகவும் ஆகிறார். அப்போதைய லக்கினம் மகரம். அதன் அதிபதி திரும்பவும் சனி; லக்கின நட்சத்திர அதிபதி சந்திரன். ஆக கீழ்வரும் கிரகங்கள் ஆளும் கிரகங்களாகின்றன.

1.குரு 2.சனி 3.குரு 4.சனி 5.சந்திரன்.

குருவின் வீட்டில் ராகு இருப்பதால் ராகுவும் ஒரு ஆளும் கிரகம் ஆகின்றார். ராகுவுக்கு சொந்தவீடு எதுவும் கிடையாதாகையால் இந்த வீட்டில் இருக்கின்றாரோ அல்லது எந்த நட்சத்திர அதிபரின் காலில் இருக்கின்றாரோ அவருடைய பலனைக் கொடுப்பார். ராகு குருவின் வீட்டில் இருப்பதோடு அன்று சனியினுடைய நட்சத்திரமான உத்திரட்டாதியில் இருக்கிறார். ஆக ராகுவும் ஒரு ஆளும் கிரகமாகின்றார்.

தற்போது நடப்பு தசா, புக்தியைப் பாருங்கள். அப்போது ராகுதசையில் சூரிய புக்தி நடந்து கொண்டிருந்தது. ராகு 2-ம் வீட்டில் இருப்பதால் அவர் தசையில் உத்தியோகம் கிடைக்கும். ஆளும் கிரகத்தில் ராகுவும் ஒருவர். ஆக ராகு தசையில் வேறு வேலை கிடைக்கும். அடுத்ததாக புக்தியைப் பாருங்கள். சூரிய புக்தி நடப்பு. சூரியன் 6-ம் வீட்டின் அதிபதியாக இருந்தும் கூட ஆளும் கிரகத்தில் சூரியன் இல்ல; ஆக சூரிய புக்தியில் வேலை கிடைக்காது. அடுத்த புக்தி சந்திரன். அவர் 5-ம் வீட்டின் அதிபதி. சூரியனின் சாரமான உத்திரத்தில் இருக்கிறார். 5-ம் வீடென்பது உத்தியோகத்தின் மாறுதலைக் குறிக்கும் வீடு. 6-ம் வீட்டிற்குப் 12-ம் வீடல்லவா. ஆக சந்திர புக்தியில் உத்தியோக மாறுதல் தெரிகிறது. சந்திரன் 6-ம் வீட்டு அதிபதியான சூரியனின் காலில் இருக்கிறார் அல்லவா? ஆக வேறொறு உத்தியோகத்தை சந்திரன் கொடுப்பவர் ஆகிறார். தவிரவும் ஆளும் கிரகத்தில் சந்திரன் இருக்கிறார் அல்லவா? ஆக சந்திர புக்தியில் இருக்கும் வேலையை விட்டுவிட்டு வேறு வேலைக்குச் செல்வார். சந்திர புக்தி 10-01-2006 முதல் 12-07-2007 முடிய நடைபெறுகிறது. ஆக இந்தக் காலத்தில் உத்தியோகத்தில் மாற்றம் ஏற்படும். இத்துடன் கூறினால் போதுமா ? அந்திரத்தையும் சொல்ல வேண்டாமா? குருவானவர் 10-ம் வீட்டிற்கு அதிபதி. 6-ம் வீட்டில் இருக்கிறார். ஆக குரு அந்திரத்தில் வேலை கிடைக்க நியாயம் உண்டு. தவிரவும் குரு ஆளும் கிரகத்தில் வேறு இருக்கிறார். ஆக குரு அந்திரத்தில் வேலை கிடைக்கும். அதாவது 20-06-2006 முதல் 31-08-2006 க்குள் குரு அந்திரத்தில் வேலை கிடைக்கும் எனக் கூறினோம். அவருக்கு 20-06-2006 அன்று வேறு வேலை கிடைத்தது.

மேற்கூறிய உதாரணத்தில் வேலை எப்போது கிடைக்கும் என்பதை ஆளும் கிரகங்கள் உதவியுடன் எப்படிக் கூறுவது எனக் கூறினோம். ஒருவருக்கு வேலை எப்போது இழப்பு நேரிடும் என்பதை விளக்குகின்றோம். ஜாதகத்தில் 5-ம் வீடும், 9-ம் வீடும் முறையே 6-ம் வீட்டிற்கும், 10-ம் வீட்டிற்கும் 12-ம் வீடுகள். இந்த 5-ம் வீடு, மற்றும் 9-ம் வீடுகளைக் குறிக்கின்ற வீடுகளின் தசா, புக்திக் காலங்களில் ஒருவருக்கு உத்தியோகத்தில் பிரச்சனைகளும், வேலை இழப்புப் போன்றவைகளும்

RangaRakes tamilnavarasam.com

நடைபெறும். இது அனுபவரீதியாக சரியாக வரும். ஒருவருக்குப் பதவி உயர்வு எப்போது க
ிடைக்கும் என்பதற்கும் 2,6,10,11-ம் வீடுகளைப் பார்த்தால் போதும். இந்த வீடுகளைக் குறிக்கின்ற தசா, புக்திக் காலங்களில் ஒருவருக்குப் பதவி உயர்வு கிடைக்கும்.

இப்போதெல்லாம் நான் வெளிநாடு செல்ல முடியுமா? என்ற கேள்வியைக் கேட்க்கின்றனர். அதுவும் இந்த கணனி வந்த பிறகு வெளிநாடு செல்வதென்பது மிக சாதாரணமாகிவிட்டது. நாம் அதற்கும் பத
ில் சொல்லியாகிவிட வேண்டும். பொதுவாக ஒரு ஜாதகத்தில் குருவானவர் 8-ம் வீட்டுடன் சமம்ந்தப்பட்டோருக்கு வெளிநாடு செல்லும் யோகம் கிடைக்கிறது. குருவானவர் 8-ம் வீட்டில் இருக்கலாம். 8-ம் வீட்டின் அதிபர் சாரத்தில் இருக்கலாம். அல்லது 8-ல் உள்ள கிரகத்தின் சாரத்தில் இருக்கலாம். அல்லது 8-ம் அதிபருடன் சேர்ந்து இருக்கலாம்.

அல்லது 8-ம் அதிபரும் குருவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளலாம், இது ஒரு தோராயமான கணிப்புத்தான். பொதுவாக ஜாதகத்தில் 3-ம் வீடு, 9-ம் வீடு, 12-ம் வீடு களைக் குறிக்கின்ற தசா,புக்திக் காலங்களில் தான் ஒருவர் வெளிநாடு செல்ல இயலும். ஏன்? 3-ம் வீடு என்பது சொந்த இடத்திலிருந்து இடம் பெயருதலையும், 9-ம் வீடு என்பது நீண்ட பயணத்தையும், 12-ம் வீடென்பது பழக்கமில்லாத புதிய இடத்திறகு இடம் பெயர்தலையும் குறுக்கிறது. கீழே ஒரு ஜாதகத்தைக் கொடுத்துள்ளோம் :

| | | | |
|---|---|---|---|
| | குரு,கேது | சூரி,சுக்,புதன் | சந் |
| | ராசி | | செவ்,சனி |
| | | | |
| | | ராகு | லக்கினம் |

| | | | |
|---|---|---|---|
| ராகு | சுக் | சூரி | |
| சந் | அம்சம் | | |
| புதன் | | | சனி |
| | செவ் | குரு | கேது,லக்கினம் |

ராகு தசை இருப்பு : வருஷம் 8 மாதம் 11 நாள் 13.

இந்த ஜாதகர் குரு தசை,ராகு புக்தி, சூரியன் அந்திரத்தில் வெளி நாடு சென்றார். குருவானவர் 9-ம் வீட்டின் அதிபதியான சுக்கிரன் சாரத்தில் இருக்கிறார். ஆக நீண்ட பயணத்தைக் கொடுக்கின்றார். ராகு 2-ம் வீட்டில் இருந்தாலும் செவ்வாயால், அதாவது 3-ம் வீட்டின் அதிபதியால் பார்க்கப் படுக ிறார். ஆக ராகு 3-ம் வீட்டின் பலனைக் கொடுக் கின்றார். சூரியன் இந்த ஜாதகத்திற்கு 12-ம் வ ீட்டிற்கு அதிபதி. ஆக 3,9,12-ம் வீடு களைக் குறிக்கின்ற தசா, புக்தி, அந்தரத்தில் இவர் வெள ிநாடு சென்றார். இவ்வாறாக ஒருவர் வெளிநாடு செல்லும் யோகம் இருக்கின்றதா என்று பார்த்தறிந்து பின்பு எப்போது செல்வார் என்று கூற வேண்டும். அவ்வாறு கணக்கிடும்போது அப்போதைய ஆளும் கிரகத்தையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பலன் சொன்னால் சரியாக வரும்.

சிலர் எனக்கு இப்போது ஊர்மாற்றல் கிடைக்குமா? எனக் கேட்ப்பார்கள். உத்தியோகத்தில் இடமாற்றம் என்பது சகஜம்தான். 3-ம் வீடு என்பது இப்போது இருக்கும் இடத்திலிருந்து வேறு இடத்திற்குசெல்லுதலைக் குறிக்கிறது. தசா,புக்திகளில் 3-ம் வீட்டைக் குறிக்கின்ற கிரகத்தின் தசையோ அல்லது புக்தியோ இல்லாவிட்டால் இட மாற்றம் இருக்காது. அவ்வாறு இடமாற்றத்தைப் பார்க்கும்போது தற்கால ஆளும் கிரகங்களையும் கணக்கில் எடுத்துக் கொள்ளுங்கள். ஆளும் க ிரகத்தில் தற்போதைய தசா, புக்தி நடத்தும் கிரகங்கள் வரவில்லை யென்றால் இப்ட்போது இடமாற்றம் இல்லை என தைரிியமாகக் கூறிவிடுங்கள். தசானாதன் ஆளும் கிரகத்தில் இல்லை யென்றால் அந்த தசையில் மாற்றம் இல்லை; புக்தினாதன் ஆளும்கிரகத்தில் இல்லையென்றால் அந்த புக்தியில் மாறுதல் இல்லை. நாம் இத்துடன் உத்தியோக சம்மந்தமான நமது விளக்கத்தை ந ிறுத்திக் கொள்வோம்.

இது வரையில் எப்போது திருமணம்? எப்போது வேலை கிடைக்கும் ? எப்போது குழந்தை பிறக்கும்? என்பன போன்ற கேள்விகளுக்கெல்லாம் ஆளும் கிரகத்தின் உதவியுடன் பதில் எப்படிச் சொல்வது என்று பார்த்தோம். இப்படியே எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லலாம். எந்தெந்தக் கேள்விகளுக்கு எந்த வீட்டை வைத்துப் பலன் சொல்வது என்று நாம் கீழே கொடுத்துள்ளோம். அதை வைத்துக் கொண்டு ஆளும் கிரகத்தின் உதவியுடன் பதில் சொல்ல நமது வாசகர்கள் பழகிக்கொள்ள வேண்டும்.

எனக்கு மேற்படிப்பிற்காக கல்லூரியில் இடம் கிடைக்குமா ?

இது எல்லா மாணவர்களுக்கும் ஏற்படுகின்ற கேள்வி. இதற்கு எப்படி பதில் சொல்வது என்று பார்ப்போம். 4-ம் வீடும், 9-ம் வீடும் படிப்பினைக் குறிக்கின்றன. 11-ம் வீடு ஒருவரின் ஆசை நிறைவேறுதலைக் குறிக்கிறது. ஆக இந்த மூன்று வீடுகளையும் குறிக்கின்ற தசா, புக்திக் காலங்களில் ஒருவர் மேற்கொண்டு படிக்க முடியும். தற்போது நடக்கும், தசா புக்திகளைக் குறித்துக் கொள்ளுங்கள். அப்போதிய ஆளும் கிரகத்துடன் ஒத்துப் பாருங்கள். அந்த தசா, புக்திகள் ஆளும் கிரகத்துடன் ஒத்துப் போகுமேயானால் அவருக்குக் கல்லூரிப் படிப்பு உண்டு.

எனக்கு லாட்டரியில் பரிசு கிடைக்குமா ?

லாட்டரியில் பரிசு என்பது எந்த சிரமும் இல்லாது கிடைக்கும் பணமாகும். அவ்வாறு சிரமமின்றி பரிசு கிடைத்தலைக் குறிப்பது 5-ம் வீடாகும். 5-ம் வீடு 2-ம் வீட்டுடனோ அல்லது 11-ம் வீட்டுடனோ சம்மந்தப் பட்டால் அத்தகைய பரிசு கிடைக்கும். 2-ம் வீடு பணவரவையும், 11-ம் வீடு லாபத்தையும் குறிக்கிறது அல்லவா? 5-ம் வீட்டதிபர் 2-லோ அல்லது 11-லோ இருக்குமேயாகில் அத்தகைய பணவரவு அந்த ஜாதகருக்கும் கிடைக்கும். இந்த மூன்று வீடுகளைக் குறிக்கின்ற தசா, புக்திக் காலங்களில் கிடைக்கும். ஆளும் கிரகத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துப் பலன் சொல்வது சரியாக இருக்கும்.

பிரிந்த தம்பதியினர் கூடுவார்களா ?

தம்பதியருக்குள் கருத்து வேற்றுமை ஏற்படுவது சகஜம்தான். சில தம்பதியினர் மன வேற்றுமையுடன் தங்கள் காலத்தைத் தள்ளுவார்கள். சிலர் அப்படியல்ல; கருத்து வேற்றுமை காரணமாகப் பிரிந்தே போய்விடுவர். அத்தகைய தம்பதியினர் திரும்பவும் சேர்வார்களா ? என்பதுதான் நமது கேள்வி. 2,5,7,11-ம் வீட்டைக் குறிக்கின்ற தசா, புக்தி, அந்தரத்தில் அவர்கள் ஒன்று சேர்வார்கள். 2-ம் இடம் குடும்பஸ்தானம் அல்லவா? 5-ம் இடம் என்பது 7-ம் வீட்டிற்குப் 11-ம் இடமல்லவா? 7-ம் இடம் களத்திர ஸ்தானம் ஆகும். ஆகவே அதையும் சேர்த்துக் கொண்டுள்ளோம். 11-ம் ஜாதகரின் லாபஸ்தானம் அல்லவா ? ஆகவே அதையும் கணக்கில் எடுத்துக் கொண்டுள்ளோம். ஆகவே இந்த நான்கு வீடுகளையும் குறிக்கின்ற தசா,புக்திக் காலங்களில் பிரிந்த தம்பதியினர் கூடுவர்.

நோய் எப்போது தீரும் ?

6-ம் இடம் ஒருவருக்கு வரும் நோயைக் குறிக்கிறது. 6-ம் வீட்டிற்குப் 12-ம் வீடான 5-ம் வீடு நோய் குணமாகுதலைக் குறிக்கிறது. 11-ம் வீடு வழக்கம் போல் ஜாதகரின் நலனைக் குறிக்கிறது ஆக 5,11-ம் வீடுகளைக் குறிக்கின்ற தசா, புக்திக் காலங்களில் அவருக்கு குணமாகும். இங்கு முதலில் நோயி.ன் தன்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். சாதரணமான, காய்ச்சலாக இருப்பின் சில நாட்களில் குணம் தெரியும். காமாலை, டைபாய்டு போன்றவைகள் சில வாரங்கள் ஆகலாம். சில நோய்கள் வந்தால் சில மாதங்கள் ஆகலாம். ஆக நோயின் தன்மைக்கு ஏற்ப ஆளும் கிரகத்தின் உதவியுடன் எப்போது குணமாகும் என்று கூற வேண்டும். இதெல்லாம் படிப்பதற்கு மிக எளியதாக இருக்கும். ஆனால், அனுபவரீதியாகப் பார்க்கும் போது அதில் உள்ள சிரமங்கள் தெரியும்.

இருக்கும். ஆனால் அனுபவரீதி யாகப் பார்க்கும் போது அதில் உள்ள சிரமங்கள் தெரியும். அனுபவமதான் எல்லாவற்றையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

வீடு, வாசல் எப்போது கட்ட முடியும் ?

முதலில் வீடு, வாசல் போன்ற ஸ்திர சொத்துக்கள் வாங்கும் யோகம் இருக்கிறதா? எனப் பார்க்க வேண்டும். 4-ம் வீட்டுடன் செவ்வாய் சம்மந்தப்பட்டால் வீடு கட்டும் யோகம் இருக்கிறதென்றும், சுக்கிரன் சம்மந்தப்பட்டால் வாகன யோகம் இருக்கிறதென்றும் கொள்ள வேண்டும். அதற்குப்பிறகு எப்போது வாங்க முடியும் எனப் பார்ப்போம். 4-ம் வீடு ஸ்திர சொத்துக்க ளையும் 12-ம் வீடு Investment என்கிற முதலீட்டையும் குறிப்பதால் இந்த வீடுகளுடன் 11-ம் வீட்டையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த வீடுகளிக் குறிக்கின்ற தசா, புக்திக் காலங்களில் ஒருவர் ஸ்த ிரசொத்துக்கள் வாங்க முடியும்.

வாகனமும் அவ்வாறே. ஆனால் சிலர் நான் இரு சக்கர வாகனம் வாங்குவேனா ?

அல்லது நாலு சக்கர வாகனம் வாங்வேனா? எனக் கேட்ப்பார்கள். அதற்கும் நாம் பதில் சொல்ல வேண்டுமல்லவா? வாகன யோகம் இருந்து சுக்கிரன் நாலு கால் ராசிகளான மேஷம், ரிஷபம், ச ிம்மம், மகரம், தனுசின் பிற்பாதி ஆகியவைகளுடன் சம்மந்தப் பட்டால் அவர் நாலுகால் வாகனமான கார் வாங்குவார் எனக் கொள்ளலாம். அதை விடுத்து மிதுனம், மீனம், தனுசின் முற்பாதியுடன் சம்மந்தப் படால் இரு சக்கர வாகனம் வாங்குவர் எனக் கொள்ளலாம். இந்த ராசிகள் இரட்டை ராச ிகள் அல்லவா! மிதுனம் ஒரு ஆண், பெண்ணை சின்னமாகக் கொண்டிருக்கிறது அல்லவா? மீனம் இரட்டை மீன்களை சின்னமாகவும், தனுசு வில்,அம்பை சின்னமாகவும் கொண்டுள்ள தால் இவை இரட்டை ராசிகளென்று அழைக்கப்படுகின்றன.

சில முக்கியமான கேள்விகளுக்கு எந்தெந்த வீட்டை வைத்துப் பார்க்க வேண்டுமென எழுத ியுள்ளோம். இதை அடிப்படியாக வைத்துப் பலன் சொல்லி வாருங்கள். நீங்கள் புரியும் தவறுகள் உங்களுக்கே தெரிய வரும். தவறைத் திருத்திக் கொண்டால் ஒரு நம்பகரமான ஜோதிராகப் பரிமள ிக்க முடியும்.

நமது பாரமபரிய ஜோதிடத்தில் கிரகங்களின் பலத்தைக் கணிக்க “ஷட்பலம்” என்ற முறையைக் கையாளுகின்றனர். இது மிகவும் கடினமானதும், துல்லியமான கணிதத்தைக் கொண்டதுமாகும். இது நடைமுறைக்குக் சிரம்மானதுமென்றும் கூறலாம். இதைப் பற்றி நாம் அதிகம் எழுதப் போவது இல்லை. இருப்பினும் இது என்னவென்று தெரிந்து கொள்வோம். ஷட்பலமானது கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. ஸ்தான பலம் 2. கால பலம் 3. அயன பலம், கிரக யுத்த பலம் 4. நைசிர்கிக பலம் 5. திக்குப் பலம் 6. சேஷ்டாபலம்.

இந்த ஸ்தான பலம் என்பது பலவிதமான பலங்கள் உள்ளடங்கியது. அதேபோல் ஒவ்வொரு பலமும் ஒவ்வொரு விதமான பலங்களை உள்ளடக்கியது ஆகும். அவற்றைக் கீழே பார்ப்போம்.

I.ஸ்தான பலம்:-

அ. உச்ச பலம்.
ஆ கேந்திராதி பலம்
இ. திரேஷ்காண பலம்.
ஈ. யுக்மா, யுக்ம பலம்.
உ. சப்த வர்க்கஜ பலம்

இந்த சப்த வர்கஜ பலம் மேலும்பலவித பலங்களை உள்ளடக்கியது.

1. இராசி வர்க்க பலம்
2. நவாம்சை வர்க்க பலம்

3. திரேஷ்காண வர்க்க பலம்
4. துவாதசாம்ச வர்க்க பலம்
5. சப்தாம்ச வர்க்க பலம்
6. ஒரா வர்க்க பலம்
7. திரிசாம்ச வர்க்க பலம்

II கால பலம்:-

இது பல பலங்களை உள்ளடக்கியது:-

1. நத உன்னத பலம்
2. தின ராத்திரி திரிபாக பலன்
3. தின பலம்
4. மாத பலம்
5. வருஷபலம்
6. ஒரா பலம்
7. பட்ச பலம்

III அயன பலம், கிரக யுத்த பலம்

IV நைசர்கிக பலம்

V திக் பலம்

VI சேஷ்டா பலம்

இவ்வளவு பலம்களையும் கணித்துப் பலன் சொல்ல வேண்டுமென்று சொல்கிறது நமது ஜோதிட சாஸ்த்திரம்.

அதேபோல் ராசி, நவாம்ச சக்கிரத்தைத் தவிர பின்வரும் சக்கிரங்களையும் கணிக்க வேண்டும்.

1. பாவம்
2. திரேக்காணம்
3. துவாதசாமச சக்கிரம்
4. ஓரை
5. திரிசாமசம்
6. சப்தாம்சம்

இவ்வளவு சக்கரங்களையும் கணித்துப் பலன் சொல்ல வேண்டும். இவைகளெல்லாம் அனுபவரீத ரியாகப் பார்க்கும்போது கடினமான செயல். மற்றவைகளை அடுத்த பாடத்தில் பார்ப்போம்.

RangaRakes tamilnavarasam.com

பொதுவாக ஜோதிடர்கள் உதவி மிகத் தேவைப்படுவது திருமணத்தின்போது தான். திருமணம் எப்போது ஆகும் என்பது முதல் கேள்வி. அடுத்தது ஜாதகப் பொருத்தம் உள்ளதா ? என்பது இரண்டாவது கேள்வி.ஜாதகப் பொருத்தத்தைப் பற்றி "விவாகப் பொருத்தம் - ஒரு விவாதம்" என்ற தலைப்பில் நாம் எழுதி உள்ளோம்.

அதை வாசகர்கள் படித்து இருப்பார்கள் என நம்புகிறோம். நாம் எழுதியது தசப்பொருத்தம் என்னும் பத்துப் பொருத்தங்களைப் பற்றித்தான். இந்தப்பத்துப் பொருத்தங்களைப் பற்றி நமது ஜோதிட நூலகள் ( ஜாதக சந்திரிகை, காலப் பிரகாசிகை தேவ கேரளம் போன்றவை) என்ன கூறி இருக்கின்றன என்பதை நாம் விரிவாக எழுதி இருந்தோம். திருமணத்திற்கு இந்த வெறும் தசப் பொருத்தங்கள், செவ்வாய் தோஷம், தசா சந்தி, தோஷ சாம்யம் ஆகியவற்றை மட்டும் பார்த்தால் போதுமா? என்றால் நாம் போதாது என்றுதான் கூறுவோம். இந்த 10-ப் பொருத்தங்களை மட்டும் பார்த்துச் செய்யும் விவாகங்கள் மகிழ்ச்சியில் முடிவதில்லை. அப்போது என்னதான் செய்ய வேண்டும்? இன்னும் என்ன பார்க்க வேண்டும்? என நீங்கள் கேட்க்கலாம்.

முதலில் இருவர் ஜாதகத்தையும் தனித்தனியாக லக்னம், சந்திரன், முதலியன கெடாமல் இருக்க ின்றனவா? எனப் பார்க்க வேண்டும். இருவருக்கும் ஆயுள் பாவம் நன்றாக உள்ளதா? எனப் பார்க்க வேண்டும். அதைப் போன்று புத்திரபாவம் நன்றாக உள்ளதா எனவும், நோய்நொடியின்றி வாழ்வார்களா ? எனவும் பார்க்க வேண்டும். பின்பு தொழில், வரும் தசைகள் ஆகியவற்றைப் பார்க்க வேண்டும். இதையெல்லாம் பார்க்காமல் வெறும் 10-ப் பொருத்தங்களை மட்டும் பார்த்துச் செய்யும் திருமணங்கள் நாம் எதிர்பார்ப்பதுபோல் இருப்பதில்லை. நாம் கீழே ஓர் உதாரண ஜாதகத்தைக் கொடுத்துள்ளோம்.

இது ஒரு பெண்ணின் ஜாதகம்:-

ராசி

துலா லக்கினம்
மேஷம் : சூரியன், கேது
துலாம் : குரு, ராகு
தனுசு : சந்திரன், சனி
கும்பம் : செவ்வாய்
மீனம் : புதன், சுக்கிரன்

நவாம்சம்
தனுசு லக்கினம்

மேஷம் : சனி
மிதுனம் : கேது
சிம்மம் : சந்திரன்
கன்னி : சுக்கிரன்
துலாம் : சூரியன், குரு
தனுசு : ராகு
கும்பம் : செவ்வாய்
மீனம் : புதன்

ஜனன கால இருப்பு தசை:- சுக்கிரன் - வருஷம் 15 மாதம் 6 நாள் 22.

ஜனம நடசத்திரம்:- பூராடம.

அவள் கணவனின் ஜாதகம்:

ராசி

சிம்ம லக்கினம்
மிதுனம் : கேது
கடகம் : குரு
கன்னி : சூரியன், சந்திரன்
துலாம் : புதன், சனி, சுக்கிரன்
தனுசு : செவ்வாய், ராகு

ஜென்ம நட்சத்திரம்: உத்திரம் 4 ம்-பாதம்

இவர்களுக்கு நாம் தசப் பொருத்தத்தைப் பார்ப்போம்.

1. தினப் பொருத்தம்:- தினப் பொருத்தம் இருந்தால் அவர்கள் நோய், நொடியின்றி நீண்ட காலம் வாழ்வார்கள். இதில் தினப் பொருத்தம் இருக்கிறதா என்றால் நிச்சயமாக இருக்கிறது. ஆனால் நோய் நொடியின்றி இருக்கின்றார்களா என்றால் அதுதான் இல்லை. அந்தப் பெண் பலவித நோய்களால் பீடிக்கப் பட்டு எப்பொழுதும் தொல்லைதான்.திருமணமாகி சுமார் 25 ஆண்டுகள் ஓடி விட்டன. இந்தப் பெண் பல சமயங்களில் மன நோய்க்கும் ஆளாகிறார். இதை ஜாதக ரீதியாகப் பார்ப்போமேயானால் லக்கினாதிபதியும், 6-ம் வீட்டுக்காரனான குருவும் பரிவர்த்தனை பெற்றிருப்பதைக் காணலாம். உடலாகிய லக்கினம் 6-ம் வீட்டுக்காரனாகைய குருவால் பாதிக்கப் பட்டு இருக்கிறார். மனமாகிய சந்திரன், சனியின் சேர்க்கையால் பாதிக்கப் பட்டுள்ளார். சந்திரனும் 6-ம் வீட்டிலுள்ள சுக்கிரனின் சாரத்தில் உள்ளார். ஆகவே இந்தப் பெண்ணிற்கு உடல், உள்ளம் சம்மந்தமான நோய் வருகிறது. தினப்பொருத்தம் மட்டும் பார்த்தால் சரியாக வரவில்லை பார்த்தீர்களா !

2. கணப் பொருத்தம்:- இது இருந்தால் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை அமையும் எனக்கூறப் படுகிறது. இவர்களுக்குக் கணப் பொருத்தம் உள்ளது. ஆனால் மகிழ்ச்சிகரமான வாழ்க்கை அமைந்துள்ளதா என்றால் அதுதான் இல்லை. தினசரி வாழ்க்கையே போராட்டம்தான். ஆகவே கணப் பொருத்தம் அவர்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையை அளிக்கவில்லை.

3. மாகேந்திரப் பொருத்தம்:- இந்தப் பொருத்தம் இருந்தால் தம்பதிகளுக்கு புத்திர பாக்கியம் இருக்கும் எனக் கூறப்படுகிறது. ஆனால் இந்த தம்பதியருக்கு மாகேந்திரப் பொருத்தம் இல்லை; ஆகவே சந்தான பாக்கியம் இல்லையோ என்று எண்ண வேண்டாம். இப்பொருத்தம் இல்லா விட்டாலும் இவர்களுக்குக் குழந்தை பாக்கியம் உள்ளது.

இவ்வாறாகப் பொருத்தத்திற்கும் இவர்கள் வாழ்க்கைக்கும் சம்மந்தமில்லாது இருக்கிறது பாருங்கள். சரி! இவர்கள் ஜாதகத்தைச் சற்றுப் பார்ப்போம்.

பெண்ணுக்கு லக்கினத்தில் 6-ம் வீட்டிற்குடைய குரு இருக்கிறார். அவர் 7-ம் பார்வையாக களத்திர ஸ்தானத்தைப் பார்க்கிறார் அல்லவா? 6-ம் வீடு 7-ம் வீட்டிற்கு எதிர்மறையான பலனைக் கொடுக்கும் அல்லவா? ஆக இருவருக்கும் எப்போதும் சண்டை. மனக் கசப்பு. விவாக ரத்து ஒன்றுதான் ஆகவில்லை. பல தடவை அவர் நான் விவாக ரத்துச் செய்து விடுகிறேன் என்று கூறிவிட்டார். பெண்ணுக்கு லக்கினாதிபதியும், 6-ம் வீட்டின் அதிபதியும் பரிவர்த்தனை. 6-ம் வீடும் லக்கினமும் சம்மந்தப் பட்டால் உடல் வியாதிதான் என்று நாம் எழுதி வந்திருக்கிறோம். அதன்படி இந்தப் பெண் உடல்நலம், மன நலம் கெட்டு வாழ்கிறார். பொதுவாக லக்கினத்தில் ராகு இருக்கும் பெண்கள் அடங்கி நடப்பது இல்லை. இப் பெண்ணும் இதற்கு விதி விலக்கு இல்லை. ஜாதகத்தில் இவ்வளவு குறைபாடுகள் இருக்கும்போது வெறும் தசப் பொருத்தம் மட்டும் பார்த்து இணைப்பது சரியல்லவே !

நாம் தசப்பொருத்தங்களைப் பற்றிக் குறை கூறுவதாக யாரும் என்ன வேண்டாம். அடிப்படை ஜாதகங்களிலேயே குறைபாடுகள் இருக்குமேயானால் அந்த ஜாதகங்களைப் 10-ப் பொருத்தங்களை

RangaRakes tamilnavarasam.com

மட்டும் பார்த்து இணைப்பதில் பொருள் எதுவும் இல்லை என்பதுதான் நமது வாதம்.

RandaRakes tamilnavarasam.com

## சூரிய குடும்பம்

சூரிய குடும்பத்தைப் போல பல சூரிய குடும்பங்கள் உள்ளன. நாம் நமது சூரிய குடும்பத்தைப் பற்றிப் பார்ப்போம். சூரியனை மையமாக வைத்து எல்ல கிரகங்களும் சுற்றி வருகின்றன.




இந்த கிரகங்களில் சிலவற்றிற்கு உப கிரகங்கள் உண்டு. அவையாவன :

1. பூமி - சந்திரன்
2. செவ்வாய் - 2 உப கிரகங்கள்
3. குரு - 16 உப கிரகங்கள்
4. சனி - 20-க்கும் மேற்பட்டவை
5. யுரேனஸ் - 15 கிரகங்கள்
6. நெப்டியூன் - 8 கிரகங்கள்
7. புளுட்டோ - 1 கிரகம்

சந்திரனைத் தவிர மற்ற உப கிரகங்களையெல்லாம் நாம் படத்தில் காட்டவில்லை. சூரியன் தன் புவியீர்ப்பு சக்தியினால் எல்லா கிரகங்களையும், உப கிரகங்களையும் தன்னைச் சுற்றி வரும்படி செய்கிறது.

## கிரக தூரங்கள்:

சூரியன் நம் பூமியிலிருந்து சுமார் 15,00,00,000 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. இந்த தூரத்தைத்தான் ஒரு Astronomical Unit (AU) என்று அழைக்கிறோம். இதேபோல் புதன், சூரியனில் இருந்து 0.39 AU தூரத்திலும், சுக்கிரன் 0.72 AU தூரத்திலும், செவ்வாய் 1.52 AU தூரத்திலும், குரு 5.2 AU தூரத்திலும், சனி 9.54 AU தூரத்திலும் இருக்கின்றார்கள். நாம் நமது வாசகர்களுக்கு ஒரு சிறிய சந்தேகத்தைத் தீர்க்க இருக்கிறோம். மேலே காட்டியுள்ள படத்தில் சூரியனை மையமாக வைத்து எல்லா கிரகங்களும் சுற்றி வருகின்றன என எழுதி இருக்கின்றோம். ஆனால் நமது பாடங்களில் சூரியன், சித்திரை மாதம் மேஷத்திலும், வைகாசிமாதம் ரிஷபத்திலும், சஞ்சாரம் செய்வதாக எழுதியுள்ளோம். அதாவது ஆண்டு முழுவதும் 12 ராசிகளிலும் சூரியன் சஞ்சாரம் செய்வதாக எழுதி இருக்கின்றோமே! சூரியன் நிலையாக ஓரிடத்தில் இருக்கிறதா? அல்லது அதுவும் மற்ற கிரகங்களைப்போல் சஞ்சாரம் செய்கின்றதா? இதுதான் இப்போதைய சந்தேகம்.

நாம் பூமியில் இருக்கின்றோம். பூமி சுற்றுவது நமக்குத் தெரியவில்லை. இங்கிருந்து பார்க்கும்போது சூரியனும், மற்ற கிரகங்களும் நம்மைச் சுற்றுவதுபோல் தெரிகின்றன. இது ஒரு தோற்றம்தான். இந்தத் தோற்றத்தை நாம் Geo-Centric என்று அழைக்கிறோம். இதன் அடிப்படியில்தான் நமது பஞ்சாங்கங்கள் தயாரிக்கப் படுகின்றன. இதனால்தான் சூரியனும், மற்ற கிரகங்களும் நம்மைச் சுற்றிவதுபோல் பஞ்சாங்கங்களில் கணிக்கப் படுகின்றன. மேலை நாட்டவர்கள் தயாரிக்கும் Ephemeris களிலும் இந்த Geo-Centric முறைதான் பின்பற்றப் படுகிறது.

சூரியனை மையமாக வைத்து மற்ற கிரகங்கள் சுற்றி வருகின்றன அல்லவா? இந்த நிலைக்கு Helio-Centric என்று பெயர். கிரேக்க மொழியில் “Helio” என்றால் சூரியன் எனப் பொருள்.




**ராகு - கேதுக்கள்:**

இவை சாயாக் கிரகங்கள் அல்லது நிழல் கிரகங்கள். இவைகளுக்கு உருவம் கிடையாது. பூமியைச் சூரியன் சுற்றுவதாகத் தெரிகின்றது அல்லவா? அந்த நீள் வட்டப் பாதைக்கு ஆங்கிலத்தில் Ecliptic எனப் பெயர். அதன் தமிழ்ப் பெயர் நமக்குத் தெரியவில்லை. ஆங்கிலத்திலேயே அழைப்போம். சந்திரன் பூமியைச் சுற்றுகின்றது அல்லவா? இவ்வாறு சுற்றி வரும்போது இந்த Ecliptic என்று கூறப்படுகின்ற சூரியப் பாதையை இரண்டு இடங்களில் சந்திக்கிறார். சந்திக்கும் இந்த இரண்டு புள்ளிகள்தான் ராகு, கேதுக்கள். இதை நாம் படத்தில் போட்டுக் காட்டியுள்ளோம். இப்படம் ராகு, கேதுக்களைப் பற்றிய எண்ணங்களைத் தெளிவாக்கும் என எண்ணுகிறோம்.

சந்திரன் தன் பாதையில் முன்னேற முன்னேற ராகு, கேதுக்கள் பின் நோக்கிச் செல்கின்றன. ராகு, கேதுக்களுக்கு இடையில் உள்ள தூரம் எப்போதுமே 180 பாகைகள்.

இவை ஒரு ராசியைக் கடக்க சுமார் ஒண்ணறை ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இவைகளின் வேகம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை, வேறுபடுகின்றன. முதலில் இவைகளின் நிலையைத் தோராயமாகக் கணிக்கிறார்கள். இந்த நிலைக்கு ஆங்கிலத்தில் “Mean Position” என்று பெயர். இவ்வாறு அவைகளின் நிலையை ஓரளவு கணித்தபின் அவைகளைத் திருத்தம் செய்கிறார்கள். இவ்வாறு திருத்தப் பட்டதற்கு “True Position” என்று பெயர். இந்த “True Position” தான் ஜோதிடத்திற்குத் தேவை. அந்த நிலையைத் தான் ஜோதிடர்கள் உபயோகப் படுத்த வேண்டும்.

சென்ற பாடத்தில் திருமணப் பொருத்தம் பார்க்கும்போது ஜாதகத்திலுள்ள நிறை, குறை களைப் பார்ப்பது முக்கியமென்றும், வெறும் தசப் பொருத்தம் மட்டும் பார்த்துத் திருமணம் செய்வது பயன ில்லை எனவும் எழுதி இருந்தோம். உதாரண ஜாதகம் கொடுத்து நமது அனுபவங்களை நாம் எழுதி இருந்தோம். ஜாதகத்தில் மற்றொரு முக்கியமான அம்சம் "புனர்ப்பூ" என்னும் தோஷம்தான். நாம் இத்தோஷத்தைப் பற்றி ஏற்கனவே நமது பாடங்களில் எழுதி இருக்கிறோம். இருப்பினும் இப்போது அதைப் பற்றி விரிவாக எழுதுவோம்.

ஜாதகத்தில், சனியும் சந்திரனும் சேர்ந்து இருந்தாலோ, அல்லது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டாலோ, அல்லது சனியின் சாரங்களான பூசம், அனுஷம், உத்திரட் டாதி ஆகிய நட்சத்த ிரங்களில் சந்திரன் இருந்து, சந்திரனின் நட்சத்திரங்களான ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் ஆக ியவற்றில் சனியும் இருந்தால் அதற்குப் "புனர்ப்பூ" எனப் பெயர். இந்த தோஷத்திற்கும், திருமணத்த ிற்கும் மிகுந்த சம்மந்தம் உள்ளது. இது திருமணத்தை மிகுந்த தாமதப் படுத்தும். நிச்சயம் ஆனால் கூட திருமணம் நின்றுபோகும் அளவிற்கு தோஷத்தைக் கொடுக்கும்.

சந்திரன் சுமார் 27 நாட்களுக்கு ஒருமுறை 12 ராசிகளையும் சுற்றி வருகிறார். அந்த 27 நாட்களில் சனி இருக்கும் ராசியில் சுமார் 2ட நாட்கள் சஞ்சாரம் செய்வார். அந்த 2ட நாட்களில் இந்த தோஷம் ஏற்படுகிறது. அதைப் போல் சனிக்கு 7-ம் ராசியில் சந்திரன் சஞ்சாரம் செய்யும் போது அந்த 2ட நாட்களிலும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வார்கள். அப்போதும் இந்த தோஷம் ஏற்படுகிறது. ஆக ஒரு மாதத்தில் 4ண நாட்கள் நிச்சயமாக இந்த தோஷம் ஏற்படுகிறது. இந்த 4ண நாட்களிலும் பிறந்தவர்களுக்கு இந்த தோஷம் காரணமாக பாதிப்பு ஏற்படுமா? என்றால் நிச்சயம் பாத ிப்பு உண்டாகும். அவர்கள் இந்த தோஷத்தின் பாதிப்பை அனுபவித்தே ஆக வேண்டும். உதாரணத்திற்கு ஒரு ஜாதகத்தைப் பார்ப்போம். இவர் ஒரு மருத்துவர். நம் நாட்டில் கூட இல்லை; வெளி நாட்டில் மருத்துவர். மிகுந்த வசதியுள்ள குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவர். அவருக்கு சில வருடங்களாகப் பெண்பார்த்து வந்தனர். சரியாக அமையவில்லை. சில மாதங்களுக்கு முன்பு பெண் பார்த்து ஒரு பெரிய ஹோட்டலில் நிச்சயமும் ஆயிற்று. நிச்சயமும் வெகு விமர்சையாக நடந்தேற ியது. ஆனால் அது திருமணத்தில் முடியவில்லை. ஏதோ காரணங்களால் திருமணம் நடக்கவில்லை; நின்று போயிற்று. அநத ஜாதகத்தை நாம் இப்போது பார்ப்போம். இதைப் போல் பலருக்குப் பலவ ிதமான நிகழ்வுகள் நடந்துள்ளன. ஆகவே ஜாதகத்தைப் பார்த்தவுடன் அதில் புனர்ப்பூ இருக்குமேயானால் திருமணத்தில் பிரச்சனை உண்டு என தீர்மானித்து விடலாம். இதற்குப் பரிகாரம் உண்டா என உடனே கேட்பார்கள். ஏனெனில் பிரச்சனை இருந்தால் அதில் பரிகாரத்தையும் எத ிர்பார்ப்பது மனிதர்களின் இயல்புதானே! சனிக்கும், சந்திரனுக்கும் பரிகாரம் செய்து பார்க்கலாம். சன ிக்கும், சந்திரனுக்கும் என்னென்ன பரிகாரங்கள் உண்டோ அதையெல்லாம் செய்து பார்க்கலாம். நடப்பது நடக்கட்டும்.

| | | | |
|---|---|---|---|
| | குரு,ராகு | புதன் | சூரியன்,சுக்கிரன் |
| | | | சந்திரன்,சனி |
| | ராசி | | செவ்வாய் |

| | | | |
|---|---|---|---|
| | | ராகு | லக்கினம் |

| | | | |
|---|---|---|---|
| சுக்கிரன் | செவ்வாய் | | |
| சூரியன்,ராகு | | | |
| லக்கினம் | அம்சம் | | சந்திரன்,புதன்,கேது |
| குரு | | | சனி |

இந்த ஜாதகத்தில் சனியும், சந்திரனும் சேர்ந்து இருக்கிறது. இதில் இன்னும் ஒன்றை கவனிக்க வேண்டும். ஒரு ராசிக்கு முப்பது பாகைகள் அல்லவா? இந்த முப்பது பாகையில் சனிக்கும், சந்திரனுக்கும் உள்ள தூரம் என்ன? மேற்படி ஜாதகத்தில் சந்திரன் பூசம் முதல் பாதத்தில் இருக்கிறார். சனி பூசம் 2-ம் பாதத்தில் இருக்கிறார். ஆக இருவரும் மிக நெருக்கமாகத்தான் உள்ளனர். நெருக்கம் அதிகமாக இருக்க இருக்க இந்த தோஷத்தின் தாக்கம் அதிகமாக இருக்கும். இதே ஜாதகத்தில் சனி ஆயில்யம் 4-ம் பாதத்தில் இருக்கிறார் எனக் கொள்ளுங்கள். இருவருக்கும் உள்ள தூரம் அதிகமாக இருக்கிறது. அப்போது இந்த தோஷத்தின் தாக்கம் இவ்வளவு அதிகமாக இருக்காது. பொதுவாக இருகிரகங்களுக்கு இடையில் உள்ள தூரம் 13 பாகைகளுக்குள் இருந்தால் Conjunction என்று சொல்லப்படுகிற பார்வையின் தாக்கம் அதிகமாக இருக்கும்.

மற்றொரு ஜாதகத்தைப் பார்ப்போம். இது ஒரு பெண்ணின் ஜாதகம். இவர் படித்து மத்திய அரசில் வேலை பார்த்தும் திருமணம் கைகூடி வரவில்லை. பல ஆண்டுகள் ஜாதகங்கள் பார்த்த பின்னர் 29-ம் வயதில்தான் திருமணம் நடந்தது. அதாவது திருமணம் ஆனால் போதும் என்ற விரக்தியின் எல்லைக்குத் தள்ளப்பட்டபின்தான் இவருக்குத் திருமணம் நடந்தது. இவருக்கு லக்கினத்தில் சனி, சந்திரன், ராகு. இவர் ஜாதகத்தில் லக்கினமும் சந்திரனும், சனி, ராகு சேர்க்கையால் கெட்டு விட்டனர். 7-ம் வீட்டிற்கு சனியின் பார்வை வேறு. இக்காரணங்களால் இவர் திருமணம் மிக தள்ளிப்போயிற்று.

| | | | |
|---|---|---|---|
| | | | லக்கினம்,சனி,ராகு,சந்திரன் |
| | ராசி | | |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| புதன்,சுக்கிரன்,கேது | சூரியன்,செவ்வாய் | | குரு |

| | | | |
|---|---|---|---|
| | | | லக்கினம்,ராகு,புதன் |
| சனி | | | |
| குரு | அம்சம் | | |
| கேது,சந்திரன் | சுக்கிரன்,சூரியன் | செவ்வாய் | |

மற்றொரு ஜாதகத்தைப் பார்ப்போம். இதுவும் ஒரு பெண்ணின் ஜாதகம்தான்.இதிலும் புனர்ப்பூ உள்ளது. ஆனால் சனி, சந்திரனுடன் குருவும் சேர்ந்துள்ளார். இந்த குருவின் சேர்க்கையால் இந்த தோஷத்தின் பாதிப்பு மிகவும் குறைந்து விட்டது. இந்தப் பெண்ணிற்கு 18-ம் வயதிலேயே திருமணம் நடந்து விட்டது. ஆக சனி, சந்திரன் சேர்க்கையுடன் சுபகிரகங்களின் சேர்க்கையும் இருக்குமேயாகில் தோஷத்தின் பாதிப்புக் குறையும் என்பதற்கு இந்த ஜாதகம் ஓர் உதாரணம்.

| | | | |
|---|---|---|---|
| செவ்வாய் | சுக்கிரன்,புதன் | சூரியன் | |
| கேது | | | |
| லக்கினம் | ராசி | | ராகு |
| சந்திரன்,சனி,குரு | | | |

| | | | |
|---|---|---|---|
| புதன் | லக்கினம் | | கேது |

RangaRakes tamilnavarasam.com

| | | | |
|---|---|---|---|
| | | | குரு |
| சூரியன் | அம்சம் | | |
| ராகு | | | சந்திரன்,செவ்வாய்,சனி,சுக்கிரன் |

மேற்கண்ட ஜாதகத்தில் முக்கியமான அம்சம் என்னவென்றால் சனியும், சந்திரனும், Rapt Conjunction - என்று சொல்லக் கூடிய நெருக்கத்தில் உள்ளனர். இருப்பினும் திருமணம் தாமதமாகவில்லை. குருவின் சேர்க்கை எல்லாவற்றையும் சரி செய்து விட்டது.

இதுவரையில் நாம் எப்படி ஜாதகம் போடுவது, எப்படி பலன் சொல்வது, என்று கடந்த 49 பாடங்கள ில் பார்த்து வந்தோம். இந்த 49 பாடங்களுடன் நமது ஜோதிடப் பாடங்கள் ஒரு முடிவுக்கு வருக ின்றன. இதை முழுவதும் படித்தவர்களுக்கு நிச்சயமாக ஜோதிடத்தைப் பற்றி ஓரளவிற்குத் தெரிந்து இருக்கும். இதை மட்டும் படித்தால் போதுமென்று நாம் எப்போதுமே கூறியது இல்லை. இது உங்களுக்கு அடிப்படை உண்மைகளைக் கற்றுக் கொடுத்து இருக்கும். இதிலிருந்து இன்னும் புத்தகங்களைப் படித்து ஜோதிட அறிவை வளமாக்கிக் கொள்ளுங்கள். இது மிகவும் முக்கியம். கீழ் வரும் புத்தகங்களை நீங்கள் வாங்கிப் படியுங்கள்.

1. Dr BV ராமன் எழுதியவை:

(அ) How to Judge a Horoscope (Volume I & II)
(ஆ) Three hundred Important Combinations
(இ) Notable Horoscopes
(ஈ) Garaha Bava Balas

இவைகளில் நம் நாட்டு ஜோதிட முறைகளைப் பற்றி விரிவாக எழுதியுள்ளார். இதைத் தவிர பல நூல்களை அவர் எழுதியுள்ளார். நாம் முக்கியமான சில நூல்களை மட்டும் குறிப்பிட்டுள்ளோம்.

2. திரு. K.S.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுதியுள்ள நூல்கள் அனைத்தும் மிகவும் பயனுள்ளவைகள். மிகவும் கருத்தாழம் மிக்கவை.

3. இதைத் தவிர நமது முன்னோர்கள் எழுதியுள்ள நூல்களான

(அ) பலதீபிகை
(ஆ) பிருஹத் ஜாதகம்
(இ) உத்தரகாலாம்ருதம்
(ஈ) காலவிதானம்
(உ) காலப்பிரகாசிகை

இவைகளெல்லாம் மிக உபயோகமுள்ள நூல்கள். இவைகளையெல்லாம் படித்தால் நீங்கள் நிச்சயமாக நல்ல நிலைக்கு வருவீர்கள் எனக் கூறி இப்பாடப் பகுதியை முடிக்கிறோம்.

இனி ஜோதிடர்களுக்குத் தேவை, வான சாஸ்திரத்தைப் பற்றிய உண்மைகள். ஜோதிடம் என்பதே வான சாஸ்த்திரத்தை அடிப்படையாகக் கொண்டதுதானே. ஓரளவிற்கு வான சாஸ்த்திரத்தைப் பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியம். ஆகவே நமக்குத் தெரிந்தவைகளை நமது வாசகர்களுக்காக எழுதப் போகின்றோம். நமது வேத சாஸ்திரத்தைத் தெரிந்து கொள்ள வேதாங்கம் உதவி செய்கிறது. வேதத்திற்கு ஆறு அங்கங்கள். இந்த ஆறு அங்கங்களில் ஒன்று ஜோதிட சாஸ்த்திரம். இது கண் போன்றது. இது கிரகங்களைப் பற்றிய உண்மைகளையும் அவை, மனிதர்களுக்கும், இந்த உலகத்த ிற்குக் கொடுக்கும் நன்மை,தீமைகளையும் பற்றி நமக்கு விளக்குகிறது. ஆகவே ஜோதிடர்களுக்கு அடிப்படை வானவியல் தெரிய வேண்டியது அவசியம். சிலருக்கு கிரகங்களுக்கும், நட்சத்த ிரங்களுக்கும் உள்ள வித்தியாசம் தெரியாது. நட்சத்திரங்கள் என்பவை மினுமினுக்கும். கிரகங்கள் அவ்வாறு மினுமினுக்காது. ஒரே சீராக ஒளிரும். இதுதான் வித்தியாசம்.

சூரிய மண்டலத்திலுள்ள கிரகங்கள் ஒன்பது என எல்லோருக்கும் தெரியும். அவற்றில் ஏழு க ிரகங்களைத் தான் நாம் பார்க்க முடியும். அவை சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்க ிரன், சனி. மற்ற கிரகங்களான ராகு, கேதுக் களை நாம் பார்க்க முடியாது. அவை நிழல் கிரகங்கள்;

RangaRakes tamilnavarasam.com

ரன், சனி. மற்ற கிரகங்களான ராகு, கேதுக் களை நாம பார்க்க முடியாது. அவை நிழல் கிரகங்கள்; சாயாக் கிரகங்கள். ராகு, கேதுக்கள் எப்படி ஏற்படுகின்றன என்று நாம் பின்பு பார்ப்போம். இந்த ஏழு கிரகங்களைப் பற்றித்தான் நமது பண்டைய ஜோதிட நூல்கள் கூறி இருக்கின்றன. அதற்குப்பின் வந்த நூல்கள்தான் ராகு, கேதுக்களைப் பற்றிக் கூறி இருக்கின்றன. சூரிய குடும்பத்தில் இந்த எழு க கிரகங்களைத் தவிர இன்னும் மூன்று கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன.

அவை:

1. 1781-ல் யுரேனஸ் (Uranus) என்ற கிரகம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
2. 1846-ல் நெப்டியூன் (Neptune) என்ற கிரகம் கண்டுபிடிக்கப் பட்டது.
3. 1930-ல் புளோட்டோ (Pluto) என்ற கிரகம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்த மூன்று கிரகங்களும் மேலை நாட்டு ஜோதிடத்தில் இடம் பெற்றுள்ளன. நமது இந்திய நாட்டு ஜோதிடத்தில் இடம் பெறவில்லை.

RangaRakes tamilnavarasam.com

## Celestial Sphere (ஆகாயக் கோளம்):

நாம் பகலில் ஆகாயத்தைப் பார்த்தால் எப்படி இருக்கிறது? ஒரு பாதிக் கோளத்தை பூமியின் மேல் கவிழ்த்து வைத்ததுபோல் இருக்கிறது. இரவில் பார்த்தால் இருட்டாக மற்றொரு கோளத்தைக் கவ ிழ்த்து வைத்ததுபோல் இருக்கிறது. இந்த அரைக் கோளத்திற்குள் சந்திரன்,மற்றும் கிரகங்கள், நட்சத்த ிரங்கள் ஆகியவை இருக்கின்றன. இந்த இரு அரைக் கோளத்தையும் சேர்த்தால் ஒரு முழு வட்டம், பூமிக்குமேல் இருப்பதுபோல் தெரிகிறது. இந்தக் கோளமானது ஒரு கற்பனைதான். உண்மையில் இல்லை. இந்தக் கற்பனைக் கோளத்திற்குள்தான், நாம் கிரகங்கள் சுற்றுவதையும், அவைகளின் வேகத்தையும் கணக்கிட வேண்டும். பகலில் சூரியன், பூமியைச் சுற்றுவது போலவும், இரவில் சந்த ிரன் மற்றும் பிற கிரகங்கள் சுற்றுவது போலவும்தோற்றமளிக்கின்றன. நாம் பூமியில் இருப்பதால், இங்கிருந்து அவை எப்படி, எவ்வாறு சுற்றுகின்றன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நமக்குமேல் தெரியும் இந்தக் கோளத்திற்கு Celestial Sphere - "ஆகாயக் கோளம்" எனப் பெயர். இந்தக் கோளத்திற்குள் பல நட்சத்திரங்கள் கூட்டம் கூட்டமாக உள்ளன. ஒவ்வொரு நட்சத்திரக் கூட்டத்திற்கும் ஒரு உருவ அமைப்பு உண்டு. இந்த நட்சத்திரக் கூட்டங்களுக்கு "Constellations" எனப் பெயர். ஒவ்வொரு நட்சத்திரக் கூட்டமும் ஒரு உருவ அமைப்பை உடையது எனக் கூறி இருந்தோம். பூமியிலிருந்து பார்க்கும்போது ஒரு உருவ அமைப்பைக் காட்டுகிறது. ஆனால் இந்த நட்சத்திரங்களெல்லாம் பூமியிலிருந்து சம தூரத்தில் இல்லை. ஒவ்வொன்றும் வெவ்வேறு தூரத்தில் இருக்கிறது. ஆனால் பூமியிலிருந்து பார்க்கும்போது எல்லாமே சமதூரத்தில் இருப்பது போன்ற தோற்றத்தை அளிக்கிறது. எல்லாமே தோற்றம்தான், உண்மையல்ல!

பூமி தன்னைத் தானே சுற்றுவது நமக்குத் தெரியாததால் இந்த ஆகாயக் கோளம் தினமும் ஒருமுறை நம்மைச் சுற்றுவதைப் போன்ற தோற்றத்தை நமக்கு அளிக்கிறது. இந்த ஆகாயக் கோளத்தினுடைய "ஆகாய பூமத்திய ரேகை" (Celestial Equator), பூமியினுடைய பூமத்திய ரேகைக்கு நேராக இருக்கிறது. அதே போன்று ஆகாய வட துருவம் (Celestial North Pole), ஆகாய தென் துருவம் (Celestial South Pole), ஆகியவை பூமியின் வட துருவம், தென் துருவம் ஆகியவற்ற ிற்கு நேர் எதிராக இருக்கின்றன.

பூமியில் ஒரு இடத்தைக் குறிக்க அல்லது ஒரு ஊரைக் குறிக்க அட்ச ரேகை (Latitude), மற்றும் தீர்க்க ரேகை (Longtitude), தேவையல்லவா?

Latitude-க்கு ஆகாயக் கோளத்தில் "Declination" எனப் பெயர். Longtitude-க்கு ஆகாயக் கோளத்தில் "Right Ascension" எனப் பெயர். இவைகளைச் சுறுக்கமாக ‘Dec’ என்றும் ‘RA’ என்றும் அழைப்பார்கள். பூமியில் ஓர் இடத்தைக் குறிக்க வட துருவம், மற்றும் தென் துருவம் இவற்றை இணைக்கும் பிரதான ரேகையிலிருந்து, அந்த இடம் எவ்வளவு தீர்க்க ரேகையில் (Longtitude) இருக்கிறது எனப் பார்ப்பார்கள். அந்தப் பிரதான ரேகையானது லண்டன் வழியாகச் செல்லும் ரேகையை 1884-ல் உலக நாடுகள் தேர்ந்தெடுத்துள்ளன. அந்த இடம் பிரதான ரேகையில ிருந்து கிழக்கு அல்லது மேற்காக பிரதான ரேகையிலிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கிறது எனக் கூறுவார்கள். உதாரணமாக சென்னையின் தீர்க்க ரேகை 80017’ (East) என்றால் சென்னையானது லண்டன் வழியாகச் செல்லும் பிரதான ரேகையிலிருந்து கிழக்கே 80-Degrees, 17-Minutes தூரத்தில் இருக்கிறது எனப் பொருள்.

ஆனால் RA என்பது ஆகாய மண்டலத்தின் ஆரம்ப இடமான மேஷத்தி லிருந்து ஓர் இடம் எவ்வளவு தூரம் கிழக்குப் பக்கமாக இருக்கிறது எனக் கூறுகிறது. மேற்குப் பக்கம் பார்ப்பது இல்லை. தீர்க்க ரேகையைக் கூறுவது போல் Degree, Minutes, Seconds - ல் இதைக் கூறுவது இல்லை. மணி, நிமிடம், வினாடியில் தான் கூறுவார்கள். ஆகவே ஓர் இடம் கிழக்குப் பக்கமாக அதிகப் படியாக 24-மணி நேரம்தான் இருக்க முடியும்.

RangaRakes

படியாக 24-மணி நேரம்தான் இருக்க முடியும்.

ஆனால் Latitude என்று சொல்லுகின்ற அட்ச ரேகைக்கும், ஆகாயக் கோளத்தில் குறிக்கப்படுகின்ற Declination என்கிற ஆகாய அட்சரேகைக்கும் அதிக வித்தியாசமில்லை. இரண்டும் பாகை, கலை, விகலையில்தான் கூறிப்பிடப் படுகிறது.

## International Date Line:




நமது பூமியின்மேல் ஒரு மானசீகக் கோடு உள்ளது. அது என்ன தெரியுமா? அதுதான் சர்வதேச தேதி மாறும் கோடு (International Date Line). இந்தக் கோட்டைத் தாண்டும்போது ஒரு நாள் மாறுபடுகிறது. ஆகாய விமானத்தின் மூலமாகவோ அல்லது கப்பல் மூலமாகவோ இந்தக் கோட்டைத் தாண்டும்போது ஒரு நாள் மாறுபடுகிறது. இந்தக் கோடு எங்கு இருக்கிறது தெரியுமா? பசுபிக் மஹாக் கடலில் இருக்கிறது. பிரதான அட்சரேகை லண்டன் வழியாகச் செல்கிறதே, அங்கிருந்து சரியாக 180 வது டிகிரியில் இந்தக் கோடு அமைந்துள்ளது. சைபீரியா, பிஜித் தீவுகள், மற்றும் நியூசிலாந்து ஆகியவற்றிற்கு கிழக்குப் பக்கமாகவும், வட அமெரிக்காவிலுள்ள அலாஸ்காவிற்கு மேற்குப் பக்கத்திலும் இக்கோடு வரையப் பட்டுள்ளது. இது எந்த நாட்டுத் தரைவழியாகவும் செல்லாமல் கடல் மேலேயே மானசீகமாக வரையப் பட்டுள்ளது. இக்கோடு நேராக இல்லாமல் வளைந்து, வளைந்து உள்ளது. ஏன் தெரியுமா?

இது எந்த நாட்டின் வழியாகவும் செல்லக் கூடாது என்கின்ற காரணத்தினால், கடலிலேயே செல்ல வேண்டும் என்ற நோக்குடன் வரையப் பட்டு இருப்பதால் நேர்கோடாக இல்லாமல் வளைந்து, வளைந்து இருக்கிறது.

Prime Meridian என்று சொல்லப்படுகிற பிரதான அட்சரேகையிலிருந்து கிழக்கே செல்லச் செல்ல நேரம் எவ்வாறு மாறுபடுகிறது என்பதை மெலே உள்ள படம் விளக்கி இருக்கிறது பாருங்கள். ஒவ்வொரு நாட்டிற்கும் நேரம் எவ்வாறு மாறுபடுகிறது என்பதையும் இப்படம் விளக்கி இருக்கிறது பாருங்கள். பிஜித்தீவுகள், மற்றும் நியூசிலாந்தில் திங்கள் கிழமை என்றால் அலாஸ்காவிற்கு ஞாயிற்றுக் கிழமை. ஒருநாள் வித்தியாசப் படுகிறது. இப்போது நேரம் எவ்வாறு மாறுபடுகிறது என நமது வாசகர்களுக்குப் புரிந்து இருக்குமென எண்ணுகிறோம்.

இவைகளெல்லாம் ஜோதிடம் பார்ப்பதற்குத் தேவையா? என்று கேட்டால் நாம் "ஆம்" என்றுதான் பதில் சொல்லுவோம். ஜோதிடர்களுக்கு அடிப்படையான வானவியல் தெரிந்திருக்க வேண்டுமென்பது

RangaRakes tamilnavarasam.com

பதில் சொல்லுவோம். ஜோதிடர்களுக்கு அடிப்படையான வானவியல் தெரிந்திருக்க வேண்டுமென்பது நம் கருத்து. அதற்காகவே எழுதப்பட்ட பாடமிது.

RangaRakes tamilnavarasam.com

**இராசி மண்டலம்:**




இதை நாம் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும். இவற்றை எல்லாம் பாட ஆரம்பத்திலேயே எழுதி இருக்கலாமே! ஏன் கடைசியில் எழுதுகிறீர்கள்? என நீங்கள் கேட்கலாம். ஆரம்பத்தில் ஜோதிடத்தைப் பற்றி வாசகர்களுக்கு ஒன்றும் தெரியாது. அப்போது வானவியலைப் பற்றியெல்லாம் எழுதினால் இது மிகவும் கஷ்டமானதொன்றாக இருக்கும்போல் இருக்கிறதே என்ற தவறான எண்ணம் உண்டாகும். அதனால் அவர்கள் இதைப் படிக்க வேண்டும் என்ற எண்ணம் தடைப்படும். ஆகவே பாட முடிவில் இதையெல்லாம் எழுதுகிறோம். சூரியனும், மற்ற கிரகங்களும், பூமியிலிருந்து பார்க்கும்போது. அதைச் சுற்றிவருவதுபோல் தோற்றமளிக்கிறது என்று எழுதினோமல்லவா ?




சூரியன், பூமியைச் சுற்றி வருகின்ற பாதை நீள் வட்ட வடிவமானது. இதைத்தான் நாம் ஆங்கிலத்தில் "Ecliptic" என எழுதி இருந்தோம். இந்தப் பாதைக்கு இருபுறமும் (வடக்காகவும், தெற்காகவும்) எட்டு பாகை அளவிற்குப் பாதை அமையுங்கள். அதாவது சூரிய பாதைக்கு வடக்கே எட்டு டிகிரி அளவிலும், தெற்கே எட்டு டிகிரி அளவிலும் நீள் வட்டப் பாதை அமையுங்கள். இதுதான் ராசிமண்டலம்.

இந்த ராசி மண்டலத்தில்தான் எல்லா கிரகங்களும் சுற்றி வருகின்றன. இந்த ராசி மண்டலம்தான் மேஷம் முதல் மீனம் வரை 12 சம பாகங்களாக, 12 வீடுகளாகப் பிரிக்கப்பட்டு இருக்கிறது. இத ில்தான் எல்லா கிரகங்களும் வலம் வருகின்றன. இந்த ராசி மண்டலம் நீள்வட்ட வடிவில் இருக்கிறது அல்லவா. ஆக மொத்தம் 3600 இருக்கிறது. அப்படியானால் ஒவ்வொரு ராசியும் 300. பன்ன ிரண்டு ராசியும் 30 x 12 = 360 பாகைகள். இந்த ஆகாய மண்டலத்தில் பூமி மையத்தில் இருக்க ிறது அல்லவா? ஆக பூமியும் மானசீகமாக 12 பகுதியாக அல்லது 12 ராசியாகப் பிரிந்து இருக்க ிறது. இதைப் பக்கத்தில் உள்ள படத்தைப் பார்த்தால் நன்றாக விளங்கும். கணிதம் தெரிந்தவர்களுக்கு இந்த உண்மை மிக எளிதாகப் புரியும்.

நாம் ஜாதகம் போடக் கற்றுக் கொடுக்கும்போது பூமி 12 ராசியாகப் பிரிக்கப் பட்டு இருக்கிறது என்று பொதுப்படையாக எழுதி விட்டோம். எவ்வாறு பிரிக்கப்பட்டு இருக்கிறது என்று மேலே கூறியதுபோல் விரிவாக எழுதவில்லை. அப்போது வாசகர்கள் ஆரம்ப நிலயில் உள்ளவர்கள். இப்போது அப்படியல்ல; இவற்றையெல்லாம் புரிந்து கொள்ளும் ஆற்றல் உள்ளவர்கள்.

ராசி மண்டலமென்றால் என்னவென்றும், பூமி எவ்வாறு 12 ராசிகளாகப் பிரிக்கப்பட்டு இருக் கிறது என்றும் வாசகர்கள் நன்றாகப் புரிந்து கொண்டு இருப்பார்கள் என நினைக்கிறோம்.

**வக்ர கதி:**

இந்த ராசி மண்டலத்தில் கிரகங்கள் சமயங்களில் வக்கிரமாகிறது அல்லவா? அது எவ்வாறு ஆக ிறது? வக்கிரம் என்றால் என்ன? எப்படி ஏற்படுகிறது? எனப் பார்ப்போம். "வக்கிரம்" என்றால் ப ின்னோக்கிச் செல்லுதல் எனப் பொருள். ஆனால் கிரகங்கள் எதுவும் பின்னேக்கிச் செல்வது க ிடையாது. அதைப் போன்ற தோற்றம் ஏற்படுகிறது. அது எவ்வாறு ஏற்படுகிறது? எனப் பார்ப்போம்.

சூரியன், சந்திரன் இரண்டுக்கும் எப்போதுமே வக்கிரகதி என்பது கிடையாது. ராகு, கேதுக்கள் எப்போதுமே வக்கிரகதியிலேயே இருப்பவர்கள் என மேலே பார்த்தோம். அப்படியானால் மற்ற 5 க ிரகங்களான புதன், சுக்கிரன், செவ்வாய், குரு, சனி ஆகியவற்றிற்கு வக்கிர கதி உண்டா என்றால் ந ிச்சயம் உண்டு. இப்போது சூரிய மண்டலத்தைக் கண்முன்னே நிறுத்துங்கள். சூரியன் நடுவில் இருக்கிறார். அவரைமுதலில் சுற்றும் கிரகம் புதன். அவருடைய வட்டப் பாதை மிகச் சிறியதாக இருக்கும். இதற்கு அடுத்து சுற்றுபவர் சுக்கிரன். இவர் சுற்றும் பாதையையும் சிறியதுதான். ஆனால் புதனின் பாதையை விடப் பெரியது. அடுத்த சுற்றில் தான் நமது பூமி இருக்கிறது. இவர்கள் இரண்டு பேரின் வட்டப் பாதையைவிட பூமியின் வட்டப் பாதை பெரியது. புதனுக்கும், சுக்கிரனுக்கும் சுற்றும்பாதை சிறியதாக இருப்பதனால் அவைகள் "Inferior Planets" என்றழைக்கப் படுகின்றன. பூமிக்கு அடுத்து வரும் செவ்வாய், குரு, சனி ஆகியவகளின் சுற்றுப்பாதை பூமியின் பாதையைவிட மிகப் பெரியது. ஆகவே அவைகளை "Superior Planets" என்றழைக்கிறார்கள். நாம் முதலில் புதன் இப்படி வக்கிரகதியில் இருப்பதாகத் தோற்றம் அளிக்கிறது எனப் பார்ப்போம். புதன், சூர ியனுக்கும் பூமிக்கும் நடுவில் வரும்போது இவ்விதமாகத் தோற்றம் அளிக்கிறது. அடுத்த பக்கம் உள்ள படத்தைப் பாருங்கள்.




'பு-1' என்பது புதனின் நிலை. அந்த இடத்தில் இருக்கும்போது "A" என்ற இடத்தில்துலாத்தில் இருப்பதுபோல் காட்சியளிக்கிறார். 'பு-2' என்ற இடத்திற்கு வரும்போது விருச்சிகத்தில் "B" என்ற இடத்தில் இருக்கிறார். 'பு-3' என்ற இடத்திற்கு வரும்போது தனுசுவில் "C" என்ற இடத்தில் இருப்பதுபோல் தோற்றமளிக்கிறார். 'பு-4', 'பு-5' என்ற இடங்களில் இருக்கும்போது மகரத்தில் "D", "E" என்ற இடங்களில் இருப்பதுபோல் தோற்றமளிக்கிறார். "பு-6" என்ற இடத்திற்கு வரும்போதுதான் வக்கிரம் ஆரம்பமாகிறது. அப்போதும் மகரத்தில்தான் இருக்கிறார் "F" என்ற இடத்திலிருந்து. ஆனால் "F" என்ற இடம் மகரத்திலேயே "E" என்ற இடத்திலிருந்து பின்னால் இருக்கிற்து பாருங்கள். "பு-7" என்ற இடம் தனுசில் "G" என்ற இடத்தில் இருக்கிறது பருங்கள். இப்போது புதனானவர் மகரத்திலிருந்து, தனுசிற்கு வந்து விட்டாரா? பின்னோக்கி வந்து விட்டாரா? "பு-8" என்ற இடம் புதன் விருச்சிகத்திற்கு வந்து விட்டதைப்போல் தோற்றத்தைக் கொடுக்கிறது. ஆக புதனின் சிறிய சுற்றுப்பாதை புதன், பூமிக்கும், சூரியனுக்கும் நடுவில் வரும்போது பின்னோக்கி வருவதைப் போல் தோற்றத்தைக் கொடுக்கிறது.இப்போது வக்கிரகதி என்றால் என்னவென்று விளங்க ிவிட்டதா? புதன் சூரியனை விட்டு ஒருராசிக்குமேல் தாண்டிப்போகமாட்டார். அதேபோல் ஒரு ராச ிக்குமேல் பின்னால் செல்லவும் மாட்டார். சுக்கிரனின் வக்கிர கதியும் இவ்வாறே. சுக்கிரன், சூரியனை விட்டு 2 ராசிக்கு மேல் முன்னாலோ அல்லது பின்னாலோ போக மாட்டார்.

Superior Planets என்று சொல்லப் படுகிற செவ்வாய், குரு, சனி ஆகியவைகள் எப்படி வக்கிரகத ியை அடைகின்றன தெரியுமா? இவைகளின் சுற்றும்பாதை பூமி சுற்றும் பாதையை விட மிகப் பெர ியது அல்லவா? இந்த கிரகங்களுக்கும், சூரியனுக்கும் நடுவில் பூமி வரும் போது அக்கிரகங்கள், புதனைப்போல் வக்கிரமாக வருவதைப் போல் தோற்றத்தைக் கொடுக்கின்றன. புதனின் வக்கிரகத ியை நன்றாகப் புரிந்து கொண்டீர்களேயானால், இந்த கிரகங்களின் வக்கிரகதியும் நன்றாகப் புரியும். ஒவ்வொரு கிரகமும் எவ்வளவு நாட்கள் வக்கிரகதியை அடைகின்றன என்பதைக் கீழே காணலாம்.

புதன் 24 நாட்கள் வக்கிரமாகவும், சுக்கிரன் 42 நாட்கள் வக்கிரமாகவும், செவ்வாய் 80 நாட்கள் வக்கிரமாகவும், குரு 120 நாட்கள் வக்கிரமாகவும், சனி 140 நாட்கள் வக்கிரமாகவும் இருப்பார்கள்.

சூரியனுக்கும் சந்திரனுக்கும் வக்கிரகதி கிடையாது என எழுதி இருந்தோம். ஏன் ? என்ற கேள்வ ிக்கும் பதில் சொன்னால் இன்னும் விளக்கமாக இருக்குமல்லவா? சூரியன் நிலையாய் ஓரிடத்த ிலேயே இருப்பதனால் பூமி மட்டுமே சூரியனைச் சுற்றி வருகிறது.பூமியிலிருந்து எங்கிருந்து பார்த்தாலும் சூரியன் முன்னோக்கிச் செல்வது போலவே தோற்றம் அளிக்கிறது. ஆகவே சூர ியனுக்கு வக்கிரகதி என்பதே கிடையாது. சந்திரன் பூமியின் பாதையிலேயே பூமியையும் சுற்ற

RangaRakes tamilnavarasam.com

ர்க்கொண்டு, சூரியனையும் சுற்றிக் கொண்டு வருவதால் அது பின் நோக்கிச் செல்வது போன்ற தோற்றம் ஏற்படவில்லை. ஆகவே இதற்கும் வக்கிரகதி என்பதே கிடையாது.

**அயனாம்சம்:**

நமது இந்திய ஜோதிடத்திற்குப் பெயர் "Nirayana" முறை. மேலை நாட்டவர் முறைக்குப் பெயர் "Sayana". இந்த இரண்டு முறைக்கும் வேறுபாடு உண்டு. நமது ஜோதிடத்தில் இராசி மண்டலத்தின் ஆரம்ப இடம் அஸ்வினி நட்சத்திரத்தின் ஆரம்ப இடம். அதாவது மேஷ ராசி ஆரம்பமாகும் இடம். இது 00 யில் ஆரம்பமாகிறது. அதேபோல 1800 யில், சித்திரை 2-ம் பாதத்தில், கன்னியில் முடிவடைகிறது. 3600 என்பது மீனத்தில் ரேவதி நட்சத்திரத்தில் 4-ம் பாதத்தில் முடிவடைகிறது. மேற்கூறிய நிலைகள் மாறாதவை. நிரந்தரமானவை.

ஆனால் மேல் நாட்டு முறை அப்படியில்லை. ராசி மண்டலத்தின் ஆரம்ப இடம் பின்னோக்கிச் செல்வதாக அவர்கள் கணிப்பு. அதாவது மேஷத்தின் ஆரம்ப இடம் பின்னோக்கிச் செல்வதாக அவர்கள் ஜோதிடம் கூறுகிறது. இந்த ஆரம்ப இடத்திற்குப் பெயர் Vernal Equinox என்பதாகும். இதன் தமிழ்ப் பெயர் நமக்குத் தெரியவில்லை. ஆகவே ஆங்கிலத்திலேயே எழுதி இருக்கிறோம். இந்த Vernal Equinox என்பது ஒன்றும் புரியாத புதிரல்ல. ஆகாயக் கோளத்தில் அதன் மத்திய ரேகையும், சூரியன் சுற்றிவரும் பாதையான Ecliptic - ம் சந்திக்கும் இடம்தான். இந்த இடம்தான் ப ின்னோக்கிச் செல்வதாக அவர்கள் கணிப்பு. இது மெதுவாக ஒரு வருஷத்துக்கு 50.33 செகண்டுகள் வீதம் பின்னோக்கிச் செல்கிறது. இந்த இரண்டு ஆரம்ப இடத்திற்குள்ள வித்தியாசம்தான் "அயனாம்சம்" என்பது. இந்த அயனாம்சத்தை Degrees, Minutes, Seconds - ல் கூறுவது வழக்கம்.

Sayana - விலிருந்து அயனாம்சத்தைக் கழித்தால் கிடைப்பது இந்திய ஜோதிடகணிதமான நிராயனா. கி.பி. 285 - ம் ஆண்டு நமது ஜோதிடப்படியும், மேலை நாட்டு ஜோதிடப்படியும், இந்த ஆரம்ப இடமான Vernal Equinox என்பது ஒன்றாக இருந்தது. அத்ற்குப்பின்தான் அது பின் நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. இந்த வேகத்தில் அதாவது வருஷாத்திற்கு 50.33 செகண்டுகள் வீதம் 360 டிகிரியையும் கடக்கப் பல ஆயிரக் கனக்கான ஆண்டுகள் ஆகும். கி.பி 26085 - ம் ஆண்டு மறுபடியும் இந்த அயனாம்சம் பூஜ்யமாக மாறும்.

இந்த அயனாம்சத்தைக் கணக்கிடுவதில் பலர் பல வழிகளைக் கூறியுள்ளனர். கல்கத்தாவிலுள்ள வானவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் திரு. N.C. லஹிரி கொடுத்துள்ள அயனாம்சத்தை அனேகமாக எல்லாரும் கையாண்டு வருகின்றனர். தற்கால ஜோதிட மேதைகளான திரு. K.S.கிருஷ்ண மூர்த்தி, திரு.B.V. ராமன், திரு.C.G. ராஜன் ஆகியோரும் அயன்னாம்சத்தைக் கணிதம் செய்துள்ளனர். இதில் திரு.B.V. ராமன் அயனாம்சம் தவிர மற்றவைகளெல்லாவற்றிலும் வித்தியாசம் குறைவாகவே இருக்கிறது. ஆனால் திரு. B.V. ராமன் அயனாம்சத்தில் வித்தியாசம் ஒரு டிகிரிக்கும் அதிகமாகவே இருக்கிறது. ஆனால் அதை உபயோகிப்பவரும் உள்ளனர்.

நாம் இத்துடன் நமது ஜோதிட பாடங்களை முடித்துக் கொள்கிறோம். இதைப் படித்த வாசக நண்பர்களுக்கு இவை உபயோகமாக இருந்திருக்குமென நினைக்கிறோம்.

**வணக்கம்.**

ooOoo